Bible Holiness (TAMIL)

# பைபிள் பரிசுத்தம்

**இறைக்கட்டளை:**
***"நீங்கள் பரிசுத்தமாயிருங்கள்!"***

**இறைவாக்கு:**
***"உங்களைப் பரிசுத்தமாக்குகிறேன்!"***

**R. ஸ்டான்லி**

# பைபிள் பரிசுத்தம்


**R. ஸ்டான்லி,** B.E.,M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*


1993 ஜூலை மாதம் ஜெர்மனியிலுள்ள முல்லெயிம் நகரில் நடந்த
ஒரு வார கால வேதாகமக் கருத்தரங்கில் கொடுக்கப்பட்ட
இச்செய்திகளைப் புத்தக வடிவாக்கினவர்கள் —

லினெட்டா சம்பத்குமார், M.Sc.,M.Phil.,
*ஓய்வுபெற்ற வேதியியல் பேராசிரியை*

பிரேமா, B.Sc.,M.A. & சுசிகரன், M.Sc.,M.Ed.,
*ஓய்வுபெற்ற பள்ளித் தலைமையாசிரியர்கள்*


R. Stanley
13 Church Colony
Vellore 632 006, India
<*stanleyonbible@hotmail.com*>


**Bible Holiness** (Tamil)


Copyright 2017 R. STANLEY


13 Church Colony
Vellore 632 006

*00 91 98437 07600*
*00 91 98430 11943*



First Edition : May 2017
Second Edition : August 2017


இந்நூலிலுள்ள செய்திகள்
பெரும்பாலும் பேச்சுப் பாணியிலேயே தரப்பட்டுள்ளன.

திருமறையின் பழைய மற்றும் புதிய மொழியாக்கங்கள்
இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

ரூ. 100/-


Printed by
New Shenbagam Offset,
Sivakasi

இறைக்கட்டளை:

**“நீங்கள்**
**பரிசுத்தமாயிருங்கள்!”**

இறைவாக்கு:

**“உங்களைப்**
**பரிசுத்தமாக்குகிறேன்!”**



## - அர்ப்பணிப்பு -

*பரிசுத்த தேவனிடம்*
*என்னை வழிநடத்தியவர்களுக்கு ...*

*பரிசுத்தத்தின் அரிச்சுவடுகளை*
*எனக்குப் போதித்தவர்களுக்கு ...*

*பரிசுத்தத்தைக் குறித்து நான் வாசித்த*
*பல நூல்களின் ஆக்கியோன்களுக்கு ...*

*பரிசுத்தத்தில் நான் வளர எனக்கு*
*உதவியவர்களுக்கு ...*

*பரிசுத்தத்தில் எனது குறைபாடுகளைச்*
*சுட்டிக்காட்டியவர்களுக்கு ...*

*பரிசுத்த பாத்திரமாக தேவனது கரங்களில்*
*நான் தொடர்ந்து பயன்பட*
*எனக்காய் ஜெபிப்பவர்களுக்கு!*

## உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| 1. | பைபிள் பரிசுத்தம் | ... | 7 |
| 2. | பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்! | ... | 9 |
| 3. | பரிசுத்தத்திற்குச் சாக்குப்போக்குகள் | ... | 20 |
| 4. | பரிசுத்தமாக வாழ்வது எப்படி? | ... | 29 |
| 5. | தொழுகையில் பரிசுத்தம் | ... | 46 |
| 6. | வார்த்தைகளில் பரிசுத்தம் | ... | 65 |
| 7. | வேலையில் பரிசுத்தம் | ... | 91 |
| 8. | சாட்சி பகர்வதில் பரிசுத்தம் | ... | 120 |
| 9. | போராட்டங்களில் பரிசுத்தம் | ... | 155 |
| 10. | பலவீனங்களில் பரிசுத்தம் | ... | 174 |
| 11. | பரிசுத்தமும் இவ்வுலகமும் | ... | 187 |
| 12. | முடிவுரை | ... | 208 |




**- அட்டைப் படம் -**

*''நான் உங்கள்மீது*
*சுத்தமான தண்ணீர் தெளிப்பேன்;*
*நான் உங்களுடைய*
*எல்லா அசுத்தங்களையும் நீக்கி*
*உங்களைச் சுத்தமாக்குவேன்,*
*நீங்கள் சுத்தமாவீர்கள்!''*

(எசேக்கியேல் 36:25)

# 1

# பைபிள் பரிசுத்தம்

நன்னடக்கை குறித்து உலகில் ஏறத்தாழ எல்லா மதங்களும் போதிக்கின்றன. மதங்களுக்கு அப்பாற்பட்ட நன்னெறி நூல்களிலும் எது நல்லது, எது கெட்டது, எது சரி, எது தவறு என்றெல்லாம் நிறையப் போதனைகள் உண்டு. புனிதம், தூய்மை, பரிசுத்தம் போன்ற பதங்கள் மக்களுக்குப் புதியவையல்ல.

இவையெல்லாவற்றையும்விடப் பைபிள் எனப்படும் திருவிவிலியம் போதிக்கும் பரிசுத்தம் என்பது வேறுபட்டது. ''நீங்கள் பரிசுத்தமாயிருங்கள்'' என்றும், ''நானே உங்களைப் பரிசுத்தமாக்குகிறேன்'' என்றும் சேர்த்துச் சொல்வது பைபிளில் நாம் சந்திக்கும் தேவன் மட்டுமே! இறைவாக்கு இல்லாத இறைக்கட்டளை இனிதல்ல. இந்நூல் முழுக்க முழுக்க பைபிள் போதிக்கும் பரிசுத்தத்தையே விளக்குவதால் இதற்குப் *''பைபிள் பரிசுத்தம்''* எனப் பெயரிட்டுள்ளேன். இறைக்கட்டளை, இறைவாக்கு, இறைப்புகழ் ஆகிய மூன்றையும் இந்நூல் சமநிலையில் உள்ளடக்கியுள்ளது.

1993 ஜூலை 18-25இல் ஜெர்மனியிலுள்ள முல்லெயிம் எனும் நகரில் ஜீவ வசன மிஷனரிச் சபை (Living Word Missionary Church)



நடத்திய ஒரு வார வேதாகமக் கருத்தரங்கில் நான் கொடுத்த செய்திகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இக்கருத்தரங்கின் கருப்பொருள் *''கர்த்தருக்குப் பரிசுத்தம்''* என்பதாகும். இச்சபையின் மேய்ப்பர் திரு. தானியேல் நவக்குமார் அவர்களது அழைப்பின்பேரில் இக்கருத்தரங்கில் நான் ஆங்கிலத்தில் செய்தியளித்தேன். என் அன்புச் சகோதரன் A. ஜெயராஜ் அவர்கள் நேரடித் தமிழாக்கம் செய்தார்கள்.

மேற்குறிப்பிட்ட கருத்தரங்கில் கொடுக்கப்பட்ட இச்செய்திகள் அன்று புழக்கத்திலிருந்த ஒலி மற்றும் ஒளிச்சுருள்களில் வெளியிடப்பட்டுப் பெரிதும் விரும்பிக் கேட்கப்பட்டன, பார்க்கப்பட்டன. தங்கள் வாழ்க்கையில் ஒரு பரிசுத்தப் புரட்சி ஏற்படுவதற்குப் பல்லாயிரங்களுக்கு இச்செய்திகள் பயன்பட்டன. தேவனுக்கே மகிமையுண்டாகட்டும்!

ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்குப் பின்னர் இச்செய்திகளை இவ்விதம் புத்தக வடிவில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். திருமறைச் சத்தியங்கள் மாறாதவை. அவை எந்நாட்டினருக்கும், எத்தலைமுறையினருக்கும், எவ்வயதினருக்கும் பொருத்தமானவை. இச்செய்திகளைக் கேட்டுத்தான் கிறிஸ்தவம் என்பதற்குப் பொருளைப் புரிந்துகொண்டேன் என்றார் மூத்தவர் ஒருவர்.

பிரிய வாசகரே, முடிந்தால் உங்கள் வேலையிலிருந்து ஒரு வார விடுப்பு எடுத்து, நாளுக்கு ஓர் உணவையாவது தவிர்த்து, உபவாசத்துடன், இந்நூலை வாசிக்கும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். விளைவுகளுக்கு நீங்களே சாட்சியாவீர்கள்!

# 2

# பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்!

கடவுள் சர்வ வல்லவர், சர்வ வியாபகர், சர்வ ஞானி, அன்புள்ளவர், மாறாதவர். ஆனால் வேதத்திலுள்ள தொழுகைப் பாடல்கள் எதிலும் மும்முறை சொல்லப்பட்டுள்ள கடவுளின் குணாதிசயம் அவரது பரிசுத்தமே. இதற்கோர் எடுத்துக்காட்டு பழைய ஏற்பாட்டிலும் இன்னொன்று புதியதிலும் உண்டு. தீர்க்கன் ஏசாயா கண்ட தரிசனத்தில் சேராபீன்களெனும் விண்ணகவாசிகள் ஒருவரையொருவர் பார்த்து ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' எனக் குரலெழுப்பினர் (ஏசா 6:3). அப்போஸ்தலன் யோவானுக்குக் கிடைத்த பரலோகத் தரிசனத்தில் நான்கு உயிரினங்கள், ''சர்வ வல்ல தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என இடையறாது சொல்லிக்கொண்டிருந்தன (வெளி 4:8).

எபிரெய மொழியில் பரிசுத்தர் என இருமுறை சொன்னால் மகா பரிசுத்தர் எனப் பொருள்படும். மும்முறை அதைச் சொல்லுவது அதற்கு மிஞ்ச முடியாத உச்ச நிலையைக் குறிப்பிடும். கிரேக்க மூல மொழிப் பிரதிகள் பலவற்றில் ''பரிசுத்தர்'' எனும் சொல் வெளிப்படுத்தல் 4:8இல் ஒன்பது முறை வருகிறது! ஆம், தேவனது அத்தனைக் குணாதிசயங்களிலும் தலைதூக்கி நிற்பது அவரது பரிசுத்தமே. நவீன இறையியலர்கள் திருமறையை எழுதுவார்களானால் இறைப்புகழ்ப் பாடல்கள், ''தேவன் அன்புள்ளவர், அன்புள்ளவர், அன்புள்ளவர்!'' அல்லது, ''கர்த்தர் வல்லவர், வல்லவர், வல்லவர்!'' என்றுதானிருக்கும். இப்படித்தான் வேத வலியுறுத்தல்கள் இக்காலங்களில் மறக்கப்பட்டு வழிவிலகல்கள் தோன்றியுள்ளன.



## நிகரற்ற பரிசுத்தம்

தம்மை அவர்களுக்கும் அவர்கள் மூலம் உலகுக்கும் வெளிப்படுத்தவே கடவுள் இஸ்ரவேலரைத் தெரிந்துகொண்டார். அவர்கள் செங்கடலைத் தாண்டிச் சென்றது அற்புதங்களிலெல்லாம் அற்புதமாம். ஆறுகள் அவ்வப்போது வற்றுவதுண்டு; ஆனால் கடல் இரண்டாய்ப் பிளந்ததைக் கேள்விப்பட்டதுண்டோ? கடல் நடுவில் காய்ந்த தரை வழியாய் அவர்கள் அற்புதப் பவனி சென்றதையடுத்து மோசேயும் இஸ்ரவேல் மக்களும் ஆண்டவருக்கு அழியாப் பாடல் ஒன்று பாடினர். அப்பாடலின் உச்சக் கருத்து அதின் நடுவில் இதோ: ''கர்த்தாவே, தேவர்களில் உமக்கு நிகரானவர் யார்? **பரிசுத்தத்தில்** மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?'' (யாத் 15:11). எகிப்தியர் மற்றும் புறவினத்தவரின் தெய்வங்களைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர். ஆனால் யேகோவாவாகிய கடவுளிலோ இணையற்றதொன்றைக் கண்டனர். எகிப்தின் தேவர்கள் தேவதைகளின் பண்டிகைகளைப் பார்த்திருந்தனர். அவர்களது மந்திரவாதிகள் செய்து காட்டிய வித்தைகளையும் கண்டிருந்தனர். ஆனாலும் தேவனாகிய கர்த்தரின் பரிசுத்தத்தின் மகத்துவமே அவர்களை வியப்பில் ஆழ்த்தியது; ஏனெனில் அந்நிய தெய்வங்களில் இக்குணம் கிடையவே கிடையாது.

## திரித்துவப் பரிசுத்தம்

விவிலியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு தேவத்துவத்தின் திரியேகத்துவத்தை நாம் விசுவாசிக்கிறோம். கடவுள் ஒருவரே; அவர் பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கடவுள், பரிசுத்த ஆவியானவராகிய கடவுள் என்று மூன்று நபர்களாயிருக்கிறார். ஒவ்வொருவரும் பூரணப்

பரிசுத்தர். தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் கர்த்தராகிய இயேசு தமது பிதாவைப் **''பரிசுத்த** பிதாவே'' என்றழைத்தார் (யோ 17:11). அவளது வயிற்றில் பிறக்கப்போகும் கடவுளின் குழந்தை **''பரிசுத்தமுள்ளது''** எனப்படுமென்று தேவ தூதன் மரியாளிடம் அறிவித்தான் (லூக் 1:35). துன்புறுத்தப்பட்ட சீடர்கள் பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபிக்கையில் அவரது குமாரனைப் **''பரிசுத்த** பிள்ளை'' எனக் குறிப்பிட்டனர் (அப் 4:28,30). அப்படியே, திருத்துவத்தின் மூன்றாம் நபரின் பெயரே **''பரிசுத்த''** ஆவியானவர் என்பதே (யோ 14:26). அவர் **''பரிசுத்த முள்ள''** ஆவி என்றும் அழைக்கப்படுகிறார் (ரோ 1:5). இறையியல் என்றால் ''பரிசுத்தரின் அறிவு'' என்றே அரசன் சாலொமோன் வரையறுத்தான் (நீதி 9:10). கல்கத்தாவில் பணியாற்றிய ஆங்கிலிக்கன் திருச்சபைப் பேராயர் ரெஜினால்டு ஹீபர் (1783-1826) என்பவர் தூதர் பாடுவதுபோன்று கீழ்க்கண்ட பாடலை இயற்றினார் —

(Holy Holy Holy ...)
*தூய தூய தூயா! சர்வ வல்ல நாதா!*
*தேவரீர்க் கெந்நாளும் சங்கீதம் ஏறுமே!*
*தூய தூய தூயா! மூவரான ஏகா!*
*காருண்யரே தூய திரியேகரே!*

## பரிசுத்தத்திற்குப் பக்கபலம்

பரிசுத்தமானது கடவுளின் பிரதான குணம் மட்டுமல்ல; அவரது மக்களைக் குறித்த அவரது பிரதான விருப்பமும் அதுவே. இஸ்ரவேல் மக்களுக்குச் சன்மார்க்க மற்றும் சடங்காச்சாரப் புனிதத்தைப் போதிப்பதே லேவியராகமத்தின் நோக்கம். பைபிளிலுள்ள வேறெந்தப் புத்தகத்தையும்விடக் கடவுளின் பரிசுத்தத்தை அதிகமாய் வெளிப்படுத்துவது இப்புத்தகமே. பரிசுத்தத்திற்காய்த் தமது மக்களை அழைக்கும் கடவுள் இங்கு மூன்று வாசகங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லியுள்ளார்: (1) நீங்கள் பரிசுத்தராயிருங்கள்; (2) நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்; (3) நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிறேன் (லேவி 19:2; 20:7,8; 21:8). நமது பரிசுத்த வாழ்வில் திரித்துவத்தின் மூன்று நபர்களும் ஈடுபாடு கொண்டுள்ளதை



இங்கு தெளிவாய்க் காணலாம். *பிதாவானவர்* அழைப்பை விடுக்கிறார்: ''பரிசுத்தராயிருங்கள்!'' *குமாரனானவர்* மாதிரியைத் தருகிறார்: ''நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல!'' *ஆவியானவர்* தமது *உதவியை* வாக்களிக்கிறார்: ''நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிறேன்!'' இரண்டாம் மூன்றாம் வாசகங்களின்றி பரிசுத்தத்திற்கான தேவ அழைப்பு சாத்தியமற்றதும் நியாயமற்றதுமாய்த் தோன்றும். ''பாழுலகில் வாழும் நாம் பரிசுத்தமாய் வாழ எத்தனைப் போராட்டங்களையும் தடைகளையும் சந்திக்கவேண்டுமென்று பரலோகில் வீற்றிருக்கும் கடவுளுக்குத் தெரியுமோ?'' என நாம் கேட்கத் தோன்றும். பாவமற்ற விண்ணுலகை விட்டுப் பாவம் நிறைந்த மண்ணுலகிற்குள் வந்த இயேசுவே இக்கேள்விக்குப் பதிலானவர். மானிடனாய்த் தோன்றியும், எல்லாவிதச் சோதனைகளையும் சந்தித்தும், அவர் பூரணப் பரிசுத்தராய் வாழ்ந்து காட்டியதால் நமக்கொரு மாதிரியைத் தந்துவிட்டார். நமக்குள் இன்னுமொரு கேள்வி எழலாம்: ''இயேசுவானவர் இறைவனது சொந்த மகன்; அவர் தூயாவியானவராலேயே பிறந்தவர். நாமோ பாவத்தில் பிறந்தவர்கள். அவர் மனிதவுருவில் தோன்றிய கடவுள். நாமோ விழுந்துபோன படைப்புகள். நாம் அவரைப்போல் பரிசுத்தமாயிருக்க முடியுமோ?'' இக்கேள்விக்குப் பதில் ஆவியானவரே. நமக்குள் குடிகொண்டிருக்கும் அவர் தமது பெயருக்கேற்ப நம்மைப் பரிசுத்தமாக்குவதே அவரது தலையாயப் பணி. பிதாவானவரின் வாஞ்சை, குமாரனானவரின் மாதிரி மற்றும் ஆவியானவரின் ஆதரவு அத்தனையும் நமது பரிசுத்த நாட்டத்திற்குப் போதுமான பக்கபலமாயுள்ளன. இவ்விதம் கடவுள் நமது பக்கமாயிருக்கும்போது பரிசுத்தப் பெரும்பாதையில் நமக்கு யார் எதிராயிருக்க முடியும்?

## பரிசுத்தத்திற்குத் திருவாக்கு

திருமறையானது இறைவாக்குகள் நிறைந்த புத்தகம். இயேசு கிறிஸ்து அனுப்பப்படுவார் என்பதே பழைய ஏற்பாட்டின் வாக்குகளிலெல்லாம் வாக்காகும். அப்படியே பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் என்பதே சுவிசேஷங்களிலுள்ள முக்கிய வாக்காகும் (அப் 13:33; லூக் 24:49). நிருபங்களில் மகுடமாய்த் திகழும் வாக்கு நாம் இயே

சுவைப்போல பரிசுத்தமாக்கப்படுவோம் என்பதே. அப்போஸ்தலன் பேதுரு புதிய உடன்படிக்கையின் மக்களுக்கருளப்பட்ட வாக்குகளை யெல்லாம் இரத்தினச் சுருக்கமாய்த் தனது இரண்டாம் நிருபத்தில் தந்துள்ளார்: 2 பேதுரு 1:3,4, ''தமது மகிமையினாலும் காருண்யத் தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினால் வாழ்க்கைக்கும் **தேவ பக்திக்கும்** வேண்டிய எல்லாவற்றையும் அவரது தெய்வீக வல்லமையானது நமக்கு அருளியதல்லாமல், தீய நாட்டத்தால் உலகி லுண்டான சீரழிவிற்குத் தப்பி, **தெய்வீக சுபாவத்தில்** பங்குபெறும் படி, மகா மேன்மையும் அருமையுமான வாக்குறுதிகளும் நமக்களிக்கப் பட்டிருக்கின்றன.'' ஆம், இறைவாக்குகளின் முடிவான நோக்கம் நமது பரிசுத்தமே. ''இவ்வித வாக்குகளை நாம் பெற்றுள்ளதால், பிரியமான வர்களே, உடலிலும் ஆவியிலும் உள்ள எல்லா மாசும் நீங்க, நம்மைத் **தூய்மைப்படுத்திக்கொண்டு, பரிசுத்தமாகுதலைக்** கடவுளுக்கு அஞ்சி நிறைவாக்குவோம்'' (2 கொரி 7:1).

## எல்லாம் பரிசுத்தத்திற்காகவே!

கடவுள் நமக்கு வாக்குப்பண்ணியது யாவும் மட்டுமல்ல, அவர் நமது வாழ்வில் வரவிடுவது யாவும் நாம் பரிசுத்தமடைவதற்காகவே. ரோமர் 8:28ஐ மிகச் சாதாரணமாய் ''எல்லாம் நன்மைக்கே!'' என அடிக்கடி மேற்கோள்காட்டிவிடுகிறோம். ஆனால் அந்த ''நன்மை'' யாது எனத் தெளிவாய் அறிய அவ்வசனப் பகுதியைக் கருத்தாய் ஆராய்வதில்லை. கடவுளை நேசிக்கிறவர்களுக்கு எல்லாம் நன்மைக்காகவே நடக்கிற தென்று சொல்லிவிட்டு அடுத்த வசனத்தில் அந்த ''நன்மை'' என்ன என்பதை அப்போஸ்தலன் விளக்குகிறார். அதாவது, ''கடவுள் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது மகனின் **சாயலுக்கு** ஒப்பாயிருப் பதற்கு முன்குறித்திருக்கிறார்.'' தோற்றத்தின்படியோ நிசமாகவோ நன்மையான அல்லது தீமையான எத்தனையோ காரியங்கள் நம் வாழ் வில் நிகழ்கின்றன. அவைகளின் விளைவு நமது விருப்பத்தின்படியிருக் கிறதோ இல்லையோ, ஆனால் உடனடியானதும் புரிந்துகொள்ளக்கூடி யதுமாயிருக்குமானால் நாம் சமாதானமாய் அமர்ந்து காணப்படுவோம். ஆனால் நிகழ்ந்த சம்பவத்தின் நோக்கம் தெளிவாய்ப் புரியாவிடில்,



அதுவும் ஒரு தோல்வியாக அல்லது இழப்பாக அல்லது வேதனையாக இருக்குமானால், நாம் கடவுளைக் கேள்வி கேட்டு அவரது வசனத்தைச் சந்தேகிக்கத் தொடங்குகிறோம். ஆனால் ரோமர் நிருபத்திலுள்ள இவ் வசனப் பகுதியோ இக்குழப்பத்திற்கு நிறைவான பதில் தந்துவிடுகிறது. நம்மை ''இயேசுவைப் போல்'' மாற்றவேண்டுமென்ற ''நன்மையான'' நோக்கத்திற்காகவே **''சகலமும்''** ஒருங்கிணைந்து செயல்படுகிறது. கடவுள் பரிசுத்தராயிருப்பதுபோல் நாமும் பரிசுத்தராகிவிடவேண்டும்!

தேவன் நமக்கு ஆன்மீகப் பயிற்சிகளைப் போதித்துள்ளார், ஆன்மீக வரங்களைத் தந்துள்ளார், ஆன்மீக ஊழியங்களை நியமித்துள்ளார். இம்மூன்றும் நாம் பரிசுத்தமாகவேண்டுமென்ற ஒரே முடிவான நோக் கோடு செயல்படுகின்றன.

## திருவசனம் மூலம் பரிசுத்தம்

எடுத்துக்காட்டாக, திருவசனத்தை வாசிக்கும் அல்லது கேட்கும் பயிற்சியைக் கவனிப்போம். இன்றையத் தலைமுறைக்கு வாசிக்கவும், கேட்கவும், பார்க்கவும் கிடைத்துள்ள அளவு வேதாகமச் செய்திகள் வேறெந்தத் தலைமுறைக்கும் கிடைத்ததில்லை. நமது கிறிஸ்தவப் புத்தகசாலைகளில் காணப்படும் பத்திரிகைகள், புத்தகங்கள் மற்றும் ஒலி ஒளித்தட்டுகளுக்கு அளவேயில்லை. அரசன் சாலொமோன் தனது காலத்தில் பக்தி இலக்கியம் பல படைத்தார். அவர் சொன்ன நீதி மொழிகள் மூவாயிரம்; இயற்றிய பாடல்கள் ஆயிரத்து ஐந்து (1 இரா 4:32). ஆனால் அவைகளின் முடிவான நோக்கத்தை அழுத்திக் கூறி னார்: ''என் மகனே! இவைகளினால் அறிவுறுத்தப்படு; அநேகம் நூல்களை எழுதுவதற்கு முடிவில்லை; அதிகப் படிப்பு உடலுக்கு இளைப்பு. இவையனைத்திற்கும் முடிவுரையைக் கேட்போம்: கடவு ளுக்குப் பயந்து, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படி; எல்லா மனிதர் மீதும் விழுந்த **கடமை** இதுவே. **ஒவ்வொரு** செயலையும், இரகசிய மான **ஒவ்வொரு** காரியத்தையும், நல்லதோ தீயதோ எதுவாயினும், **அனைத்தையும்** கடவுள் நியாயந்தீர்க்கக் கொண்டுவருவார்'' (பிர 12:12-14). நமது வாழ்வின் மூலை முடுக்குகள் அத்தனையையும்

துருவிப்பார்க்கும் தேவனது கண் பார்வைக்குள் கொண்டுவருவதே தேவனையும் அவரது வழிகளையும் அறிவதின் பிரதான விளைவாயிருக்கவேண்டும். வேத ஆராய்ச்சியானது நமது அறிவு நாட்டத்திற்கு மட்டுமே உதவும் பயிற்சியாகிவிடக்கூடாது. அது நமது உட்பகுதிகளுக்குள் மருத்துவரின் கத்திபோல் ஊடுருவிச்சென்று இயல்பான சுபாவத்தையும் ஆன்மீகச் சிந்தையையும் பிரித்துக்காட்ட நாம் அனுமதிக்கவேண்டும். சிந்தனைகளைவிட ஆழமான நோக்கங்களையே பாதிக்கும் வலிமைகொண்டது திருவசனம். நுணுக்கமாய்த் திருவசனம் இவ்விதம் நம்மில் செயல்படுவது கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நாம் வெட்கித் தலைகுனியாதிருப்பதற்காகவே (எபி 4:12,13).

எது வாயிலாகக் கடவுளது வார்த்தை நமக்கு வந்து சேர்ந்தாலும் அதுவே நம்மை நமக்குக் காட்டும் ''கண்ணாடி'' என்பதையும், நம்மைக் கழுவும் ''சவுக்காரம்'' என்பதையும், நம்மைத் தூய்மையாக்கும் ''சத்தியம்'' என்பதையும் நினைவிலிருத்துவோம் (யாக் 1:23; யோ 15:3; 17:17). உபதேசங்களுக்கடுத்த போதனைகளும் பாவத்தின் சகலவிதக் கட்டுகளிலிருந்து நம்மை விடுவித்து நம்மைப் பரிசுத்தத்தில் வளரச் செய்வதற்காகவே தரப்பட்டுள்ளன (ரோ 6:17; 1 தீமோ 6:3).

## வரங்கள் மூலம் பரிசுத்தம்

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் மற்றும் வரங்கள் ஆகியவையே இன்று கிறிஸ்தவத்தில் அதிகமாய்ப் பேசப்படுகின்றன. அகிலவுலகிலும் சபையானது புத்துணர்வும் புத்துயிரும் பெற்றுவருகிறது. இது வரவேற்கத்தக்கது. ஆனால் அழுத்திக்கூறப்பட வேண்டியவை பின்தள்ளப்பட்டுள்ளன. புதிய உடன்படிக்கையின் மக்கள் பெறப்போகும் ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்துத் திருமுழுக்கினன் யோவான் பேசியபோது அவர் ஆவியானவரின் ''தூய்மையாக்கும்'' பணியைக் கவனமாய் வலியுறுத்தினார். ஆவியினால் அபிஷேகிக்கிறவராய் இயேசுவை அறிமுகப்படுத்திய அவர், ''தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய்ச் **சுத்தம்பண்ணி**, தமது கோதுமையைக்



களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்'' என்றார் (மத் 3:11,12). வல்லமை (power) என்பது அபிஷேகத்தின் உண்மையான விளைவாகும்; ஆனால் பரிசுத்தமே (purity) அதின் பிரதான நோக்கமாகும். ''பரிசுத்த'' ஆவியானவராக அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்; பரிசுத்த ''ஆவியானவராக'' அவர் நம்மைப் பலப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவரைக் குறித்துச் சீடர்கள் கேட்ட முதல் செய்தி பரிசுத்தத்தை அடுத்தது (மத் 3:11,12). அவரைக் குறித்து அவர்கள் கேட்ட கடைசிச் செய்தி பலத்தை அடுத்தது (அப் 1:8,9). இந்த வரிசை முக்கியம்.

ஆன்மீக வரங்கள் திரும்பவும் வெளிப்படத் தோன்றுவதோடு தரிசனங்கள், சொப்பனங்கள் பற்றிய ஆர்வமும் இன்று அதிகரித்துள்ளது. தரிசனங்களும் சொப்பனங்களும் வேண்டுமென்று ஜெபிக்க வேதத்தில் நமக்கு எங்கும் போதனை இல்லை. மக்களுடைய தேவை அல்லது நிலையைப் பொறுத்து ஏகாதிபத்திய ஆண்டவர் அவற்றைத் தரலாம். ஆனால் எந்தவொரு பரலோகத் தரிசனமும் அடிப்படையாய்ச் செய்ய வேண்டியது நமது படுமோசமான பாவத் தன்மையையும் பரிதாபமான தகுதியின்மையையும் கடவுளின் மாட்சிமையான பரிசுத்தத்தின் வெளிச்சத்தில் கட்டிக்காட்டி நம்மை உணர்த்துவதே. தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் பெற்ற தீர்க்கன் ஏசாயா, ''ஐயோ, நான் அழிந்தேன்!'' என்றும், பக்தன் யோபு, ''நான் என்னை அருவருக்கிறேன்!'' என்றும் கதறினர் (ஏசா 6:5; யோபு 42:5,6).

## பரிசுத்தத்திற்கு விசுவாசம்

உயிர்மீட்சி (Revival) மற்றும் மறுமலர்ச்சி (Renewal) ஊழியங்களில் அதிகமாய்ப் பேசப்படும் இன்னொன்று விசுவாசமாகும். ஆனால், ஒரு மலையை அசைப்பதைவிட அடிக்கடி தவறிழைக்கும் ஒரு சகோதரனை மன்னிப்பதற்கு அதிக விசுவாசம் தேவையென நாமறிவோமோ? நேசிக்கப்பட முடியாதோரை நேசிப்பது அற்புதங்களைச் செய்வதைவிடக் கடினமானது. அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தில் ஏற்கனவே பிசாசுகளைத் துரத்தியிருந்து தேவ வல்லமையைக் கண்கூடாய்க்

கண்டிருந்தனர். ஆனால் ஒருவரையொருவர், தேவைப்பட்டால் ஒரே நாளில் ஏழெழுபது தடவைகூட, மன்னிக்க வேண்டுமென இயேசு அவர்களுக்குப் போதித்தபோது அவர்கள் அவரைப் பார்த்து, ''எங்கள் விசுவாசத்தை மிகுதியாக்கும்'' என்றனர்! (லூக் 10:17; 17:1-6).

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையருளும் சாதாரண நன்மைகளிலேயே நாம் திளைத்திருந்துவிட்டால், நடைமுறை நீதிநெறி வாழ்விலும் பரிசுத்தத்தில் வளர்வதிலும் போதுமான முன்னேற்றம் காண மாட்டோம். பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்றுதான் கடவுள் போற்றப் படுகிறாரே தவிர வல்லவர், வல்லவர், வல்லவர் என்று அல்ல என்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளவேண்டும். ''பரிசுத்தமற்ற ஒரு மனிதனைப் பரிசுத்தமற்ற உலகிலிருந்து பிரித்தெடுத்து அவனைப் பரிசுத்தப்படுத்தித் திரும்பவும் அவனைப் பரிசுத்தமற்ற உலகிற்குள் வைத்து அங்கு அவனைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்வதே தேவன் செய்யும் அற்புதங்களிலெல்லாம் அற்புதமாம்'' என்று சித்திரம்போல் எழுதினார் எழுப்புதல் ஊழியர் லியோனார்டு ரேவன்ஹில்!

## ஊழியங்கள் மூலம் பரிசுத்தம்

அடுத்து, திருச்சபையில் கடவுள் நியமித்துள்ள ஊழியர்களிடத்தில் வருவோம். திருச்சபையில் ஆயரின் வேலை மூன்றே — குழந்தைகளுக்குப் பெயர் வைப்பது, திருமணங்கள் நடத்துவது, சடலங்களைப் புதைப்பது (carry, marry, bury) — என்பதுதான் சராசரிக் கிறிஸ்தவரின் பொதுவான கருத்து! சற்று முற்போக்கான முன்னேற்றமான கருத்து என்னவெனில், பாஸ்டர் என்பவர் சபையாருக்காய் ஜெபிக்கவேண்டும், சபையாருக்குப் பிரசங்கிக்கவேண்டும், வைபவங்களில் தலைமை தாங்கவேண்டும், அவ்வளவுதான். இவ்விதக் கருத்துக்களெல்லாம் பைபிளுக்கு எவ்வளவு தூரமானவை! ஓர் ஊழியனின் அழைப்பு, அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் ஆகிய இவைகளில், எதுவாயினும், ஒவ்வொரு விசுவாசியும் ''கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க **பூரண** மனிதனாய்'' வளர உதவுவதே அவரது புனிதக் கடமையாகும் (எபே 4:11-13). இயேசுவைப்போல் தாங்கள் பரிசுத்தமாகவேண்டுமென்ற தணியா தாகத்துடன்



ஆயர்களை மக்கள் நோக்குவார்களெனில், ஆயர்களும் அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் செயல்படுவர். ஆனால் நாம் நமது மேய்ப்பரிடம் எதிர்பார்ப்பதெல்லாம் வாரமொரு பிரசங்கமும் மாதமொரு வீடு சந்திப்புமாய் மட்டுமிருக்குமானால், அவர் பிள்ளை தூக்குகிறவரென்ற நிலைக்குக் குறுகிவிடுவார்; நாமும் நிரந்தரமாய்க் குழந்தைகளாகவே இருப்போம். பவுலும் அவரது உடன் அப்போஸ்தலரும் கொடுத்த பயபக்தியான சாட்சியாவது: ''எந்த மனிதனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் **தேறினவனாய்** நிறுத்தும்படி, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனிதனுக்கும் அறிவுரைகூறி, எந்த மனிதனுக்கும் எல்லா ஞானத்தோடும் கற்பித்துவருகிறோம். இதற்காகவே நான் எனக்குள்ளே வல்லமையாய்ச் செயல்படும் அவரது பலத்திற்கு ஏற்ப வருந்திப் பாடுபட்டு உழைக்கிறேன்'' (கொலோ 1:28,29).

## பரலோகமும் பரிசுத்தமும்

பரமனைக் காணவும் பரலோகிற்குள் நுழையவும் இன்றியமையாத நிபந்தனை பரிசுத்தம்தான் என்பதில் பரிசுத்தத்தின் அதிமுக்கியத்துவம் கடைசியாய்த் தெளிவாகிறது. ''இருதயத்தில் **சுத்தமுள்ளவர்கள்** பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'' (மத் 5:8). உடல் ஆரோக்கியம் இல்லாமல் நாம் ஆண்டவரைக் காண முடியும்; உலக ஆஸ்தி இல்லாமல் நாம் ஆண்டவரைக் காண முடியும்; ஆற்றல்களோ ஆன்மீக வரங்களோ இல்லாமல் நாம் ஆண்டவரைக் காண முடியும்; கண்களோ, கரங்களோ, கால்களோ, இது போன்ற அவயவங்கள் இல்லாமல் நாம் ஆண்டவரைக் காண முடியும்; ஆனால் பரிசுத்தம் இல்லாமல் ஒருவரும் ஆண்டவரைக் காண முடியாது (எபி 12:14).

சுகமடையாத தொழுநோயாளி பரலோகில் நுழைந்து விடலாம்; மன்னிக்கப்படாத பாவி அங்கு நுழையமுடியாது. கடவுள் ஒருவரையும் நரகத்திற்குள் தள்ளமாட்டார்; ஏனெனில் அவர் அவ்வளவு அன்புள்ளவர் என்பது சிலரது வாதம். ஆனால் கடவுள் ஒரு பாவியையும் பரலோகிற்குள் அனுமதிக்கமாட்டார்; ஏனெனில் அவர் அவ்வளவு பரிசுத்தமுள்ளவர் என்கிறது நமது வேதம். இதோ, வேதத்தின் கடைசிப் பக்கங்களின் கண்டிப்பான வசனங்களைக் கவனியுங்கள்: ''தீட்டுள்ளதும் அருவருப்பையும்

பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய **ஒன்றும்** அதில் (பரலோக நகரில்) நுழைவதில்லை!'' (வெளி 21:27). பரலோகின் முற்றங்களில் தொனிக்கும் பாடல் ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!'' என்றிருப்பது இன்னுமா ஆச்சரியமாயிருக்கிறது?

**பாடுவோம்** —

*பரிசுத்தர் கூட்டம் நடுவில்*
*ஜொலித்திடும் சுத்த ஜோதியே*
*அரூபியே இவ்வேளையில்*
*அடியார் நெஞ்சம் வாரீரோ*

*சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே*
*விரும்பா அசுத்தம் யாவும் போக்குமே*
*பாவி நீசப் பாவி நான் ஐயா*
*தேவா இரக்கம் செய்யமாட்டீரோ*

*மீன்கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ*
*கல்தின்னக் கொடுக்கும் பெற்றோர் உண்டோ*
*பொல்லாதோர் கூடச் செய்திடார்*
*நற்பிதா நலம் அருள்வார்*

*பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை*
*யாரும் காணா உள் அலங்கோலத்தை*
*மனம் நொந்து மருளுகிறேன்*
*பரிசுத்தம் கெஞ்சுகிறேன்*

*துணை வேண்டும் தகப்பனே உலகிலே*
*என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே*
*என் ஜீவன் எல்லை எங்கிலும்*
*பரிசுத்தம் என எழுதும்*

— அண்ணன் எமில் ஜெபசிங், 1941-2013



# 3

# பரிசுத்தத்திற்குச் சாக்குப்போக்குகள்

சாக்குப்போக்குகள் சொல்வது மனித இயல்பு. இதை நாம் நமது முதல் பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்டோம். அவர்களது வீழ்ச்சியை அடுத்துக் கடவுள் அவர்களை வினவியபோது தங்களது தோல்வியை மறைக்கச் சாக்குப்போக்குகளைக் கண்டுபிடித்தனர். நாம் செய்யும் ஒவ்வொரு பாவத்திற்கும் ஒரு சாக்குப்போக்கைக் கண்டு பிடிக்கப் பிசாசு நமக்குதவுகிறான். ஆனால் கிறிஸ்தவ வாழ்வில் ஒரு காசுக்கும் உதவாதது சாக்குப்போக்குதான். நொண்டிச் சாக்குகள் சொல்வதை நாம் நிறுத்தாவிடில் நாம் நொண்டியடித்துக்கொண்டு தானிருப்போம். கடவுளுக்குமுன் பரிசுத்தமாய் வாழ நாம் தவறும்போது நாம் பொதுவாகச் சொல்லும் பத்து சாக்குப்போக்குகளை இங்கு வரிசைப்படுத்துகிறேன்.

## 1. பரிசுத்தம் அசாத்தியம்! (Impossible)

இந்தச் சாக்குப்போக்கு கடவுளை ஓர் அன்புத் தந்தையாய் அல்ல, இரக்கமற்ற சர்வாதிகாரியாய் வர்ணம் தீட்டுகிறது. எந்தத் தந்தையாவது தனது பிள்ளைகள் கீழ்ப்படிய முடியாத கட்டளைகளைக் கொடுப்பாரா? தங்கள் வாழ்நாளில் பரிசுத்தமாய் வாழ்ந்துகாட்டியவர்களின் சரிதைகள் திருமறையிலும் திருச்சபைச் சரித்திரத்திலும் நிறையவுண்டு. இதோ சில

எடுத்துக்காட்டுகள்: ''நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்'' (ஆதி 6:9). அப்படியே யோபுவைக் குறித்துக் கடவுளின் சாட்சி: ''உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல் மண்ணுலகில் ஒருவனும் இல்லை'' (யோபு 1:8). சகரியாவையும் எலிசபெத்தையும் குறித்து சரித்திராசிரியன் லூக்கா எழுதியுள்ளது: ''அவர்கள் இருவரும் ... குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்'' (லூக் 1:6). தோல்வியடைந்தவர்களையல்ல, பரிசுத்தமாய் வாழ்ந்து மடிந்தோரின் வாழ்க்கையை உற்றுக் கவனிப்பது நாமும் பரிசுத்தமாய் வாழ முடியுமென்ற நம்பிக்கையை நம்மில் வளர்க்கும். பரிசுத்தமாய் வாழ்வதற்கான அழைப்பை விடுக்கும் கடவுள் அன்புள்ளவர் என்ற உண்மை கூடுதல் உற்சாகமளிக்கிறது.

## 2. பரிசுத்தம் கட்டாயமல்ல! (Optional)

பரிசுத்தம் நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல; அது நம்மைப் படைத்தவர் நம்மிடம் எதிர்பார்க்கும் அடிப்படையான கடமையாகும். பின்வாங்கிப்போன இஸ்ரவேல் மக்களை நோக்கித் தீர்க்கன் மீகா, ''மனிதனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயம் செய்து... உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடம் கேட்கிறார்?'' என்று சவாலிட்டார் (மீகா 6:8). ''பரிசுத்த'' பவுல், ''பரிசுத்த'' அகஸ்டின் என்று திருச்சபையானது ஒரு சிலருக்கு மட்டுமே பரிசுத்தவான்கள் எனப் பட்டம் சூட்டியுள்ளதால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிறு கூட்டத்தினர் மட்டுமே பரிசுத்தமாய் வாழ அழைப்பும் உதவியும் பெறுகின்றனரென்று சராசரிக் கிறிஸ்தவர்கள் நினைத்துவிடுகின்றனர். ஆனால் பரிசுத்தமில்லாமல் ''ஒருவனும்'' கர்த்தரைத் தரிசிப்பதில்லை எனத் தெளிவாய் வேதம் போதிக்கிறது (எபி 12:14). ''கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண மனிதராக'' தமது பிள்ளைகள் ''அனைவரும்'' வளரவேண்டுமென்பதே திருச்சித்தம் (எபே 4:11). பரிசுத்தமாய் வாழவேண்டுமென்பது கடவுளிடமிருந்து வரும் ஆலோசனை அல்ல, அது அவரது ஆணை! நாம் ஒவ்வொருவரும் ''தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ... விலையேறப்பெற்றவர்கள் ... ராஜ



குலத்தவர்கள்'' எனும் வகையில் கடவுளுக்குச் சிறப்பானவர்கள் (1 பேது 2:4,5,9). அவரது மக்களில் சிறப்பானவர்கள் சாதாரணமானவர்கள் என இரு வகுப்பினர் கிடையாது. பரிசுத்தமே நம்மெல்லோரது முழக்கமாயிருக்கட்டும்.

## 3. பரிசுத்தம் அசாதாரணம்! (Abnormal)

பரிசுத்தமானது சிறப்பாக ஒரு சிலருக்கு மட்டுமே உரியது என்று நாம் நினைப்பதோடல்லாது, பரிசுத்தம் என்பது சராசரி நிலைக்கு அப்பாற்பட்டது என்றும் நாம் எண்ணுகிறோம். சராசரியானவை மிஞ்சியவையாய்த் தோன்றுமளவு நாம் சரிந்துவிட்டோம்! கொரிந்தியர் நிருபமானது முதிர்ச்சியடைந்த ஒரு கிறிஸ்தவக் குழுவினருக்கு அல்ல, இன்றிருப்பது போன்ற சண்டைகளும் சரசங்களும் நிறைந்த ஒரு சபைக்கே எழுதப்பட்டது. ஆனால் பவுல் தனது முன்னுரை வாழ்த்து வரிகளிலேயே அச்சபையினர் ''கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயும்'' இருக்கின்றனரென்று அவர்களுக்கு நினைப்பூட்டினார் (1 கொரி 1:2). பரிசுத்தத்தில் வளருதல் என்பது கிறிஸ்துவுக்குள் நமது ''நிலை'' (standing) எனும் பரிசுத்தத்திலிருந்து உலகத்தில் நமது ''நடை'' (state) எனும் பரிசுத்த வாழ்விற்குள் கடந்துசெல்லுதலாகும் என்பதே இவ்வசனத்தின் விளக்கமாகும். ''பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்'' (வெளி 22:11). கிறிஸ்தவ வாழ்வு என்பது புனிதத் திருமலையில் ஏறுதலாம் (சங் 24:3). முன்னேறிச் செல்லாது பின்திரும்பிப் பார்த்துவிட்டால் அந்நொடியிலேயே சரிவு தொடங்கிவிடும் (பிலி 3:12-14). ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பிற்கே'' எப்பொழுதும் செவிகொடுத்து சமபூமியில் நின்றுவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். தங்களது சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரையும் கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணராக்கிவிடவேண்டுமென்பதற்காகவே சபை மேய்ப்பர் பாடுபடவேண்டும் (கொலோ 1:28,29).

## 4. பரிசுத்தம் தொழிலைப் பொறுத்தது! (Vocational)

சில வேலைத்துறைகளிலும் வியாபாரங்களிலும் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வது நடைமுறையில் சாத்தியமல்ல என்று நாம்

நமக்குள்ளேயே உறுதியாக முடிவுகட்டிவிடுகிறோம். இது நீதிக்கு எதிரியாகிய பிசாசிடமிருந்து வரும் அடுத்த வஞ்சகமாகும். சாமியார் போல ஒதுங்கி வாழ்வோர் மட்டுமே பரிசுத்தத்தில் தவறாதிருக்க முடியுமென நாம் நினைக்கிறோம். ஆனால் *''கர்த்தருக்குப் பரிசுத்தம்''* என்பது பலிபீடத்தின் பாத்திரங்களில் மட்டுமல்ல, குதிரைகளின் மணி களிலும் அடுப்படியின் பானைகளிலும் எழுதப்படவேண்டும் (சக 14: 20,21). அதாவது, மார்க்க சம்பந்தமான காரியங்களில் மட்டுமல்ல, அன் றாடக வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் கடவுள் தமது மக்களிடம் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார் என்பதே இங்கு பொருள். கடவுளை மகிமைப்படுத்தவேண்டுமென்ற நமது பிரதானக் கடமையைப் பற்றிப் பேசுங்கால், புசித்தலும் குடித்தலுங்கூட விதிவிலக்கல்ல (1 கொரி 10:31). நமது வாழ்வைப் புனிதமான (sacred) பகுதி, சாதாரண (secular) பகுதி எனக் கூறுபோடவேண்டாம். தன்னிடம் வினவியவர்கள் படை வீரரோ, வரிக்காரரோ, பொது மக்களோ, அவர்கள் எத்தொழிலில் ஈடு பட்டிருந்தாலும் அவர்களுக்கு நடைமுறை நீதி வாழ்விற்கான நேரடிப் பதில்களை யோவான் ஸ்நானன் உடனுக்குடன் கொடுத்தார் (லூக் 3:10-14). முதன்மைக்குப் போட்டி, அதிகாரத் துர்ப்பிரயோகம், உடன் பணியாளரைக் குறித்த அக்கரையின்மை, பாலியல் வெறிகள் போன்ற தீங்குகளின் வேராகப் பண ஆசை பதுங்கிப் படுத்திருக்கிறது. தான் செய்யும் வேலையோ பணிபுரியும் இடமோ பரிசுத்தத்திற்குப் பங் கத்தைத்தான் விளைவிக்குமென்ற நிச்சயம் எவருக்கும் வந்துவிட்டால் வேதாகம நெறிகளைப் பணயம் வைப்பதைவிட வேலையையும் இடத்தையும் மாற்றிவிடுவதே மேல். இதனால் பதவியிலும் ஊதியத் திலும் இறக்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. இவ்விதமாய்த் துணிந்து செயல்படும்போது வாலிபன் யோசேப்பிற்குக் கடவுள் செய்ததுபோல அரண்மனையிலிருந்து சிறைச்சாலைக்கு இறக்கியதைச் சிறைச்சாலை யிலிருந்து அரண்மனைக்கு ஏறுதலாய் மாற்றிவிடுவார் (Palace to Prison / Prison to Palace).

## 5. பரிசுத்தம் சுபாவத்தைப் பொறுத்தது! (Temperamental)

''என்னால் முடியாது : அது என் சுபாவம்!'' அடிக்கடி சொல்லப்படும் இந்தச் சாக்குப்போக்கு முற்றிலும் சரியுமல்ல, தவறுமல்ல. நமது



சுபாவங்கள் பலதரப்பட்டவை என்பது உண்மைதான். சிலர் இயல் பாகவே கனிவாயிருப்பர், மற்றவர்களோ கடின சுபாவமுள்ளவராயிருப் பர்; சிலர் பாலியலில் வீரியமாயிருப்பர், மற்றவர்களோ அதில் குன்றி யிருப்பர்; இப்படிப் பலவிதங்கள். ஆனால் நாம் மறுபடி பிறக்கும்போது ''புதுப் படைப்புகளாகிறோம்; பழையவை ஒழிந்து யாவும் புதிதாகின் றன'' (2 கொரி 5:17). அதாவது, தூயாவியானவரால் கடவுளின் வித்து நமக்குள் ஊன்றப்பட்டு நமது பாவ சுபாவத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் திறன் நமக்கருளப்படுகிறது (1 யோ 3:9). கல்லான நமது இருதயம் சதையான, மென்மையான இருதயமாய் மாற்றப்படுவதே புது உடன் படிக்கையின் சொல்லிமுடியாத ஆசீர்வாதம் (எசேக் 36:26). இப்படிச் சொல்லுவதால், நமக்குப் பாவம் செய்வதே இயலாமற்போகும் என்பது பொருளல்ல. மாறாக, ஒவ்வொரு பாவத்தையும் மேற்கொள்ளும் வல்ல மையைக் கடவுளின் கிருபையருள் நமக்குத் தந்துவிடும் (ரோ 6:14). உங்களுக்குச் சீக்கிரமாய்க் கோபம் வரலாம்; ஆனால் அது சீக்கிரமாய்ப் போய்விடவும் வேண்டும் (எபே 4:26)! ஏழு தடவை விழுந்தாலும் இப் புனித முயற்சியை விட்டுவிடாதீர்கள். கடவுளின் ''மகா மேன்மையும் அருமையுமான வாக்குகளை'' உரிமை பாராட்டி, அவரது ''திவ்விய சுபா வத்திற்குப்'' பங்குள்ளவர்களாகும்படி அவரது ''திவ்விய வல்லமை யைப்'' பற்றிக்கொள்ளுங்கள் (2 பேது 1:3,4).

## 6. பரிசுத்தம் சூழலைப் பொறுத்தது! (Situational)

பரிசுத்தத்தின் அளவானது ஒருவர் வாழும் சுற்றம் சூழலைப் பொறுத்தது எனும் சாக்குப்போக்குக்கு கிறிஸ்துவானவர் மானிடனானது ஒரு சவுக்கடியாகும். பாவம் நிறைந்த இப்பாழுலகில் இயேசு பாவமற்ற வராய் வாழ்ந்தார் (யோ 1:14; எபி 7:26). நம்மைப்போல ''எல்லா விதத்திலும்'' அவர் சோதிக்கப்பட்டும் அவர் பாவம் செய்யவில்லை. தேவையான சமயத்தில் நமக்கு உதவிசெய்யும்படி அவர் நம்மீது பரி தாபமும் பரிவுணர்வும் கொண்டுள்ளார் (எபி 4:15,16). ஒரு வேசியின் வீட்டில் இரவில் தங்கியபோதும் எரிகோ சென்ற வேவுகாரர் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டனர். பெருந்தீனிக்குப் பெயர் பெற்றி ருந்த நாட்டிலும் விலக்கப்பட்ட உணவு வகைகளுக்குத் தானியேல் தன்னை விலக்கிக் காத்துக்கொண்டான். உலகில் பாவமில்லாத இடமே

இல்லை (ஆதி 6:11,12). ''முழு'' உலகமும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது (1 யோ 5:19). நாம் இந்த உலகத்திலிருந்து தப்பி ஓடிவிட முடியாது (1 கொரி 5:10ஆ). நமக்காகப் பிதாவை நோக்கி இயேசு ஏறெடுத்த ஜெபமே நடைமுறையானது: ''நீர் அவர்களை உலகத்தி லிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்'' (யோ 17:15). ''உலகத்தில் இருந்தாலும் அதற்கு உயர்ந்து வாழ்வதே பரிசுத்த வாழ்வு'' என்றார் டைரன் எட்வர்ட்ஸ் என்பவர். சோதனை வலை ஒவ் வொன்றிற்கும் வெளிவாயிலைக் கடவுள் நமக்காய்த் திறந்துவிடுகிறார் (1 கொரி 10:13)!

## 7. பரிசுத்தம் யுகத்தையடுத்தது! (Dispensational)

பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுப் புதிய ஏற்பாட்டுக் கிருபையின் கீழ் வாழ்வதைப் பாவம் செய்வதற்குக் கிடைத்துள்ள உரிமம் என்று தவறாய்ப் புரிந்துகொள்ளக்கூடாது (ரோ 6:1,2). பழைய ஏற்பாட்டின் தேவன் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நமக்காய்த் தமது எதிர்பார்ப்புகளைத் தளர்த்திவிட்டுள்ளாரென நினைப்பது மடமை. உண்மையென்னவெனில், பரிசுத்தத்திற்கான தரத்தை அவர் இப்பொழுது உயர்த்தியிருக்கிறார். இச்சை நிறைந்த பார்வையே இன்று விபச்சாரமாம்; அப்படியே காரணமற்ற கோபமே இப்பொழுது கொலையாம் (மத் 5:21,22,27,28). இன்னும் சிலர் பரி சுத்தத்தைப்பற்றிப் பேசியவுடன் முடிவான எதிர்காலத்தையே மனதிற் கொள்ளுகின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் வருகையில் தாங்கள் பூர ணப்படுவதையே எதிர்நோக்கிக்கொண்டு, ஆனால் ''மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுத்தமும் நீங்க நம்மைச் சுத்தப்படுத் திக்கொண்டு பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்த வேண்டிய'' இன்றையப் பொறுப்பை நினைவிற்கொள்வதேயில்லை (2 கொரி 7:1). நம் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் இறுதியான அழைப்பை இதோ கவனியுங்கள்: ''பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரம் வருகிறேன்; அவனவனுடைய செயல்களின்படி அவனவனுக்கு நான் கொடுக்கும் பலன் என்னோடு கூட வருகிறது'' (வெளி 22:11,12).



## 8. பரிசுத்தம் போரடிக்கிறது! (Boring)

இளைஞரை வஞ்சிப்பதற்குச் சாத்தான் பயன்படுத்தும் அபாண்ட மான பொய் இதுவே. பரிசுத்த வாழ்வே பரவச வாழ்வு (Holy life is jolly life!) என்பதை அவர்கள் உணருவதில்லை. தமது மலைப்பிரசங்கத்தில் இயேசு, ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' என்றார். ''பாக்கியவான்கள்'' என்பதற்குப் ''பொறாமைப்படுமளவு பரவசமாயி ருப்பவர்கள், குதூகலமாயிருப்பவர்கள், ஆன்மீகச் செழிப்புள்ளவர்கள்'' என்றெல்லாம் மூலமொழியில் பொருளுண்டு! ''பரிசுத்த வாழ்வு என் றால் மடத்தில் வாழும் வாழ்வல்ல; அது தெய்வீகச் சட்டங்களுக்கும் சத்தியங்களுக்கும் உட்பட்ட கிரமமான வாழ்வு'' என்றார் பழம் பரிசுத்தர் ஒருவர். ''தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு... இன்பத்தை அளிக்கிறார்'' என ஞானி சாலமோன் உறுதிப்படுத்தினார் (பிர 2:26). நீதியாய் நடக்கிறவர்கள் அதிகமதிகமாய்ப் பிரகாசமும், பலமும், தைரியமும் உள்ளவர்களாய் மாறுவர் (நீதி 4:18; யோபு 17:9; நீதி 28:1). நாம் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கும்போது கடவுள் நம்மை ஆனந்தத் தைலத்தால் அபிஷேகம்பண்ணுகிறார் (சங் 45:7). குற்ற வுணர்வுக்கு இணையான மகிழ்ச்சிக்கொல்லி வேறில்லை. பரிசுத்த வாழ்வு குற்றவுணர்வற்ற வாழ்வாம். பரிசுத்தம் என்றால் பரலோகம் நம்மில் என்று பொருள்! ''மனிதனது பரிசுத்தமே இன்று அவனது உன்னதப் பரவசம்; நாளை பரலோகில் சொல்லொண்ணாப் பரவசமே அவனது பரிபூரண பரிசுத்தமாயிருக்கும்'' என்று தாமஸ் புரூக்ஸ் என்பவர் பரிசுத்தத்தைக் குறித்த வேத உபதேசத்தை இரத்தினமாய்ச் சுருக்கிச் சொன்னார். *''பரிசுத்தமே பரவசமே!''*

## 9. பரிசுத்தம் முழுவதும் கடவுள் பொறுப்பு! (All by God!)

கிறிஸ்தவச் சிந்தனையுலகில் இருபெரும் இறையியல் தத்துவங்கள் (Calvinism & Arminianism) உண்டு. முதலாமது கடவுளின் ஏகாதி பத்தியத்தையும் (God's sovereignty) அடுத்தது மனிதனின் பொறுப் பையும் (Man's responsibility) வலியுறுத்தும். என்னைப் பொறுத்த வரையில், திருமறை இவ்விரு தத்துவங்களையும் தகுதியாக சம நிலைப்படுத்தியுள்ளது என்றே கூறுவேன். கடவுளின் ஒத்தாசை இல்லாது நம்மால் எதுவும் செய்யமுடியாது; நமது ஒத்துழைப்பு

இல்லாது கடவுள் எதுவும் செய்யமாட்டார்! (Without God we cannot; without us He will not!). இரு ஏற்பாடுகளும் இச்சத்தியத்தைப் போதிக்கின்றன. நாம் நீதிக்கென்று ''விதைக்க'' வேண்டும்; அப்பொழுது கர்த்தர் நம்மீது நீதியைப் ''பொழியப்'' பண்ணுவார் (ஓசி 10:12). ''நாம்'' தூக்கத்திலிருந்து விழித்து மரித்தோரை விட்டு எழுந்தால், ''கிறிஸ்து'' நம்மைப் பிரகாசிக்கச்செய்வார் (எபே 5:14). நமது பொறுப்பை மறக்கும்போது நாம் கவலையீனராகிறோம்; தேவன் நம்மில் செய்வதை நாம் மறக்கும்போது நாம் கவலைக்குள்ளாகிறோம்.

### 10. பரிசுத்தம் பாரமானது! (Burdensome)

''கிறிஸ்துவிடம் செல்லுவதற்குப் பரிசுத்தம் வழி அல்ல; கிறிஸ்துவே பரிசுத்தத்திற்கு வழி'' என்று அபாரமாய் எழுதினார் அட்ரியன் ரோஜர்ஸ் என்பவர். இச்சத்தியம் சரிவரப் புரியப்படாவிடில் பரிசுத்த வாழ்வு பெரும் பாரமாகவே இருக்கும். எவரையாவது நாம் இதயபூர்வமாய் நேசித்தால் அன்னாரைப் பிரியப்படுத்த எதையும் செய்ய நாம் ஆயத்தமாயிருப்போமல்லவா? அறுபது ஆண்டுகளுக்குமேல் கிறிஸ்துவோடு நடந்துவந்த அப்போஸ்தலன் யோவான், ''நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடம் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'' என்று எழுதிவைத்தார் (1 யோ 5:3). சொல்லப்போனால், பரிசுத்த வாழ்வு ஓர் இளைப்பாறுதலான வாழ்வாகும். ''பரிசுத்தம்'' என்ற பதம் வேதத்தில் முதலாவது ''ஓய்வு'' என்ற கருத்தை ஒட்டியே வருகிறது (ஆதி 2:3). கட்டுக்குள்ளும் அடிமைத்தனத்திற்குள்ளும் நம்மை நடத்துவது பாவமே. ஆனால் கிறிஸ்து மூலம் வரும் விடுதலையை நாம் பெறும்போது அவரோடு அமரிக்கையான ஐக்கியத்தை நாம் அனுபவிக்கலாம் (யோ 8:34-36). பாவத்தை மூடி மறைத்து வைத்திருக்கும்வரை ''இரவும் பகலும் என்மேல் உமது கை பாரமாயிருந்தது'' என்றே தாவீதைப்போல் நாம் புலம்பிக்கொண்டிருப்போம். ஆனால் அதைக் கடவுளிடம் அறிக்கைபண்ணி விட்டுவிட்டால் அவர் அதை உடனே மன்னித்து நம்மை மகிழ்ச்சியினால் துள்ளப்பண்ணுவார் (சங் 32:4,5,11).

*நீங்கிற்றே நீங்கிற்றே நீங்கிற்றே*
*என் பாவப்பாரமெல்லாம் நீங்கிற்றே!*



### இனிச் சாக்குப்போக்கு வேண்டாம்!

சாக்குப்போக்குகளின் பட்டியல் இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது. மனிதரைப் பாவத்திற்குள்ளும் கட்டுக்குள்ளும் நடத்துவதில் பல்லாயிர ஆண்டுகள் அனுபவமுள்ள பிசாசு பரிசுத்தம் சாத்தியமல்ல என்பதற்குப் புதிது புதிதாய்ச் சாக்குப்போக்குகளைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறான். அவனது பொய்யை நம்பினால் நாம் மாளுவது நிச்சயம். திருவசனச் சத்தியத்தைப் பற்றிக்கொண்டாலோ வாழ்க்கையை நாம் பரிபூரணமாய் அனுபவிப்போம்!

### பாடுவோம் —

(Yield not to temptation ...)
*தீவினை செய்யாதே மா சோதனையில்*
*பொல்லாங்கனை வென்று போராட்டத்தினில்*
*வீண் ஆசையை முற்றும் கீழடக்குவாய்*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்*

*ஆற்றித் தேற்றியே காப்பார்*
*நித்தம் உதவி செய்வார்*
*மீட்பர் பெலனை ஈவார்*
*ஜெயம் தந்திடுவார்*

*வீண் வார்த்தை பேசாமல், வீண் தோழரையும்*
*சேராமலே நீங்கி, நல்வழியிலும்*
*நின்றூக்கமும் அன்பும் சற்றேனும் விடாய்*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்*

*மெய் விஸ்வாசத்தாலே வென்றேகினோன்தான்*
*கிரீடமே பெற்றென்றும் பேர் வாழ்வடைவான்*
*மா நேசரின் பெலன் சார்ந்தே செல்லுவாய்*
*யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்*

(H.R. Palmer, 1834-1907)

# 4

# பரிசுத்தமாக வாழ்வது எப்படி?

தேவன் நம்மைத் தமது மக்களாக அழைத்திருக்கிறார்; நாம் ஒவ்வொருவரும் பரிசுத்தமாகுதலில் அவர் விருப்பமுள்ளவராயிருக்கின்றார். பரிசுத்தமாகவேண்டுமென நமக்கிருக்கும் விருப்பத்தைவிட நம்மைப் பரிசுத்தமாக்குவதில் அவர் அதிக வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். நம்மைத் தூய்மைப்படுத்துவதற்காகவே நம்மைத் தெரிந்து கொண்ட அவர், நாம் தூய்மையாகுமுன் பாதி வழியில் நம்மை விட்டுச் செல்ல மாட்டார். ''நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்று சொல்லியிருக்கிறார் அவர் (யோசு 1:5இ). நம்மில் தொடங்கின நற்செயல்களை இறுதி நாள் வரை நிறைவேற்றி முடிப்பார் (பிலி 1:5). நம்மை அவரது குமாரனுக்கொப்பாக மாற்ற வேண்டும் என்ற ஒரே தலைசிறந்த நோக்கத்திற்காகவே நமது வாழ்வின் சகல காரியங்களும் நடந்தேறுகின்றன (ரோ 8:28,29). நம்மைப் பரிசுத்தமாக்குகின்ற ஒரு பரிசுத்த தேவனையே நாம் ஆராதிக்கின்றோம் என்ற உண்மை நமக்கு எத்தனை உற்சாகம் அளிக்கின்றது!

ஏற்கனவே நாம் பரிசுத்தமே பிரதானமானது என்பதைப் பார்த்தோம். அதில் பரிசுத்தம் ஏன் அதிமுக்கியமானது என்பதற்கான முக்கிய காரணங்களை வேதத்தின் அடிப்படையில் கற்றுக்கொண்டோம். பரிசுத்தத்தைக்



குறித்து நமக்கிருக்கும் தவறான கோட்பாடுகளையும், நாம் விட்டு விடவேண்டியவற்றையும் பார்த்தோம். பல்வேறு ஆவிக்குரிய சத்தியங்களை நாம் நான்றாக விளங்கிக்கொள்ளவேண்டுமென்றால், முதலாவதாக நாம் தவறாய்க் கற்றிருப்பவற்றைக் களைந்து (unlearn) பின்னர் சரியானவற்றைக் கற்கவேண்டும் (learn) என்று நான் முழுமனதுடன் நம்புகின்றேன். தவறான கருத்துக்கள் பலவற்றை நம் மனதில் வைத்துக் கொண்டு, பின்னர் சரியான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும்போது மனதில் இடைவிடாத போராட்டம்தான் நடைபெறும். நீங்கள் ஒரே வீட்டில் இஸ்மவேலையும் ஈசாக்கையும் வைப்பது இயலாத காரியம். இஸ்மவேலும் நமது பிறப்பாயிருக்கிறபடியால் நாம் அதைப் பெரிதும் விரும்பி மனதில் வைத்துக்கொள்ள விரும்புவது இயல்பு. ஆனால் தேவன் நம்மிடம், ''உங்கள் இருதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு இஸ்மவேலை வெளியே அகற்றிவிடுங்கள்; அப்போதுதான் ஈசாக்கு அவனது முழுச் சுதந்திரத்தை அனுபவிக்கமுடியும்'' என்று சொல்லுவார்.

திருமறையின் இரண்டாவது பகுதிப் பக்கங்களிலிருந்து கர்த்தர் நமக்குக் கற்றுத்தரும் கலப்படமற்ற புதிய ஏற்பாட்டுச் சத்தியங்களை நாம் முழுவதுமாக அனுபவித்துப் பயனடையவேண்டுமானால், பல ஆண்டுகளாக இங்குமங்குமாகச் சேகரித்த சில காரியங்களை நாம் புறக்கணிக்கவேண்டியது அவசியம். பதினைந்து வயதான இளைஞன் ஒருவன் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது அவன் ஆன்மீக வாழ்வில் மிக வேகமாக வளருகிறான்; ஏனெனில் அவன் செய்யவேண்டியதெல்லாம் கற்பது மட்டுமே. ஆனால் ஐம்பது வயதான ஒருவர் கர்த்தரைக் கண்டடையும்போது அவரால் அந்த அளவு வேகமாக வளர முடியவதில்லை; ஏனென்றால் ஏற்கனவே கற்றுக்கொண்ட பல காரியங்களை அவர் களையவேண்டியதிருக்கிறது. வயோதிப காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்களை அதைரியப்படுத்த நான் இதைச் சொல்லவில்லை. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதைவிடத் தாமதமாகப் பெற்றுக்கொள்வது மேல். ஆனால் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பும் சத்தியம் என்னவெனில், நாம் பழையனவற்றை, பழைய புளித்தமாவை, நீக்கினால் மட்டுமே புதிய மாவு உள்ளே வர முடியும்.

‘நடைமுறை வாழ்வில் பரிசுத்தம்’ என்ற அடுத்த பகுதிக்குச் செல்லு முன் *‘‘பரிசுத்தமாக வாழ்வது எப்படி?’’* என்று சுருக்கமாக விளக்க விரும்புகிறேன். பரிசுத்தத்தை வாழ்வில் செயல்படுத்துதல் சார்பான சத்தியங்களை நான் கொடுக்கும்போது, உங்கள் வாழ்வில் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் அவற்றைப் பயன்படுத்த உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். ‘‘பரிசுத்தமாக வாழ்வது எப்படி?’’ என்பது நீண்ட பாடம்; ஆனால் நான் சில முக்கியக் கருத்துக்களை மட்டுமே உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

## 1. பரிசுத்தத்தை நேசியுங்கள். (Love Holiness.)

சங்கீதம் 11ஐத் திருப்பி, அதில் 7ஆம் வசனத்தைப் பாருங்கள். ‘‘கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்...’’ இங்கே ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த இரு காரியங்களைப் பார்க்கிறோம். நீதியுள்ளவர்களாயிருக்க வேண்டுமெனில் நாம் நீதியை நேசிக்க வேண்டும். சங்கீதம் 45:7இல் நாம் மேசியாவைக் குறித்து, ‘‘நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்’’ என்று வாசிக்கிறோம். தூய்மையை நேசிக்காத ஒரு நபரால் தூய்மையாயிருக்க இயலாது. நாம் பரிசுத்தத்தின் மேல் உண்மையான வாஞ்சையோ விருப்பமோ இல்லாமல் பரிசுத்தமாய் வாழ முயலுகிறோம். இதுதான் நம்மில் பலருடைய பிரச்னை. பரிசுத்தத்தின்மேலுள்ள வாஞ்சையை வளர்ப்பது எப்படி? அது அடுத்த பிரச்னை. நான் இயல்பாய்ப் பெற்றிராத ஒன்றைத் திடீரென்று என்மீது திணிக்க முடியாது. பரிசுத்தத்திற்கான விருப்பத்தை நம்மில் வளர்க்கக் கூடிய இரு காரியங்களைத் தியானிப்போம் —

### *(i) தேவனது மன்னிக்கும் பண்பினால் ஊக்கம்பெறுங்கள்.*

சங்கீதம் 99:8, ‘‘எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர் ... அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர்.’’ சில ஆங்கில வேதாகமங்களில் ‘‘மன்னிக்கிற தேவன்’’ என்ற சொற்றொடர் பெரிய எழுத்துக்களில் (Capital letters) எழுதப்பட்டுள்ளது. சங்கீதம் 103 வசனங்கள் 1,2ஐப் பாருங்கள்: ‘‘என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல



நன்மைகளையும் மறவாதே.’’ தொடர்ந்து சங்கீதக்காரன், நாம் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஐந்து நன்மைகளை ஒவ்வொன்றாய்ப் பட்டியலிட்டுக்கொண்டே போகிறார். தேவன் நமது அக்கிரமங்களையெல்லாம் மன்னிக்கிறார்; நமது நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்; நமது உயிரை அழிவுக்கு விலக்கி மீட்கிறார்; நம்மைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார்; மற்றும் அவர் நமது வாயை நன்மையினால் திருப்தியாக்குகிறார். இவ்வாறு அவர் தேவனது ஐந்து ஆசிகளைப் பட்டியலிடும்போது தேவனது மன்னிக்கும் பண்பைப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கிறார் பாருங்கள்!

புறவெளியில் முப்பரிமாணத்தை மட்டுமே அறிவியல் கண்டுபிடித்துள்ளது. ஆனால் தேவனுடைய அன்பு நாற்பரிமாணம் உள்ளது. தேவனது அன்பின் நாற்பரிமாணத்தை 103ஆம் சங்கீதத்திலேயே பார்க்கலாம் —

**வசனம் 11:** ‘‘பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.’’ இதில் அவர் தேவனுடைய அன்பின் **உயரத்தைக்** குறித்துப் பேசுகிறார்.

**வசனம் 12:** ‘‘மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்.’’ இது தேவ அன்பின் **அகலத்தைக்** குறித்துப் பேசுகிறது.

**வசனம் 13:** ‘‘தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.’’ இங்கே தேவ அன்பின் **ஆழம்** குறிப்பிடப்பட்டுள்ளது.

**வசனம் 17:** ‘‘கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும் ... அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.’’ இது தேவனுடைய அன்பின் **நீளத்தைக்** குறித்துப் பேசுகிறது.

அளவிட முடியாத உயரம், அகலம், ஆழம் மற்றும் நீளமான தேவனுடைய நாற்பரிமாண அன்பைப் பெற்றுக்கொள்வது நமக்குக் கிடைத்த சிலாக்கியம்!

தேவன் நம்முடைய பாவங்களை என்ன செய்திருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? இது என் வாழ்வில் எப்போதும் நான் மகிழ்வுடன் செய்கின்ற தியானம். அவர் தமது அன்பின் **உயரத்தை** எங்கே வெளிப்படுத்துகிறார்? அதை ஏசாயா 44ஆம் அத்தியாயம் 22ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்: ''உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன்.'' தேவனுடைய அன்பின் **அகலம்** என்ன? ''மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.'' (சங் 103:12). தேவனுடைய மன்னிக்கும் அன்பின் **ஆழம்** என்பது என்ன? அது மீகாவின் புத்தகம் அத்தியாயம் 7 வசனம் 19இல் உள்ளது: ''அவர் ... நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.'' தேவனது மன்னிக்கும் அன்பின் **நீளத்தைக்** குறித்து என்ன அறிகிறோம்? அதை ஏசாயா 38:17இல் எசேக்கியா ராஜாவின் பாடலில் வாசிக்கிறோம்: ''... என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்.'' இப்பொழுது உங்களுடைய பாவங்கள் எங்கே இருக்கின்றன? தேவன் அவற்றை மேகத்தைப்போல் அகற்றிவிட்டார்; மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவைகளை விலக்கிவிட்டார்; அவர் அவைகளைக் கடலின் ஆழத்தில் போட்டுவிட்டார்; அவர் அவற்றைத் தமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டார். அல்லேலூயா!

தேவன் இவ்வளவு அன்பும் மன்னிக்கும் மாண்பும் உள்ளவராயிருக்கிறார்; இனி நான் ஒருபோதும் அவர் மனவருத்தமடையும்படி எதுவும் செய்யமாட்டேன். அவர் எனது பாவங்களை அப்படியே தக்க வைத்திருக்கலாம்; அவர் எனது பாவங்களைப் பதிவுசெய்து வைத்திருக்கலாம்; அவர் எனது பாவங்களுக்கு ஏற்றபடி பதில் செய்திருக்கலாம்; தேவைப்படும்போது எனக்கு நினைவுபடுத்தும்படி என் பாவங்களை எங்கேயாவது சேகரித்து வைத்திருக்கலாம். ஆனால் அவர் செய்தது என்ன? மேலே உயரத்தில் அகற்றிவிட்டார், தூரமாக விலக்கிவிட்டார், கீழே ஆழத்தில் போட்டுவிட்டார், முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டார். நான் ஒரு சர்வாதிகாரிக்குக் கீழ்ப்படியாமல் இருக்கலாம்; ஆனால் இத்தகைய மன்னிக்கும் அன்பு மிகுந்த ஒரு தகப்பனுக்குக் கீழ்ப்படியாமல்



இருக்கமுடியுமா? அவரை மனவருத்தமடையச் செய்ய என்னால் முடியவே முடியாது. இவ்வித எண்ணம்தான் நம்மைப் பாவத்திற்கு விலக்கிக் காக்கும் உண்மையான ஊக்கியாகும்.

வாலிபன் ஒருவன் இருந்தான். அவனது பெயர் யோசேப்பு. அவன் பாவத்தின் இருப்பிடமாகிய எகிப்து என்ற நாட்டில் இருந்தான். ஒரு நாள் அவன் பாவம் செய்தால் அதை வேறொருவரும் பார்த்திருக்க முடியாத ஒரு வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. ஆனால் அந்த வாலிபன் சொன்னது என்ன? அவனை ஆசை காட்டி வசீகரிக்க முயன்ற பெண்ணிடம் அவன், ''என் **தேவனுக்கு** விரோதமாக நான் இப்பாவத்தைச் செய்வது எப்படி? என்னை நேசிக்கும் தேவனை நான் நேசிக்கிறேன். அவர் மன்னிக்கும் தேவன், அவரை மனவருத்தப்படுத்த நான் விரும்பவில்லை. உனக்கு அவ்வித மேலதிகாரி இல்லை. ஆனால் நான் எனது யேகோவா தேவனின் அன்பான அதிகாரத்தின் கீழ் வாழ்கிறேன்'' என்றான்.

இன்னொரு வசனக் குறிப்பைக் காண ஏசாயா புத்தகத்தைத் திருப்பிக்கொள்ளுங்கள்: 64:5, ''**மகிழ்ச்சியாய்** நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்.'' நாம் மகிழ்வுடன் நீதியைச் செய்யவேண்டும். அப்படிப்பட்டதொரு நபரை தேவன் ஆவலாய்ச் சந்திக்கிறார். பாரமாக நினைத்தோ அல்லது கடமைக்காகவோ அல்ல, மகிழ்வுடன் நீதியைச் செய்யவேண்டும்.

### *(ii) பரிசுத்தமாக வாழத் தீர்மானியுங்கள்.*

தானியேல் புத்தகத்தில் இதைக் குறித்த அழகான வசனக்குறிப்பு ஒன்று உள்ளது. தானியேல் என்ற வாலிபன் நாடு கடத்தப்பட்டு, இன்னொரு நாட்டிற்குக் கொண்டுசெல்லப்பட்டான். அந்தக் கடுமையானதும் சோதனையானதுமான சூழ்நிலையில் அவன் செய்தது என்ன? ''... தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடாதென்று, தன் இருதயத்தில் **தீர்மானம்**பண்ணிக்கொண்டான்...'' (தானி 1:8). இதுவே மிக முக்கியமான படியாகும். அவன் அப்படியொரு தீர்மானத்தை எடுத்தபடியால் 9ஆம் வசனத்தில் தேவன் அவனது தீர்மானத்தை வாய்க்கச்செய்தார்.

‘‘தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படிச் செய்தார்.’’ நாம் 8ஆம் வசனத்தின்படி செய்யத் தவறிவிட்டு, 9ஆம் வசனத்தின் அற்புதம் நடைபெற எதிர் பார்க்கிறோம். அது நடக்கவே நடக்காது. 8ஆம் வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ள உங்களது பங்கை நீங்கள் செய்தாலொழிய, 9ஆம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள தமது பங்கை தேவன் செய்யமாட்டார். ‘‘நீங்கள் இல்லாமல் தேவன் ஒன்றும் செய்யமாட்டார்; தேவன் இல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது’’ என்று நாம் ஏற்கனவே கற்றோம். தானியேல் தீர்மானம் செய்தான்; தேவன் அவனுக்கு உதவி செய்தார். ஆராய்ந் தறியும் கர்த்தரது பிரசன்னத்தின் கீழிருந்து, உங்களது வாழ்வின் கடந்தகாலத் தோல்விகளை நினைவுக்குக் கொண்டுவர முயற்சி செய் யுங்கள். தேவ ஒத்தாசையுடன் அவற்றை ஆராய்ந்துபாருங்கள். நிச்சய மாக, நீங்கள் உங்களைத் தீட்டுப்படுத்தக்கூடாது என்று முதலாவது தீர்மானம் எடுக்காததே அவற்றிற்கான காரணமாக இருக்கும். உங்களது தோல்விக்குத் தேவனைப் பழி சாட்டாதிருங்கள். பழியை நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள். பரிசுத்தமாவதற்கு முதற்படியாக பரிசுத்தத்தை விரும்புங்கள்; ஏனெனில் பரிசுத்தம் என்பது இருதயத்தைச் சார்ந்தது. அது ‘இருதயம்’ என்று திருமறை அழைக்கும் உள்ளான ஆள்தத்து வத்திலிருந்து உருவாகி வருகிறது.

யோபு 14:4ஐ வாசியுங்கள்: ‘‘அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை.’’ பரிசுத்தத்திற்கான வாஞ்சை இருதயத்தில் இல்லாத ஒரு நபர் பரிசுத்தமாக வாழ முடியும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? நமது இருதயத்தில் மறைந்திருக்கும் காரியங்களைச் சரிசெய்யாமல், நாம் வெளிப்படையான வாழ்க்கையைச் சீராக்க முற்படுகிறோம்; ஆனால் அது நடைபெறுவது சாத்தியமன்று. பிறிதொரு வசனக்குறிப்பு ரோமர் 11:16இல் உள்ளது: ‘‘முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமா யிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமா யிருக்கும்.’’ வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமா யிருக்கும். நாம் நமது இருதயத்தை எப்போதும் சோதித்துப் பார்த்துத் தீதானவற்றை அகற்றி, மாசுபடாவண்ணம் நம்மைக் காத்துக்கொண்



டால், நம்மிலிருந்து பரிசுத்த கிளைகள் தோன்றி வளருவதைக் காண்போம். இன்னுமொரு வசனக்குறிப்பு: யாக்கோபு 3:11, ‘‘ஒரே ஊற்றிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?’’ அது சாத் தியமன்று. அது இனிப்பான நீரூற்றாயிருந்தால் அது இனிய சுவையுள்ள நீரைக் கொடுக்கும்; அது கெட்ட நீரூற்றாயிருந்தால் கசப்பான நீரைக் கொடுக்கும். இயேசு தமது நீண்ட மலைப்பிரசங்கத்தில் பரிசுத்தத்தை நேசிப்பதைக் குறிப்பிட்டுள்ளார்: ‘‘நீதியின்மேல் **பசிதாகம்** உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்’’ (மத் 5:6). நீங்கள் பரிசுத்தமாய் வாழவேண்டுமெனில், பரிசுத்தத்தின்மேல் ஆர்வங்கொள் ளுங்கள். நீங்கள் நீதியாய் வாழவேண்டுமானால் உங்களுக்கு நீதியின் மேல் பசிதாகம் உண்டாகட்டும்.

பரிசுத்தத்தை வாஞ்சிப்போரே பரிசுத்தமாய் வாழ்வர். பரிசுத்தமாய் வாழத் தீர்மானம் எடுக்காவிடில், நீங்கள் பரிசுத்த செயல்களைச் செய்ய முடியாது. உங்களுக்குப் பரிசுத்தத்தின்மேல் பசியையும், தாகத்தையும், விருப்பத்தையும் ஆர்வத்தையும் கொடுக்கும்படி தேவனிடம் கேளுங்கள். அவர் தருவார், ஏனெனில் மற்றெல்லா ஜெபத்தையும்விட இந்த வேண்டுதல் அவருக்கு அதிகப் பிரியமானது. ‘‘ஒவ்வொரு மனிதனும் அவன் விரும்பும் அளவுக்குப் பரிசுத்தமாய் இருப்பான்’’ என்றார் A.W. டோசர்

### 2. பரிசுத்தத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். (Learn Holiness.)

பரிசுத்தத்தைக் கற்றுக்கொள்ள பல்வேறு வழிகளும், ஏதுக்களும் உள்ளன —

#### *(i) திருமறை மூலம்*

பரிசுத்தத்தைக் கற்பிப்பவற்றில் முதன்மையானது திருமறைதான் என்பது வெள்ளிடை மலையாகும். திருமறையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்ற பகுதிகளைச் சொல்லவில்லை; ஆனால் உபதேசங்கள் மற்றும் உதாரணங்கள் ஆகிய இரு பகுதிகள். வேதாகமத்தில் கட்டளைகளும் உண்டு; சாட்சிகளும்

உண்டு. எனவேதான் வேதம், ''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்'' என்று சொல்லுகிறது (ஏசா 8:20). இவை இரண் டையும் கவனித்தால்தான் வேதாகமத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக, நாம் ஒரு முக்கியமான சத்தியத்தைக் கற்கும்போது, உபதேசம் மற்றும் உதாரணம் ஆகிய இரண்டையும் ஒருங்கே கொண்டுவரவேண்டும்.

நாம் ஒரு முக்கியமான உபதேசத்தை எடுத்தாள முற்படுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். வேதாகமத்தில் அதைக் குறித்துத் திட்டமான போதனை இல்லாமல், சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே இருக்கு மானால், அவை உபதேசத்தை நிறுவுவதற்குப் போதுமானவை அல்ல. அதைக் குறித்துத் திருமறையில் எங்கேயாவது தெள்ளத்தெளிவான போதனை காணப்படவேண்டும். எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் புரிந்துகொண்டவற்றைப் பொதுவான உபதேசம் என்று நாம் முடி வெடுக்கக்கூடாது. அது ஒரு தனிப்பட்ட நிகழ்வு மட்டுமே. இந்நாட் களில், குறிப்பாக ஆன்மீக வட்டாரங்களில், பெரும்பாலான உபதேசங் கள் வேதாகமத்தின் எடுத்துக்காட்டுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன; அவற்றில் எப்பொழுதும் மக்களை ஓரங்களுக்கு வழிநடத்தும் அபாயம் உள்ளது. நாம் போதனைகளையும் எடுத்துக் காட்டுகளையும் ஒருங்கே கொண்டுவரவேண்டும்.

ஆதித் திருச்சபையிலே புறவினத்தவர் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டுமா வேண்டாமா என்றதொரு பிரச்னை எழுந்தது. கொர்நேலியு வின் வீட்டிலே பேதுருவுக்கு நிகழ்ந்த அனுபவங்கள் குழுமியிருந்தோ ரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. ஆனால் அனுபவங்களும் எடுத்துக்காட்டுகளும் போதுமானவை அல்ல. ஆலோசனைக் குழுவில் யாக்கோபு எழுந்து நின்று, தேவன் விழுந்துபோன தாவீதின் கூடா ரத்தைத் திரும்பவும் எடுப்பித்து நிறுத்துவார் என்றும், புறவினத்தவர் நடுவிலிருந்து அவர் தமது நாமத்திற்காக ஒரு கூட்ட மக்களை ஆயத்தப் படுத்துவார் என்றும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தில் காணப் பட்டவற்றை மேற்கோள் காட்டி விவரித்தார் (அப் 15:16,17; ஆமோஸ் 9:11,12). எனவே அவர்கள் பிரமாணத்தையும், சாட்சியையும் ஒருங்கே கொண்டுவந்து, பின்னர்தான் அவர்கள் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்



தனர். ஒரு முக்கியமான சத்தியத்தைக் கற்றுக்கொள்ளப் போதனை யையும் எடுத்துக்காட்டையும் ஒருங்கே கொண்டுவரவேண்டும் என் பதைப் புரிந்துகொள்வதற்கு மேற்கண்ட எடுத்துக்காட்டைவிடச் சிறந் தது இருக்க முடியாது.

பரிசுத்தம் என்ற கருப்பொருளுக்கும் நாம் மேற்கண்ட இதே முறைமையைத்தான் பயன்படுத்த வேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்தத்தைக் குறித்த ஏராளமான உபதேசங்களும் போதனைகளும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு ஈடாக அந்தந்தத் தலைமுறை யில் தேவனுக்கு முன்பாக உத்தமமாய் நடந்த ஆடவர் மற்றும் பெண் டிரின் சாட்சிகளும், பரிசுத்த செயல்களும் திருமறையில் ஏராளமாக உள் ளன. இவைகளெல்லாம் நமக்கு உதாரணங்களாக எழுதப்பட்டுள்ளன என்று திருமறை கூறுகின்றது (1 கொரி 10:11). எனவே, எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாய்த் திருமறையைப் படியுங்கள். ஒப்பற்ற அழுக்கு நீக்கி இதுவே. இந்தியாவிலே ஒரு குறிப்பிட்டச் சவுக்காரத் திற்கான (Soap) விளம்பரம் பின்வருமாறு: 'இந்தச் சவுக்காரம் பாவத் தைத் தவிர மற்றெல்லா அழுக்கையும் நீக்கிவிடும்.' இந்த வணிகர் தங்களது சொந்த லாபத்திற்காக ஆவிக்குரிய காரியங்களைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். நான் அந்தச் சவுக்காரத்தைப் பயன் படுத்தியிருக்கிறேன். அதில் பிரமாதமாக எதுவுமில்லை. மக்கள் பிற ரைக் கவருவதற்காகப் பல்வகையான காரியங்களை விளம்பரப்படுத்து கின்றனர். திருமறையைப் படித்தால் அது நம்மைச் சுத்தமாக்கும். இயேசு தமது சீடருக்குத் திருவசனத்தைப் போதித்துக்கொண்டிருந்தார். ஆயி னும் சீடர் தாங்கள் சுத்தமாயிருப்பதை உணரவில்லை. ஆனால் இயேசு அவர்களிடம், ''நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்'' என்று சொன்னார் (யோ 15:3). திருவசனம் நமது வாழ்வினை அத்தனை எடுப்பாக, நிரந்தரமாகத் தூய்மையாக்கும் வல்லமை பெற்றுள்ளது. நீங்கள் ஒழுங்கும் கிரம முமாகத் திருமறையை வாசித்துத் தியானித்துவந்தால், அது உங்களை இடைவிடாமல் இம்மானுவேலின் இரத்த ஊற்றினுள் மூழ்கவைத்து, உங்களைப் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடையச் செய்யும்.

உங்களது வாழ்வில் திருவசனம் நடத்தும் சில காரியங்களை நீங்கள் உணரமுடிவதில்லை. தொடர்ந்து திருமறையை வாசித்துக்கொண்டே யிருங்கள். அது உங்களுக்குத் தெரியாமலே செயல்பட்டுக்கொண்டி ருக்கும். வேதத்தை வாசிக்கும்போது சில நேரங்களில் வீட்டின் மேற் கூரைக்குத் தாவிக்குதிக்கவேண்டும் போன்ற எண்ணம் உங்களுக்கு உண்டாகும். அதின் அழகில் மயங்கிவிடுவோம். அறுவை சிகிச்சை நிபுணரின் கத்தியைவிட வேதப் புத்தகம் கூர்மையானது. நீங்கள் திரு மறையைப் படிக்கும்போது, நீங்கள் அறுவை சிகிச்சை மேசையின்மேல் படுத்துக்கொள்கிறீர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் குடையின் கீழமர்ந்து வேதத்தை வாசிக்கும் போது, உங்கள் எல்லா உறுப்புகளையும் உணர்விழக்கச் செய்யும் பொது மயக்க மருந்தின் (General Anaesthesia) செயல்பாட்டில் அல்ல, இன் னொரு சிறப்பான மயக்க மருந்தின் செயல்பாட்டின்கீழ் இருக்கிறீர்கள். உங்களைத் தளர்த்திக்கொடுங்கள். கர்த்தர் உங்களது வாழ்வில் தமது பணியைச் செய்ய இடம்தாருங்கள். நீங்கள் இன்னும் மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படி, அவர் கிளைகளை நறுக்கிச் சுத்தம் செய்ய அனுமதி யுங்கள். தேவையற்ற காரியங்களை அவர் வெட்டிச் சுத்தமாக்க இடம் தாருங்கள். தேவனே இதைச் செய்கிறார். திருவசனங்களை ஒழுங்காகப் படித்து, தியானம் செய்து, தேவ பாதையில் நடக்கும் தேவனின் புனிதர் ஒவ்வொருவரும் இப்போது நான் சொல்லிக்கொண்டிருக்கும் கூற்று உண்மை எனச் சாட்சி பகருவர். ‘‘உங்கள் வேதாகமம் எவ்வளவு அதிக மாய் அழுக்காகிறதோ, அவ்வளவு அதிகமாய் நீங்கள் சுத்தமாவீர்கள்’’ என்று யாரோ ஒருவர் சொன்னார்! உங்கள் வேதாகமத்திற்கு zip உள்ள உறை வைப்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் வேதா கமத்தை எடுக்க எத்தனிக்கும்போதெல்லாம், அடிக்கடி zipஐத் திறந்தால் அது கெட்டுவிடுமாகையால் அதைத் திறக்கவேண்டாம் என்று பிசாசு உங்களிடம் சொல்லுவான். Zip முக்கியமானது அல்ல; அது பழுத டைந்தால் பரவாயில்லை. உங்களால் முடிந்தவரையில் அதைத் திறந்து வையுங்கள். நம்மில் பலர் வேதாகம உண்மைகளைவிட வேதாகம உறைகளில்தான் அதிக ஆர்வங்காட்டுகிறோம்.

சகோதர சகோதரிகளே, உங்களால் முடிந்த அளவு வேதாகமத்தை விடுதலையோடு தாராளமாகப் பயன்படுத்துங்கள். ஒவ்வொரு பக்கத் திலும் பரிசுத்தத்தைக் குறித்த சில சிறப்பான போதனைகளை அது நமக்குத் தரும். நாமெல்லாரும் பரிசுத்தத்தில் பலவீனராயிருக்கின் றோம். பரிசுத்தத்திற்குக் கூடுதல் தனிப் பயிற்சி (Extra tuition) நமக்குத் தேவைப்படுகிறது. எனவே தேவனுடைய வார்த்தையைப் படிப்பதில் இன்னும் கூடுதல் நேரம் செலவிடுங்கள். விசுவாசிகளில் பலர் திரு மறையைப் படிக்கப் போதுமான நேரம் செலவிடுவதில்லை. தேவன் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்களால் பரிசுத்தமாக வாழ முடியாததற்குக் காரணம் அதுவே.



### *(ii) புத்தகங்கள் மூலம்*

வேதாகமத்திற்கு அடுத்து, தேவனுடைய ஊழியக்காரரால் எழுதப் பட்ட எண்ணிறந்த நூல்களைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். பரிசுத்தம் சார்ந்த எந்தப் புத்தகத்தைக் கண்டாலும் அதை ஆர்வமுடன் வாங்கிப்படியுங்கள். பரிசுத்தம் குறித்தப் புத்தகங்களுக்குக் கவர்ச்சியான மேலட்டைகள் இல்லாதிருக்கலாம்; ஏனெனில் இந்த நூற்றாண்டை விடக் கடந்த நூற்றாண்டில்தான் பரிசுத்தத்தைக் குறித்த பெரும்பாலான புத்தகங்கள் எழுதப்பட்டன. ஆன்ட்ரு முர்ரே, F.B. மேயர், A.B. சிம்சன், ராபர்ட் முர்ரே மச்செயின் மற்றும் தேவ சமூகத்தில் மென்மையாக நடந்த பல பெரும் புனிதர்கள் எழுதிய நூல்களை வாசியுங்கள். பரிசுத்தத்தைக் குறித்த இந்த நூல்களை அதற்கு மேலும் சிறப்பாக எவராலும் எழுத முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவை தலைசிறந்தவை. தற்போது எந்தவொரு புத்தகக் கடைக்குச் சென்றாலும் பிற தலைப்பி லுள்ள நூல்களைவிடப் பரிசுத்தம் என்ற தலைப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும். அப்படியே பரிசுத்தத்தைக் குறித்த சில நூல்கள் இருந்தாலும் அவற்றில் நடைமுறைக் காரியங் களைவிடத் தத்துவங்களே அதிகம் உள்ளன. ஏமி கார்மைக்கேல் அம் மையார் பரிசுத்தத்தைப்பற்றி எழுதிய எந்தவொரு புத்தகமும் சிறந்தது. ஆன்ட்ரூ முர்ரே எழுதிய *‘மனத் தாழ்மை’* என்ற புத்தகம் மற்றுமொரு பழம்பெரும் நூல். பரிசுத்தத்தைக் குறித்த அவரது பெரும்பாலான நூல் கள் தற்போது அச்சில் இல்லாதுபோய்விட்டன. உங்களது நண்பர்கள் அல்லது போதகர்கள் சிலரை நீங்கள் அணுகும்போது, பரிசுத்தத்தைக்

குறித்த ஏராளமான பழம்பெரும் புத்தகங்கள் உங்களுக்குக் கிடைக்கக் கூடும். அவற்றை எடுத்து வாசியுங்கள்; உட்கொள்ளுங்கள்; பரிசுத்தத் தில் வளருங்கள்.

### *(iii) சரிதைகள் மூலம்*

வாழ்க்கை வரலாற்று நூல்கள் மற்றும் சுயசரிதை நூல்கள் மூலமாக வும் நீங்கள் பரிசுத்தத்தைக் குறித்த காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும். கேயோன் அம்மையாரின் (Madame Guyon) சுயசரிதை நூல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அந்தப் புத்தகத்தை வாசியுங்கள். 'கேயோன் அம்மையார் செய்த ஒரே ஒரு பாவம் அவர்கள் கடவுளை மிக அதிகமாக நேசித்ததே' என்பது அந்நூலின் உப தலைப்பு என்பது வியப்பைத் தரும். அதைப் போன்று, ஏனையப் பரிசுத்தவான்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் நீங்கள் எடுத்து வாசிக்கலாம்.

### *(iv) உடன் பரிசுத்தவான்கள் மூலம்*

நமது உடன் சகோதர சகோதரிகளிடமிருந்தும் பரிசுத்தத்தைக் கற்றுக் கொள்கிறோம். அதைத்தான் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்: ''பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத் தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு'' (2 தீமோ 2:22). பரிசுத்தத்தின்மேல் தீவிர வாஞ்சையுள்ள நபரை, ஒரு வேளை உங்கள் சபையிலிருந்தே, நீங்கள் கண்டுபிடிக்க முடியும். அந்த நபருடன் நண்பராகிக்கொள்ளுங்கள். நீங்கள் பரிசுத்தத்தில் வளரு வதற்கு அந்த நபர் பேருதவியாக இருப்பார். பொதுவான ஐக்கியம் செய் வதைவிட இத்தகைய நட்பு ஆழமான அனுபவங்களுக்குள் உங்களைக் கொண்டுசெல்லும். இன்றைக்கும் உயிரோடிருக்கும் பல புனிதர்களைக் கடவுள் அவருக்கென்று வைத்திருக்கிறார். பரிசுத்த தேவ மனிதர் இன் றும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எனக்கு ஒரு சபைப் போதகரைத் தெரியும். அவர் சில ஆண்டு களுக்குமுன் மரணமடைந்தார். அவர் இந்தியாவிலுள்ள மூத்த போதகர் களுள் ஒருவர். எனது கல்லூரி நாட்களிலே அவர் எனக்கு அறிமுக



மானார். ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக ஞாயிறு ஆராதனை முடிந்தவுடன் நான் அவரது அறைக்குச் செல்வேன்; நாங்கள் இருவரும் சேர்ந்து மதிய உணவைப் பகிர்ந்து உண்பது வழக்கம். நாங்கள் ஒருவ ரோடொருவர் உரையாடிக்கொண்டிருப்போம். நான் வேறு எவரைக் குறித்தாவது பேச ஆரம்பித்தால் அவர் தனது கண்களை மூடிக் கொள்வார்; தலை குனிந்துகொள்வார். நான் பேசுகிற காரியத்தை மாற்றினால் மட்டுமே கண்களைத் திறப்பார். ஒரு நாள் அவரது முகவரி அட்டையை என்னிடம் கொடுத்தார். அவரது முகவரி அட்டையில் 'ஒருவரைக் குறித்தும் தீயவைகளைப் பேசாதிருப்பாயாக' என்று அச்ச டிக்கப்பட்டிருந்தது. எவரேனும் ஒருவர் அவரிடம் வேறு எவரைக் குறித்தாவது தீதானவற்றைப் பேச முயன்றால், உடனடியாக அவர் நான் முன்பு கூறிய அதே செயல்களைத் திரும்பச் செய்வார். காதை அடைப் பதற்குப் பதிலாக அவர் கண்களை ஏன் மூட வேண்டும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். அவருடன் பேசுபவருக்கு அவர் சொல்ல விரும்பும் செய்தி என்னவெனில், அவர் ஏற்கனவே தீயவற்றிற்கு அவரது காதுகளை அடைத்துவிட்டார்; பிறரைக் குறித்துப் பேசுவதைக் கேட்க அவருக்கு ஆர்வமில்லை என்பதைத் தெரியப்படுத்தவே கண்களையும் மூடுகிறார் என்பதே. பிறரைக் குறித்துத் தீதானவற்றைப் பேசவோ, கேட்கவோ கூடாது என்பதைக் கற்றுக்கொண்டேன். அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட இந்தப் பாடத்தை வேறு எவரிடமிருந்தும் நான் கற்றதில்லை. அதைப்போல பல்வேறு புனிதர்களிடமிருந்து நாம் பரி சுத்தத்தைக் குறித்த பல நடைமுறைப் போதனைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 4ஆம் அத்தியாயம் 9ஆம் வசனத் தில் பிலிப்பிய விசுவாசிகளிடம் பவுல், ''நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ, அவை களையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்க ளோடிருப்பார்'' என்று சொல்கிறார். ஒரு போதகராகப் பவுல் அவர் களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார்; ஒரு நண்பனாக அவர்களுடன் எல்லாவற்றையும் பகிர்ந்துகொண்டிருந்தார்; அவர்களுள் ஓர் உடன் விசுவாசியாக அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அவர்களில்

ஒருவராகவே வாழ்ந்து அவர்கள் அவரது நடக்கையைக் கூர்ந்து கவனிக்கும்படிச் செய்தார். அவரிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளைச் செய்யும்படி அவர்களிடம் சொன்னார். இன்று நான் இவ்விதம் சொல்லமுடியுமா? மன்னியுங்கள், என்னால் அப்படிச் சொல்ல இயலாது. ஆனால் நான் அப்படிச் சொல்லக்கூடிய நிலைக்கு என்னைக் கொண்டுவரவேண்டுமென்று தேவனிடம் வேண்டுதல் செய்கின்றேன், முயலுகிறேன். இன்றைக்கு நான் மக்களிடம், ''என்னைப் பார்க்கவேண்டாம், கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்'' என்று எளிதாகச் சொல்லிவிடுகிறேன். அது வசதியான மார்க்கம். ஆனால் பவுலடியாரோ அவர்களிடம் அவரது செய்திகளை மட்டுமல்ல, நடத்தையையே பின்பற்றச் சொல்கிறார்; அவரது முறைமைகளை மட்டுமல்ல, அவரது நோக்கங்களையே பின்பற்றச்சொல்கிறார். எனவேதான் அவர், ''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்'' என்று தைரியமாகச் சொல்லக்கூடியவராயிருந்தார் (1 கொரி 11:1). வெகு சிலர் மட்டுமே அதைச் சொல்ல முடியும். ஆனால் நாம் அதைச் சொல்லவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். ''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்'' என்று இந்த உலகத்தாரிடம் நாம் சொல்லவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். மக்கள் நம்மில் கிறிஸ்துவைக் காணாவிட்டால் இன்றைக்கு இவ்வுலகில் கிறிஸ்துவைக் காண முடியாது.

### *(v) அனுபவங்கள் மூலம்*

வெற்றியோ தோல்வியோ உங்களது சொந்த அனுபவங்களிலிருந்து பரிசுத்தத்தைக் கற்றுக்கொள்ள முடியும். நீங்கள் ஒரு முறை தவறி விழுந்துவிட்டால், உடனே ''கர்த்தாவே என்னை மன்னியும்!'' என்று சொல்லிவிட்டு ஓடிவிடாதீர்கள். தேவனிடம் மன்னிப்பு கோருங்கள்; மேலும் அவர் உங்களை மன்னித்ததற்காக அவரில் களிகூருங்கள். அமைதியாக அமர்ந்திருந்து சில கேள்விகளை உங்களுக்குத்தானே கேட்டுக்கொள்ளுங்கள்: நான் ஏன் விழுந்தேன்? இந்த வீழ்ச்சியை நான் எப்படித் தடுத்திருக்கக்கூடும்? இதுதான் நான் வீழ்ச்சியடைந்த முதல் தருணமா அல்லது இதற்கு முன்னரே இதைப் போன்ற காரியத்தில் நான் வீழ்ச்சியடைந்திருக்கிறேனா? இது திரும்பத் திரும்ப நடைபெறும்



வீழ்ச்சியெனில், நான் எங்கே கவலையீனமாக இருந்தேன்? எந்த எச்சரிப்பை நான் கவனிக்கத் தவறினேன்? எனது வீழ்ச்சிக்கு எனது பேச்சுதான் காரணமா? அதற்கு என் பார்வை காரணமா? அதற்கு என் உறவுகள் காரணமா? அதற்கு எனது அனுதினத் திருமறைத் தியானக் குறைவுதான் காரணமா? பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் பங்கேற்பதில் நான் கவலையீனமாக இருந்தது காரணமா? எனது மூப்பர்களுக்கும், போதகர்களுக்கும் கீழ்ப்படிய மறுக்கும் எனது மனப்பான்மை காரணமா? எனது பெருமையும், 'உன்னைவிடச் சிறந்தவன்' என்ற எண்ணமும் காரணமா? எனது ஜெபமின்மை அதற்குக் காரணமா? இவ்வாறு உங்களது வீழ்ச்சிக்கான காரணத்தை ஆய்வு செய்யுங்கள். நம்மில் பலர் அதைச் செய்வதில்லை. நாம் எழுந்ததும் ஓடிவிடுகிறோம். நாம் மீண்டும் மீண்டும் விழுவதற்காகவே ஓடுகிறோம் என்பதுதான் அதன் அர்த்தம். உங்கள் தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். நம் வாழ்வில் நாம் அடையும் தோல்விகளே சிறந்த ஆசிரியர்கள்.

## 3. பரிசுத்தமாய் வாழ்ந்திடுங்கள். (Live Holiness.)

பரிசுத்தமாய் வாழுங்கள். இந்தப் புத்தகத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்பவற்றை மிகத் தைரியமாக நடைமுறைப்படுத்த முயலுங்கள். புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் குறுந்தகடுகள் ஆகியவற்றிலிருந்து கற்றுக்கொண்டவற்றைத் தைரியமாக நடைமுறையில் அப்பியாசிக்கக் கட்டாயமாக முயற்சி எடுங்கள். பாதியில் முயற்சியை விட்டுவிடாதிருங்கள். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது முதுமொழி. அதைத்தான் திருமறையும் நமக்குச் சொல்லுகின்றது: ''நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்'' (நீதி 24:16). எனவே முயற்சியைக் கைவிடாதிருங்கள். முயற்சியை இடையில் கைவிட்ட புனிதர்கள் நமது திருச்சபைகளில் உண்டு. 'நான் முயன்றேன்; ஆனால் தோல்வியுற்றேன்' என்று சொல்லும் தோல்வியடைந்த பரிசுத்தவான்களில் நீங்களும் ஒருவராகிவிடாதீர்கள்! பிசாசு உங்களை மேற்கொள்ளவிடாதிருங்கள். அவனை நோக்கிச் சவாலிடுங்கள்: ''நான் ஏழுதரம் விழுந்தாலும், திரும்பவும் எழுந்திருப்பேன்; ஏனெனில் கர்த்தர் எனது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணுவார். அவரே என்னைத் தூய்மைப்படுத்துகிறவர். அவரே எனது தந்தையானவர்.''

‘‘எவைகளில் நாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும்?’’ என்று அடுத்து வரும் அத்தியாயங்களில் படிப்போம்.

1. தொழுகையில் பரிசுத்தம் (Holiness in Worship)
2. வார்த்தைகளில் பரிசுத்தம் (Holiness in Words)
3. வேலையில் பரிசுத்தம் (Holiness in Work)
4. சாட்சி பகிர்வதில் பரிசுத்தம் (Holiness in Witnessing)
5. போராட்டங்களில் பரிசுத்தம் (Holiness in Warfare)
6. பலவீனங்களில் பரிசுத்தம் (Holiness in Weaknesses)
7. பரிசுத்தமும் இவ்வுலகும் (Holiness and the World)



# 5

# தொழுகையில் பரிசுத்தம்

**Holiness in Worship**

‘‘பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்’’ என்பது நாமனைவரும் நன்கறிந்த வசனம் (சங் 96:9). புதிய ஏற்பாட்டில் நாம் பயிலும் பல ஆவிக்குரிய சத்தியங்கள் பழைய ஏற்பாட்டில் நிழலாட் டங்களாக அல்லது முன்னோட்ட நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டின் ஆச்சாரியத்துவம் புதிய ஏற் பாட்டுத் திருச்சபைகளில் தம் மக்கள் தமக்கு ஏறெடுக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கும் ஆராதனை முறைமைக்கு நிழலாட்டமாக உள்ளது. மகா பிரதான ஆச்சாரியராகிய இயேசு கிறிஸ்துவின் ஆச்சாரியத்துவத் திற்கு முன்னோட்ட நிகழ்வாக ஆரோனின் பிரதான ஆச்சாரியத்துவம் உள்ளது. அதே சமயத்தில் ஆரோனின் தொழுகை புதிய ஏற்பாட்டில் நாம் கடைப்பிடிக்கும் தொழுகைக்கு நிழலாட்டமாகவுள்ளது.

## ஆச்சாரியத்துவத் தொழுகை

ஆரோன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் பரிசுத்தத்தைச் சார்ந்த குறிப்புகள் இருக்கும். யாத்திராகமம் 28:1,2இல் பிரதான ஆச்சாரிய னுக்குரிய உடையைக் குறித்து வாசிக்கிறோம். ‘‘உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆச்சாரிய ஊழியம் செய்யும்படி நீ ஆரோனையும் அவனோடேகூட அவனுடைய குமாரர்களையும் இஸ்ரவேல் புத்தி

ரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக்கொள். உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, **மகிமையும் அலங்காரமுமாய்** இருக்கும்படி, **பரிசுத்த** ஆடைகளை உண்டுபண்ணு.'' 'பரிசுத்தம்' 'மகிமை' 'அலங்காரம்' ஆகிய மூன்று பதங்கள் ''பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்'' என்ற கற்பனைக்கு நிழலாட்டமாக இருக்கின்றன. இவ்வத்தியாயத்தின் 36 முதல் 38 முடிய உள்ள வசனங்களில் ஆரோன் அணியவேண்டிய தலைப்பாகையைக் குறித்து வாசிக்கிறோம்: ''பசும் பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி, ***கர்த்தருக்குப் பரிசுத்தம்*** (Holiness to the Lord) என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி, அது பாகையிலிருக்கும்படி அதை இளநீல நாடாவினால் பாகையின் முகப் பிலே கட்டு. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பரிசுத்த காணிக்கைகளாகப் படைக்கும் பரிசுத்தமானவைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கும்படி, அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருக்கட்டும்; கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் அங்கிகரிக்கப்படும்படி, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருக்கவேண்டும்.'' அடுத்த அத்தியாயத்தில் ஆரோ னுடைய தலைப்பாகையின்மேல் வைக்கப்படும் கிரீடத்தைக் குறித்துப் படிக்கிறோம். ''அவன் தலையிலே பாகையையும் வைத்து, பரிசுத்த கிரீடத்தைப் பாகையின்மேல் தரித்து, அபிஷேகத் தைலத்தையும் எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகம்பண்ணு'' (யாத் 29:6,7).

தேவனைத் தொழுதுகொள்ளும்படி தேவ சந்நிதானத்தில் தேவ மக்களின் பிரதிநிதியாக ஆச்சாரியன் நிற்கிறான். மக்களின்முன் தேவனுடைய பிரதிநிதியாக ஒரு தீர்க்கதரிசி நிற்பான். பரிசுத்த தேவ னைத் தொழுதுகொண்டு ஆராதிக்கும் நம்மனைவரின் பிரதிநிதியாக ஆரோனை இங்கு காண்கிறோம். ஆரோன் சம்பந்தமான அனைத்தும் பரிசுத்தமாகவே உள்ளன. பிரத்தியேகமான ஆச்சாரிய உடை பரிசுத்த மானது. மோசே எழுதிய ஆகமங்களில் பிரதான ஆச்சாரியனுடைய ஆடையைக் குறித்துத் திரளான விளக்கங்கள் இருப்பினும், அந்த ஆடையின் மகிமையையும் அழகையும் நமது மனக்கண்களால் கற்பனை செய்ய இயலாது. அந்த ஆடை நமது பார்வையில் பட்டவுடனே அதன் முதல் தோற்றமே 'தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என அறிக் கையிடுவதுபோலத் தோன்றுகிறது. ஆனால் தலை முதல் பாதம் வரை



வெண்மை நிறப் பெந்தெகொஸ்தே ஆடையை அணிந்திருந்தான் என்று பொருளல்ல. அவரது ஆடை அலங்கரிப்பில் பல்வேறு வண் ணங்கள் இருந்தன. அந்த ஆடையிலிருந்த பல்வேறு நிறங்களின் ஒருங்கிணைப்பு தேவனுடைய பரிசுத்தத்தின் மகிமையையும் அழகை யும் பிரதிபலித்தன. ஆரோனுடைய முகத்தை மறைக்காமல் அவரது தலையை ஒரு பாகை அலங்கரித்தது. இப்படிப்பட்ட தலைப்பாகையை அணிவது கீழை நாட்டுக் கலாச்சாரமல்ல, மேலை நாட்டுக் கலாச் சாரமும் அல்ல; இது மத்தியத் தரைக்கடல் நாடுகளின் கலாச்சாரம்! ஒரு கலாச்சாரப் பாரம்பரியத்தைத் தெரிந்தெடுப்பதிலும் தேவன் சமச்சீரா கவே இருந்திருக்கிறார். சமநிலையுள்ள தேர்வு! பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப்பண்ணி, *கர்த்தருக்குப் பரிசுத்தம்* என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி, அது இளநீல நாடாவினால் பாகையின் முகப்பில் கட்டப்பட்டது. இதுவும் மகிமையையும், அலங்காரத்தையும் உண்டு பண்ணினது. தலைப்பாகையின்மேல் வைக்கப்பட்ட கிரீடம் 'புனித கிரீடம்' என்றழைக்கப்பட்டது.

ஆரோன் தலை முதல் கால் வரை அணிந்திருந்ததெல்லாமே பரி சுத்தமாயிருந்தது. ஏனெனில் ஆரோன் ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப் பிரகாரத்திலோ, உட்பிரகாரத்திலோ திருப்பணியாற்றுபவரல்ல; அவற் றைக் கடந்து மகோன்னத பரிசுத்தத் தலத்தில் திருப்பணி செய்யத் தெரிந்துகொள்ளப்பட்டவர். ஆரோன் வெளிப்பிரகாரத்துக்கு ஒப்பான உடலால் தேவனைத் தொழுதுகொள்ள அழைக்கப்படவில்லை; உட் பிரகாரத்துக்கு ஒப்பான ஆத்துமாவால் தேவனை ஆராதிக்க அழைக்கப் படவில்லை; இந்த இரண்டு பிரகாரங்களினூடே கடந்து சென்று மகா பரிசுத்தத் தலத்திற்கு ஒப்பான ஆவியினால் தேவனைத் தொழுது கொள்ளத் தெரிந்தெடுக்கப்பட்டவர். வெளிப்பிரகாரத்தில் சூரிய ஒளி இருந்தது. உட்பிரகாரத்தில் குத்து விளக்கு வெளிச்சம் தந்தது. ஆனால் மகா பரிசுத்தத் தலத்தில், காரிருளில் தேவன் வாசம்பண்ணினார். தேவன் தம்மில்தாமே ஒளியானவர்; ஜோதிகளின் பிதா. அவரால் படைக் கப்பட்ட சூரியனின் ஒளியோ அல்லது மனிதக் கரங்களினால் உருவாக் கப்பட்ட குத்துவிளக்கின் ஒளியோ அவருக்குத் தேவையில்லை. முற் காலப் புனிதர்கள், ''கர்த்தாவே, ஏன் உமது முகத்தை எனக்கு மறைக் கிறீர்?'' என்று அங்கலாய்த்தனர் (சங் 88:14). ஆனால் புதிய ஏற்பாட்டுக்

கால மக்களாகிய நாம், தேவன் நம் கண்களுக்குத் தெரியாதுபோனாலும், அவர் நமக்குள்ளேயே தங்கியிருக்கிறார் என்றும், அவர் நம்மை விட்டு ஒருபோதும் விலகுவதில்லை என்றும் நன்கு விளங்கிக்கொண்டிருக் கிறோம். சூரிய ஒளிக்கு ஒப்பான நம் உடல் உணர்வுகளுடன் வெளிப் பிரகாரத்தில் நடக்கலாம்; குத்து விளக்கின் ஒளிக்கு ஒப்பான நமது மன உள்ளுணர்வுகளுடன் உட்பிரகாரத்தில் நுழைந்து நடக்கலாம். ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தின் பிற பரிசுத்தத் தலங்களைவிட மிக உன்னதமான மகா பரிசுத்த தலத்தில் காரிருள்தான் உண்டு. அங்கு தரிசித்து நடக்க முடியாது; விசுவாசித்துதான் நடக்கவேண்டும். மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிற தேவனை நாம் பூரண விசுவாசத்தில்தான் ஆராதிக்கிறோம். எனவே உணர்வுகளின் அடிப் படையில் அல்ல; உண்மைகளின் அடிப்படையில்தான் தொழுகை அமைந்துள்ளது. ஆராதனையின் ஆணிவேர் உண்மைகளே; உணர்வு களல்ல. உணர்வுகள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்; அது காரியமல்ல. தேவன் இருக்கிறாரென்பதும், அவரை உண்மையும் கவன முமாய்த் தேடுபவருக்கு அவர் பலன் அளிக்கிறவர் என்பதும் என் றென்றைக்கும் நிலைத்திருக்கும் மாறாத உண்மை (எபி 11:6).

ஒருவரும் சேர முடியாத ஒளியாக இருப்பதால் காரிருளில் வாசம் பண்ணும் மகா பரிசுத்தமுள்ள தேவனை நெருங்கிச் சென்று, அவரைத் தொழுதுகொள்ள விரும்புவோர் (தலை முதல் பாதம் வரை) பரிசுத்தமாக இருக்கவேண்டும்! இந்த மாபெரும் உண்மையையறிந்த தேவ பக்த னொருவர் இருந்தார். அவர் அரச குலத்தைச் சார்ந்தவரல்ல; தீர்க்கதரிசி களின் சமுதாயத்தைச் சேர்ந்தவருமல்ல. அவர் ஒரு சாதாரண மீனவர். கிறிஸ்துவுக்குள் அனைத்து விசுவாசிகளும் தேவனுடைய பார்வையில் தேவனுக்குமுன் நிற்கும் இராஜரீகமான, பரிசுத்தமான ஆச்சாரியர்கள் என்ற புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை அவர்தான் நமக்கு வெளிப்படுத்திக் காட்டினார். அந்த மீனவருடைய பெயர் பேதுரு. 1 பேதுரு 2:5ஐப் பாருங்கள்: ''ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகை யாகவும், இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆச்சாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.'' இயேசு கிறிஸ்துவின் மூலம்



தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துவதே இந்த ஆச்சாரிய அழைப்பின் அடிப்படையும் முதன்மையுமான நோக்கம். 'அனைத்து விசுவாசிகளும் ஆச்சாரியரே' (Priesthood of all believers) என்ற மாபெரும் உபதேசத்தைப் பல சபைகள் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை. 'முழுநேர ஊழிய அழைப்பு பெற்றவரே ஆச்சாரியர்' என்னும் லேவிய ஆச்சாரியத்துவக் கோட்பாட்டினை இன்னும் கடைப் பிடித்துவருகின்றனர். அது புதிய ஏற்பாட்டுச் சத்தியம் அல்ல. புதிய ஏற்பாட்டின்படி கிறிஸ்துவுக்குள் மறுபிறப்படைந்த, புதிய விசுவாசியாகிய தேவப் பிள்ளையும்கூட தேவனுடைய பார்வையில் ஆச்சாரியனே. தேவ சந்நிதியில் அவனும் ஆரோனுக்கு ஒப்பானவனே. பரிசுத்த காணிக்கை படைக்கும் பிற தேவப் பிள்ளைகளோடு இப்புதிய விசுவாசியும் இசை வாக இணைந்து ஆவிக்குரிய மாளிகையாகக் கட்டப்பட்டுவருவதால், இப்புதிய விசுவாசியும் கிருபாசன அறைக்குள்ளே நேரடியாகப் பூரண தைரியத்துடன் நுழையலாம்.

எனவே கோத்திர ஆச்சாரியத்துவத்தை விட்டொழிந்து விசுவாசி களின் ஆச்சாரியத்துவத்தைக் கடைப்பிடியுங்கள். ஏசாவைப்போல ஒரு கோப்பைக் கூழுக்காக உங்கள் பிறப்புரிமையை விற்றுவிடாதிருங்கள்; சூழ்நிலை எத்தகையதாயினும் உங்கள் பிறப்புரிமையை இழந்துவிடா தீர்கள். இந்தப் பிறப்புரிமையை விற்றுவிட்டீர்களெனில், அந்த ஏசா வைப்போல மனந்திரும்பி, விற்றதைத் திரும்பப் பெறக் கண்ணீருடன் தேடியலைந்தாலும், அது உங்களுக்குக் கிடைக்காதாகையால் வெறுங் கையுடன் திரும்பிச் செல்ல நேரிடும். நாமெல்லாரும் தேவ சந்நிதியில் ஆச்சாரியர்களாகையால் தேவனைத் துதியுங்கள்! நாம் ஒவ்வொருவரும் ஆச்சாரியராக்கப்பட்டதால் நம் ஒவ்வொருவரது தலை முதல் கால் வரையுள்ள அனைத்தையும் தேவன் பரிசுத்தம் என்று அழைக்கிறார்.

## பழைய ஏற்பாட்டில் ''பரிசுத்த அலங்கார'' ஓவியங்கள்

தொழுகைக்குச் சம்பந்தப்பட்ட அனைத்துமே பரிசுத்தமாயிருக்கும். எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 40:10ஐப் பாருங்கள்: ''தகன பலிபீடத் தையும் அதன் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப்

பரிசுத்தப்படுத்து. அப்பொழுது அது மகா பரிசுத்தமான பலிபீடமா யிருக்கும்.'' ஏனெனில் அதுவே ஆராதனை செய்யுமிடம்.

ஆதியாகமம் 8ஆம் அத்தியாயத்தில் தொழுகைக்குச் சார்பான அனைத்தும் அழகுடன் மிளிரும் ஒரு காட்சியைக் காண்கிறோம். ''அப் பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவற்றைப் பலி பீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான்'' (வச 20). நோவாவின் காலத்தில், மிருகங்களிலும் பறவைகளிலும் எவை சுத்தமானவை, எவை அசுத்தமானவை என்று ஒருவருக்கும் தெரியாது. எந்த உணவை ஏற்கலாமென்றும், எந்த உணவை மறுக்கவேண்டுமென்றும் ஒருவ ருக்கும் தெரியாது. இவற்றைக் குறித்த சட்டதிட்டங்களெல்லாம், பத்துக் கற்பனைகள் கொடுக்கப்பட்ட பின்புதான் தேவனால் வழங்கப்பட்டன (யாத் 20). சட்டதிட்டங்கள் வழங்கப்படாத காலக்கட்டத்தில் வாழ்ந்த நோவாவினால் இவை சுத்தமானவை, இவை அசுத்தமானவை என்று எப்படித் தரம் பிரிக்க முடிந்தது? ஒரு நபர் உண்மையும் உத்தமமுமாக தேவனைத் தொழுதுகொள்ள முற்படும்போது தேவன் அந்த நபரின் சிந்தையில் தமது பரிசுத்தத்திற்கடுத்த உணர்வையும், வெளிப்பாட் டையும் கொடுக்கிறார். எதையாவது வாசிப்பதினால்தான் அல்லது கற்பதினால்தான் அறிவைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்று சொல்ல முடியாது.

இன்று நமது கைகளில் பல மொழிகளில், பல பதிப்புகளில், பல மொழிபெயர்ப்புகளில் வேதாகமம் உண்டு. இந்தியாவில் மட்டும் வேதா கமம் இன்னும் மொழிபெயர்க்கப்படாத 200 மொழிகள் உண்டு. இந்தி யாவில் 20 மொழிகள் பிரதானமாகப் பேசப்படுகின்றன. மேலும், ஒவ் வொன்றும் பிற மொழிகளினின்று முற்றிலும் வேறுபட்ட 300 அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்திய மொழிகள் உள்ளன. ஒரு சில பிராந்திய மொழிகட்கு எழுத்து வடிவம் இல்லை. 15 வயதிலேயே கிறிஸ்து வண்டை வந்த சில ஆதிவாசி விசுவாசிகள், அவர்களது மொழியில் வேதாகமம் இல்லாததால், 70 வயது வரை வேதாகமத்தை வாசிக்காமலே வாழ்கின்றனர். ஆனால் சில நேரங்களில் பரிசுத்தத்தைக் குறித்த அவர் களது கோட்பாடுகளும் அறிவும், வேதாகமத்தைக் கையில் பெற்றி



ருக்கும் நமது அறிவைவிட உயர்ந்தவையாயுள்ளன. தொழுகையைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள பரிசுத்தக் கோட்பாடுகள், பிரித்தெடுக் கப்படல் கோட்பாடுகள் ஆகியவை நாம் செய்வதைவிட சில நேரங் களில் மகத்துவமுள்ளவையாகக் காணப்படுகின்றன. தேவனுடைய சித்தத்தை மனப்பூர்வமாகச் ''செய்ய'' விரும்புகிறவன் தேவ சித்தம் இன்னதென்று தெரிந்துகொள்ளுவான் (யோ 7:17). இது மிக முக்கிய மான ஆன்மீகச் சத்தியம்.

மேற்கண்ட சத்தியத்தை ஒரு கருத்தோவியமாக நோவாவில் காண்கிறோம். மிருகங்களிலும், பறவைகளிலும் சுத்தமானவை எவை, அசுத்தமானவை எவை என்று பிரித்தறியும் பட்டியலை யாரும் நோவா வுக்குக் கொடுக்கவில்லை; ஆனால் அவன் ஓர் உண்மையான ஆராத னைக்காரன். ''நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதி மானும் உத்தமனுமாயிருந்தான்'' என்கிறது வேதம் (ஆதி 6:9அ). அவன் தேவ சித்தத்தைச் செய்ய விரும்பினான்; தேவன் அவனுக்குத் தமது சித்தத்தை வெளிப்படுத்தினார். எனவேதான் அவன் சுத்தமான மிருகங்கள் சிலவற்றையும், சுத்தமான பறவைகள் சிலவற்றையும் பலி பீடத்தின்மேல் தகனபலியாகச் செலுத்தினான். உள்ளத்தை நெகிழச் செய்யும் இவ்வாக்கியத்தைப் பாருங்கள்: ''சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார்'' (ஆதி 8:21அ). நோவாவின் காலத்தில் தேவனுக்கு மனுக் குலத்தின்மேல் மிகுந்த கோபம் இருந்தது; அவர்களை முற்றிலும் அழித்துவிட முடிவெடுத்தார். மேலே வானிலிருந்தும், கீழே நிலத்தின் ஊற்றுக்கண்களிலிருந்தும் தண்ணீர் பெருகி, பூமியின் மேற்பரப்பை முற்றிலும் மூடியது. தேவன் அவ்வளவு கோபமாக இருந்தார். அந்நிலை யில் நோவா சுகந்த வாசனையுள்ள நறுமணப் புகையான தனது ஆரா தனை மேலெழும்பி பரலோகச் சிங்காசனங்களுக்குமுன் செல்லும்படிச் செய்தார். தேவன் அதை முகர்ந்தார். பாரிஸ் பெருநகரில் கிடைக்கும் எந்த வாசனைத் திரவியமும், எந்த நறுமணக் கலவையும் தேவனுக்கு மனக்கிளர்ச்சியைத் தராது; ஜெர்மனி நாட்டிலுள்ள மாபெரும் விற்பனை அங்காடிகளில் கிடைக்கும் மிக உயர்ந்த உடல் தெளிப்பான்களின் நறுமணம்கூட தேவனுக்கு மனக்கிளர்ச்சியைத் தராது. ஆனால் அந்த முதிர்வயதான நோவா செலுத்திய தகனபலியின் சுகந்த வாசனை தேவனுக்கு மனக்கிளர்ச்சியைத் தந்தது. ''அப்பொழுது கர்த்தர்: இனி

நான் மனிதனை முன்னிட்டுப் பூவுலகைச் சபிப்பதில்லை ... என்று தம் முடைய உள்ளத்தில் சொன்னார்'' (ஆதி 8:21). நோவாவின் தொழுகை உண்டுபண்ணின மனக்கிளர்ச்சியின் விளைவாகத் தேவன் எடுத்த உடனடி முடிவு இது! பரிசுத்த தொழுகை! பரிசுத்த அலங்காரத்துடன் ஏறெடுக்கப்பட்ட உன்னத ஆராதனையின் கவின்மிகு வண்ண ஓவியம்! பரிசுத்த தேவனைப் பரிசுத்தமாகத் தொழுதுகொள்ளும் ஆராதனை தேவனுடைய உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது; மனித சமு தாயத்தின்மேலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு தனி மனித னுடைய புனித ஆராதனை — உள்ளார்ந்த தொழுகை — தேவன் ஒரு நித்திய முடிவை எடுக்கும்படி அவரைத் தூண்டியது. பிரியமானவர்களே, ஒவ்வொரு நாளும் நாம் ஏறெடுக்கும் ஆராதனை எத்தனை முக்கியத் துவம் வாய்ந்ததென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

யாத்திராகமம் 27:20இல் இன்னொரு அழகோவியத்தைக் காண் கிறோம். ''குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு.'' 'தெளி வான எண்ணெய்!' இந்நாட்களில் நாம் அறிந்திருக்கிற எந்த எண்ணெ யையும்விடச் சுத்தமான, கலப்படமற்ற, தெளிவான எண்ணெய்! பலி பீடத்தின்மேல் தொடர்ந்து எரியப் பயன்படும் சுத்திகரிக்கப்பட்ட எண் ணெய்! யாத்திராகமம் 37:29ஐப் பாருங்கள்: ''பரிசுத்த அபிஷேகத் தைலத்தையும், சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், தைலக் காரன் வேலைக்கு ஒப்பாக உண்டுபண்ணினான்.'' பரிசுத்த அபிஷேகத் தைலம்! சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க்கம்!

பழைய ஏற்பாட்டின் இறுதிப் புத்தகங்களில் ஒன்றான சகரியாவின் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் 14ஆம் அத்தியாயம் 20ஆம் வசனம் பரிசுத்த ஆராதனையின் அழகோவியத்தைத் தீட்டுகிறது: ''அந்நாளிலே குதிரை களின் மணிகளிலே *கர்த்தருக்குப் பரிசுத்தம்* என்னும் விலாசம் எழுதி யிருக்கும்; கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் **பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும்.''**

தொழுகையில் பரிசுத்தத்தின் முக்கியத்துவத்தை முறையாகவும், தெளிவாகவும் அறிந்திருந்த தாவீது 33ஆம் சங்கீதம் முதல் வசனத்தில்,



''நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்'' என்று கூறுகின்றார். ஏனெனில் நீதிமான்களின் துதிகள் அழகானவை.

## தொழுகையில் முதல் உணர்வு

தேவனை ஆராதிக்க அவரை நெருங்கும்போது நாம் உணர்ந்துகொள் ளும் முதல் காரியம் 'தேவன் பரிசுத்தமானவர்' என்பதே (லேவி 10:3). கர்த்தருடைய ஜெபத்திலுள்ள ஏழு விண்ணப்பங்களில் மணிமகுடமாக அமைந்திருப்பது முதல் விண்ணப்பமே! ''உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக'' (மத் 6:9). கர்த்தருடைய பெயரை நாம்தான் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்பது இவ்வசனத்தின் பொருளல்ல. கர்த்தருடைய பெயர் எப்பொழுதுமே முழுமையும் பரிசுத்தமானது. தேவனுடைய பெயர் பரிசுத்தமானது என்று நாம் அடையாளங்கண்டு, அந்தப் பரிசுத்தத்துடன் நம்மை ஒருமுகப்படுத்திக்கொள்ள விழைகிறோம் என்பதே இவ் விண்ணப்பத்தின் கருத்து. தேவனைத் தொழுதுகொள்ள முற்படும் போதெல்லாம், கற்பனைக்கெட்டாத ஆச்சரியமான தேவனுடைய பரி சுத்தமும் பயபக்தியும் நம் உள்ளத்தை முதலாவதாக ஆட்கொள்ள வேண்டும். மக்களிடமிருந்து ஒரு பெரிய தேவைப் பட்டியலைப் பெற்றுக்கொண்டு, பெரிய பைகள் நிறையப் பொருட்களை விநியோகம் செய்யும் கிறிஸ்துமஸ் தாத்தாவாகவே தேவன் பலருக்குத் தோன்று கிறார். தரங்குறைந்த சுவிசேஷம் இது; திருமறைப் போதனை இதுவல்ல. திருமறை போதிப்பது வேறொன்றாகும்: ''என் சந்நிதியில் வரும்போது நான் பரிசுத்தர் என்பதையே நினைவுகூருங்கள்.''

## குறைகளை உணர்த்தும் இறைப்பிரசன்னம்

தொழுகைக்குரிய வாழ்க்கையில் ஒரு புத்தம் புதிய பரிமாணத்தை, ஒரு புதிய நோக்கத்தை, இக்கருத்து உருவாக்கப்போகிறது. இப்புதிய பரிமாணம் பழைய ஏற்பாட்டுக்கால தொழுநோயாளிகளின் செயலுக்கு ஒத்ததாக இருக்கும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தொழுநோயாளிகள் நடந்து வருகையில், உடல் ஆரோக்கியமுள்ளவர் எவரேனும் எதிரே தென்படுவாரெனில், தூரத்தில் இருக்கும்போதே இத்தொழுநோயாளி கள் தங்கள் கைகளை உயர்த்தி ''தீட்டு, தீட்டு'' என்று — அதாவது தாங்கள் ''அசுத்தமானவர்கள்'' என்று — இருமுறை சத்தமாகச் சொல்ல

வேண்டும் (லேவி 13:45). தேவ சந்நிதியில் நுழையும் நாமும் இதையே ஒரு சிறு மாற்றமுமின்றி செய்யவேண்டும். 40 வாட் மின் விளக்கொளியில் நாம் அணிந்திருக்கும் ஆடையின் தூய்மையைக் கண்டுபிடிப்பது இயலாத காரியம். ஆனால் 1000 வாட் மின் விளக்கொளியில் நமது ஆடை சுத்தமாக இருக்கிறதா இல்லையா என்று மிகத் தெளிவாக ஒரே பார்வையில் கண்டுபிடித்துவிடலாம். ஒரு தொழுநோயாளி இன்னொரு தொழுநோயாளியுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிக வேறு பாடுகளைக் கண்டுபிடிக்க முடியாது. அதே வண்ணம் நாம் ஒருவருக் கொருவர் ஒப்பிட்டு நோக்குகையில் நமது குறைகளைக் காண இய லாது. ஒரு வேளை பிற மக்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னை ஒரு 'பரிசுத்தவான்' என்று எண்ணிக்கொண்டிருந்த தீர்க்கன் ஏசாயா, சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைக் கண்டபோது, ''ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனிதன்'' என்று அறிக்கை யிடுகிறார் (ஏசா 6:5). நாமும் அதிபரிசுத்தமான தேவனுக்கு முன்பாக வருகையில் ஏசாயாவைப் போல, பழைய ஏற்பாட்டுத் தொழுநோயா ளியைப் போல, நமது கரங்களை உயர்த்தி, ''அசுத்தமானவர்கள்'' என்று கதறுவதைத் தவிர வேறு வழியில்லை.

வரிக்காரன் ஒருவன் ஆலயத்திற்கு ஜெபம்பண்ண வருகிறான். ஆயினும் தேவனை நோக்கிப்பார்க்க அவனுக்குத் துணிவில்லை. கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுக்க அவனுக்குத் தைரியமில்லை. அவன் செய்ததென்ன? மிகுந்த துக்கத்துடன் தன் மார்பில் அடித்துக் கொண்டு, ''தேவனே, பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்'' என்று புலம்புகிறான் (லூக் 18:13). இதுவே தேவன் அங்கீகரிக்கும் ஆராதனை! அவருக்குப் பிரியமான ஆராதனை!

ஆதித் திருச்சபையில் சபையார் அனைவரும் தீர்க்கதரிசனம் உரைத் துக்கொண்டிருக்கையில், இரட்சிக்கப்படாதவரும் கல்வியறிவற்ற வருமான யாரேனும் ஒருவர் சபைக்குள் திடீரென்று வருவாரெனில் அவர் எதை உணர்ந்திருப்பார்? பயபக்திக்குரிய தேவனுடைய பரிசுத்தம் ஒரு மின்னலைப்போல, ஓர் இடியைப் போல, அவரைத் தாக்கியிருக்கும். அவிசுவாசியான அவருடைய இருதயத்தில் ஒளித்துவைத்திருந்த



இரகசியங்களும் சிந்தையிலிருந்து எழும்பும் எண்ணங்களும் தீர்க்க தரிசனமாக வெளிப்படுத்தப்படுகையில் அவர் செய்வதென்ன? அவர் முகங்குப்புற நெடுஞ்சாண்கிடையாகத் தாழ விழுவார். இவ்விடத்தில் தேவன் உயிருள்ளவராக இருக்கிறாரென்று அறிக்கையிடுவார். ஆம், உண்மையான தொழுகை நமது உண்மை நிலையை வெளிப்படுத்து கிறது (1 கொரி 14:24,25).

நீங்கள் யாரைத் தொழுதுகொள்ளுகிறீர்களோ, நூற்றுக்கு நூறு ஒரு சிறிய மாற்றமுமில்லாமல், அவரைப் போலவே மாறிவிடுவீர்கள். மகா பரிசுத்தமுள்ள தேவனை இடைவிடாமல் ஆராதித்துக்கொண்டிருப்பீர் களானால், அவரைப்போலவே மாறிவிடுவீர்கள். ஒரு தோற்றத்திலிருந்து மறுதோற்றத்திற்கு மாற்றப்படும் செயல் ஒரு நொடிப்பொழுதில் நிறை வடையும் செயலல்ல. அது ஒரு தொடர் நிகழ்வு. இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம்; இங்கே ஒரு கோடு, அங்கே ஒரு கோடு; ரூபத்தின் மேல் ரூபம்; இந்தப் படிப்படியான மறுரூபமாக்கப்படுதலைத் தேவனே செய்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது துள்ளுவதும் குதிப்பதும் அல்ல; அது தேவனோடு நடப்பது ஆகும். தேவன் படிப்படியாகத் தமது குமாரனின் சாயலை நம்மில் உருவாக்குகிறார். தேவனுடைய பிரசன் னத்தில் அவர் எத்தகைய பரிசுத்தர் என்று நாம் உணரும்போது — தேவனுடைய மகத்துவத்தைக் குறித்து ஆழமான வெளிப்பாடு கிடைக் கும்போது — நடைபெறுவது என்ன? தப்பமுடியாத ஆக்கினைத் தீர்ப்பு பெற்று விட்டோம் என்ற குற்றவுணர்வா? அல்லவே! நாம் பாவ உணர்வைப் பெற்று, நமது அவல நிலையை ஒப்புக்கொள்கிறோம். பிசாசு கொடுப்பது ஆக்கினைத் தீர்ப்புணர்வு (condemnation); ஆவி யானவர் தருவதோ பாவவுணர்வு (conviction).

## அறிக்கையிடுதலும் சுத்திகரிப்பும்

ராஜாதி ராஜாவாகிய கர்த்தர் அதிமகிமையுள்ளவராய்த் தமது சிங் காசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவரது கிருபாசனத்தைச் சுற்றியிருக்கும் வானவில் முழுவட்ட வடிவில் காணப்படுகிறது (வெளி 4:3). அவரை நெருங்கும்போது நாம் நமது தகுதியின்மையை உணருகிறோம்; முற்றிலும் இழந்துபோன நிலையை — தொலைந்துபோன நிலையை

— உணர்ந்து, ''நாங்கள் அதமானோம்'' என்று கதறுகிறோம். ஆனாலும் தகுதியில்லையென்றோ, தொலைந்துபோனோமென்றோ நம்பிக்கை யிழந்து தேவனுடைய சமூகத்தைவிட்டுப் பின்வாங்கவேண்டிய அவசிய மில்லை. ஏனெனில், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவன் ராஜாதி ராஜா; மகா பிரபு மட்டுமல்ல, மகா பிரதான ஆச்சாரியர்; நமது பலவீனங் களைக் குறித்து நமக்காகப் பரிதாபப்படுகிறவர். எபிரெயர் 4:14-16, ''வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆச்சாரியர் நமக்கு இருக்கிறபடியால்... நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆச்சாரி யார் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆச்சாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தருகே வருவோம்.'' சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது சார்பாக பிதாவிடம் பரிந்து பேசுகிறார், வாதிட்டுக்கொண்டிருக்கிறார், வழக்காடுகிறார். ''ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவரா யிருக்கிறார்'' (1 யோ 2:1).

சகோதர, சகோதரிகளே! நீங்கள் ஆராதனை செய்ய வரும்போதெல் லாம் இப்பரலோக வழக்கு மேடையை, வழக்குரைஞரை, மகா பரிசுத்த தேவனை, உங்கள் மனத்திரையில் வரையப்பட்ட சித்திரமாகக் காண வேண்டுமென்று விரும்புகிறேன். சிலுவைச் சின்னத்தையும், ஓர் யூதனுடைய படத்தையும் தொழுகைக்குக் கொண்டுசெல்லுதல் தரக்குறைவானது. இந்த மகோன்னத தேவ மகிமையை, வண்ணத் தூரிகைகளைப் பயன்படுத்தி வரைதுணியில் ஓவியமாகத் தீட்ட முடியாது. அவர் பரிசுத்தர்; அவர் சம்பந்தப்பட்ட அனைத்தும் பரி சுத்தமே! ஒரு தூரிகை எடுத்து, குழைத்த வண்ணக் கலவையில் தோய்த்து, ஒரே ஒரு கோடு போட முயன்றாலும், அது அவருடைய பரிசுத்தத்தைக் குலைத்துவிடும். அந்தப் பரிசுத்தத்தை நீங்கள் வரைய முடியாது. பிதாவின் வலது பக்கத்திலே ஆண்டவராகிய இயேசு அரியணையில் அமர்ந்திருக்கிறார். பிதாவாகிய தேவன் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணர்.

இயேசு கிறிஸ்துவின் பாவப் பரிகாரப் பிரமாணத்தில் (கிருபாதார பலியான இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில்) பரிசுத்தராகிய



பிதா பூரண திருப்தியடைந்திருக்கிறார். பலியானவர் இப்போது பிதா வின் வலது பக்கத்திலிருக்கிறார். அவரை நெருங்குகையில் நாம் என்ன செய்யவேண்டும்? நம்மில் பாவமில்லை என்று சொல்ல முடியாது; தகுதியுமிராது. அப்படிச் சொல்லவே முடியாது என்று 93 வயதை நிறைவு செய்த அப்போஸ்தலனாகிய யோவான் என்ற புனிதர் நமக்குக் கற்றுத் தருகிறார்: ''நமக்குப் பாவமில்லை என்று சொன்னால், நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது'' (1 யோ 1:8). அப்போஸ்தலனாகிய யோவான் பாவிகளுக்கல்ல, தேவனால் தெரிந் தெடுக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கே இந்நிருபத்தை எழுதினார். ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சி பெற்ற யோவான் கற்றுத் தேர்ந்த தேவனுடைய புனிதரனைவரோடுங்கூட இணைந்து நித்தியமாக நிலைத்திருக்கக்கூடிய இக்கூற்றை எழுதினார். இதுதான் அறிக்கையிட வேண்டிய இறுதிப் பாவம் என்று எண்ணி அதை அறிக்கையிட்ட பின்பும் சில பாவங்கள் அறிக்கையிடப்படாமல் விடப்பட்டிருக்கும்! அப்படி யானால் ''நான் ஏன் பாவ அறிக்கை செய்யவேண்டும்?'' என்ற ஒரு கேள்வி எழும்பலாம். இதை அறிந்திருந்த அப்போஸ்தலன் யோவான் மேற்கூறிய வசனத்தைத் தொடர்ந்து எழுதுகிறார்: ''நம்முடைய பாவங் களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' (வச 9).

நாம் புத்திசாலிகள். சில்லறை வாணிபம் போல, கொஞ்சம் கொஞ்ச மாகத் தொடர்ந்து பாவம் செய்கிறோம்; ஆனால் மொத்த வாணிபம் போல, ஒட்டுமொத்தமாக ஒரே வரியில் பாவ அறிக்கை செய்துவிடு கிறோம். (Sinning retail but confessing wholesale!) நாம் செய்யும் ஒவ்வொரு பாவத்தையும் தனித்தனியே அறிக்கையிடவேண்டும்; அவற்றை ஒவ்வொன்றாகச் சிலுவையில் ஆணியடித்து அறையவேண் டும். இக்காலத்தில் தேவ மக்களிடையே பாவ அறிக்கை செய்வது மறைந்துபோன, மறக்கப்பட்ட செயலாகிவிட்டது. சபை மறுமலர்ச்சி பெற முழு இரவு ஜெபங்கள், நீண்ட ஆராதனை வேளைகள் மற்றும் நீண்ட போதனை வேளைகள் உள்ளன. ஆனால் தேவனுக்கு முன்பாக நம்மை நாமே தற்பரிசோதனை செய்துகொள்ள நேரம் ஒதுக்கப்படாதது ஏன்?

தற்பரிசோதனை என்ற பயிற்சியில் எனக்கு அதிக நம்பிக்கையுண்டு; ஏனெனில் இப்பயிற்சியின்மூலம் நான் வெகுவாய் ஆசீர்வதிக்கப்பட்டி ருக்கிறேன். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் (BYM) தற்பரிசோத னைக்கு உதவியாக இருக்கும்படி நடைமுறைக் கண்ணோட்டத்துடன் தெரிந்தெடுக்கப்பட்டு, தொகுக்கப்பட்ட கேள்விகளடங்கிய பட்டியல் கள் இரண்டு டசனுக்குக் குறையாமல் உள்ளன. நாங்கள் நடத்தும் முகாம்கள் பெரும்பாலானவற்றில் முதலாம் செய்தி வழங்கப்பட்டபின் இம்முகாம்களில் பங்கேற்கும் 1500க்கும் மேற்பட்டோருக்கு இத்தகைய கேள்வித் தொகுப்பு ஒன்றைக் கொடுப்போம். அவர்கள் முகாமைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதிக்கோ அல்லது அருகிலுள்ள தோட்டங் களுக்கோ சென்று, தேவனுடன் தனிமையில் நேரம் செலவழித்து, தற்பரிசோதனை செய்வர். இப்படிப்பட்ட நேரங்களில் தேவன் அவர் களுடன் நேரிடையாக இடைபடுகின்றார். நீங்களும் இப்படிப்பட்ட தொரு கேள்வித் தொகுப்புடன் வாரம் ஒரு முறை, இரண்டு அல்லது மூன்று மணி நேரம், தேவனோடு தனித்திருங்கள். (மாதிரிக் கேள்வித் தாள்: பக்கங்கள் 209-212). கேள்விகளை நிதானமாக, கருத்துடன் படித்து, மன உண்மையுடன் அக்கேள்வி களுக்குப் பதிலளியுங்கள். தூய ஆவியானவர் வெளிப்படுத்தும் பாவங்களையும், பலவீனங்களையும் அறிக்கையிட்டு விட்டுவிடுங்கள். தேவையானால் ஒரு குறிப்பேட்டைப் பயன்படுத்துங்கள். தேவனோடும், மனிதரோடும் ஒப்புரவாகுங்கள். இப்பயிற்சிக்கு 'ஆவிக்குரிய பழுதுபார்ப்பு' (spiritual overhauling) என்று நான் பெயரிடுகிறேன். இத்தகையப் பயிற்சிக்குப்பின் நீங்கள் உங்க ளுடைய ஆவிக்குரிய வாழ்வில் வேகமாக வளருவீர்கள். உயர்ந்த அனுபவங்களைப் பெறுவீர்கள்.

மனந்திரும்புதலுக்கடுத்த 'தற்பரிசோதனை' என்ற இப்பயிற்சி ஏன் அவசியம் என்பதைக் கொரிந்து சபைக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதின இரண்டாம் நிருபம் 7ஆம் அத்தியாயத்தில் காண்கிறோம்: ''நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் சற்று நேரமாவது உங்களைத் துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனம் வருந்தியிருந்தாலும், இப்பொழுது மனம் வருந்துவதில்லை. இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் இழப்படையாதபடி, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக் கேற்ற துக்கம் பின்பு மனம் வருந்துவதற்கு இடமில்லாமல் இரட் சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது'' (வச 8-10). தொடர்ந்து பவுல், தேவனுக்கேற்ற துக்கம் நம்மில் உருவாக்கும் ஏழு காரியங்களைக் குறித்துச் சொல்லுகிறார்: ''நீங்கள் தேவனுக் கேற்ற துக்கம் அடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு கவனத் தையும், குற்றந்தீர எவ்வளவு நியாயம் சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண் டாக்கிற்று!'' (வச 11). உங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு காலக்கட்டத் தில் இத்தகைய அனுபவத்தினூடே கடந்து சென்றதுண்டா?

ஆழ்ந்த மனந்திரும்புதல் நம் வாழ்வில் அரிய பெரிய ஆசீர்வாதங் களைக் கொண்டுவருகிறது. இப்படிப்பட்ட ஆழ்ந்த மனந்திரும்பு தலைப் பெற்றவர் வாழ்வில் வெளிப்புறத் தூண்டுதலின்றி அனிச்சை செயலைப் போன்று களிகூருதல் உண்டாகும். யாரைப் பார்த்தும் களி கூர்ந்து துள்ளுங்கள் என்றோ, நடனமாடி மகிழுங்கள் என்றோ, கைகளை உயர்த்தி உரத்த சத்தமாகத் தேவனைத் துதியுங்கள் என்றோ போதகர் திரும்பத் திரும்பச் சொல்லவேண்டிய அவசியமில்லை. பாடல் ஆராத னையை நடத்துபவர் உடற்பயிற்சி ஆசிரியராக மாறவேண்டிய அவசிய மில்லை! ஆராதனை நடத்துபவர் மேடைக்கு வந்ததும், தேவனுடைய சித்தத்தை விளங்கிக்கொண்டு ஆராதனையைத் தொடங்கினால் சபை யார் அனைவரும் ஒருமனதின் ஆவியோடு இணைந்து தேவனை ஆராதிப்பர்.

நடனக் களிப்பு எப்போது ஏற்படும்? பிரசங்கி 3:4ஐப் பாருங்கள்: ''அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு; புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு.'' முதலாவது துக்கமடைதல், பின் தொடர்வது நடனக்களிப்பு. நீங்கள் துக்கமடையாதிருப்பீர்களானால் நீங்கள் நடனம்பண்ண எப்போதும் முடியாது. சபையார் போதுமான அளவு மனந்திரும்புதலுக்கேதுவாக துக்கமடையாததே சபையில் போதுமான அளவு மகிழ்ச்சியின்மைக்குக் காரணமாகும். ''கர்த்தர் நம் கண்ணீர் யாவையும் துடைப்பார்'' என்ற வசனம் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது. உன் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைக்க

தேவன் ஒரு கைக்குட்டையுடன் உன்னிடம் வரும்போது உன் கண்கள் கண்ணீரற்று வறண்டு இருக்குமானால் நீ வருத்தப்பட நேரிடும். குறிப்பாக, ஆவியின் அருள்மாரியை நம்பும் சபைகள் இதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

## நவீன யுக்திகள்

சபையாரைப் பரவசப்படுத்த தற்காலத்தில் பல்வேறு செயல்பாடுகள் உண்டு. செவிக்கினிய இசை, அதிர வைக்கும் தோல் கருவிகள், கவர்ச்சிப் பாடல்கள், மேடையில் அங்குமிங்கும் நடமாடி ஒலிப்பெருக்கி சாதனத்தை அசைத்து அல்லது வீசி எறிந்து எகிறிப்பிடிக்கும் சாகசப் பேச்சாளர் போன்ற திரையுலகப் பாணிச் செயல்கள் சபையோரைப் பரவசப்படுத்தக்கூடும். இந்நாட்களில் ஒலிபெருக்கியை ஒரு நிலையில் பொருத்திவைக்கத் தாங்கி தேவை இல்லை. ஆனால் எனக்கு ஒலி பெருக்கித் தாங்கி மிகவும் தேவை. ஏனெனில் அத்தாங்கி இருந்தால்தான் என் இரு கரங்களைப் பயன்படுத்தி திருமறையைத் திறக்கவும் பல்வேறு வசனக் குறிப்புகளை மிக விரைவில் கண்டுபிடிக்கவும் உதவியாக இருக்கும். இன்றையத் திருச்சபையைப் பரவசப்படுத்த மேற்கண்டவை தவிர கருத்தைக் கவரும் சொற்றொடர்கள், கண்ணைக் கவரும் முகப் பாவனைகள் என்று அகரம் முதல் னகரம் வரை பல்வேறு யுக்திகள் பயன்படுத்தப்படுகின் றன. இந்த யுக்திகளும் அவற்றின் விளைவுகளும் சாதாரணப் பொழுதுபோக்கு (entertainment) அம்சமுடையனவாகவே உள்ளன. அவை பக்திவிருத்திக்குப் (edification) பயனுள்ளதாகவோ அல்லது நீண்ட நாட்கள் தாக்கமுடையனவாகவோ இருப்பதில்லை.

தொடர்ந்து புத்துணர்வைப் பெற நாம் என்ன செய்யவேண்டும்? ஆமோஸ் 5ஆம் அத்தியாயம் 23,24ஆம் வசனங்களில் பதிலைக் காண்கிறோம்: ''உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன்'' (வச 23). பாட்டுகளின் ''இரைச்சல்'' என்பது அளவுக்கு மிஞ்சிச் சத்தமிடுதல் ஆகும். ஒலிப்பானுக்கும் வாய்க்கும் இடையே கொஞ்சம் இடைவெளி இருக்கும்போது ஒலிப்பான் மூலம் வெளிப்படுவது குரல் ஒலி; ஆனால் ஒலிப்பானை வாய் தொடுமானால் ஒலிப்பான் மூலம் வெளிப்படுவது



இரைச்சல். 'பாட்டுகளின் இரைச்சலில்' ஆர்வமில்லாத கர்த்தர் எதை விரும்புகிறார்? ''நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரட்டும்'' (வச 24). இதுதான் பரிசுத்த ஆவியின் அருள்மாரி அனுபவத்தைப் பெற்றோரின் நிலைப்பாடு — பரிசுத்த அலங்காரம்! பரிசுத்தத்தின் கவின்மிகு அழகு! பரிசுத்தத்தின் மகிமை! ஆனந்த தைலம்! நீதியின் மகிழ்ச்சி ஆரவாரம்! இது பிரம்மாண்டமான வற்றாத நதி போல சபையோரிடையே பெருக்கெடுத்துப் பாய்ந்தோடும்.

பரிசுத்த ஆவியின் அனுபவங்களுக்கெதிரான தாக்குதலிலிருந்து அதை நியாயப்படுத்தப் பேதுரு பேசுவதாக அமைந்த வசனங்களைக் கவனியுங்கள். பிறவிச் சப்பாணியைத் தேவன் எவ்வாறு சுகமாக்கினார் என்று பேதுரு விளக்குகையில் முடிவுரையாகச் சொல்கிறார், ''கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் (புத்துயிர்க் காலங்கள்) வரும்படிக்கும் ... உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படுதற்காய் நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்'' (அப் 3:19,20). எனவே சபையானது மறுமலர்ச்சியும், புத்துயிரும் பெறவேண்டுமாயின் தேவையானது மனந்திரும்புதலின் ஆவியே (யோவேல் 2:16,18,23,28).

ஏசாயா 61:11 நமது ஆர்வத்தைத் தூண்டும் திருவசனம்: ''நிலம் தன் பூண்டுகளை விளைவிப்பது போலவும், தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைப்பிப்பது போலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா மக்களினங்களுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.'' ஒரே தோட்டத்தில் செடிகள் வளருவதுபோல நீதியும் துதியும் — புனிதமும் புகழ்பாடலும் — ஒன்று சேர்ந்து வளரும். இவை விளைவிக்கப்படும்; முளைப்பிக்கப்படும்.

## சகவுறவுகள்

பலிபீடத்திற்கு வருதல் என்பது தொழுகையைக் குறிக்கும். நமது சகவுறவுகளைச் சரிசெய்யாது பலிபீடத்திற்கு வருவது தேவனுக்கு ஏற்புடையதல்ல என்று இயேசு சொன்னார். ''முதலாவது'' ஒப்புரவாகிப் பின்னர் வந்து காணிக்கை செலுத்தவேண்டுமாம் (மத் 5:23,24). தொழுவோர் வரிசையில் முதலாவது நபராய் வந்தது காயீன்தான். தனது

சகோதரனோடு நல்லுறவு கொள்ளாததால் அல்லவோ அவன் புறக்கணிக்கப்பட்டான் (ஆதி 4:3-8; 1 யோ 3:11,12)? பரிசுத்தமும் சரியான சகவுறவுகளும் பின்னிப் பிணைந்தவை (எபி 12:14). சகோதரனைப் பகைக்கிறவன் கொலையாளி என்றழைக்கிறது திருமறை (1 யோ 3:15). இவ்வித இரத்தக் கறையுள்ள கரங்களை உயர்த்தி ஆராதிப்பதில் என்ன பயன்? அதை வீண் என்றழைக்கிறார் தேவன் (ஏசா 1:15). கோபமும் தர்க்கமும் நிறைந்திருக்கும்போது உயர்த்தும் கரங்கள் எவ்விதம் பரிசுத்தமாயிருக்கமுடியும் (1 தீமோ 2:8)?

## புத்தியுள்ள ஆராதனை

இந்தத் தலைப்பின்கீழ் நான் கொடுக்க விரும்பும் கடைசி வசனக் குறிப்பு, ரோமர் 12:1, ''சகோதரரே, நீங்கள் உங்கள் உடல்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான உயிர்ப்பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.'' பலிபீடத்தின்மேல் உங்கள் கண்களைப் பலியாக ஒப்புக் கொடுங்கள். தடை செய்யப்பட்டவைகளுடன் இனி உறவில்லை. அயலான் மனைவியைக் காமுறும் கண்கள் இனி இருக்காது. இச்சையான பார்வையோ, தகாத பாலுறவோ இனி இருக்கவியலாது. துராசையைத் தூண்டும் பாடல்களையோ, கதைகளையோ காதுகள் கேட்க விரும்பாது. வாய் எவரைக் குறித்தும் தீமையானவற்றைப் பேசாது, புறங்கூறாது, கோள் சொல்லாது. நாவு இனி ஒருபோதும் பொய் பேசாது. விலக்கப் பட்டவைகளை இனிக் கைகள் தொடுவதில்லை. ஒரு கிறிஸ்தவன் போகக்கூடாத இடத்துக்கு இனிக் கால்கள் போகாது. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையுள்ள அனைத்து உறுப்புக்களையும் தேவனது பலிபீடத்தின்மேல் உயிர்ப்பலியாக ஒப்புக்கொடுத்தலே புத்தியுள்ள ஆராதனை! அதுவே தொழுகையில் பரிசுத்தம்!

தேவனுடைய பரிசுத்தத்தையும் நமது வெறுமையையும் உணர்வதும், நமது குறைபாடுகளினின்று மனந்திரும்புவதும், சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் தேவனிடம் நமது பாவங்களை அறிக்கையிடுவதும், நீதியும் துதியும் இணைந்து தேவனுக்குமுன் சுகந்த வாசனையாக



எழும்பப்பண்ணுவதும், நமது உடலை உயிர்ப்பலியாகத் தேவனது பலிபீடத்தில் ஒப்புக்கொடுப்பதுமே தேவனால் அங்கிகரிக்கப்படும் ஆராதனை! புத்தியுள்ள ஆராதனை!

**பாடுவோம் —**

*பலிபீடத்தில் என்னைப் பரனே*
*படைக்கிறேனே இந்த வேளை*
*அடியேனைத் திருச்சித்தம் போல*
*ஆண்டு நடத்திடுவீர்*

*கல்வாரியின் அன்பினையே*
*கண்டு விரைந்தோடி வந்தேன்*
*கழுவும் உம் திரு ரத்தத்தாலே*
*கறை நீங்க இருதயத்தை*

*ஆவியோடாத்மா சரீரம்*
*அன்பரே உமக்கென்றும் தந்தேன்*
*ஆலயமாக்கியே இப்போ*
*ஆசீர்வதித்தருளும்*

*சுயம் என்னில் சாம்பலாய் மாற*
*சுத்தாவியே அனல் மூட்டும்*
*ஜெயம் பெற்று மாமிசம் சாக*
*தேவா அருள் செய்குவீர்*

(*How not to Worship / எப்படி ஆராதிக்கக்கூடாது?* என்ற தலைப்பில், ஆங்கிலத்திலிருந்து தமிழில், ஆசிரியர் கொடுத்த 10 ஒளிபரப்புச் செய்திகள் 5 மணி நேரம் ஓடக்கூடிய ஒளித்தட்டிலும், 64 பக்கச் சிறு நூலாகவும் வெளிவந்துள்ளன. பாருங்கள், வாசியுங்கள்.)

# 6

# வார்த்தைகளில் பரிசுத்தம்

## Holiness in Words

நல்வார்த்தைகளும் தூயவாழ்வும் ஒன்றுக்கொன்று தொடர்பு டையவை. அவை பிரிக்க முடியாதவை. இந்த உண்மையை நிரூபிக்கத் திருமறையிலிருந்து சில பகுதிகளைக் கவனிப்போம் —

### ■ 1 சாமுவேல் 2:2,3

இதை அன்னாளின் தொழுகை அல்லது துதி அல்லது ஜெபம் அல்லது பாடல் என்று அழைக்கலாம்: ''கர்த்தரைப் போலப் பரிசுத்த முள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப் போல ஒரு கன்மலையும் இல்லை. இனி மேட்டிமை யான **பேச்சைப்** பேசாதிருங்கள்; அகந்தையான **பேச்சு** உங்கள் வாயி லிருந்து புறப்படவேண்டாம்; கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவரது செயல்கள் யதார்த்தமல்லவோ?'' இந்தப் பழைய ஏற்பாட்டுப் பெண் ணுக்குக் கிடைத்தவை எத்தனை ஆச்சரியமான தீர்க்கதரிசன வெளிப் பாடுகள்! கர்த்தர் பரிசுத்தர் என்று துதிக்கின்றாள்; எனவே நமது வாயின் வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்று உடனே சொல்கின்றாள்.

### ■ யோபு 1:1/2:10/42:7

யோபுவின் புத்தகம்தான் திருமறையில் மிகப் பழமையான புத்தகம் என வேதப் பண்டிதர்கள் கூறுகின்றனர். முதல் அத்தியாயம் முதல்



வசனத்தை வாசிப்போம்: ''ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் இருந்தான்; அந்த மனிதன் உத்தமனும் சன் மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனு மாயிருந்தான்.'' யோபுவின் சரித்திரம் 42 நீண்ட அத்தியாயங்களில் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. இது திருமறையிலுள்ள மிக அழகான நாடகங்களுள் ஒன்றாகும். யோபு உத்தமனும் சன்மார்க்கனுமாய் இருந் தான் என்று தேவன் சொல்லுகிறார். அவனது தனிச்சிறப்பு என்ன? இரண்டாம் அத்தியாயத்தில் அவனது மனைவியுடன் அவன் உரையாடு வதை வாசிக்கிறோம். அவள் அவனிடம் தேவனைச் சபித்து உயிரை விடும்படி ஆலோசனை கூறுகிறாள். ''அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவை எல்லாவற்றிலும் யோபு தன் **உதடுகளினால்** பாவம் செய்யவில்லை'' (வச 10). இந் நாடகத்தின் முதற்காட்சியின் ஆரம்பத்தில் மட்டுமல்ல, இந்நாடகத்தின் இறுதிப் பகுதியிலும் தேவன் யோபுவைக் குறித்து நற்சாட்சி பகரு கின்றார். அநேக விவாதங்களுக்கும் உரையாடல்களுக்கும் பின்னர், இறுதி அத்தியாயத்திற்கு வரும்போது, தேவன் யோபுவின் நண்பர்களை யும் ஆலோசகர்களையும் பார்த்து, ''என் தாசனாகிய யோபு **பேசினது போல்**, நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை'' என்று சொன்னார் (42:7ஆ). இங்கே நல்வார்த்தைகளும் நடைமுறை நீதி வாழ்வும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்று காண்கிறோம்.

### ■ சங்கீதம் 15:1-4

''கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம் முடைய பரிசுத்த மலையில் குடியிருப்பான்?'' (வச 1). தேவனுடைய பிரசன்னத்தில் காணப்படும் பரிசுத்தத்தைப்பற்றிய குறிப்புதான் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து வரும் மூன்று வசனங் களிலும் வாயின் வார்த்தைகளுக்குப் பிரதான முக்கியத்துவம் தரப் பட்டுள்ளது: ''... மனதாரச் சத்தியத்தைப் **பேசுகிறவன்**தானே'' (வச 2); ''அவன் தன் **நாவினால்** புறங்கூறாமலும் ...'' (வச 3); மற்றும் ''... **ஆணையிட்டதில்** தனக்கு இழப்பு ஏற்பட்டாலும் தவறாதிருக்

கிறான்'' (வச 4). ஒரே சங்கீதத்தில் நடைமுறைப் பரிசுத்தத்தைக் குறித்த மூன்று குறிப்புகள் உள்ளன; அவை அனைத்தும் வாயின் வார்த்தைகளைக் குறித்தவை. ஆம், நல்வார்த்தைகளும் தூய வாழ்வும் பின்னிப் பிணைந்தவை.

### ■ நீதிமொழிகள் 4:23,24

''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதிலிருந்து ஜீவ ஊற்று புறப்படும். **வாயின்** தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, **உதடுகளின்** மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.''

(வேதாகமம் பூரணமாக ஒருங்கிணைக்கப்பட்ட புத்தகம். இதில் எதுவும் முன்பின் முரணாக இருப்பதேயில்லை. திருமறையின் ஒரு புத்தகத்தில் சொல்லப்படுவது இன்னொரு புத்தகத்தில் உறுதி செய்யப் படுகின்றது. நாம் பரிசுத்த ஆவியானவரின் திறந்த குடையின்கீழ் அமரும்போது, நாம் பக்திவிருத்தியடையவும் கற்றுத் தேறும்படியும் பரிசுத்த ஆவியானவர் அவற்றைச் சரியாக ஒருங்கிணைக்கிறார். இந்தப் பாடங்கள் யாவும் நான் எனது தனித் தியானத்தின்போது கற்றுக் கொண்டு தயாரித்தவை. இவற்றைத் தயாரிக்க நான் பயன்படுத்தியவை எனது பழைய வேதாகமும் ஒரு வேதாகமச் சொல்லகராதியும் எனது பழைய குறிப்பேடும் மட்டுமே.)

### ■ நீதிமொழிகள் 10:19

''**சொற்களின்** மிகுதியில் பாவமில்லாதுபோகாது; தன் **உதடுகளை** அடக்குகிறவனோ புத்திமான்.'' ஒரு மனிதன் தேவைக்கு மிஞ்சி அதிகமாகப் பேசுவானானால் அவன் ஒரு பரிசுத்தவானாக இருக்க முடியாது. அதிகம் சிந்தித்துக் குறைவாகப் பேசும் நபர், அதாவது குறைந்த அளவு வார்த்தைகளையுடைய நபர், மட்டுமே பரிசுத்தவானாக அல்லது பரிசுத்தவாட்டியாக இருக்கமுடியும்.

### ■ எபேசியர் 4:24-27/கொலோசெயர் 3:8-10

''மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனை அணிந்துகொள்ளுங்கள். மட்டு



மல்ல, நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறதால், பொய்யை அகற்றி, அவனவன் பிறனுடனே மெய்யைப் **பேசட்டும்**. நீங்கள் கோபப்பட்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் மறையுமுன் உங்கள் எரிச்சல் தணியட்டும்'' (எபே 4:24-27). 29ஆம் வசனம் ''கெட்ட **வார்த்தை** ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்'' என்றும், 31ஆம் வசனம் ''சகலவித ... **தூஷணமும்** ... உங்களை விட்டு நீங்கட்டும்'' என்றும் சொல்லுகின்றன. இவையெல்லாம் எதைக் குறிப் பிடுகின்றன? பொய்யான வார்த்தைகளைப் பேசாதிருங்கள்; கோபமான வார்த்தைகளைப் பேசாதேயுங்கள்; இழிவான வார்த்தைகளைச் சொல்லா திருங்கள்; பிறரை வேதனைப்படுத்திக் குறைகூறாதிருங்கள். இதுவே மெய்யான பரிசுத்தம் மற்றும் மெய்யான நீதியாகும்.

கொலோசெயர் 3:8-10 இதே காரியங்களைக் குறிப்பிடுகிறது. ''இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் **வாயில்** பிறக்கக்கூடாத தூஷணமும் வம்பு **வார்த்தைகளுமாகிய** இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லா திருங்கள்; பழைய மனிதனையும் அவன் செய்கைகளையும் கழற்றிப் போட்டு, தன்னைப் படைத்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனிதனை அணிந்துகொண்டிருக்கிறீர்களே.''

### ■ 1 பேதுரு 2:21,22

''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச் சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய **வாயிலே** வஞ்சனை காணப்படவுமில்லை.''

பரிசுத்தமும் நற்சீர் பொருந்தின வார்த்தைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதை நிரூபிக்க இதற்கு மேலும் வசனக் குறிப்பு கள் தேவையில்லை.

நமது வாழ்வின் இந்தக் குறிப்பிட்ட பகுதியில் நாம் எச்சரிக்கையாக இருக்காவிடில், நீதி என்னும் ஏணியில் நாம் ஏறும் ஒவ்வொரு படிக்கும் நான்கு படிகள் சறுக்கி இறங்குவோம்.

## வார்த்தைகளில் பரிசுத்தத்தின் அதிமுக்கியத்துவம்

### *(i) முடிவான பரிசோதனை*

ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எடுத்துக்காட்டு நியாயாதிபதிகள் 12:5,6இல் கொடுக்கப்பட்டுள்ளது. ''கீலேயாத்தியர் எப்பிராயீமருக்கு முந்தி யோர்தானின் துறைகளைப் பிடித்தார்கள்; அப்பொழுது எப்பிராயீமரிலே தப்பினவர்களில் யாராவது வந்து: நான் அக்கரைக்குப் போகட்டும் என்று சொல்லும்போது, கீலேயாத் மனிதர்: நீ எப்பிராயீமனா என்று அவனைக் கேட்பார்கள்; அவன் அல்ல என்றால், நீ *'ஷிபோலேத்'* என்று சொல் என்பார்கள்; அப்பொழுது அவன் அப்படி உச்சரிக்கக் கூடாமல் *'சிபோலேத்'* என்பான்; அப்பொழுது அவனைப் பிடித்து, யோர்தான் துறையிலே வெட்டிப்போடுவார்கள்; அக்காலத்திலே எப்பிராயீமில் நாற்பத்தீராயிரம் பேர் விழுந்தார்கள்.''

ஒரே பரிசோதனை, வார்த்தையின் பரிசோதனை மட்டுமே! கிழக்கு ஜெர்மனியைச் சார்ந்தவர் ஒருவர் மேற்கு ஜெர்மனிக்கு வரும்போது அவரது நிறத்தையோ தோற்றத்தையோ வைத்து அவரை அடையாளங் கண்டுகொள்ள முடியாது. ஆனால் அவர் பேசுவதற்கு வாயைத் திறந்தவுடன் மேற்கு ஜெர்மானியர் அவர் கிழக்கிலிருந்து வந்தவர் என்பதைச் சொல்ல முடியும். இலங்கையைச் சார்ந்த ஒருவர் தமிழ்நாட்டுப் பாணியில் உடையணிந்து இந்தியாவுக்கு வருவரானால், அவர் இலங்கையைச் சார்ந்தவர் என அடையாளங்காண முடியாது. ஆனால் அவர் பேசுவதற்கு வாயைத் திறக்கும் வினாடியிலேயே அவர் இலங்கையைச் சார்ந்தவர் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். நமது வார்த்தைகள்தான் நமது காரியங்களை அறிவிக்கும் முடிவான பரிசோதனை ஆகும்.

### *(ii) நமது நித்திய வாழ்வைத் தீர்மானிக்கும் காரணி*

இதை மத்தேயு 12:36,37 மேலும் எளிதான முறையில் விளக்குகின்றது. ''மனிதர் பேசும் வீணான **வார்த்தைகள்** யாவையும் குறித்து



நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் **வார்த்தைகளினாலே** நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் **வார்த்தைகளினாலே** குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்.'' நாம் என்னென்ன வார்த்தைகளைப் பேசினோம் என்பதை இறுதி நாளிலே தேவன் நமக்குச் சொல்லுவார்; மற்றும் நமது வார்த்தைகள்தான் நாம் இடது புறம் செல்லப்போகிறோமா அல்லது வலது புறம் செல்லப்போகிறோமா என்பதை நிர்ணயிக்கும். இவைகளை நம்ப முடிகிறதா? இயேசுவே இதைச் சொல்லியிருக்கிறார்; எனவே நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நாம் 'ஷிபோலேத்' (Shibboleth) என்று சொல்லுகிறோமா அல்லது 'சிபோலேத்' (Sibboleth) என்று சொல்லுகிறோமா என்பதுதான் வித்தியாசம். ஆங்கிலத்தில் இவ்விரு வார்த்தைகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் 'h' என்ற எழுத்து மட்டுமே. "H" என்பது Holiness (பரிசுத்தம்) எனும் சொல்லின் முதல் எழுத்து! வார்த்தைகளில் பரிசுத்தம் நமது நித்தியத்தை நிர்ணயிக்கின்றது.

### *(iii) முன்மாதிரியான வாழ்வின் முதல் தகுதி*

முதிர்ச்சியடைந்த ஒரு தேவ மனிதன் தகுதிகாண் பருவத்திலிருந்த பயிற்சியாளர் ஒருவருக்கு ஒரு செய்தியை அனுப்பினார்: ''உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடி, நீ **வார்த்தையிலும்**, நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு'' (1 தீமோ 4:12). ஒரு சிறந்த வாழ்வுக்கான நெறிகளின் பட்டியலில் முதல் அம்சம் ''வார்த்தையில்'' என்பதுதான். அவன் ஒரு தலைவனாக நியமிக்கப்பட்டான்; ஆனால் அவன் ஓர் இளைஞன். அவன் எப்படி முன்மாதிரியாகத் திகழ முடியும்? அவனது வார்த்தைகளில் கவனமாக இருப்பதின் மூலமாகத்தான். மற்றக் காரியங்களெல்லாம் தாமாகவே சரிவர நடைபெறும்.

### *(iv) கிறிஸ்துவின் பிரதான அழகு*

சங்கீதப் புத்தகத்தில் மேசியாவைக் குறித்த எண்ணற்ற தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவரது அழகைக் காண்பதற்காக அவ்வசனங்களில் ஒன்றைப் பார்ப்போம். சங் 45:2, ''எல்லா மனுமக்களிலும் நீர் மகா

அழகுள்ளவர்; உம்முடைய **உதடுகளில்** அருள் பொழிகிறது.'' அவர் பதினாயிரம் பேரிலும் மகா அழகுள்ளவராயிருக்கக் காரணம் என்ன? எல்லா மனுபுத்திரரிலும் அவர் மகா சௌந்தரியமுள்ளவராயிருப்பதன் காரணம் என்ன? அவருடைய ''உதடுகளில்'' அருள் பொழிகிறது. இந்த மேசியா மனுவுடலெடுத்தவராய் நாசரேத்தூரில் ஒரு தச்சனாக வந்த போது, மக்கள் அவரது ''வார்த்தைகளைக்'' குறித்து ஆச்சரியமடைந் தனர். ஏனெனில் அவரது வார்த்தைகள் கிருபை பொருந்தியவையாய் இருந்தன (லூக் 4:22).

### *(v) பூரணத்தின் அடையாளம்*

அப்போஸ்தலனாகிய யாக்கோபு ஒரு நடைமுறை ஊழியர். அவரது நிருபம் முழுவதும் 'விசுவாசம்' மற்றும் 'கிரியை' சார்பான கருத்துக் களால் நிறைந்திருக்கும். 3ஆம் அத்தியாயம் 2ஆம் வசனத்தில் அவர் பூரணத்தின் அடையாளம் எதுவென்று கூறுகிறார்: ''நாம் எல்லாரும் அநேகக் காரியங்களில் தவறுகிறோம்; ஒருவன் **சொல்** தவறாதவனா னால் அவன் பூரண மனிதனும், தன் உடல் முழுவதையும் கடிவாளத்தி னாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிக்கிறான்.'' நாம் சரியான வார்த்தைகளைப் பேசாவிட்டால், நாம் நடைமுறைப் பரிசுத்த வாழ்வு நடத்த இயலாது.

### *(vi) மெய்யான தேவபக்தியின் அடையாளம்*

''உங்களில் ஒருவன் தன் **நாவை** அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவ னுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்'' என்று யாக்கோபு 1:26 சொல்லு கிறது. நாம் நம்மைத் தேவ பக்தியுள்ளவர்கள், ஆவிக்குரியவர்கள் என்று எண்ணிக்கொள்ளுகிறோம். ஆனால் ஒருவன் தனது நாவைக் கட்டுப் படுத்தாமல் தன்னைத் தேவ பக்தியுள்ளவனென்று நினைத்தால், அவன் தனது இருதயத்தையே ஏமாற்றிக்கொள்ளுகிறான், வீணான பக்தியில் வாழ்கிறான்.

### *(vii) நல்ல நாட்களைக் காண முதல் அறிவுரை*

1 பேதுரு 3:10இல் பழைய ஏற்பாட்டிலிருந்து பேதுரு ஒரு வசனப் பகுதியைக் குறிப்பிடுகின்றார்: ''வாழ்வை விரும்பி நல்ல நாட்களைக்



காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தனது **நாவை யும்**, கபடத்துக்குத் தனது **உதடுகளையும்** விலக்கிக் காக்கட்டும்'' (சங் 34:12-14). உங்கள் வாழ்வில் நல்ல நாட்களைக் காண விரும்பி னீர்களானால், உங்கள் நாவை அடக்கி ஆளுங்கள்.

கொள்கையளவில் கொடுக்கப்பட்டுள்ள இவ்வுபதேசங்களை நாம் நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டுமானால், நாம் அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதைத் திருமறையின் வாயிலாகப் புரிந்துகொள்ள முயற்சியெடுக்க வேண்டும்; வாழ்வின் வெவ்வேறு சூழ்நிலைகளில் அவற்றை நிறைவேற்ற நாம் தேவனிடமிருந்து உதவி பெற அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும். நமது தேவன், ''பரிசுத்த மாயிருங்கள்'' என்று நமக்குக் கட்டளையிடுபவர் மட்டுமல்ல, பரி சுத்தமாய் வாழ நம்மை வழிநடத்துகிறவரும் ''அவரே.''

■

## நாவைப் பழக்குவிப்பது எங்ஙனம்?

சார்லஸ் பின்னி (1792-1875) என்பவர் அமெரிக்காவைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற நற்செய்தியாளர் மற்றும் எழுப்புதல் பிரசங்கியார். அவர் மிகுந்த புத்திக்கூர்மையும், அறிவும், திறமையுமுடையவர். அவர் ஒரு வழக்கறிஞர். பின்னியின் மூலம் நடந்த எழுப்புதல் உலக வரலாற்றி லேயே அதற்குமுன் இல்லாத அளவு மகத்தானது. அவரது பெரும் பாலான பிரசங்கங்களில் நாவைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். எழுப்பு தலின் வல்லமை கசிந்து குறைந்துபோவதற்கு முதன்மையான காரணம் விசுவாசிகளுக்கிடையே காணப்படும் கட்டுப்பாடற்ற நாவுதான் என்று கூறுகின்றார். சகோதர சகோதரிகளே, நமது நாவை அடக்குவது கூடாத காரியம். எல்லா மிருகங்களையும் பழக்குவித்து அடக்கலாம்; கப்பலின் எல்லா இயந்திரங்களையும், எல்லாக் கருவிகளையும் நமது விருப்பப்படி செயல்படுத்த முடியும். ஆனால் நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது என்று வேதம் சொல்லுகிறது (யாக் 3:8). உங்களால் நாவை ''அடக்க'' ஒருபோதும் இயலாதுதான்; ஆனால் உங்கள் நாவைப் ''பழக்கு விக்க'' இயலும். நாவைப் பழக்குவிப்பது எவ்வாறு?

## 1. பேச்சுத்திறன் தேவன் அருளிய ஈவு என்பதை உணர்ந்து நாவைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

இவ்வுலகில் கேட்கும் திறனற்றோரும், பேசும் திறனற்றோரும் இலட்சக்கணக்கானோர். அவர்களெல்லாரையும் உருவாக்கினவர் யார்? யாத்திராகமம் 4ஆம் அத்தியாயம் 10 முதல் 12 வரையுள்ள வசனங்களை வாசியுங்கள். ‘‘அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியானோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனிதனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.’’

பேசும் திறனற்றோரையும், கேட்கும் திறனற்றோரையும் படைத்தவர் கர்த்தரே. கர்த்தர்தாமே சொன்ன என்னே பயங்கரமான கூற்று இது! அதே நேரத்தில், பேச்சுத் திறன் மற்றும் கேட்கும் திறனுள்ள மக்களை உருவாக்கியவரும் தேவனே. எனவே, பேசுவதற்கு உங்களுக்கு வாயைக் கொடுத்தவர் யார்? வார்த்தைகளைத் தெளிவாக உச்சரிப்பதற்கு உங்களுக்கு உதடுகளை அல்லது நாவைக் கொடுத்தவர் யார்? கர்த்தர்! எனவே, ஒவ்வொரு நாள் காலையிலும் நீங்கள் பேசுவதற்கு வாயைத் திறக்குமுன் அல்லது வெளியே செல்லுமுன், உங்கள் நாவு, உங்கள் வாய், உங்கள் உதடுகள் யாவும் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஈவு என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

நாம் நமது நாவின் உரிமையாளர் அல்ல; நாம் நமது நாவைப் பயன்படுத்துகிறவர்கள் மட்டுமே. ‘‘விலைக்கு வாங்கப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் உடலினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்’’ என்று 1 கொரிந்தியர் 6:20 சொல்லுகிறது. உலகமெங்குமுள்ள கடைகளில் ஏராளமான பொருட்கள் உள்ளன. அவை யாவும் அந்தந்தக் கடைக்குச் சொந்தமானவை. ஆனால் அதிலுள்ள ஒரு பொருளுக்கு நீங்கள் பணத்தைச் செலுத்தி, அது கடையின் சுவர் மாடத்திலிருந்து எடுக்கப்பட்ட வினாடி



யிலேயே அப்பொருள் உங்களுக்குச் சொந்தமாகிறது. அதற்குப் பின்னர் ஒருபோதும் கடைக்காரர் அந்தப் பொருளுக்கு உரிமையாளர் அல்ல. அதைப் போலவே, நீங்களும் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறீர்கள் — குறைக்கப்பட்ட விலைக்கல்ல, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்னும் கணக்கிட முடியாத விலைக்கு வாங்கப்பட்டீர்கள். எனவே முதலாவது உங்கள் உடலினாலும், இரண்டாவது உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். பல நேரங்களில் நாம் இந்த வரிசையை மாற்றிவிடுகிறோம். தேவனை மகிமைப்படுத்துவது என்பது முதன்மையாக நமது உடலினால்தான் செய்யப்படவேண்டும்; நமது உடலின் முதன்மையான ஆயுதம் நாவுதான். எனவே நாவு தேவன் நமக்களித்த ஈவு என்பதை நாம் உணர்ந்து, அதைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

## 2. அறிக்கையிடுதல் மற்றும் அர்ப்பணித்தல் மூலம் நாவின் சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தில் முதல் ஐந்து அத்தியாயங்களில் மக்கள்மீது தீர்க்கன் பல ‘ஐயோ!’க்களை வீசுகிறார் (3:9,11; 5:8,11, 19,20,21,23). தேவன் அவரை நிறுத்த வேண்டியிருந்தது. அவர் யார் என்பதைத் தேவன் அவருக்குக் காட்டினார்; எனவே அடுத்த ‘‘ஐயோ!’’வைத் தீர்க்கதரிசி தனக்கு நேராகவே கூறுகிறார். ‘‘ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனிதன், அசுத்த உதடுகளுள்ள மக்களின் நடுவில் வசிக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே’’ என்றார் (6:5). ஏசாயா ஏற்கனவே நான்கு ராஜாக்களின் ஆட்சிக் காலத்தில் தீர்க்கதரிசனங்களை உரைத்திருக்கிறார்; இறுதியாக அவர் சேவித்துக்கொண்டிருந்த ராஜா அப்போதுதான் இறந்திருந்தார். அவரது வாழ்வின் அந்தக் காலக்கட்டத்தில், முதிர்ச்சியடைந்த இறைப்பணியாளரும், மூத்த ராஜரீகத் தீர்க்கதரிசியுமாகிய ஏசாயா, ‘‘நான் அசுத்த உதடுகளுள்ள மனிதன்’’ என்று சொல்கிறார். நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வில் நமது உதடுகளை முழுவதுமாய் அர்ப்பணிக்கும் ஒரு நிலைக்கு இவ்விதம் வரவேண்டும். வசனங்கள் 6 மற்றும் 7 சொல்வது: ‘‘அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து தன் கை

யிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து, அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்.'' ஏசாயாவின் நாவின் இந்த அர்ப்பணிப்பும், தூய்மையாக்கலும் நிகழ்ந்த பின்னர்தான் தேவன் அவரை மிஷனரிப்பணிக்கு அனுப்புகின்றார். தேவன் அவரிடம், ''யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்?'' என்று கேட்டார். அதற்கு ஏசாயா, ''இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்'' என்று சொன்னார் (வச 8). தேவ அக்கினி நமது நாவைத் தொடுதலும், அவரது பணிக்கென்று அதைச் சுத்திகரித்தலும் சொந்தப் பெந்தெகொஸ்தே அனுபவம் ஆகும். ஏசாயா அவரது ஆறாவது அத்தியாயத்தில் அவரது பெந்தெகொஸ்தே அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். பெந்தெகொஸ்தே நாளில் பரத்திலிருந்து அக்கினி இறங்கி, அங்கு கூடியிருந்த சீடர் ஒவ்வொருவர்மீதும் அமர்ந்தது. தேவ ஆவியானவர் நமது நாவைப் பரிசுத்தமாக்குதலுக்கான கருத்தோவியம் அது. நீங்கள் எப்பொழுதாவது இவ்வித அனுபவத்தைப் பெற்றதுண்டா?

எட்வின் ஆர் (1912-1987) என்ற ஒரு தேவ மனிதர் பிரசித்திபெற்ற எழுப்புதல் எழுத்தாளர்; *''மாபெரும் நற்செய்தி விழிப்புணர்வு'' ("The Great Evangelical Awakening")* என்ற புத்தகத்தின் ஆசிரியர். மிகச் சிறந்த ஆங்கிலப் பாடல்களுள் ஒன்றான "Search me, O God, and know my heart today..." என்ற பாடல் இவரால்தான் இயற்றப்பட்டது. நான் கல்லூரி மாணவனாக இருந்தபோது 1969இல் சென்னையிலுள்ள இம்மானுவேல் மெதடிஸ்ட் ஆலயத்தில் இத்தேவ மனிதனின் செய்தியைக் கேட்கும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் பல நாட்களுக்கு முன்னரே அவரது கைகள், அவரது கால்கள் மற்றும் அவரது உடலிலுள்ள அனைத்து உறுப்புக்களையும், நாவைத் தவிர, தேவனிடம் அர்ப்பணித்திருந்ததாகச் சொன்னார். ஆனால் அதற்குப் பின்னர் ஒரு குறிப்பிட்ட நாளிலே அவர் தேவனிடம் சென்று, தேவ பலிபீடத்திலே அவரது நாவை மட்டும் முழுமையாக அர்ப்பணித்தாராம். ஆராதனை முடிந்ததும் இந்தப் பெரிய மனிதனைச் சந்தித்து, அவருடன் கை குலுக்க ஓடினேன். என் திருமறையில் அவரைக் கையொப்பமிடும்படி கேட்டேன். அவர் எட்வின் ஆர் என்று கையொப்பமிட்டு, பின்னர் 1



யோவான் 1:8 என்று எழுதினார். ''நமக்குப் பாவமில்லை என்று சொன்னால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாயிருப்போம்'' என்பதே அவ்வசனம்.

தாவீது ஒரு தீர்மானம் எடுத்தார்; அதைத் தொடர்ந்து அவர் செய்த அர்ப்பணம் சங்கீதம் 17:3இல் உள்ளது. ''நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இரவு வேளைகளில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப் பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்; என் **வாய்** மீறாதபடித் தீர்மானம் பண்ணினேன்.'' உங்களது வரம்பு மீறிய நாவுதான் உங்களது பெரும்பான்மையான சிக்கல்களுக்குக் காரணம்; உங்களது கட்டுப்பாடற்ற நாவுதான் உங்களது பெரும்பாலான பிரச்னைகளுக்கு வழிகோலியாக உள்ளது. உங்களது நாவை அடக்க தேவனது உதவியைக் கேளுங்கள். தயவுசெய்து ஒவ்வொருவரும் தேவனுடைய சமூகத்தில் வாக்குறுதி செய்து இத்தீர்மானத்தை எடுங்கள்: ''இன்று நான் எனது நாவை ஒரு நீதியின் ஆயுதமாக ஒப்புக்கொடுக்கிறேன்; எனது நாவைத் தேவனது பலிபீடத்தின்மேல் பலிப்பொருளாக சமர்ப்பிக்கிறேன்'' (ரோ 6:13,19). தேவன் உங்களுக்கு ஏசாயா பெற்ற அதே அனுபவத்தையும், பெந்தெகொஸ்தே நாளில் 120 சீடர் பெற்ற அதே அனுபவத்தையும் தந்தருளுவார்.

### 3. பிறரைக் குறித்த தீய காரியங்களைக் கவனித்துக் கேட்க மறுத்துவிடுங்கள்.

சங்கீதம் 15:1,3ஐப் பாருங்கள்: ''கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த மலையில் குடியிருப்பான்?... அவன் தன் **நாவினால்** புறங்கூறாமலும், ... தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான **பேச்சை** எடுக்காமலும் இருக்கிறான்.'' தேவனுடைய புனித மலையில் குடியிருப்பதற்குத் தேவையான இரு காரியங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று, உங்கள் நாவினால் புறங்கூறுதல் கூடாது. நாணயத்தின் மறுபக்கம் என்னவென்றால், பிறரைக் குறித்துச் சொல்லப்படும் அவதூறான பேச்சைக் கவனித்துக் கேட்கவும் கூடாது. நம்மில் அனேகர் பிறரைக் குறித்துத் தீய காரியங்களைப் பேசுவதில்லை; ஆனால் எவரேனும் மற்றவர்களைக் குறித்துத் தீதாய்ப் பேசும்போது, மிக எளிதாக, சில நேரங்களில் மிகுந்த உற்சாகத்துடன், அதைக் கவனித்துக் கேட்கிறோம். நாம் பேசவும் கூடாது;

கேட்கவும்கூடாது. கேட்கிறவன் இல்லாவிட்டால் பேசுகிறவனும் இருக்க மாட்டான். நீங்கள் கவனித்துக் கேட்டால்தான் யாராவது பேசுவார்கள். உங்களது ஆன்மீகம் கசிந்து வீணாகவேண்டாம்.

மற்றவர்களைப்பற்றி அவதூறு பேசுகிறவர்களைத் தேவனால் பொறுத்துக்கொள்ள முடியாது. சங்கீதம் 50:19-21 வாசியுங்கள்: ''உன் **வாயைப்** பொல்லாப்புக்குத் திறக்கிறாய்; உன் **நாவு** கற்பனைக்கதை பேசுகிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் **பேசி**, உன் தாயின் மகனுக்கு **அவதூறு** உண்டாக்குகிறாய். இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்.'' திருமறையின் சொல்லாதிக்கம் இவ்வளவு எளிமையாகவும், தெளிவாகவும் இருப்பதற்காகத் தேவனைத் துதிக்கின்றேன். உன் சகோதரனைப் பற்றி நீண்ட நேரம் தீதானவற்றைப் பேசுகிறாய்; முடிவில் ''நான் ஜெபத்திற்காக மட்டுமே இதைச் சொன்னேன்'' என்று உன் உரையாடலுக்குப் பெயரிட்டுத் திருமுழுக்காட்டுகிறாய். பாவத்துக்குத் திருமுழுக்கு கொடுக்க முடியாது. நீங்கள் ஒரு பாவத்துக்குத் திருமுழுக்கு கொடுக்க முற்படுவீர்களானால், திருமுழுக்கு கொடுக்கப்படுமுன் அது உலர்ந்த பாவமாக இருக்கும்; திருமுழுக்கு கொடுக்கப்பட்டபின் அது ஈரமான பாவமாக மாறும், அவ்வளவுதான். உங்கள் பாவங்களுக்கு வெவ்வேறு பெயர்களைச் சூட்டி பாவமற்றதாகக் காட்ட முயலாதிருங்கள். நியாயத்தீர்ப்பின் நாளிலே நீங்கள் உங்கள் சகோதரனுக்கு விரோதமாகப் பேசின அனைத்தையும் மொத்தமாக அல்ல, ''ஒவ்வொன்றாகத்'' தேவன் உங்கள் கண்களுக்கு முன்பாக நிறுத்துவார். எனவே அவதூறு பேசுகிறவர்களைவிட்டு விலகி ஓடுங்கள்.

''மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிந்திடு. எப்படியெனில், மனிதர் தற்பிரியராயும் ... வீம்புக்காரராயும் ... தூற்றுகிறவர்களாயும் ... அவதூறு செய்கிறவர்களாயும் ... இருப்பார்கள்'' என்று 2 தீமோத்தேயு 3:1-3 வசனங்களில் வாசிக்கிறோம். இப்படிப்பட்டப் பெருமைக்காரரை, தூஷிக்கிறவர்களை, விட்டு விலக வேண்டும் என்று வசனம் 5 கூறுகிறது. பவுல் 1 தீமோத்தேயு 3ஆம்



அத்தியாயத்தில் சபைப் பொறுப்பாளர்கள் மற்றும் அவர்களது மனைவியரிடம் காணப்படவேண்டிய தகுதிகளைக் குறித்து எழுதுகின்றார். ''உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாய் ... இராமல்'' (வச 8). ''அந்தப்படியே பெண்களும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களுமாய் ... இருக்கவேண்டும்.'' தொடர்ந்து பவுல் நாவடக்கத்தை எவ்வளவு வலியுறுத்துகிறார், பாருங்கள்!

பிறரைக் குறித்த, மூடப்பட்ட, தீய காரியங்களைத் தோண்டியெடுத்து வெளிப்படுத்த முயற்சி செய்யாதேயுங்கள். குப்பைமேட்டைக் கோழி கிளறி புழுப் பூச்சிகளைக் கண்டு மகிழ்வதுபோல, சிலர் பிறருடைய அவமானங்களைத் தோண்டியெடுத்து வெளிப்படுத்துவதிலேயே உற்சாகம் காட்டுவர். சகோதர சகோதரிகளே, ''அன்பு திரளான பாவங்களை மூடும்'' (1 பேது 4:8ஆ). தடிப்பான கம்பளத்தை மேலே போடும்போது நெருப்பு அணைந்துவிடும். அதைப்போல, பிறருக்கு விரோதமாய் அவதூறு பேசுதல் என்னும் நெருப்பை அன்பு என்னும் கம்பளம் அணைத்துவிட முடியும். தேவன் உங்களது பாவங்களை மூடியிருக்கும்போது உங்கள் சகோதரனது மூடப்பட்ட பாவங்களை வெளிப்படையாக்க உங்களுக்கு என்ன உரிமை? தேவன் பிசாசுக்குக் கொடுக்கும் பெயர் அவதூறு பேசுபவன், குற்றம் சாட்டுகிறவன். இரவும் பகலும் குற்றம் சாட்டுவதில் அவன் தேறினவன் (வெளி 12:10). பிசாசை விட்டு விலகுங்கள். பிறருக்கு விரோதமாக அவதூறு பேசவோ, புறங்கூறவோ தூண்டப்படும்போதெல்லாம் உடனடியாக, ''அப்பாலே போ, சாத்தானே!'' என்று உரக்கச் சத்தமிடுங்கள். யாரேனும் ஒருவர் பிறரைப் பற்றிப் பல்வேறு அவதூறான செய்திகளைக் கொண்டுவரும்போது, அவரைப் பேச அனுமதிக்காமல் தடுத்து நிறுத்துங்கள். பேசிக்கொண்டிருக்கும் காரியத்தை மாற்றித் திசை திருப்புங்கள். பேச வருபவர் திரும்பவும் அதைச் செய்யவே மாட்டார். அடுத்த முறை உங்கள் சகோதரன் அல்லது சகோதரிக்கு விரோதமாக அவதூறு பேச நீங்கள் நினைக்கும்போது இயேசு சவாலிட்டதை நினைத்துக் கொள்ளுங்கள்: ''உங்களில் பாவமில்லாதவன் ... முதலாவது கல்லெறியட்டும்'' (யோ 8:7).

இரக்கம், பாவ மன்னிப்பு மற்றும் இயேசுவின் இரத்தத்தால் பாவம் மூடப்படுதல் ஆகியவற்றைப் பெறவேண்டிய நிலையில் நீங்கள் இருப்

பதுபோல், உங்கள் சகோதர சகோதரிகளையும் பாதுகாப்பது உங்கள் கடமையாகும். ஒரு நபர் பாவம் செய்திருந்தால், நீங்கள் அவனிடம் போய், மற்றவர்களின் உதவியுடன் அவனைக் காப்பாற்றவேண்டும். ஏற்கனவே நொந்துபோயிருக்கும் அவனை ஒருபோதும் நார்நாராகக் கிழித்துவிடாதிருங்கள். நாம் பிறரைக் கட்டவேண்டுமே தவிர, வெடி வைத்துச் சிதைக்கக்கூடாது. ஆம், நமது நாவை அவதூறு பேச அனுமதிக்கவும் கூடாது; எவரேனும் ஒருவர் பேசும் அவதூறுகளைக் கேட்கவும் கூடாது.

''பேலியாளின் மகன் கிண்டிவிடுகிறான்; எரிகிற அக்கினி போன்றது அவன் உதடுகளில் இருக்கிறது. மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்; கோள் சொல்லுகிறவன் உயிர்த் தோழரையும் பிரித்துவிடுகிறான்'' என்று நீதிமொழிகள் 16:27,28 சொல்லுகிறது. ஒரு கோள்காரனால் பலர் தங்கள் நண்பர்களை இழந்திருக்கிறார்கள். சுயலாபத்திற்காக உள்நோக்கத்துடன் செயல்படும் ஒரு கோள்காரனின் மூலம் உயிர்த் தோழர்களும் சில நேரங்களில் பிரிக்கப்படுகிறார்கள். ''அக்கிரம உதடுகள் சொல்வதைத் துஷ்டன் உற்றுக் கேட்கிறான்; கேடுள்ள நாவுக்குப் பொய்யன் காதுகொடுக்கிறான்'' (17:4). தொடர்ந்து 9ஆம் வசனத்தில் வாசிப்பது: ''குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான்; கேட்டதைச் சொல்லுகிறவன் உயிர் நண்பரையும் பிரித்துவிடுகிறான்.'' நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஈவாகிய நாவைத் தவறாகப் பயன்படுத்தாதிருப்போம். குற்றஞ்சாட்டுகிறவனின் கைகளில் நான் ஓர் ஆயுதமாக இராதிருக்கட்டும்; தேவனது கரங்களில் நான் ஒரு பாத்திரமாக இருக்கவே விரும்புகிறேன்.

### 4. உங்கள் உரையாடலின் விளைவு கேட்பவரது பக்திவிருத்தியாக இருக்கவேண்டும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

யாராவது ஒருவருடன் நீங்கள் 30 அல்லது 45 நிமிடங்கள் உரையாடலில் செலவழித்தால், அந்த உரையாடலின் விளைவு அந்த நபரின் பக்திவிருத்தியாக இருக்கவேண்டும். நாம் தீமையானவற்றைத் தவிர்த்துவிட்டால் மட்டும் போதாது; நன்மையானவற்றையும் செய்யவேண்டும்.



பரிசுத்தம் என்பது பாதகப் பகுதியையும், (செய்யத்தகாத பகுதியையும்), அதே வேளையில் சாதகப் பகுதியையும் (செய்யவேண்டிய பகுதியையும்) உள்ளடக்கும். இயேசு கிறிஸ்து அநீதியை வெறுத்தார்; நீதியையோ சிநேகித்தார். அவர் தீமையானவற்றிற்கு மறுப்பு தெரிவித்து, நன்மையானவற்றிற்கு உடன்பட்டார். நாம் மற்றவர்களைக் குறித்துத் தீதானவைகளைக் கேட்காமலோ அல்லது பேசாமலோ மட்டும் இருந்தால் போதாது; அது சத்தியத்தின் எதிர்மறைப் பகுதி. அதைத் தொடர்ந்து நாம் மற்றவர்களைக் கட்டும்பணியிலும் ஈடுபடவேண்டும். இச்சத்தியத்தை எபேசியர் நிருபம் அழுத்திக் கூறுகிறது. ''நாம் ஒருவருக்கொருவர் உறுப்புகளாயிருக்கிறதால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபப்பட்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் மறையுமுன் உங்கள் எரிச்சல் தணியட்டும்; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்'' (4:25-27).

''கோபப்பட்டாலும் பாவம் செய்யாதிருங்கள்'' (வச 26) என்ற வாக்கியத்தில் வாயின் வார்த்தைகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. பாவம் செய்யாமல் கோபப்படுவது எப்படி? நாம் விரும்பாத எதையேனும் யாராவது ஒருவர் செய்யும்போது, நமக்குக் கோபம் வருவது இயல்பு தானே? தன் வாழ்நாள் முழுவதும் கோபமே வராத நபர் ஒருவருமில்லை. தேவனுக்கும் கோபம் வருகிறது; இயேசுவும் கோபப்பட்டார். எல்லாக் கோபமும் தீயவை அல்ல. 26ஆம் வசனத்தின் முதல் பகுதிக்குரிய விளக்கம் அவ்வசனத்தின் இரண்டாம் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ''சூரியன் மறையுமுன் உங்கள் எரிச்சல் தணியட்டும்.'' அதாவது, உங்கள் கோபத்தை அடுத்த நாளுக்கு எடுத்துச்செல்லக்கூடாது. நீங்கள் உடனடியாக அந்த நபருடன் காரியங்களைச் சரிசெய்துகொள்ளவேண்டும். இச்செயலைத் திருமறை 'ஒப்புரவாகுதல்' என்று அழைக்கிறது. இந்நாட்களில் மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கிக்கப்படாதது போலவே, ஒப்புரவாகுதலைக் குறித்தும் பிரசங்கிக்கப்படுவதில்லை. ஒப்புரவாகுதல் என்ற இந்தப் பயிற்சி போதிய அளவு வலியுறுத்தப் படாததுதான் சபைகளில் எழுப்புதல் தாமதிப்பதற்கான காரணங்களுள் ஒன்று. தேவனுக்கு விரோதமான பாவம் தேவனிடத்தில் அறிக்கையிடப்படவேண்டும்; மனிதருக்கு விரோதமாகச் செய்த பாவம் முதலாவது தேவனிடத்திலும், பின்பு யாருக்கு விரோதமாகப் பாவம் செய்யப்

பட்டதோ அந்த நபரிடத்திலும் அறிக்கை செய்யப்படவேண்டும். ''உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள்'' என்று திருமறை சொல்லுகின்றது (யாக் 5:16). இளைய மகன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அவன் தன் தந்தையிடம் சொன்னது இதுதான்: ''தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன்'' (லூக் 15:21). அதுவே ஒப்புரவாகுதல்! யாக்கோபு தன் சகோதரன் ஏசாவுடன் ஒப்புரவாகவேண்டியிருந்தது (ஆதி 33:3,4). சகேயு யார் யாரிடமிருந்து உடைமைகளை அபகரித்தானோ அந்த மக்களிடம் ஒப்புரவாகவேண்டியிருந்தது (லூக் 19:8).

நீங்கள் ஒரு நபரிடம் கோபமடைந்தால், அந்தக் கோபம் உங்கள் இருதயத்தில் கடுங்கோபமாக ஆழமாக வேர் விட்டிருந்தால், நீங்கள் அந்தக் குறிப்பிட்ட நபரிடம் சென்று உங்கள் குற்றத்தை அறிக்கையிடும்வரை நீங்கள் ஒப்புரவாகவேயில்லை. தேவன் உங்கள் பாவத்தை மன்னிப்பார்; ஆனால் நீங்கள் சம்பந்தப்பட்ட அந்நபரிடம் சென்று ஒப்புரவாகும்வரை உங்கள் மனச்சாட்சி சுத்தமாயிராது. நான் தேவனுடன் நல்லுறவில் இருக்கின்றேன் என்று சொல்வது எளிது; ஆனால் மனிதருடன் ஒப்புரவாகாமல் நீங்கள் தேவனுடன் ஒப்புரவாயிருக்க முடியாது. அப்போஸ்தலன் யோவான் இந்தக் கேள்வியைக் கேட்கின்றார்: ''கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?'' (1 யோ 4:20ஆ).

நம்மைத் தாழ்த்தி ஒரு நபரிடம் செல்வதற்கு நமக்கு முயற்சி தேவைப்படுகிறது. வெறுமனே அந்த நபரிடம் சென்று கைகுலுக்குவதும், உதட்டில் புன்னகையை வரவழைத்து 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று சொல்லுவதும் 'ஒப்புரவாகுதல்' அல்ல. ஒப்புரவாகுதல் என்பது தகுந்த வார்த்தைகளால் தெளிவாக நமது மனந்திரும்புதலைச் சொல்லுதல் ஆகும். எடுத்துக்காட்டாக, ''அன்புச் சகோதரனே! நான் உங்களுடன் ஒப்புரவாக விரும்பி வந்திருக்கிறேன். நான் உங்களுக்கு விரோதமாக இன்னின்ன வார்த்தைகளையெல்லாம் பேசிவிட்டேன். நான் பேசிய சொற்களுக்காகவும், நடந்துகொண்ட முறைக்காகவும் மனம் வருந்தி, உங்களிடம் மன்னிப்பு கேட்கிறேன்'' போன்ற வார்த்தைகளால் உள்ளத்தை வெளிப்படுத்தலே ஒப்புரவாகுதல் ஆகும். அப்போஸ்தலனாகிய



பவுல் சொல்கிறார்: ''நான் தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்க முயலுகிறேன்'' (அப் 24:16). எவ்வளவு சீக்கிரமாக அதைச் செய்கிறீர்களோ, அத்தனை அதிகமான நன்மை உண்டாகும்.

மத் 5:23,24 சொல்லுவது, ''நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்மீது உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுவந்தால், அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.'' முதல் ஆராதனைக்காரனான காயீனுக்கு இருந்த பிரச்னை என்ன? அவனது காணிக்கையைத் தேவன் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? ஆதியாகமத்திலே இதற்கான காரணத்தை நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் யோவான் எழுதின முதல் நிருபத்துக்கு வரும்போது, காயீனின் ஆராதனையை தேவன் ஏன் அங்கிகரிக்கவில்லை என்பதை விளங்கிக்கொள்கிறோம். ''காயீனின் செயல்கள் பொல்லாதவைகளும், அவன் சகோதரனுடைய செயல்கள் நீதியுள்ளவைகளுமாயிருந்தன'' (3:12). காயீன் அவனது சகோதரனுடன் சமாதானமாய் இருக்கவில்லை; அவன் தனது சகோதரனை நேசிக்கவில்லை.

எபேசியர் 4ஆம் அத்தியாயம் 29 முதல் 32 வரையுள்ள வசனங்களைப் படிப்போம்: ''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பயனுண்டாகும்படி பேசுங்கள். மேலும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம், மற்ற எந்த துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கட்டும். ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'' உங்களால் தீங்கிழைக்கப்பட்ட சகோதரனுடன் நீங்கள் ஒப்புரவாகவில்லையெனில், பிசாசு உங்கள் வாழ்வில் கால் பதிக்க இடம் தருகிறீர்கள். உங்கள் சகோதரனைப்பற்றித் தீயவைகளைத் தொடர்ந்து பேசிக்கொண்

டிருப்பீர்களானால், உங்கள் சகோதரன் பக்திவிருத்தி அடையும்படி உங்கள் உரையாடல் இல்லையெனில், நீங்கள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்கள். பிசாசுக்கு இடங்கொடுத்தல் மற்றும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துதல் என்பது இரட்டைப் பாவம் ஆகிறது (எபே 4:25-27).

ஆபிரகாமைத் தேவன் அழைத்து ''நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' என்று சொன்னார் (ஆதி 12:2). நாம் மக்களை அழிக்க அல்ல, ஆசீர்வதிக்கவே அழைக்கப்பட்டோம்; நாம் மக்களை இடித்துப் போடுவதற்காக அல்ல, கட்டுவதற்காகவே அழைக்கப்பட்டோம். அப்போஸ்தலனாகிய யாக்கோபு அவரது புத்தகத்தின் மூன்றாம் அத்தியாயத்தில் இந்த உண்மையை அழுத்தமாகக் கூறுகின்றார். ''நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான நச்சு நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகின்றன. என் சகோதரரே, இப்படியிருக்கக்கூடாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்தி மரம் ஒலிவப்பழங்களையும், திராட்சைச் செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்று தித்திப்பான தண்ணீரைக் கொடுக்காது'' (வச 8-12). இந்தப் பகுதியில் யாக்கோபு ''என் சகோதரரே'' என்று இருமுறை அழைக்கிறார். ஒருவர் ஒரு கடிதத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது திடீரென்று இடையில் 'என் சகோதரரே' என்ற விளிச்சொல்லை எழுதினால் அதன் பொருள் என்னவென்றால், அவர் தெரிவிக்க விரும்பும் சத்தியங்களும் கருத்துக்களும் அதைப் படிப்பவரின் உள்ளங்களுக்கு மிகப் பிரியமானதாக மாறவேண்டும் என்று விரும்புகிறார் என்பதே ஆகும். நீங்கள் திருமறையை வாசிக்கும்போது, நீங்கள் திருமறையைப் புரிந்துகொண்டால் மட்டும் போதாது, நீங்கள் திருமறையை உணரவேண்டும். வேதப் புத்தகத்திலுள்ள வசனங்கள் வெறும் எழுத்துக்களும் வார்த்தைகளும் மட்டுமல்ல, அவை ஆவியாயும் உயிராயும் இருக்கின்றன. கர்த்தருடைய வார்த்தை தனது எலும்புகளுக்குள் எரிகிற அக்கினியைப்போல் இருந்தது என்று கத்தருடைய தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறார் (எரே 20:9). என்னே அனுபவம் அது! நாம் வேதத்தை வாசிக்கும்போது வெதுவெதுப்பாவது வேண்டாமா? எனவே இங்கே அப்போஸ்தலனாகிய யாக்கோபு ஒரே சத்தியத்தைச் சொல்ல ''என் சகோதரரே!'' என்று திரும்பத் திரும்ப அழைக்கும்போது அவரது நிருப வாசகர்களைக் கட்டித் தழுவிச் சொல்வதுபோல் உள்ளது. ஒரே நீரூற்று உவர்ப்பான நீரையும் இனிப்பான நீரையும் கொடுக்காது; ஒரே வாயிலிருந்து சாபமும் ஆசீர்வாதமும் புறப்படக்கூடாது.



உங்கள் வார்த்தைகள் மூலம் பிறரைக் கறைப்படுத்தியிருப்பீர்களானால் நீங்கள் நியாயத்தீர்ப்பின் வாசலில் நின்றுகொண்டிருக்கிறீர்கள். உங்களது ஒரே ஒரு வார்த்தை பயங்கரமான அழிவுக்கு நேராக வழிநடத்தக்கூடும். தேவன் நமக்களித்துள்ள ஒரே ஊழியம் மக்களை உருவாக்குதல் ஆகும்; மக்களைக் கட்டுதலும் அவர்களை ஆசீர்வதித்தலும் ஆகும். ஒவ்வொருவரது இருதயத்தின் ஆழத்திலும் அவரவருக்குரிய தனிப்பட்ட காயங்களினால் வேதனையின் இரத்தம் வழிந்துகொண்டிருக்கின்றது. அதற்கு மேலும் மக்களைக் காயப்படுத்தாதீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் மருத்துவர்; கீலேயாத்தின் பிசின் தைலத்தைத் தேவன் உங்கள் கைகளில் கொடுத்திருக்கிறார். யாரேனும் ஒருவரை நீங்கள் சந்திக்கச் செல்லும்போது காயத்தை ஆற்றும் அந்தப் பிசின் தைலத்தை (balm) உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்; ஆறாத காயத்தை ஏற்படுத்தும் அல்லது அழிக்கும் அணுகுண்டை (bomb) எடுத்துச்செல்ல வேண் டாம். அந்த நபருக்கு ஆசீர்வாதமாக இருங்கள். வேதனையிலிருக்கும் ஒருவர் சற்று நேரம் உங்களுடன் உரையாடிய பின், மேலும் மன அழுத்தம் அதிகரித்தவராக அல்ல, மனப்பாரம் நீங்கிப் புத்துணர்வடைந்தவராகத் திரும்பிச் செல்லவேண்டும். இயேசு என்ன சொன்னார்? ''வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத் 11:28). ஒவ்வொரு ஆத்தும ஆதாயகரின் அழைப்பும் இதுவாகவே இருக்கவேண்டும். வேதனையிலிருக்கும் ஒரு நபரின் வேதனையையும் பாரத்தையும் இன்னும் கூட்டாதீர்கள்; அவரது மனப்பளுவைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். ''ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் திருச்சட்டத்தை நிறைவேற்றுங்கள்'' (கலா 6:2). புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் வாழ்விலக்கணம் இதுவே.

நாம் நற்செய்தியைப் பெற்றிருக்கும் மக்கள். நாம் பரப்பக்கூடிய ஒரே செய்தி கிறிஸ்துவின் நற்செய்தியாகத்தான் இருக்கவேண்டும்; எந்த வொரு துர்ச்செய்தியையும் பரப்பக்கூடாது. கேட்கிறவர்களின் பக்தி விருத்திக்கேதுவானவற்றைப் பேசுங்கள். நீங்கள் ஏற்ற நேரத்தில் சரியான வார்த்தைகளைப் பேசும்படியாக, தேவன் உங்களுக்கு ஒரு கல்விமா னின் நாவைத் தந்தருளுவார் (ஏசா 50:4). ''ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமம்'' (நீதி 25:11). பொற்பழங்கள்! வெள்ளித்தட்டு! நாம் நமது நாவை மட்டும் சரியாகப் பயன்படுத்துவோமானால் அது எத்தனைப் பெரிய சிலாக்கியம், பாக்கியம்!

### 5. தேவனைத் துதிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் நாவை அதிகமதிமாய்ப் பயன்படுத்துங்கள்.

தேவனைப் போற்றித் துதிப்பதற்காகவும், நற்செய்தியை அதிக மதிகமாய் அறிவிப்பதற்காகவும் உங்கள் நாவை அதிகமதிகமாய்ப் பயன் படுத்துங்கள். நற்காரியங்களுக்காக மட்டும் நாவு பயன்பட அதைப் பழக்குவிப்பதற்கு இது ஒரு சாதக வழிமுறை. எபேசியர் 5ஆம் அத்தி யாயம் 4ஆம் வசனம் சொல்லுவது: ''வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவை; துதித்தலே தகும்.'' வேடிக்கையாகப் பேசுவது தவறு அல்ல என நான் நம்புகிறேன்; நகைச்சுவையில் எனக்கு விருப்பம் உண்டு; அடிப்படையாக நகைச்சுவை கெட்டதல்ல. மேற்கண்ட திரு வசனத்தில் நகைச்சுவைக்கு எதிராக ஒன்றும் சொல்லப்படவில்லை; மாறாக, மரியாதையற்ற வேடிக்கைப் பேச்சுக்களும், பண்பற்ற கேலிப் பேச்சுக்களும் தகாதவை என்றே சொல்லுகிறது. மற்றவர்களது மன இறுக்கத்தைத் தளர்த்தி இலகுவாக்குவதற்காக நாம் நகைச்சுவைப்படப் பேசலாம்; ஆனால் அந்த நகைச்சுவைப் பேச்சானது மற்றொருவரைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது. நமது நகைச்சுவைப் பேச்சு எவரையும் புண்படுத்தக்கூடாது. இந்த இடத்தில்தான் நாம் எல்லை மீறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த எல்லையை மீறிச் சென்றால், நகைச் சுவையானது பக்திவிருத்திக்கல்ல, அழிவுக்குக் காரணமாக மாறிவிடும்.

எபிரெயர் 13:15இல், ''ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக் கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்



போதும் தேவனுக்குச் செலுத்திடுவோம்'' என்று வாசிக்கிறோம். மேலும், ஏசாயா 57:19 சொல்வது, ''தூரமாயிருக்கிறவர்களுக்கும் அருகிலிருப் பவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைப் படைக்கிறேன் ... என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' எனவே, உதடுகளின் இரண்டு கனிகள் யாவை? முதலாவது கனி தேவனைத் துதித்தல், துதித்தல், துதித்தல்; இரண்டாவது கனி தூரமாயிருப்பவர் களுக்கும் சமீபமாயிருப்பவர்களுக்கும் சமாதானம், சமாதானம், சமா தானம் என்று கூறுதல். ஒன்று ஆராதனையையும், அடுத்தது அறிவிப் பையும் குறிப்பிடுகின்றன. ஒன்று தேவனுக்குத் துதியை ஏறெடுத்தல்; மற்றது தேவனுடைய பெயரால் மக்களுக்குச் சமாதானத்தை அறி வித்தல்.

மக்கள் தேவனது தகவல்தொடர்பு ஈவாகிய நாவையும், தங்கள் மொழியையும் அவர்களது தற்புகழுக்கான செயல்திட்டங்களைத் தீட்டப் பயன்படுத்தியபோது, தேவன் அவர்களது மொழியைத் தாறுமாறாக் கினார். பாபேலின் இந்தக் கதையை ஆதியாகமம் 11:1-9இல் வாசிக் கிறோம். பாபேலுக்கு இருந்த ஆசீர்வாதம் எது? அவர்கள் எல்லாருக்கும் ஒரே மொழி இருந்தது. அவர்கள் செய்த தவறு என்ன? அவர்கள் தங்க ளுக்கு அருளப்பட்டிருந்த ஆசீர்வாதத்தைத் தவறாகப் பயன்படுத்தினர்; எனவே தேவன் அவர்கள் மொழியைத் தாறுமாறாக்கி அவர்களை உலக மெங்கும் சிதறச் செய்தார். தேவன் நமக்குப் பேச்சுத் திறனை ஈவாக அளித்துள்ளார். அதைத் தேவனுடைய திட்டத்திற்கு மாறாகத் தவ றாகப் பயன்படுத்தினால் பாபேலை நினைத்துக்கொள்ளுங்கள்; தேவன் உங்களைத் தண்டிப்பார். நாவானது விலையேறப்பெற்றது; அது தேவ னிடமிருந்து கிடைத்த ஈவு.

### 6. திருமறையை அமைதியாகவும், சத்தமாகவும், முடிந்த அளவு திரும்பத்திரும்பவும் வாசியுங்கள்.

வேதாகமத்தை அமைதியாகவும், சத்தமாகவும் மீண்டும் மீண்டும் வாசிப்பது உங்கள் நாவைக் கட்டுப்படுத்த உதவியாக இருக்கும். ''இந்தத் திருச்சட்டப் புத்தகம் உன் **வாயை**விட்டுப் பிரியாதிருக்கட்டும்; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவன

மாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிரு'' (யோசு 1:8அ). இங்கே மூன்று உறுப்புக்கள் செயல்படுகின்றன: வாசிப் பதற்கு வாய், தியானிப்பதற்கு இருதயம் மற்றும் வேலை செய்வதற்குக் கரங்கள். வார்த்தையைச் சத்தமாகப் படி, அந்த வார்த்தைகளை உன் உள்ளத்தில் தியானி, பின்னர் உன் அன்றாடக வேலைகளில் அதைப் பயன்படுத்து. தீமோத்தேயுவிடம் பவுல் சொன்னது: ''நான் வருமளவும் வாசிக்கிறதில் ... கவனம் செலுத்து'' (1 தீமோ 4:13). இங்கே 'வாசிக் கிறது' என்ற பதம் தனிமையில் தியானிப்பதைக் குறிப்பிடவில்லை; மாறாக, பொது மக்களுக்கு வாசித்தல், பிரசங்க பீடத்திலிருந்து வாசித் தல், பிறருக்கு வாசித்தல். அமைதியான தியானம் பயனுள்ளதுதான்; எனினும் சத்தமாக வாசிக்கும்போது, உங்கள் வாயினால் வேத வார்த் தையை உச்சரிக்கின்ற பயிற்சியில் நீங்கள் ஈடுபட்டிருப்பதால், அது நன்மையான விளைவை உண்டுபண்ணுகின்றது. உங்கள் வாயும் இருத யமும் வேத வசனங்களால் நிரம்பியிருக்கும்போது, உங்கள் உரையாடல் மிகுந்த பயனுள்ளதாய் அமையும்.

நான் பள்ளியில் (1952-1962) தமிழ்வழிப் போதனா முறையில்தான் பாடங்களைப் படித்தேன். கல்லூரியில் புகுமுக வகுப்பில் (PUC) படிக் கும்போதுதான் முதன்முதலாக ஓர் ஆங்கில வேதாகமத்தைப் பெற்றேன். பல மாதங்கள் ஜெபித்ததின் விளைவாகத்தான் அந்தச் சிறிய ஆங்கில வேதாகமம் எனக்குக் கிடைத்தது. மாலை நேரங்களில் நான் தியானம் பண்ணுவதற்காகத் திறந்தவெளிக்குச் செல்வது வழக்கம். அங்கே அந்த வேதாகமத்தைச் சத்தமாக வாசிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந் தேன். திருமறையை அவ்வாறு வாசித்ததுதான் எனது மொழி வளத்தை முன்னேற்றியது என்பதை தேவ நாம மகிமைக்காகச் சொல்லுகின்றேன். நான் தேவனைப்பற்றிய அறிவில் அதிகமதிகமாய் வளரவேண்டுமென்ற நோக்கத்துடன் வேதாகமத்தை வாசித்தேன்; அத்துடன் இணை விளை வாக, நான் வேதாகமத்தைச் சத்தமாக வாசித்ததால் என் மொழித்திறனும் கூடியது. எனவே நமது இளைஞர்களை வேதத்தைச் சத்தமாக வாசிக் கும்படி உற்சாகப்படுத்துகிறேன்; எதிர்காலத்தில் அவர்கள் செய்ய விருக்கும் திருப்பணிக்கு அது பேருதவியாக இருக்கும். வேதாகமத்தை நீங்கள் சத்தமாய்த் திரும்பத் திரும்ப வாசிக்கும்போது, கருத்துக்களைத் தங்குதடையின்றி பேசி வெளிப்படுத்துவதில் உங்களுக்கிருக்கும் தயக்கம் நீங்கிவிடும்.



C.H. ஸ்பர்ஜன் (1834-1892) அவர்கள் பிரசங்கிகளின் இளவரசன் (Prince of Preachers) என்றழைக்கப்பட்டார். வேத வசனத்தைப் பிரசங்கிப்பதற்கு அவர் வெள்ளி நாவைப் பெற்றிருக்கிறார் என்று மக்கள் சொல்வது வழக்கம். அவர் முதன்முதலில் பிரசங்கிப்பதற்கு எப்படி ஆரம்பித்தார் தெரியுமா? அவர் தனது வேதாகமத்தைக் கையிலெடுத்து, அவரது பிரசங்கங்களை எழுதி, வனப்பகுதிகளுக்குள் செல்வாராம். அவர் எழுதிவைத்திருக்கும் பிரசங்கங்களை அங்கிருக்கும் மரங்களுக்குச் சத்தமாகப் பிரசங்கிப்பார்; திருமறையை மரங்களுக்குப் படித்துக்காட் டுவார். அங்கே ஒரு காற்று வீசும்போது மரங்கள் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக அசையும். உடனே ஸ்பர்ஜன் தனது சபை மக்கள் தனது செய்தியால் தொடப்பட்டு, உணர்த்தப்பட்டு, அசைக்கப்பட்டுவிட்டனர் என்று கருதுவாராம்! ஒரு பெருங்காற்று வீசும்போதும், சபையில் அற் புதமான காரியங்கள் நடைபெறுகின்றன என்று பரவசமடைவாராம். அவ்வாறுதான் அவர் பிரசங்கிக்க ஆரம்பித்தார். திருச்சபைச் சரித்திரத் திலேயே ஸ்பர்ஜனுக்கு நிகரான பிரசங்கியார் இல்லை.

தேவ செய்தியானது உங்கள் நாவின் மூலம் தங்குதடையின்றி சரளமாக வெளிவர உங்கள் நாவைப் பழக்குவிக்க வேண்டும். ஏனெனில் குரலை உயர்த்தி வாசிப்பது கருத்துக்கள் எளிதில் சரளமாக வெளிவரப் பயன்படும் பயிற்சியாகும். உங்கள் வீடுகளில் உங்கள் இயல்பான உரையாடலிலும் தேவனுடைய வசனங்கள் அதிகமாய் ஆக்கிரமிப்பு செய்யட்டும். உபாகமம் 11:18-21ஐ வாசியுங்கள்: ''உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும் அதிகமாயிருக்கும்படி, நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுங்கள். அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுங்கள்.'' இந்நாட்களில் ஒவ்வொரு நாளுக்கும் வசனம் குறிப்பிடப்பட்டுள்ள வசன நாட்காட்டிகள் பல உள்ளன. அது வெறுமனே உங்கள் சுவரை மட்டும் அலங்கரிக்கின்றதா? ஒவ்வொரு நாளும் அந்த நாளுக்குரிய

வசனத்தை எடுத்து, அதை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள், காலை உணவுக்காக அமர்ந்திருக்கும்போது அதைச் சொல்லுங்கள். அந்த வசனம் உங்கள் உரையாடலாக இருக்கட்டும். தேவனுடைய வார்த்தை எவ்வளவு அதிகமதிகமாய் உங்கள் வாயிலிருக் கிறதோ, அவ்வளவு அதிகமாய் உங்கள் பொதுவான உரையாடலும் தூய்மையாயிருக்கும்.

### 7. இரவில் படுக்கச் செல்லுமுன் அந்த நாள் முழுவதும் நீங் கள் பேசியவற்றை நினைத்துப் பாருங்கள்.

இரவு படுக்கைக்குச் செல்லுமுன் அந்தந்த நாளில் உங்கள் உரையாடலின் தரத்தைப் பரிசீலனை செய்யுங்கள். நீங்கள் என்னென்ன வார்த்தைகளைப் பேசினீர்கள், என்னென்ன வார்த்தைகளைப் பேசி யதைத் தவிர்த்திருக்கலாம் மற்றும் என்னென்ன வார்த்தைகளை நீங்கள் பேசியிருக்கலாம் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து பாருங்கள். 1 கொரிந்தியர் 11:31,32இல் ''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படமாட்டோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத் தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடி, கர்த்தராலே சிட்சிக் கப்படுகிறோம்'' என்று வாசிக்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் நம்மை நிதானித்து அறிந்தோமானால், இறுதி நாளில் நாம் திரும்பிப் பார்க்க வேண்டிய காரியங்கள் இராது.

நீங்கள் காலையில் எழும்போது உங்கள் ஜெபம் என்னவாயிருக்க வேண்டும்? ''கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத் தின் தியானமும் உமது சமூகத்தில் ஏற்புடையதாயிருக்கட்டும்'' (சங் 19:14). சங்கீதக்காரன் ''என் வாயின் வார்த்தைகளும்'' என்றுதான் தொடங்குகிறார். பின்னர்தான் ''என் இருதயத்தின் தியானமும்'' என்று தொடருகிறார். ஒவ்வொரு நாளும் நாம் வெளியே செல்லுமுன் நாம் செய்யக்கூடிய இன்னொரு ஜெபம் உண்டு: ''கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்'' (சங் 141:3). நாம் உண்ணும் உணவு மற்றும் குடிக்கும் நீர் ஆகியவற்றின் தரத்தையும், சுத்தத்தையும் குறித்து எவ்வளவு அதிகமாய்க் கவனம்



செலுத்துகிறோம்! நாம் வார்த்தைகளைப் பேசுவதில் அதே அளவு கவனம் செலுத்த முயற்சியெடுப்போமானால் நாம் வெற்றியாய் வாழ்வோம்.

தேவ கிருபை, தேவ பலம், தேவ வல்லமை ஆகியவற்றின் உதவி யோடு உங்கள் நாவைக் கட்டுப்படுத்த எவற்றையெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்யுங்கள். ஏனெனில் நாவடக்கம் தான் பூரணத்தின் அடையாளம்.

## ஜெபம்

கிருபையுள்ள பரம தகப்பனே, எர்மோன் மலையின் பனியைப்போல எங்கள்மீது பொழிந்தருளப்படும் உமது திருவசனங்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். தேவனே, நாங்கள் உம்மால் சுத்திகரிக்கப்பட வேண்டிக் கெஞ்சுகிறோம். ஆ! நாங்கள் எத்தனையோ தடவை எங்கள் நாவினால் தவறிழைத்திருக்கிறோம்; பலருடைய வாழ்வுக்குக் கேடு விளைவித்திருக்கிறோம்; பலருடைய வாழ்வை அழித்திருக்கிறோம். நாங்கள் மக்களிடம் உள்ள நல்லுறவைக் கிழித்துப் பிரிக்காமல், மக்க ளுடன் நட்புறவைப் பலப்படுத்த உதவி புரியும். திரளான பாவங்களை மூடக்கூடிய தெய்வீக அன்பினால் எங்களை நிரப்பும்.

பிதாவாகிய தேவனே, நாங்கள் வார்த்தையில் எப்படிப் பரிசுத்தமாக வாழ முடியும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக உமது திருமறை கூறும் தெள்ளத் தெளிவான சத்தியங்களுக்காய் உமக்கு நன்றி ஏறெடுக் கிறோம். எங்களது பரிசுத்தத்தின் தரத்தை உயர்த்துவதற்காக நீர் எங்க ளுக்குப் பற்பல முக்கியமான சத்தியங்களைக் கற்றுத் தருகிறீர். எவ னுக்கு அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடமிருந்து அதிகம் கேட்கப் படும் என்பதை உணர்ந்து உமது சந்நிதிமுன் நாங்கள் நடுங்குகிறோம். உமது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் திருப்பெயரால் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

# 7

# வேலையில் பரிசுத்தம்

## Holiness in Work

பரிசுத்தத்தை நோக்கி நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும், பரிசுத்தமாயிருக்க நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் பரலோகத்தில் கனப்படுத்தப்படும். நாம் தேவனோடு ஒத்துழைக்கும்போது அவர் நம்மைச் சுத்திகரிக்கிறார், பாராட்டுகிறார். பரிசுத்தம் என்ற நெடுஞ்சாலைப் பயணத்தில் நம்மை நடத்திவருகின்ற கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த அத்தியாயத்தில் நமது அனுதின வேலையில் எவ்வாறு பரிசுத்தத்தைச் செயல்படுத்துவது என்பதைக் கற்போம்.

''அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே **கர்த்தருக்குப் பரிசுத்தம்** என்னும் விலாசம் எழுதியிருக்கும்; கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும். அப்பொழுது எருசலேமிலும் யூதாவிலுமுள்ள எல்லாப் பானைகளும் சேனைகளின் **கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்**'' என்று சகரியா 14:20,21இல் வாசிக்கிறோம். இந்த வசனங்களின் நடுப்பகுதியை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம். 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' செதுக்கப்பட்டுள்ள இடங்களை விவரிக்கும் முதல் மற்றும் மூன்றாம் பகுதிகளின் அடிப்படையில் இந்த அத்தியாயம் இருக்கும். குதிரைகளின் மணிகள்மேல் 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்று முத்திரைவெட்டாகச்



செதுக்கப்பட்டிருக்கும். குடியிருப்புக்கு வெளியே திறந்த வெளியில் நடைபெறும் வேலைகளுக்கு அல்லது நடவடிக்கைகளுக்கு அடையாளமாகக் குதிரைகள் உள்ளன. யுத்தக்களத்திலும் வயல்வெளியிலும் குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன. 21ஆம் வசனத்தில் எருசலேமிலுள்ள எல்லாப் பானைகளும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும் என்று வாசிக்கிறோம். நமது குடும்பத்தில் அல்லது வீட்டினுள் செய்யப்படும் வேலைகளுக்கு அடையாளமாகச் சமையல் பாத்திரங்கள் உள்ளன. எனவே 'குதிரைகளின் மணிகள்' வீட்டிற்கு வெளியே நாம் செய்யும் அலுவல்களையும், 'சமையல் பாத்திரங்கள்' குடும்பத்தைச் சார்ந்த அல்லது வீட்டினுள் செய்யப்படும் வேலைகளையும் குறிப்பிடுகின்றன.

பொதுவாக நாம் வேலைகளை இருவகைகளாகப் பிரிக்கின்றோம்: உலக (secular) வேலை மற்றும் ஆன்மீகப் (sacred) பணி — வருவாய்க்கடுத்த உலகப்பணி மற்றும் முழுநேர இறைப்பணி. திருமறையின் வெளிச்சத்தில் இந்த வகைப்படுத்தலை முழுமையாக நியாயப்படுத்த முடியாது. ஒரு கிறிஸ்தவனுக்கு உலகத்துக்கடுத்த வேலை என்று எதுவும் கிடையாது, எல்லாமே ஆவிக்குரியவைதான். இதைத்தான் 1 கொரிந்தியர் 10:31இல் நாம் வாசிக்கிறோம்: ''நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.'' புசித்தலும், குடித்தலும் முற்றிலும் உலகுக்கடுத்ததும், உடல் தேவைகளைச் சந்திக்கும் செயல்பாடுகளென்றாலும், அவையும் தேவ மகிமைக்காகச் செய்யப்படவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். புசித்தலையும் குடித்தலையும் சுட்டிக்காட்டிய அப்போஸ்தலர் தொடர்ந்து ''நீங்கள் எதைச் செய்தாலும்'' என்று கூறுகின்றார். ஒருவேளை நீங்கள் சமையலறையில் சமைத்துக்கொண்டிருக்கலாம்; அல்லது வீட்டிற்கு வெளியே புகைப்படம் எடுத்துக்கொண்டிருக்கலாம்; அல்லது ஓர் ஓவியத்தைத் தீட்டிக்கொண்டிருக்கலாம்; அல்லது துடைப்பத்தைக் கொண்டு தரையைச் சுத்தப்படுத்திக்கொண்டிருக்கலாம்; அல்லது உங்கள் புல்தரையைச் செதுக்கிக்கொண்டிருக்கலாம்; அல்லது ஓர் உணவு விடுதியில் சமையல் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருக்கலாம்; அல்லது ஓர் அலுவலகத்தில் ஓர் எழுத்தராகப் பணியாற்றிக்கொண்டிருக்கலாம்; அல்லது நீங்கள் ஒரு பொறியியலராகவோ, மருத்துவராகவோ, மருத்துவத் தாதியாகவோ, ஓர் ஆசிரியராகவோ

இருக்கலாம் — நீங்கள் எந்தப் பணி செய்பவராக இருந்தாலும், நீங்கள் செய்வதெல்லாம் தேவ நாமம் மகிமைப்படும்படி செய்யப்படவேண்டும். 33ஆம் வசனம் சொல்லுவது: ''நீங்கள் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.'' இதில் மூன்று வகையான மக்கள் கூட்டம் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம் — யூதர், கிரேக்கர், தேவ சபையினர். யூதரிலும், கிரேக்கரிலும் மறுபடியும் பிறந்தவர்கள் அனைவரும் தேவனுடைய சபையின் அங்கத்தினர் ஆவர். மற்ற யூதரும் கிரேக்கரும் சபைக்கு வெளியே இருக்கின்றனர். எனவே நீங்கள் மதச்சார்பற்ற உலகில் இருந்தாலும், ஆவிக்குரிய ஐக்கியத்தில் இருந்தாலும் உங்களைச் சுற்றியுள்ள யாவருக்கும் இடறலற்றவர்களாய் நடக்கவேண்டும். 32ஆம் வசனத்தைப் பாருங்கள்: ''நான் என் சொந்த நன்மையைத் தேடாமல் அநேகருடைய நன்மையைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படி, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறேன்.''

நான் கர்த்தருக்கு முழுநேரமாய்ப் பணியாற்றுவதற்காக எனது பொறியியல் தொழிலை விட்டுவிட்டேன். எனவே நான் ஒரு முழுநேரப்பணியாளன் (fulltime worker). நீங்கள் வருமானத்திற்காக ஒரு வேலைக்குச் செல்கிறீர்கள் என்றால், நீங்கள் எல்லா நேரப்பணியாளர் (all-time worker). இதுதான் நம்மிருவருக்குமிடையேயுள்ள வேறுபாடு. சொற்றொடரில் மட்டுமே வித்தியாசம். எனவே எல்லா நேரங்களிலும் ''நான் கர்த்தர் இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு எல்லா நேரப்பணியாளன்'' என்றுதான் எண்ணவேண்டும். எனவே நாம் யூதர் நடுவில் அல்லது கிரேக்கர் நடுவில் அல்லது விசுவாசிகள் நடுவில் பணி செய்தாலும் நாம் தேவனுக்கு ''எல்லா நேரப் பணியாளர்கள்.'' இந்தக் கருத்து எல்லாச் சூழ்நிலைகளிலும் நமது நடத்தையும் நடவடிக்கையும் பரிசுத்தமாகவே இருக்கவேண்டும் என்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

பிரியமானவர்களே, முழுநேரப் பணியாளர்களுக்கு மற்றும் முழுநேரமல்லாப் பணியாளர்களுக்கு என்று வேறுபட்ட இரு தர மதிப்பீடுகள் கிடையாது. திருமறையில் எங்கும் அத்தகையப் போதனை இல்லவே இல்லை. திருமறையில் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட தேவ ஊழியர் பலர் முழுநேரப் பணியாளர்களைக் குறித்த நமது வரை



யறையின்படி முழுநேரப் பணியாளர்கள் அல்லர். பவுல்கூட ஒரு முழுநேரப்பணியாளன் அல்ல. நீங்கள் செய்யும் பணியோ, பணிக்களமோ, யாருக்குச் செய்கிறீர்கள் என்பதோ காரியமல்ல. ஆனால் நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் ஜீவனுள்ள தேவனுக்குச் சேவை செய்கிறீர்கள்; அவரை மகிமைப்படுத்துவதே உங்களது அதிவுன்னத அழைப்பு. உங்களது முழுநேரப் பணி அழைப்பு அல்லது எல்லா நேரப் பணி அழைப்பு தேவனை மகிமைப்படுத்துவதற்கு மட்டுமே. எனவே வெளியிடங்களில் பணியாற்றும் குதிரைகளின் மணிகள் என்றாலும், சமையலறையிலுள்ள பாத்திரமானாலும் எல்லா இடங்களிலும் 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்று எழுதப்படவேண்டும்.

நான் முழுநேரப்பணி என்றழைக்கப்படும் இவ்வூழியத்திற்கு வருமுன் சில ஆண்டுகள் பொறியியலராகப் பணியாற்றினேன் என்று குறிப்பிட்டேன்; இப்போது (1993) ஏறத்தாழ இருபது ஆண்டுகள் முழுநேரப் பணியில் செலவழித்துள்ளேன். எனவே திருமறையிலிருந்தும், தேவ மனிதர்களிடமிருந்தும், எனது சொந்த அனுபவங்களிலிருந்தும் நான் கற்றுக்கொண்ட சில நடைமுறைப் பாடங்கள் என்னிடத்தில் உண்டு என்று நம்புகிறேன்; அவைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வது உங்களுக்குப் பயனுள்ளதாயிருக்கும். ''உங்கள் வேலையில் பரிசுத்தமாயிருப்பது எப்படி?'' என்பதைக் குறித்துப் பத்து அறிவுரைகளைத் தர விரும்புகின்றேன். இவை பத்துக் கட்டளைகள் அல்ல; பத்து அறிவுரைகள். ஆனால் இவை மிக முக்கியமானவை. ஏனெனில் இவை வேத வசனத்தை அடிப்படையாகக் கொண்டவை; மேலும் அனுபவப் பட்டறையில் உண்மை என்று நிரூபிக்கப்பட்டவை.

## 1. சுறுசுறுப்பாக இருங்கள்! (Be brisk!)

சுறுசுறுப்பாக இருங்கள்; ஏனெனில் சோம்பேறித்தனம் என்பது துன்மார்க்கம். மத்தேயு 25:14-30இல் தாலந்துகளைக் குறித்த உவமையை வாசிக்கிறோம். தூர நாட்டுக்குப் பயணமாய்ப் புறப்பட்ட ஒரு மனிதன் தன் வேலைக்காரரில் ஒருவனிடம் ஐந்து தாலந்தும், மற்றொருவனிடம் இரண்டு தாலந்தும், இன்னொருவனிடம் ஒரு தாலந்தும் அவனவனுடைய திறமைக்கு ஏற்றபடி கொடுத்தான். ஐந்து தாலந்தைப்

பெற்றவன் வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான்; இரண்டு தாலந்தைப் பெற்றவன் இன்னும் இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்; ஆனால் ஒரு தாலந்தைப் பெற்றவன் அதைத் துணியில் சுற்றிப் புதைத்துவைத் திருந்த இடத்திலிருந்து எடுத்துக்கொண்டுவந்தான். ஒரு தாலந்தைப் பெற்றவனை அந்த எஜமான் எப்படி அழைத்தான்? 26ஆம் வசனத்தை வாசியுங்கள்: ''அவனுடைய எஜமான் மறுமொழியாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, ...'' ஒரு கிறிஸ்தவனுக்குச் சோம்பல் என்பது பொல்லாப்பு. சோம்பேறித்தனம் கண்டும்காணாமலும் விட்டு விடவேண்டியதன்று; கடுஞ்சொற்களால் கண்டிக்கப்படவேண்டியது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவன் ஒருவன் பரலோகம் சென்றானாம். தேவன் அவனிடம், ''நீ எதற்காக இங்கு வந்தாய்?'' என்று கேட்டார். அவன் ''நான் சந்திரனையும் கடந்து போக விரும்புகிறேன்'' என்பதைப் போன்று சில பதில்களைச் சொன்னான். பின்னர் ஓர் ஆங்கிலேயன், ஒரு ரஷ்யன், ஓர் எகிப்தியன் மற்றும் சில நாட்டு மனிதர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்தனர். ஒவ்வொரு நாட்டு மனிதனும் சென்றபோது தேவன் அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்; ஒவ்வொருவரும் சில காரணங்களைச் சொன்னார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்தியன் ஒருவன் பரலோகம் சென்றபோது, அவனிடம், ''எதற்காக வந்திருக் கிறாய்'' என்று தேவன் கேட்டார். அவன் ''சும்மா வந்தேன்'' என்றானாம். சகோதரரே, சகோதரிகளே, ''சும்மா'' என்ற பதம் உங்கள் சொல்லகராதி யிலிருந்து நீக்கப்படவேண்டும். கிறிஸ்தவன் ஒருபோதும் சும்மாயிருக்க முடியாது; சும்மா எதையும் செய்யவும் முடியாது. ஒரு கிறிஸ்தவன் எதை யேனும் செய்து நேரத்தை வீணடிக்க முடியாது; அவன் எதையேனும் பேசி நேரத்தைப் போக்கடிக்க முடியாது. அது கூடாத காரியம்.

சுறுசுறுப்பாக இருங்கள். எந்தப் பயனுமின்றி நேரத்தைச் செலவ ழிப்பது பொல்லாங்கானது. ஏன் தெரியுமா? கர்த்தர் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கிறார்; தேவன் எப்பொழுதும் வேலை செய்து கொண்டே இருக்கிறார். உலகில் எல்லாரையும்விட மிக அதிகமாக வேலை செய்பவர் தேவன்தான். ஒரு நாள் இயேசு கிறிஸ்து மக்களுக்கு ஊழியம் செய்துகொண்டிருந்தார்; அப்போது நோயுற்றிருந்த ஒரு மனி தனைக் குணப்படுத்தினார். அந்த நாள் யூதருடைய ஓய்வு நாளாக இருந்தது. உடனே யூதர்கள் கடுஞ்சினம் கொண்டு, இயேசுவிடம்,



''ஓய்வு நாளில் ஏன் அவனைச் சுகமாக்கினீர்?'' என்று கேட்டனர். இயேசு அவர்களுக்குக் கொடுத்த பதிலை யோவான் 5:17இல் காண்கிறோம்: ''என் பிதா இதுவரைக்கும் செயல்பட்டு வருகிறார், நானும் செயல்பட்டு வருகிறேன் என்றார்.'' அவர்கள் ஓய்வைக் குறித்துப் பேசினார்கள்; இயேசுவோ வேலையைக் குறித்துப் பேசினார். வேறுவிதமாகச் சொன் னால் ஓய்வு நாளிலும் தேவன் செயல்பட்டுக்கொண்டேயிருந்தார். தேவன் ஏழாம் நாளில் முடித்தது அவரது ''படைப்பின்'' வேலை; அவரோ சோம்பேறியாகிவிடவில்லை (ஆதி 2:1-3). ''தேவன் உறங்கு வதுமில்லை, தூங்குகிறதுமில்லை'' (சங் 121:4). தேவன் எப்பொழுதும் செயலாற்றிக்கொண்டிருக்கிறார். தந்தை தமது பணியை நிறுத்தியதும், தனயன் உடனடியாகக் குறுந்தடியை (baton) எடுத்துக்கொண்டு, தொடர் ஓட்டப் பந்தயத்தில் ஓடுவதுபோல் தமது பங்கை நிறைவேற்ற ஓடுகிறார். இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் தமது ஊழியத்தை நிறை வேற்றி முடித்தவுடன், பரிசுத்த ஆவியானவர் குறுந்தடியை எடுத்துக் கொண்டு இந்தத் தொடர் ஓட்டத்தில் தமது பகுதி வேலையை நிறை வேற்ற மேலும் தொடர்ந்து ஓடுகிறார். தேவன் எப்பொழுதும் செயல் பட்டுக்கொண்டிருக்கிறார். இதனை உங்கள் வாழ்க்கையின் ஒரு சட்ட மாக்கிக்கொள்ளுங்கள்.

நீங்கள் ஒருபோதும் சோம்பேறியாக இருக்கக்கூடாது. உங்கள் விடு முறை நாட்களில்கூட ஓய்வு எடுக்கலாமே தவிர சோம்பேறித்தனத்திற்கு இடம் தரக்கூடாது; ஏனெனில் ''மாற்று வேலை செய்வதே ஓய்வு'' என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். அது மனோதத்துவ ஆலோசனையும் ஆகும்; நான் அதை நம்புகிறேன். நீங்கள் மாற்று வேலையில் ஈடுபடும் போது அது போதுமான அளவுக்கு ஓய்வைத் தந்து, மன இறுக்கத்தைத் தளர்த்துகிறது. யோவான் 9:4இல் இயேசு சொல்கிறார்: ''நான் ... செயல் படவேண்டும்; ஒருவனும் செயல்பட முடியாத இரவு வருகிறது.'' இயேசு இந்தக் கூற்றினைப் பகலின் அதிவெப்ப நேரத்தில், பசியோடும் தாகத் தோடுமிருந்த வேளையில் சொன்னார். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் இதனை உங்கள் வாழ்வின் இலட்சிய வாசகமாய்க்கொள்ளுங்கள்: **''நான் வேலை செய்யவேண்டும்.''**

பொதுவுடைமைக் கொள்கைக்காரர் ஒருவர் கிறிஸ்தவர்களைப் பார்த்துப் பின்வருமாறு சவால் விட்டார்: ''கிறிஸ்தவர்களாகிய நீங்கள்

ஒருபோதும் வெல்லமாட்டீர்கள்: பொதுவுடைமைவாதிகளாகிய நாங்கள் தான் வெல்லுவோம். ஏனெனில் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் சோம்பேறி கள். நான் எனது கட்சிக்காக எட்டு மணி நேரம் உழைக்கிறேன்; என் கட்சிக்காக எட்டு மணி நேரம் பொருளீட்டுகிறேன்; மீதியுள்ள எட்டு மணி நேரமும் என் கட்சியைக் குறித்துச் சொப்பனம் காண்கிறேன்.'' அருமைச் சகோதரரே, சகோதரிகளே, இத்தகைய சவால் நிறைந்த கூற்றுகள் நம்மை விழிப்படையச் செய்யவேண்டும்; செயல் வீரர்களாக மாற நம்மை ஊக்குவிக்கவேண்டும். இவை உங்கள் சிந்தனைகளைப் புரட்சிகரமாக மாற்றக்கூடிய இலட்சிய வாக்கியங்கள். மூன்றரை ஆண்டு களில் இயேசு செய்து முடித்தவற்றை, இரண்டு ஆண்டுகளில் அப் போஸ்தலர்கள் சாதித்தவற்றை, இரண்டு நூற்றாண்டுகளில் நம்மால் செய்ய முடியவில்லையே!

முப்பது வயதான பின்புதான் இயேசு பணியாற்றத் தொடங்கினார் என்று நாம் சில சமயங்களில் நினைக்கிறோம். அது தவறு. அவரது வெளியுலக ஊழியம் முப்பது வயதில் ஆரம்பித்தது; ஆனால் அவர் தேவனை அறிகிற அறிவைப் பெற்றதும், பிதாவாகிய தேவனுக்கு ஒப்பாக வளர ஆரம்பித்ததும் அதற்கு முன்னரே துவங்கிவிட்டன. இயேசு பதினெட்டு ஆண்டுகள் தச்சு வேலை (Wood Worker) செய்தார். மூன் றரை ஆண்டுகள் மட்டுமே அற்புத ஊழியம் (Wonder Worker) செய் தார். 'ஆசீர்வாத இளைஞர் இயக்கம்' எனும் எங்கள் நிறுவனத்தில் 175க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் இப்பொழுது (1993) உள் ளனர்; இந்தப் பணியாளர் ஒவ்வொருவரின் செயல்பாட்டை நான் கூர்ந்து கவனித்து வருகிறேன். பள்ளிகள் அல்லது கல்லூரிகளிலிருந்து நேரடியாக ஊழியத்துக்கு வந்தவர்களை ஒரு பிரிவாக வைக்கிறேன்; சில ஆண்டுகள் ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணியாற்றியபின் வந்தவர் களை அடுத்த பக்கத்தில் வைக்கிறேன். எப்பொழுதுமே இரண்டாவது பிரிவினர் முதல் பிரிவினரைவிடச் சிறந்தவர்களாக இருப்பதைக் கண் டிருக்கிறேன். காரணம் என்ன? அவர்கள் சில ஆண்டுகள் சில ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்திருந்தனர்; கண்டிப்பான தலைமைத்து வத்தின்கீழ் தங்களைப் பயிற்றுவித்திருந்தனர். பணி என்றால் என்ன, கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பவற்றை அவர்கள் புரிந்திருந்தனர்.



ஆனால் வேலை அனுபவம் பெறாமல் வந்திருப்போரின் மனதில் அக் கருத்தைப் பதிய வைப்பது எங்களுக்குக் கடினமாயிருக்கும். இங்கு நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பும் கருத்து என்னவென்றால், ஒரு கிறிஸ் தவன் சுறுசுறுப்பாயிருப்பதில் பேர்பெற்றிருக்கவேண்டும்; அவனது வாழ்வில் சோம்பேறித்தனத்திற்கு இடமே இருக்கக்கூடாது.

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய சபையினருக்குக் கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து அதிகமாகப் பேசினார். அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதல் நிருபத்தில் உள்ள ஐந்து அத்தியாயங்களும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த ஏதேனும் ஒரு கருத்துடன் முடிவடைகின்றன. எனவே தெசலோனிக் கேயர் வேலை செய்வதை அலட்சியப்படுத்தினர்; மேலே பறந்து செல் லப்போவதிலேயே நோக்கமாயிருந்தனர். அவர்களது கருத்துக்களைச் சரிப்படுத்துவதற்காகத்தான் பவுல் அவர்களுக்கு இரண்டாம் நிருபத்தை எழுத நேர்ந்தது. 2 தெசலோனிக்கேயர் 3:7,8இல் பவுல் சொல்லுகிறார்: ''இன்னவிதமாய் எங்களைப் பின்பற்றவேண்டுமென்று நீங்கள் அறிந் திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவ னுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பெருமுயற்சியோடு பாடு பட்டு வேலை செய்து சாப்பிட்டோம்.'' நாம் பகல் நேரத்தில்கூடப் போது மான அளவு வேலை செய்வதில்லை; ஆனால் இந்த தேவ மனிதரோ பகல் நேரத்தில் மட்டுமல்ல, இரவு வேளைகளிலும் உழைத்தார். பகல் நேரத்தில் அவர் பிரசங்கிக்கவேண்டியிருந்தது; மற்றும் இரவு உண விற்குப் பின்னரும் வேலை செய்யவேண்டியிருந்தது. ஒருவேளை அடுத்த நாள் பிரசங்கம் பிற்பகலில் மட்டுமே இருந்ததெனில், முற்பகல் வேளையில் அவர் போய்க் கூடாரம் செய்யும் தொழிலில் ஈடுபடுவார். எனவேதான் அவர் 'பகலும் இரவும்' என்று சொல்லாமல் 'இரவும் பக லும்' என்று சொல்லுகிறார். வெறுமனே 'வேலை செய்தல்' (working) அல்ல; 'பாடுபட்டு உழைத்தல்' (toiling).

2 தெசலோனிக்கேயர் 3:10,11இல் அந்தச் சபையில் காணப்பட்ட துயரமான செய்தி ஒன்றைப் பவுல் சொல்லுகிறார்: ''ஒருவன் வேலை

செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற் காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.'' அவர்கள் செய்த தொழிலை விட்டுவிட்டார்கள்; அவர்கள் பிறரையும், தங்களையும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பதாக எண்ணினர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த ஆயத்தம் என்னவெனில், நாம் இப்பொழுது செய்துகொண்டிருக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவதேயாகும். ஒரு நாள் ஜான் வெஸ்லி தனது தோட்டத்தைச் சுத்தம் செய்துகொண்டி ருந்தாராம். அப்போது ஒருவர் அவரிடம், ''அடுத்த நிமிடம் கிறிஸ்து வருகிறார் என்று நான் உங்களிடம் சொன்னால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு ஜான் வெஸ்லி, ''நான் தொடர்ந்து தோட்டத்தைச் சுத்தம் செய்துமுடிப்பேன்'' என்று அமைதியாகப் பதில் தந்தார். இரண்டு பேர் பிரசங்கபீடத்தில் இருப்பார்கள்; அவர்களில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று வேதாகமம் சொல்லவில்லை. ஆனால் இரண்டு பேர் வயலில் இருப்பார்கள் என்று வேதம் சொல்லுகிறது (லூக் 17:36). இரண்டு சகோதரிகள் ஜெபக் கூட்டத்தில் இருப்பார்கள்; அவர்களில் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படுவார், மற்றவர் கைவிடப்படுவார் என்று வேதம் சொல்லவில்லை. மாறாக, சமையலறையில் அரைத்துக்கொண்டிருக்கும் இரு பெண்களில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள் (வச 35). எனவே நீங்கள் வயலிலிருந்தால், தொடர்ந்து வயலில் உழுதுகொண்டி ருங்கள், கர்த்தர் உங்களை எடுத்துக்கொள்வார். ஒருவேளை நீங்கள் மசாலா அரைத்துக்கொண்டிருந்தாலும், கர்த்தர் உங்களை மேலே எடுத் துக்கொள்வார். பவுல் 2 தெசலோனிக்கேயர் 3ஆம் அத்தியாயம் 12ஆம் வசனத்தில் தொடர்ந்து எழுதுகிறார்: ''இப்படிப்பட்டவர்கள் அமைத லோடே வேலை செய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண் டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர் களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம்.'' அலட்டல் ஏது மின்றி அமைதலோடு வேலை செய்து, உழைப்பால் கிடைத்த உணவை உண்ணவேண்டும். எனவே, பணியில் பரிசுத்தமாயிருப்பதற்கான முதல் வழி சுறுசுறுப்பாயிருப்பதே.



## ௨. உண்மையாயிருங்கள்! (Be honest!)

நாம் தொழிலில், வியாபாரத்தில், மற்றும் கொடுக்கல் வாங்கல் காரியங்களில் உண்மையும் உத்தமமுமாய் இருக்கவேண்டும் என்று வேதம் குறிப்பாகப் பழைய ஏற்பாட்டிலுள்ள மோசேயின் ஆகமங்களில் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, ''நியாய விசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக. முத்திரை பதிக்கப்பட்ட மரக்காலும், முத்திரை பதிக்கப்பட்ட படியும் உங்களுக்கு இருக்கவேண்டும்; நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண் ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்'' (லேவி 19:35,36). என் தகப்பனார் சொன்ன ஒரு காரியத்தை மிகவும் வெட்கத்துடன் உங்களிடம் சொல்லு கிறேன். அவர் இலங்கையில் சில ஆண்டுகள் இருந்தார். அந்தக் காலக் கட்டத்தில் தென்னிந்திய மக்கள், குறிப்பாக தமிழக மக்கள், திரளானோர் அங்கிருந்தனர். அவர்கள் அரிசியை அளக்கும்போது கொள்ளளவிலும், துணியை அளக்கும்போது நீட்டல் அளவிலும் சிங்கள மக்களை எப் படியெல்லாம் ஏமாற்றினர் என்று என் தந்தை என்னிடம் சொல்வது வழக்கம். படியை நேராக வைப்பதற்குப் பதிலாகத் தலைகீழாக வைத்து அளந்து ஏமாற்றுவார்களாம்; துணியை அளக்கும்போது அளவுகோலை மிகத் துரிதமாகச் சுழற்றுவார்களாம். அவர்கள் குறுக்குவழியில் சம்பா தித்து, மிகத் துரிதமாக பணக்காரராக விரும்பினர். என்னுடைய பிராந் தியத்தினர்மேல் அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொண்டு நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். இலங்கையிலிருந்து ஏராளமான பணத்துடன் திரும்பியவர்களில் பலர் நாளாவட்டத்தில் எல்லாவற்றையும் இழந்து நொடித்துப்போனார்கள். உங்கள் வியாபாரத்தில் உண்மையற்றிருப்பீர் களானால், என்றாவது ஒரு நாள் அதற்குரிய கிரயம் செலுத்தித்தான் ஆகவேண்டும். ''அரசு முத்திரை பதிக்கப்பட்ட அளக்கும் கருவிகளை வைத்திருங்கள்; ஏனெனில் நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணின கர்த்தர்'' என்று தேவன் சொல்வதை நினைவில்கொள் ளுங்கள். மேலும், ''கள்ளத் தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; முத்திரை யிட்ட படிக்கல்லோ அவருக்குப் பிரியம்'' (நீதி 11:1). உங்கள் பணி சம்பந்தப்பட்ட காரியங்களில் இந்த வசனத்தை மறந்துவிடாதீர்கள்.

யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்குநர் யோவான் நின்று உரத்த சத்தமாக முழங்கியது: ''மனந்திரும்புங்கள், விண்ணரசு அருகில் வந்து விட்டது'' (மத் 3:1,2). யூதேயா நாடெங்கிலுமிருந்து மக்கள், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவரால் திருமுழுக்கு பெற, அவரிடம் வந்தார்கள். யோவான் அவர்களை மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்படிக் கூவியழைத்தார் (லூக் 3:8). மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் என்பதன் பொருளை அவர்களால் புரிந்துகொள்ள முடிய வில்லை. எனவே மக்கள் அவரிடம், ''அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று வினவினர் (வச 10). வரி வசூலிப்பவரும் அவரிடம் ''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டனர். காவ லரும் அவரிடம் ''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று வினவினர். யோவான் கொடுத்த பதில் என்ன? ''உங்களுக்கு உரியதைவிட அதிக மாக எதையும் வாங்காதீர்கள். மக்களிடமிருந்து கையூட்டாக எதையும் வாங்காதீர்கள். மக்களிடமிருந்து லஞ்சமாக எதையும் வாங்காதீர்கள்.'' அதுவே மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள்; அதுவே பணியில் கர்த்த ருக்கேற்ற பரிசுத்தமாயிருப்பது.

இவ்வித மனந்திரும்புதல் நமது பிரசங்கபீடச் செய்திகள் வாயிலாக மீண்டும் வரவேண்டும்! நீங்கள் ஒவ்வொருவரும் தனியாள் ஆத்தும ஆதாயகர்; நீங்கள் மக்களிடம் நேரடித் தொடர்புடையவர்கள். மலிவான விசுவாசக் கருத்துகளைப் பரப்பாதீர்கள். விலைமதிக்கமுடியா பொக்கி ஷத்தை மலிவாக வினியோகம் செய்யாதீர்கள். சுவிசேஷம் இலவச மானதுதான், ஆனால் மலிவானது அல்ல. என்ன செய்யவேண்டுமென்று கேட்பவனிடம் அவன் எதுவும் செய்யவேண்டியது இல்லை என்று சொல்லாதீர்கள். அல்ல, அவன் மனந்திரும்பவேண்டும், லஞ்சம் வாங்கு வதை நிறுத்தவேண்டும், அவனோடு வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் ணைத் திருப்பி அனுப்பவேண்டும், அவள் இன்னொருவனின் மனைவி. மனந்திரும்புதலுக்கேற்ற செயல்கள் இல்லாதவர்களால் நாம் திருச்சபை இருக்கைகளை நிரப்புவோமானால், நமது திருச்சபை பேரழிவை நோக்கி விரைந்தோடும். உங்கள் தொழிலில் உண்மையாயிருங்கள்; நீங்கள் சாட்சி சொல்லும்போது மக்களுக்கு உண்மையையும் உத்தமத்தையும் போதியுங்கள்.



## 3. நேர்மையாயிருங்கள்! (Be sincere!)

நமது வேலையில் நாம் எப்படி நேர்மையாயிருக்கவேண்டும் என் பதை எபேசியர் 6:5-9 வசனங்கள் போதிக்கின்றன: ''வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, இவ்வுலகில் உங்கள் தலை வர்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து, மனிதருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர் களாகப் பார்வைக்கு வேலை செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்'' (வச 5,6). கொத்தடிமைகளுக்குப் பவுல் இந்த அறிவுரையை வழங்கினார். அப் போஸ்தலர் காலத்தில் கொத்தடிமை முறை வழக்கத்திலிருந்தது. பவுல் அந்த அமைப்புக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்யும்படி வேலைக் காரரையும் அடிமைகளையும் தூண்டிவிடவில்லை. அது அவரது ஊழியம் அல்ல. மாறாக, அவர் சொன்னது: நீ உரிமைக் குடிமகனாய் அழைக்கப் பட்டிருந்தால் அவ்விதமே இரு; நீ அடிமையாக அழைக்கப்பட்டிருந்தால் அடிமையாக இரு. நீ ஓர் அடிமையோ அல்லது ஓர் உரிமைக் குடிமகனோ, நீ ஒரு வேலைக்காரனோ அல்லது ஒரு தலைவனோ, யாராயிருந்தாலும் நீ ''கிறிஸ்துவின் ஊழியக்காரன்'' என்பதை நினைவிற்கொள். 5ஆம் வசனத்தில் ''வேலைக்காரரே'' என்று ஆரம்பித்த பவுல் 6ஆம் வசனத்தில் ''கிறிஸ்துவின் ஊழியக்காரர்'' என்று முடிக்கிறார். எனவே தான் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு ''எல்லா நேர'' ஊழியக்காரர் என்று நான் சொன்னேன். ஆகையால் ''மனிதருக்கென்று வேலை செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே பணியாற்றுங்கள்'' (வச 8). ஒரு வேலைக்காரி மனந்திரும்பினாள். அவளது சாட்சி: ''நான் மனந் திரும்புவதற்குமுன் வீட்டின் தரையைப் பெருக்கும்போது தூசியைத் தரை விரிப்புக்கடியில் தள்ளிவிடுவேன். மனந்திரும்பியபின், தூசியைக் குப்பைத் தொட்டியில் போடுகிறேன்!'' அதுவே அடுத்த ஞாயிற்றுக் கிழமை போதகரின் பிரசங்கத்துக்கு அடிப்படைக் கருத்தாக அமைந்தது. அதுவே மனந்திரும்புதலின் கனி!

வேலையில் நேர்மையாயிருத்தல் என்பதன் இன்னொரு பொருள் காலம் தவறாமை (punctuality) ஆகும். நேர்மையாயிருத்தல் என்பது குறித்த நேரத்தில் அந்தந்த வேலையைத் தவறாமல் செய்தல் என்ப

தாகும். பல கிறிஸ்தவர்களுக்குக் காலம் தவறாமை என்ற கொள்கையே கிடையாது. அதிலும் பெரும்பாலான பெந்தெகொஸ்தேயினருக்குக் காலம் தவறாமை என்றால் என்னவென்றே தெரியாது. ஆராதனை தொடங்குமுன் பத்துப் பாடல்களைப் பாடுவார்கள்; அதன்பின் பாடல் குழுத் தலைவர் போதகரை நோக்கிப் பார்ப்பார். போதகர் சுற்றிலும் திரும்பிப் பார்த்துவிட்டு மேலும் இரண்டு பாடல்களைப் பாடச் சொல்லு வார். ஏன்? மக்கள் இன்னும் வந்துகொண்டேயிருப்பார்கள். சகோதர சகோதரிகளே, தேவனுடைய சபையில் எப்படி நடக்கவேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். எதுவானாலும் காலந்தவறாமல் குறித்த நேரத்தில் செய்யவேண்டும். அதுவே வேலையில் பரிசுத்த அலங்காரம்!

பிரசங்கி 9ஆம் அத்தியாயம் 10ஆம் வசனத்தை வாசியுங்கள்: ''செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பலத் தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே வேலை ... இல்லையே.'' மிக சுவாரஸ்யமான வசனம் இது! இதன் ஆக்கியோன் ஓர் ஆச்சரியமான ஆய்வு முடிவினை எழுதுகிறார். கல்லறைக்குள் இருப்பவர் எவரேனும் வேலை செய்கிறார்களா? அவர்கள் எல்லாரும் நேராக, ஒருவருக்கொரு வர் இணைக்கோட்டு நிலையில் படுத்து உறங்குகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை கூட அவர்கள் இந்தப் பக்கம் அல்லது அந்தப் பக்கம் திரும்பிப் படுப்பதில்லை! அருமையான வாலிபனே, செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் முழுப் பலத்தோடே செய். ஏன்? உன்னால் வேலை செய்ய முடியாத ஒரு காலம் வரும். உன்னை ஒரு பெட்டிக்குள் வைத்து மூடி, ஆணி அடித்துப் புதைத்துவிடுவார்கள்; நீ உயிரோடு எழுந்துவிடாதபடி அதன்மேல் ஒரு பெரிய கல்லைப்போட்டு, சிமெண்ட்டினால் பூசி, அதன்மேல் ஒரு சிலுவையை நாட்டி, 'RIP' (Rest In Peace) 'சமாதானத்துடன் இளைப்பாறு' என்று எழுதிவிடுவார்கள். ஆனால் துர்ப்பாக்கியமாக உங்களில் பலருடைய நெற்றிகளில் ஏற் கனவே 'RIP' எழுதப்பட்டுள்ளது. கல்லறைக்குச் சென்றவர்கள் சமா தானத்துடன் இளைப்பாறிக்கொண்டிருக்கின்றனர் (Resting in Peace). கல்லறைக்குச் செல்லாத மக்களாகிய நாம் வேலை ஒன்றும் செய்யாமல் அமைதியாகத் துருப்பிடித்துக்கொண்டிருக்கிறோம் (Rusting in Peace). நான் எதையும் மிகைப்படுத்திக் கூறவில்லை. வேலை செய்யுங்கள், ஏனெனில் நீங்கள் இறந்தபின் வேலை இல்லை. அதன் பொருள் என்ன வென்றால், நாம் கடைசி மூச்சு இருக்கும் வரை வேலை செய்யவேண் டும் என்பதே.



## 4. நேர்த்தியாகச் செய்யுங்கள்! (Be excellent!)

''தன் வேலையில் கவனமாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் பாமர மனிதருக்கு முன்பாக நில்லாமல், அரசர்களுக்கு முன்பாக நிற் பான்'' (நீதி 22:29). இந்த வசனம் முதன்முதலாக 1962ஆம் ஆண்டு என் தலைமையாசிரியரால் எனக்குப் போதிக்கப்பட்டது. எங்கள் வகுப் பில் இந்த ஒரே ஒரு வசனத்தை மட்டும்தான் அவர் போதித்தார். அது என் வாழ்வில் ஆழமாக வேரூன்றியதால் தேவனுக்கு நன்றி செலுத்து கிறேன். நான் எல்லாவற்றையும் மிக நேர்த்தியாகச் செய்கிறேன் என்று சொல்ல இயலாது; எனினும் நான் எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்ய முயலுகிறேன். இதற்குமேல் சிறப்பாக அமைக்க இயலாது என்ற நிலை வரும்வரை நான் எதிலும் திருப்தியடையமாட்டேன். எல்லா வற்றையும் செய்து முடித்தபின்பும், எல்லாம் சரியாக இருக்கிறதா என்று திரும்பவும் பார்ப்பது என் வழக்கம். நாம் ஒவ்வொருவரும் அப்படிச் செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்; ஏனெனில் அதுவே அவரது குணநலன். தேவன் ஒவ்வொன்றையும் படைத்துவிட்டு, அப் படியே விட்டுவிட்டுச் செல்லவில்லை; ஆனால் அவர் அதை மீண்டும் ஒருமுறை பார்த்து, அது நல்லது என்று கண்டு திருப்தியடைந்தார் (ஆதி 1:4,10,12,18,21,25,31). இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும் அதே நேர்த்தியின் முத்திரை காணப்பட்டது. இயேசு கிறிஸ்து எந்தவொரு செயலையும் செய்தபோது — பிரசங்கம்பண்ணினதுபோது, ஓர் அற் புதத்தை நிகழ்த்தியபோது, ஒரு நிகழ்ச்சியைத் திட்டமிட்டு நடத்திய போது — மக்கள் தங்கள் வாயில் விரல் வைத்து, ''அவர் எல்லாவற் றையும் நன்றாய்ச் செய்தார்'' என்று சொல்லி வியந்தனர் (மாற் 7:37). அதே சாட்சி உங்களைக் குறித்தும் என்னைக் குறித்தும் சொல்லப்பட வேண்டும். ஏனெனில் தன் வேலையை நேர்த்தியாகச் செய்கிறவன் மதியற்றோருக்கு முன்பாக நிற்காமல், மதிப்புள்ளோருக்குமுன் நிற்பான்.

யாத்திராகமம் 31ஆம் அத்தியாயத்தில், தன் வேலையை மிக நேர்த்தி யாகச் செய்வதற்கு ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்த பொற்கொல்லன் ஒருவனைக் காண்கிறோம். இதை விளக்கும் வேதப் பகுதியிலுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''கர்த்தர் மோசேயிடம்:

நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பெயர் சொல்லி அழைத்து, வினோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிற தற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் உண்டாக, அவனைத் தேவ ஆவியினால் நிரப்பினேன்'' (வச 1-5).

தானியேலின் புத்தகத்தில் இதைப்போன்ற ஒரு நபரைக் குறித்து வாசிக்கிறோம்; அந்த நபர் பக்தன் தானியேல். அரசில் உயர் அதிகாரியாகத் தானியேல் பணியாற்றினார். ''தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான்; தானியேலுக்குள் **வியத்தகு ஆவி** இருந்தது'' (தானி 6:3). ஒரு மனிதன் சகல வேலைகளையும் நேர்த்தியாகச் செய்வதற்கு அவனுக்குள்ளிருந்து அவனை ஊக்குவிக்கும் ஆவியே 'விசேஷித்த ஆவி' ஆகும். தேவன் மனிதரனை வருக்கும் புத்திக்கூர்மையையும் ஞானத்தையும் சம அளவில் கொடுத்திருக்கிறார் என்று நான் நினைக்கவில்லை. அவர் சிலருக்கு ஐந்து தாலந்து, இன்னும் சிலருக்கு இரண்டு, மற்றும் சிலருக்கு ஒன்று என்று கொடுக்கிறார். ஆனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளைக் கொண்டு எல்லாவற்றையும் சிறப்பாய் நீங்கள் செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். ஐந்து தாலந்தைப் பெற்றவன் ஐந்தைச் சம்பாதித்தான். இரண்டு தாலந்தைப் பெற்றவனிடம் தேவன், ''முந்தியவன் ஐந்து தாலந்துகளைச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறான். நீ ஏன் இரண்டு தாலந்துகளை மட்டும் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று கேட்கவில்லை. ஐந்து தாலந்துகளைப் பெற்றவன் இன்னும் ஐந்தையும், இரண்டு தாலந்துகளைப் பெற்றவன் இன்னும் இரண்டையும், ஒரு தாலந்தைப் பெற்றவன் மேற்கொண்டு ஒன்றை மட்டும் கொண்டு வந்தால் போதுமானது. நம் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒவ்வொரு குறிப்பிட்ட அளவு ஞானத்தையும் அறிவையும் கொடுத்திருக்கிறார். அவற்றை நம்மால் முடிந்த அளவு பயன்படுத்தி, முடிந்த அளவு நேர்த்தியாய்க் காரியங்களைச் செய்யவேண்டும்.



நீங்கள் ஒரு வேலையைச் செய்துகொண்டிருப்பதாகக் கொள்வோம். அந்த வேலையைச் செய்ய உங்களுக்குப் போதுமான ஞானம் இல்லையெனில் என்ன செய்யவேண்டும்? ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கட்டும், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கட்டும்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்குச் சமமாயிருக்கிறான்'' (யாக் 1:5,6). இவ்வசனத்தை நாம் பல்வேறு காரியங்களுக்கு மேற்கோள் காட்டுகிறோம். நாம் நோயுற்றிருக்கும்போது அல்லது இக்கட்டான நிலையில் இருக்கும்போது, நாம் இருமனமுள்ளவர்களாயிராமல் விசுவாசத்துடன் தேவனிடம் விடுதலைக்காய் மன்றாடவேண்டும் என்கிறோம். ஆனால் ஞானமாக ஒரு வேலையைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வரும்போது, தேவனிடம் ஞானத்தைத் தாரும் என்று பொதுவாக நாம் கேட்பதில்லை. 'இவ்வளவுதான் என்னால் செய்ய முடியும்; இதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாது' என்று எளிதாகச் சொல்லிவிடுகிறோம். திருமறைப் போதனை அதுவல்லவே.

வேலையில் அசட்டையாயிருத்தல் என்பது இந்திய மக்களிடையே சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது. இந்தியாவைக் குறித்து நான் வெட்கத்துடன் அறிக்கையிடவேண்டிய ஒரு சம்பவம் உண்டு. இந்தியத் தொலைக்காட்சியில் எல்லாவித மதச்சார்பான நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகின்றன. தேசியத் தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலம் *'மகாபாரதம்'* ஒளிபரப்பப்பட்டது. தொழில்நுட்ப ரீதியில் அது முதல்தரமான படமாக இருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் திருச்சபை ஆராதனை நடைபெறும் அதே நேரத்தில் *'இராமாயணம்'* ஒளிபரப்பப்பட்டது. கிறிஸ்தவர்கள் 'இராமாயணத்தைப்' பார்ப்பதற்காக தங்கள் இல்லங்களில் தங்கிவிட்டபடியால், பல ஆராதனைகளில் அங்கத்தினர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. ஏன்? ஒளிப்பதிவு அந்த அளவுக்கு நேர்த்தியாய் இருந்தது. மாணவர்கள் அதைத் தமிழ் வகுப்பில் படிக்கவேண்டியிருந்ததால் அதைப் பெரிதும் விரும்பினர். இதே வண்ணம் இஸ்லாமிய மதச் சார்பான ஒளிபரப்புகளும் நேர்த்தியாக அமைந்திருந்தன. பின்னர் தடைகள் நடுவில் *'பைபிள்'* ஒளிபரப்பப்

பட்டது. தொடர்ந்து ஐந்து வாரங்கள் அது ஒளிபரப்பானது. ஆறாம் மற்றும் ஏழாம் வாரங்களில் அந்நிகழ்ச்சி வரவில்லை; ஏனெனில் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் ஒளிப்பதிவுச்சுருளை வழங்குவதில் தாமத மானார்களாம். எட்டாம் வாரம் மீண்டும் அந்த ஒளிபரப்பு தொடங்கி நான்கு வாரங்கள் ஓடினது. மறுபடியும் அந்தக் கிறிஸ்தவத் தயாரிப்பா ளர் பதிவுச்சுருள் பெட்டகங்களைக் குறிப்பிட்ட நேரத்தில் ஒப்படைக்க வில்லை. இவ்வாறு பல தடவை நிகழ்ச்சி ஒளிபரப்பாளர் நிர்ப்பந்தமான சிக்கலுக்குள் தள்ளப்பட்டார். இறுதியாக அந்த ஒளிபரப்பு நிரந்தரமாக நிறுத்தப்பட்டது. அந்தச் செய்தி தேசிய செய்தித்தாளில் வெளியானது. கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்துக் கிறிஸ்தவரல்லாதோர் என்ன நினைப்பார்கள்? இந்தியப் பிரசங்கியாராகிய நான் எவ்வளவாய்த் துடித் தேன், எவ்வளவு அவமானமடைந்தேன் என்பதை உங்களால் உணர்ந்து கொள்ள முடியாது. ஒருவேளை நிகழ்ச்சியின் தரம் சிறந்ததாக இல்லா விடினும், அவர்கள் ஏன் பதிவுச்சுருள்களைக் குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கவில்லை? ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் அவன் கேட்டதும் உடனடியாகக் கொடுக்கும் தேவனிடம் கேட்கவேண் டும் என்ற சத்தியம் அவர்களுக்குப் போதிக்கப்படவில்லையோ? தேசிய அளவிலான ஓர் உதாரணத்தை நான் உங்களுக்குக் கொடுத்திருக் கிறேன். இன்னும் பல பகுதிகளில் கிறிஸ்தவர்களாகிய நாம் அப்படித் தான் இருக்கிறோம். நமது பத்திரிகைகளின் தரத்தைப்பற்றிச் சொல்லவே வேண்டாம்! நாம் இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

நீ எங்கேயிருந்தாலும் ஒரு தானியேலாக இரு. பல்வேறு உயர் அதிகாரிகளிடையே தானியேல் தனிப்பெரும் சிறப்புடையவனாக இருந்ததன் காரணம் அவனுக்குள் ஒரு விசேஷித்த ஆவி இருந்தது. எல்லா பொற்கொல்லர்கள், இரும்புக்கொல்லர்கள் மற்றும் வெள்ளிக் கொல்லர்கள் நடுவில் விசேஷித்த ஆவியைத் தன்னுள் பெற்ற பெசலெ யேலாக இரு. ஞானத்தில் குறைவுபட்டால், ஞானத்தின் தேவனாகிய நமது தேவனிடம் கேள். தானியேல் எருசலேமில் தங்கியிருக்கவில்லை; நாடு கடத்தப்பட்டவனாகப் பாபிலோனில் இருந்தான். கலை, கலாச் சாரம், கைவினைப் பொருட்கள் போன்ற எல்லாவற்றிலும் பாபிலோன் பெயர் பெற்றதாயிருந்தது. கல்தேயர் ஞானத்திலும் அறிவிலும் புகழ் பெற்று விளங்கினர். ஆனால் தானியேலும், அவனது நண்பர்கள்



அனனியா, மீசாவேல் மற்றும் அசரியா ஆகியோரும் மற்ற எல்லாரை யும்விட எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினர் — அவர்கள் சோதிக்கப் பட்டு, கல்தேயரைவிடப் பத்து மடங்கு சமர்த்தராய்க் காணப்பட்டனர். இன்னுமோர் எடுத்துக்காட்டு, யோசேப்பு. அவன் தன் தகப்பன் வீட்டிலோ தன் சொந்த நாட்டிலோ இல்லை; அவன் எகிப்தில் ஒரு வேலைக்காரனாக இருந்தான். ஆனால் அவன் செய்த வேலையில் நேர்த்தி காணப்பட்டது. எனவே அவன் சாதா மனிதருக்குமுன் அல்ல, ராஜாவாகிய பார்வோனுக்குமுன் நின்றான். ‘‘கர்த்தாவே, என்னை இப் போது இருப்பதைவிடச் சிறந்த மருத்துவத் தாதியாக மாற்றும், கூடுதல் திறமையுள்ள தச்சனாக மாற்றும், சிறந்த ஓட்டுநராக மாற்றும், சிறந்த மாணவனாக மாற்றும் — என்னை ஒரு சிறந்த மனிதனாக மாற்றும்!’’ என்று தேவனிடம் கேளுங்கள். உங்கள் வேலையில் கர்த்தருக்குப் பரி சுத்தமாயிருக்க அதுவே வழி.

## 5. பணிவுடன் கீழ்ப்படிந்திருங்கள்! (Be submissive!)

1 பேதுரு 2:18-20: ‘‘வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுண முள்ளவர்களுக்கும் மட்டுமல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள். ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச் சாட்சியின் காரணமாக ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங் களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரியமாயிருக்கும். நீங்கள் குற்றம் செய்து அடிக்கப்படும்போது பொறு மையோடே சகித்தால், அதினால் என்ன புகழுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவ னுக்கு முன்பாகப் பிரியமாயிருக்கும்.’’ சாந்தகுணமுள்ளவர்களும் நல்ல வர்களுமாயிருக்கிற தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கீழ்ப்படி வதில் நமக்கு எந்தப் பிரச்னையுமில்லை. ஆனால் முரட்டுக் குணமுள்ள வர்களுக்குக் கீழ்ப்படிவது நமக்கு எப்போதும் பிரச்னையே.

நான் ஒரு மருத்துவமனையில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது எனக்கு ஒரு பிரச்னை இருந்தது. மருத்துவமனைகளில் பொறியியலர் களல்ல, மருத்துவர்களே தலைமை அதிகாரிகளாக இருப்பர். அந்த மருத்துவர்கள் மருத்துவப்பணியைச் செய்வதுடன் பொறியியலரின்

வேலையையும் செய்ய விரும்புவர். பொறியியலராகிய நாங்கள் ஒரு கட்டிடத்தை வடிவமைத்து, வரைவாளர் மூலமாக வரைபடம் வரைந்து முடித்திருப்போம்; நாங்கள் தேநீர் அருந்துவதற்காக வெளியே சென்றிருப்போம். மருத்துவர் ஒருவர் வருவார், அந்த வரைபடத்தைப் பார்ப்பார், தனது மனதில் தோன்றியபடி சில கோடுகளை அழிப்பார், வேறொரு கோடு வரைந்துவிட்டுச் சென்றுவிடுவார். இதில் மோசமான காரியம் என்னவென்றால், அவர் செய்த மாற்றங்களை அவர் எங்களுக்குத் தெரிவிப்பதில்லை. ஒரு பொறியியலருக்கு இது அவமதிக்கும் செயலாகும். நான் முடித்து வைத்திருக்கும் வரைபடத்தை எனக்குத் தெரியாமல் தொடுவதற்கு வேறு எவருக்கும் உரிமையில்லை. அப்படி யாராவது ஒருவர் தொடுவாரானால் அவர் தொழில் விதிமுறைகளை மீறுகிறார். ஒரு மருத்துவர் ஒரு நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் இல்லாத வேளையில் நான் சென்று கட்டுகளை நீக்கிவிட்டு வேறு எதையாவது போட்டுவிட்டு வந்தால் அவரால் பொறுத்துக்கொள்ள முடியுமா? அவர் என்னை அந்த அறையினுள் நுழையக்கூட அனுமதிக்கமாட்டாரே. ஒரு மருத்துவர் தனது தொழிலை அவ்வளவு புனிதமாகக் கருதுவாரென்றால், நான் என் தொழிலைப் புனிதமாகக் கருதக்கூடாதா?

ஒரு நாள் தலைமை மருத்துவர் ஒருவரிடம் கடுமையாக வாதாடினேன். ''ஐயா, உங்களது செயல் என்னைக் காயப்படுத்திவிட்டது. நான் உங்களுக்குக் கீழ்ப்படிகிறேன், ஆனால் இது எனது தொழில். இந்தப் பணியில் எனது உத்தரவுகள்தான் செயல்படுத்தப்படவேண்டும். நீங்கள் ஏதேனும் மாற்றம் செய்ய விரும்பினால் அதை என்னிடம் சொல்லுங்கள். என் வரைபடத்தில் நான் திருத்தம் செய்துகொள்வேன். தச்சர் அல்லது கட்டிடத் தொழிலாளருக்கு என்ன செய்யவேண்டுமென்று நான் உத்தரவிடுகிறேன். நீங்கள் அவர்களுக்கு உத்தரவிட அவசியமில்லை.'' அனல் பறக்கும் விவாதம் நடந்தது. அவருடன் விவாதம் செய்வதைக் குறித்து நான் கவலைப்படவில்லை. ஏனெனில் அவர் என்னை வெளியே அனுப்பினாலும் எனது கல்வித் தகுதிக்கு வேறெந்த நிறுவனத்திலும் இதைவிடச் சிறந்த வேலையை என்னால் பெற முடியும். அந்த வினாடியில் ஒரு பொறியியலராக மட்டும் நடந்துகொண்டேன்;



ஆனால் நான் ஒரு கிறிஸ்தவன் என்பதை மறந்துவிட்டேன். அந்த மருத்துவர் பேரதிர்ச்சியடைந்தார்; ஏனெனில் அவரது வாழ்நாளில் எவரும் அவரிடம் அவ்வாறு பேசியிருக்கமாட்டார். பின்னர் அவர் ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்வதற்காக அறுவை சிகிச்சை அறைக்குச் சென்றார். அவர் திரும்பிவரும் வரை, அந்த மூன்று மணி நேரமும் நான் மன அமைதியை இழந்து, நரக வேதனையை அனுபவித்தேன். அறுவை சிகிச்சை செய்யும்போது மருத்துவர் அணியும் ஆடைகளையெல்லாம் அவர் மாற்றிவிட்டு வெளியே வந்தபோது, நான் அவரது அலுவலக அறைக்கு அவருக்குப் பின்னால் ஓடினேன். ''ஐயா, நான் மிகவும் வருந்துகிறேன்'' என்று சொன்னேன். அவரோ நான் மன்னிப்பு கேட்டதை ஏற்றுக்கொள்ளவேயில்லை. நான் ஏன் அப்படிப் பேசினேன் என்று வினவினார். நான் அப்படிப் பேசியிருக்கக்கூடாது என்று மன்னிப்புக் கோரினேன். அவர் என்னை இருக்கையில் அமரச்சொல்லி, என்னை அவரிடம் மன்னிப்பு கேட்க வைத்தது எது என்று கேட்டார். நான் ஒரு கிறிஸ்தவன் என்றும், என் மனச்சாட்சியைக் களங்கமின்றி வைத்துக் கொள்ள விரும்புகிறேன் என்றும் சாட்சி சொன்னேன். அவ்வினாடியிலிருந்து அவர் எனது அசாதாரணமான நண்பராக மாறிவிட்டார்.

சில ஆண்டுகளுக்குப்பின், நான் கர்த்தருடைய ஊழியத்தை முழு நேரமாய்ச் செய்வதற்காக எனது வேலையை விட்டுவிட விரும்பினேன். எனது ராஜினாமா கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அவர், ''ஸ்டான்லி, நீ எப்பொழுது வேண்டுமானாலும் இந்த வேலைக்குத் திரும்ப வரலாம். நேர்முகத் தேர்வு எதுவும் நடத்தாமல் உன்னைத் திரும்பவும் சேர்த்துக் கொள்வேன்'' என்று சொன்னார். சகோதரரே, சகோதரிகளே, உங்கள் மேலதிகாரிகள் நியாயமானவர்களோ நியாயமற்றவர்களோ, இரக்கமுள்ளவர்களோ முரட்டுக்குணமுள்ளவர்களோ, எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். உங்களுக்கு அநியாயம் செய்யப்பட்டால்கூட அதைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள். ''நான் உங்கள் மனைவியைத் தொடவில்லை; அவள்தான் என்னைப் பிடித்து இழுத்தாள்'' என்று யோசேப்பு வாதாடவில்லை. ராஜா உங்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பினால் அப்படியே கீழ்ப்படியுங்கள். ராஜாதி ராஜா உங்களை விடுவித்து வெளியே கொண்டு வருவார்.

அப்போஸ்தலன் பவுல் 1 தீமோத்தேயு 6:1இல் தீமோத்தேயுவுக்கு எழுதுவது: ''தேவனுடைய பெயரும் உபதேசமும் தூற்றப்படாதபடி, அடிமைகளாயிருக்கும் வேலைக்காரர் யாவரும் தங்கள் தலைவர்களை எல்லா மதிப்பிற்கும் தகுதியானவரென்று எண்ணிக்கொள்ளட்டும்.'' அந்நாட்களில் அடிமைகளில் மட்டுமல்ல, தலைவர்களிலும் விசுவாசிகள் இருந்தனர். எனவே உங்கள் தலைமையதிகாரி விசுவாசியாயிருந்தால் அவரது அலுவலக அறைக்குள் மதிப்பச்சமின்றி நுழைந்து, ''சகோதரனே, கர்த்தருக்கு மகிமையுண்டாகட்டும். எப்படி இருக்கின்றீர்கள்?'' என்றெல்லாம் விசாரிக்கவேண்டாம்! அப்படி அல்ல, உங்கள் மேலதிகாரி விசுவாசியாயிருந்தால் அவரிடம், ''ஐயா, காலை வணக்கம்!'' என்று சொல்லுங்கள்.

எங்கள் மிஷனரிகளில் ஒருவர் மூலமாக கர்த்தரிடம் வந்த, வயதில் மூத்தவரான, மத்திய அரசு உயர் அதிகாரி ஒருவரை நான் அறிவேன். அவர் மத்திய திட்டப்பணியொன்றின் பொது மேலாளராகப் பணியாற்றினார். அவரது தலைமையின்கீழ்ப் பல பொறியியலர் பணியாற்றினர். ஒரு வீட்டு ஜெபக் கூட்டத்துக்கு வந்த அவர் பிற மக்களோடு சேர்ந்து தரையிலேயே உட்கார்ந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆராதனைக்கு அவர் வருவார். அவர் அமர நாம் ஓர் இருக்கையைக் கொடுத்தாலும், அவர் தரையில்தான் உட்காருவார். ஆராதனைக்கு வந்துள்ள ஒவ்வொருவரையும் வாழ்த்தி, அவர்களுடன் கை குலுக்குவார். அவரது உதவியாளர்கள் அவரை அழைத்துச் செல்ல காரைக் கொண்டுவருவார்கள். ஆனால் அங்கே ஒரு பிரச்னை உருவானது. ஜெபக்கூட்டத்திற்கு வரும் மக்களில் சிலர் அவரிடம் பணியாற்றினர். இந்த உயரதிகாரி தன் மேற்பார்வைப் பணிக்காய் இங்குமங்கும் நடந்து செல்வதை அவர்கள் பார்க்கும்போது, “Praise the Lord, Brother!” என்று சத்தமாய் வாழ்த்துவர். அவர் தனது அலுவலகத்தில் இருக்கும்போது, அவரது அறை வாயிலில் நிற்கும் கடைநிலை ஊழியரிடம் அனுமதி வாங்காமலேயே நேராக அவரது அறைக்குள் நுழைந்துவிடுவர். இதைப்போன்ற இன்னும் பல செயல்கள் அந்த உயர் அதிகாரிக்குப் பெருந்தொல்லைகளை உருவாக்கின. அவர் நமது மிஷனரிப்பணியாளருக்கு, ''இனிமேல் உங்கள் கூட்டத்துக்கு நான் வர முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நமது நண்பர் சிலர் முறையாக நடப்பதில்லை. இந்நிலை தொடருமானால், நான் அவர்களிடம் பாரபட்சமாக நடக்கிறேன் என்று மக்கள் சொல்ல நேரிடும்'' என்று கடிதம் எழுதி அனுப்பினார். அவர் ஏறத்தாழ பின்மாற்றம் அடையும் நிலைக்குச் சென்றுவிட்டார். பின்னர் இன்னொரு ஊழியர் அவரைச் சந்தித்து, பின்மாற்றத்தினின்று அவரைக் காப்பாற்றினார். இத்தகைய விளைவுகளை முன்னறிந்துதான் பவுல் பின்வருமாறு எழுதினார்: ''விசுவாசிகளாகிய தலைவர்களை உடையவர்கள், தங்கள் தலைவர்கள் சகோதரராயிருக்கிறதினாலே அவர்களை அசட்டைபண்ணாமல், நல்ல வேலையின் பலனைப் பெற்றுக்கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளும் பிரியருமாயிருக்கிறபடியால், அவர்களுக்கு அதிகமாய்ப் பணியாற்றவேண்டும்; இந்தப்படியே போதித்துப் புத்திசொல்லு'' (1 தீமோ 6:2). ''கர்த்தருக்குப் பரிசுத்தம்'' என்பதின் கீழ் நான் ஏன் இதைப் பற்றிப் பேசுகிறேன் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். பொதுவாக இவைகளெல்லாம் பிரசங்க பீடத்தினின்று போதிக்கப்படாதவை. ஆனால் தீமோத்தேயுவுக்குப் பவுல், ''இந்தப்படியே போதித்துப் புத்தி சொல்லு'' என்று வலியுறுத்தி எழுதுகின்றார். பணியிடங்களில் எப்படி நடக்கவேண்டும் என்பதை மக்களுக்குப் போதியுங்கள், இல்லையெனில் அவர்கள் அதை அறிய மாட்டார்கள்.

உங்கள் உயர் அதிகாரிகளின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியுங்கள். ஒருவேளை அவர்கள் நியாயமற்றவர்களாகவும் விவேகமற்றவர்களாகவும் இருந்தால், முதலாவது அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள்; பின்னர் அவர்களுக்காக ஜெபியுங்கள். ஏன்? பலியைவிடக் கீழ்ப்படிதலே மேல். நீங்கள் முதலாவது கீழ்ப்படிந்து, பின்னர் ஜெபிக்கும்போது, பரலோகில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

## 6. இனியவராக இருங்கள்! (Be pleasant!)

மீண்டும் யோசேப்பு மற்றும் தானியேல் ஆகிய இருவரிடமிருந்துதான் நான் எடுத்துக்காட்டுகள் எடுக்கவேண்டியிருக்கிறது. ஆதியாகமம் 40ஆம் அத்தியாயத்தை வாசியுங்கள். அது சிறைச்சாலையில் யோசேப்பு இருந்த காலக்கட்டம். ''எகிப்து ராஜாவுக்கு மது பரிமாறுபவனும், அப்பம் தயாரிப்பவனுமாகிய அவ்விருவரும் சிறைச்சாலையில் இருக்கும்போது, ஒரே இரவில் வெவ்வேறு பொருள்கொண்ட சொப்பனங்கள் கண்டனர்.

காலையில் யோசேப்பு அவர்களிடத்தில் போய், அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் கலங்கியிருந்தார்கள். அப்பொழுது அவன் அவர்களைப் பார்த்து: உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான்'' (வச 5-7). சிறைச்சாலையில் எவரேனும் மகிழ்ச்சியாய் இருக்கக்கூடுமோ? ஆனால் யோசேப்பு அவனது உடன் சிறைக் கைதிகள் இருவரும் துக்கமாயிருந்ததைப் பார்த்தபோது கண்டும் காணாததுபோல் அவர்களைக் கடந்து போய்விடவில்லை; மாறாக, அவர்கள் துக்கமாகக் காணப்பட்டதின் காரணத்தை மிகுந்த கரிசனையுடன் விசாரித்தான். எவ்வளவு இனிய பண்பு! எத்தனை மதுரமான குணநலன்! பணியிடத்தில் எவரேனும் ஒருவர் துக்கத்துடன் சோர்ந்துபோயிருப்பதைக் கண்டால் ஒரு சாதாரண நபரின் மனநிலை, ''எனது பிரச்னையே என் தலைக்குமேல் இருக்கிறது. அவரது பிரச்னையையும் கேட்டு நான் ஏன் புதிய சிக்கலான பிரச்னையை உருவாக்கவேண்டும்?'' என்பதாகத்தான் இருக்கும். நீங்கள் அப்படி இருக்கக்கூடாது. சில நேரங்களில் ''நீங்கள் ஏன் துக்கமாயிருக்கிறீர்கள்?'' என்ற ஒரு கேள்வி மக்களது கண்களினின்று கண்ணீர் வெள்ளத்தையே வரவழைத்துவிடும். அடுத்த முறை உங்கள் பணியிடத்தில் எவரேனும் சோர்வுற்றுக் காணப்பட்டால், அந்தக் கேள்வியைக் கேட்கத் தயங்காதீர்கள். அதனால் எந்தப் பிரச்னையும் வந்துவிடாது. சிறைச்சாலைக்குள்ளேயே யோசேப்பு நலம் விசாரித்தான். நாம் ஏன் நமது பணியிடத்தில் இக்கேள்வியைக் கேட்கக்கூடாது? அவனது கரிசனை அவனுக்கு ஓர் ஊழிய வாசலைத் திறந்து கொடுத்தது. ஒரே ஒரு கேள்வி ஒரு பெரிய ஊழிய வாய்ப்பிற்கு ஆரம்பமாக அமையலாம்.

தானியேல் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் அடுத்த எடுத்துக்காட்டைப் பார்ப்போம். அவனது உணவு மற்றும் பிற தேவைகளைக் குறித்து அவனுக்குமேல் நியமிக்கப்பட்டவரிடம் எத்தனைப் பக்குவமாகப் பேசினான் பாருங்கள். ''தானியேல் ராஜாவின் உணவு வகையினாலும், அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் **வேண்டிக்கொண்டான்''** (வச 8). ''வேண்டிக்கொண்டான்'' என்பது ஓர் அழுத்தமான பதம். உங்களுக்கு மதச்சார்பான உறுதியான நம்பிக்



கைகள் இருக்கலாம்; ஆனால் மதச்சார்பற்ற உலகில் உங்கள் நற்பண்புகளை நீங்கள் இழந்துவிடக்கூடாது. ஒருவேளை தானியேல், ''தயவுசெய்து எனக்கு அனுமதி கொடுங்கள்'' என்று வேண்டியிருப்பான். அவன் அதைக் கேட்டவுடன், ''தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படிச் செய்தார்'' (வச 9). தானியேல் அவனது பணிவான அணுகுமுறை மூலம் பிரதானிகளின் தலைவனிடம் தயவையும் இரக்கத்தையும் வெற்றிகரமாகப் பெற்றான். உடனடியாக அத்தலைவன், ''ஒருவேளை உன் வேண்டுகோளுக்கு நான் இணங்கினால், மற்றவர்கள் அசைவ உணவைச் சாப்பிடுவதின் மூலம் உங்களைவிட முகக்களை மிகுந்து காணப்படுவார்கள். அப்பொழுது எனக்கு என்ன நேரிடும்? நான் என் தலையையே இழந்துவிடுவேன்'' என்று சொன்னான். அவனிடம் தானியேல், ''பத்து நாள் வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும்'' என்றான் (வச 12,13). இதற்கு இணையான ஆங்கிலப் பதிப்பில் இவ்வசனத்தில் 'Please' என்ற பதம் கூடுதலாக உள்ளது. எனவே தமிழ்ப் பதிப்பில் இவ்வசனத்தை வாசிக்கும்போதெல்லாம் 'தயவுசெய்து' என்ற பதத்தைத் தயவுசெய்து சேர்த்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து தானியேல், ''பத்து நாட்களுக்குப் பின்னர் பயங்கரமான பின்விளைவை உண்டாக்கும் வித்தியாசம் எங்களில் காணப்பட்டால் நீர் விரும்பியபடி எங்களுக்குச் செய்யும்'' என்றான். ''அவன் இந்தக் காரியத்திலே அவர்களுக்குச் செவிகொடுத்தான்'' என்று 14ஆம் வசனம் சொல்லுகிறது. பிரதானிகளின் தலைவன் அவனது செயல் மாபெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்று அறிந்தும், தானியேலின் வேண்டுதலுக்கு இணங்கினான். ஏனெனில் அது அவனது தலையையே பணயம் வைத்த ஆபத்தான செயலாகும். தானியேல் எவ்வாறு அவனது சம்மதத்தைப் பெற்றான்? அவனது அன்பும் இனிமையும் கலந்த நடத்தையினாலேயே.

நீங்கள் பணிக்குச் செல்ல ஆயத்தமாகும்போது, உங்கள் பணிக்குரிய சீருடையை அணிந்து கண்ணாடி முன்னால் நின்று எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கும்போது, இன்னொரு அணிகலனையும் அணிந்துகொள்ளுங்கள். அதுதான் புன்னகை என்பது! அன்னை தெரசாவைப் பற்றிய ஒரு திரைப்படத்தைப் பார்த்தேன். போலந்து

நாட்டிலுள்ள ஆதரவற்றோருக்காக நடத்தப்படும் அறக் கட்டளை நிறுவனத்தில் இருந்த ஆதரவற்றோரையும், அம்மருத்துவ விடுதியில் இருந்த நோயாளிகளையும் சந்தித்தபின் அன்னை தெரசா வாகனத்தில் ஏறி அமர்ந்தார். அவரை வழியனுப்ப ஒரு மூத்த கன்னித் துறவி ஓடி வந்தார். எல்லா இளங்கன்னித் துறவிகளும் வாகனத்தைச் சூழ்ந்து நின்றனர். ''மதர் தெரசா, இந்த இளங்கன்னித் துறவிகளுக்கு நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?'' என்று கேட்கப்பட்டது. புன்னகை தவழும் முகத்துடன் அன்னை தெரசா சொன்னது: ''எல்லோரையும் புன் னகை புரியச் சொல்லுங்கள்.'' இந்த அறிவுரையைச் சொல்லக் காரணம் என்னவென்று தெரியுமா? ஏனெனில் அவர்கள் மிக மிகக் கடினமான பணியினைச் செய்துகொண்டிருந்தனர். வீட்டிலிருந்து வெளியேற்றப் பட்ட வயது முதிர்ந்தவர்கள், விபத்தில் சிக்கி மரணத்திற்கு நாட்களை எண்ணிக்கொண்டிருந்தவர்கள், உருக்குலைந்த ஊனமுற்ற குழந்தை கள், மனவளர்ச்சி குன்றிய சிறுவர்கள் மற்றும் குப்பைத்தொட்டிகளிலும் கழிவுப்பொருள் பைகளிலும் வீசி எறியப்பட்ட வேண்டப்படாத சிசுக்கள் ஆகியோரை அக்கன்னித் துறவிகள் பராமரித்து வந்தனர். எனவே அவர் களைப் புன்னகை பூக்கும்படி அன்னை தெரசா சொன்னார்கள். நீங்கள் பணிபுரியச் செல்லும்போது இதைச் செய்வீர்களா? ''இரு நபர்களுக் கிடையேயுள்ள மிகக் குறைந்த தூரம் புன்னகையே'' என்றார் யாரோ ஒருவர். புன்னகை பூத்திடுங்கள், நீங்கள் அந்தக் குறைந்த இடை வெளியைக் கடந்துவிட்டீர்கள்.

### 7. உதவியாயிருங்கள்! (Be helpful!)

பலம் குன்றியவர்க்கு உதவுங்கள், ஒருவரையும் இழிவாய் எண்ணா திருங்கள். நாம் என்ன செய்யவேண்டும் என்பதை 1 தெசலோனிக் கேயர் 5:14 கூறுகிறது: ''சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிற தென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலங்குன்றியோரைத் தாங்குங்கள், எல்லாரிடமும் நீடிய சாந்தமாயிருங்கள்.'' சிக்கலான நிலையிலிருப் போரை அலட்சியப்படுத்தாதிருங்கள். இன்று நீங்கள் இரக்கம் காட்டி னால் நாளை உங்களுக்கு இரக்கம் காட்டப்படும். ''ஏனென்றால், இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்; நியாயத்



தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்'' (யாக் 2:13). இயேசு சொன்னதை நினைவுபடுத்துவோம்: ''இரக்கமுள்ளவர்கள் பாக்கிய வான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்'' (மத் 5:7).

மனிதரது முகத்திலிருந்தே அவர்களுடைய மனநிலையை ஓரளவு புரிந்துகொள்ளலாம். கலங்கிய கண்களுடன், மனதின் பாரத்தினால் சிரிக்கவும் முடியாமல் சோர்புற்றிருக்கும் ஒருவரைக் கண்டால், அவரை விசாரித்து அவருக்கு உதவிசெய்யுங்கள். ஏதோ ஒரு காலக்கட்டத்தில் நாமெல்லாருமே சில சங்கடங்களில் சிக்கித் தவிக்க நேரிடும். இது ஒரு வெளிப்படையான இரகசியம். அப்போது அச்சூழ்நிலையிலிருந்து வெளியேறச் சிறு துரும்பாகிலும் கிடைக்காதா என்று ஏங்கிக் கெஞ்சு வீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்த மற்ற மனிதருக்கு நீங்கள் பாராட்டின இரக்கம் அச்சமயத்தில் உங்களுக்குக் கைகொடுத்து உதவும்.

ஒரு சிலருக்கு இயல்பாகவே பிறர்க்குதவும் பண்புண்டு. மற்றவர்கள் அந்தச் சுபாவத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். அழுகிறவர்களுடனே அழுங்கள். துயரப்படுகிறவர்களுடன் துயரப்படுங்கள். தாழ்த்தப்பட்டோ ருடன் உறவு கொள்ளுங்கள். இப்படிச் செய்யும்போது தேவன் உங்களில் மகிழ்ச்சியாயிருப்பார். ஆனால் தன் பாவத்தின் விளைவாகப் பிரச்னை யில் சிக்கியிருக்கும் ஒரு நபருக்கு நான் உதவி செய்ய முற்பட்டால், அதைக் காண்கிற மக்கள் என்னைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்று உங்கள் தற்பெருமையும் அகம்பாவமும் குரலெழுப்பும். இந்நிலையில் இயேசுவை நினைத்துக்கொள்ளுங்கள். அவர் தேவனுக்குச் சமமா யிருந்தும் அடிமையின் உருவெடுத்து, உங்களுடனும் என்னுடனும் தம்மை அடையாளப்படுத்தினார். இயேசு தமக்குத் திருமுழுக்கு கொடுப்பதற்கு அவர் இருந்த இடத்துக்கு வரச்சொல்லி திருமுழுக்குநர் யோவானை அழைக்கவில்லை; மாறாக, திருமுழுக்கு பெறுவதற்கு அவரே திருமுழுக்குநர் யோவானிடம் சென்றார். அவர் இப்பூவுலகில் அவதரித்தபோது, தேவனுடைய குமாரன் என்ற தமது அந்தஸ்தை மறந்தார். மற்ற எல்லாரையும் போலவே வந்தார். மற்ற எல்லாரையும் போலவே திருமுழுக்கு பெறப் பாவிகளின் வரிசையிலே நின்றார். ''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி''

என்று யோவான்தான் அவரை அடையாளம் காட்டினார் (யோ 1:29). ஆகையால் பலமற்றோர், பாடுபடுவோர், தேவையிலிருப்போர் மற்றும் பிரச்னைகளிலிருப்போர் ஆகியோருடன் உங்களை அடையாளப் படுத்திக்கொள்ளத் தயங்கவேண்டாம்.

இரக்கம் காட்டாதவனுக்கு இரக்கமற்ற நியாயத்தீர்ப்புதான் கிடைக் கும் என்கிறது வேதம். இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பைப் பெற யார்தான் விரும்புவார்? நாம் ஏற்கனவே வாசித்தபடி, நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும். இன்னலிலிருக்கும் மக்களுக்கு நீங்கள் இரக்கமுள்ள செயல்களைச் செய்வீர்களானால், நியாயத்தீர்ப்பு நாளில் தேவன் அதை நினைவுகூருவார். நீங்கள் செய்திருக்கவேண்டியவை ஆனால் செய்யத் தவறியவை, நீங்கள் செய்திருக்கக் கூடாதவை ஆனால் செய்தவை, அதாவது செய்யத் தவறியவை எனும் பாவங்கள் (Sins of Omission) மற்றும் செய்யத் தகாதவை எனும் பாவங்கள் (Sins of Commission), நியாயத்தீர்ப்பு நாளன்று நமக்குமுன் நிறுத்தப்படும். நீங்கள் பணிசெய்யும் இடத்திலுள்ள மக்களுக்கு உதவியாயிருங்கள். அத்தகைய பலியின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். அது கர்த்த ருடைய பெயருக்கு மகிமை சேர்க்கிறது.

## 8. தேவபக்தியுள்ளவராய் இருங்கள்! (Be godly!)

தங்கள் வேலையில் தெய்வ பயத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு எகிப்திலுள்ள மருத்துவச்சிகள் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்ற னர் (யாத் 1:16,17). எபிரெயருக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளை உடனே கொன்றுவிடவேண்டுமென்ற அரசாணை பிறப்பிக்கப்பட்டி ருந்தும், இந்த மருத்துவச்சிகள் ''தேவனுக்குப் பயந்ததினால்'' அவ் விதம் செய்யவில்லை. விளைவு? வச 21, ''மருத்துவச்சிகள் தேவ னுக்குப் பயந்ததினால், அவர்கள் குடும்பங்களைத் தேவன் தழைக்கும் படிச் செய்தார்!'' அரசின் அனைத்துச் சட்டங்களுக்கும், நாம் வேலை செய்யும் நிறுவனங்களிலுள்ள சட்டங்களுக்கும் கீழ்ப்படிவது நமது தலையாய கடமை (ரோ 13:1,2). ஆனால் சிலை வணக்கத்திற்குக் கட்டாயப்படுத்துதல், நற்செய்தியறிவிக்கத் தடை, நன்னெறிக்கும் இறைப்பற்றிற்கும் எதிரிடையாய்ச் செயல்பட வற்புறுத்துதல் போன்ற காரியங்களுக்குத் தைரியமாய் மறுப்பு தெரிவிக்கலாம். ஜெபிப்பதற்கு



விதிக்கப்பட்ட தடையை தானியேல் மீறினார் (தானி 6:10-22). அவர் தேவன் பக்கம் நின்றார்; தேவன் அவர் பக்கம் நின்றார் (வச 22). தனது வேலையிலும் அவர் தவறாதிருந்தார் (வச 4,5). நற்செய்தியறிவிக்க விதிக்கப்பட்ட தடையை ஆதி அப்போஸ்தலர் சற்றும் தயங்காமல் மீறினர் (அப் 4:18-20).

அலுவலகத்திலோ தொழிற்கூடத்திலோ எப்பொழுது பார்த்தாலும் மார்க்கத்துக்கடுத்தவைகளையே பேசிக்கொண்டிருக்கவேண்டுமென்று இங்கு பொருளல்ல. ஆனால், பழைய ஏற்பாட்டு யோசேப்பைப் போல, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், ''இது தேவனால் ஆனது'' என்று சொல்லத் தயங்கவேண்டியதில்லை (ஆதி 41:15,16,37,38). அதுவே நடைமுறை ஞானம். வேலைத்தலத்தில் தனக்கு வந்த பாலியல் சோதனையை யோசேப்பு மேற்கொண்ட விதம் அபாரம்! ''இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, **தேவனுக்கு** விரோதமாய் நான் பாவம் செய்வது எப்படி?'' என்று ஓடிவிட்டான் (ஆதி 39:11-13). சமரசம் பண்ணாததால் வேலை நீக்கம், வேலை உயர்வு தடுப்பு போன்ற தண்டனைகள் அனுபவிப்போர் பாக்கியவான்கள்! (1 பேது 3:16).

## 9. போதுமென்றிருங்கள்! (Be content!)

மேலே செல்லவேண்டும், உயர்வு வேண்டும் என்றெல்லாம் விரும்பு வதில் தவறில்லை. ஆனால் பேராசை பலவித இன்னல்களுக்குள் நடத் தும். தேவன் உங்களை வைத்திருக்கும் நிலையில் திருப்திகொள்ளுங் கள். முறுமுறுப்பு வேண்டாம். தேவன்தான் உங்களை அங்கு வைத்தி ருக்கிறாரென்று அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். உங்களுக் கென்று தேவன் நியமிக்காத இடத்திற்கு யாரும் உங்களை உயர்த்த முடியாது; அப்படியே, தேவன் உங்களை வைத்திருக்கும் இடத்திலிருந்து யாரும் உங்களை இறக்க முடியாது. உயர்வு வருவது உன்னதரிட மிருந்தே. சங்கீதம் 75:6,7, ''கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரத்திலி மிருந்து உயர்வு (ஜெயம்) வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்.''

அனுதின அடிப்படைத் தேவைகளே சந்திக்கப்படாது அவதியுறும் கோடிக்கணக்கானோர் இருக்கும் இவ்வுலகில், ''உண்ணவும் உடுக்கவும்

நமக்கு இருந்தால் அது போதுமென்றிருப்போம். செல்வந்தராக விரும்புவோர் சோதனையிலும் கண்ணியிலும், மனிதரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித தீய நாட்டங்களில் விழுகிறார்கள் ... போதுமென்ற மனதுடனுள்ள தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்'' (1 தீமோ 6:6-9).

### 10. மகிழ்வுடனிருங்கள்! (Be joyful!)

மன மடிவு, மனத் தொய்வு, மன உளைச்சல் போன்றவை இன்று சர்வ சாதாரணம். இது வேலைத்தலத்தில் நம்மை வெகுவாய்ப் பாதிக்கும்; நேர்த்தியாய்ச் செயல்பட முடியாதபடி நம்மை முடமாக்கும். மன்னனுக்கு முன் நெகேமியா உயர்ந்த பதவியிலிருந்தார். அவர் எப்பொழுதும் மகிழ்வுடன் செயல்பட்டிருக்கிறார். ஒரு நாள் அவருடைய முகத்தில் காணப்பட்ட மன வேதனையை உடனே மன்னன் கண்டுபிடித்தான் (நெகே 2:1,2). பிரியமானவர்களே, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்தால்தான் முழு பலத்துடன் நாம் செயலாற்ற முடியும் என்று இதே புத்தகத்தில் வாசிக்கிறோம் (8:10).

எவ்விதச் சூழலிலும் இழக்க முடியாத சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தேவனது பிள்ளைகள் மட்டுமே பெற்றிருக்க முடியும். தொய்ந்த மனதுடையோர் நடுவில் பணியாற்றும் நமக்கு இது என்னே சவால்! நம்மோடு சற்று நேரம் பேசிவிட்டாலே மக்களது உள்ளில் ஓர் எழுச்சி உண்டாகிவிடவேண்டும். இல்லையேல், ''என்'' சமாதானம், ''என்'' சந்தோஷம் என்றெல்லாம் இயேசுவானவர் வாக்குப்பண்ணியதில் அர்த்தம் இல்லையே.

மேற்குறிப்பிட்ட 10 அறிவுரைகளை நாம் பயிற்சித்தால், *''கர்த்தருக்குப் பரிசுத்தம்''* என்று பொறிக்கப்பட்ட மணிகள் அணிந்த குதிரைகளாய் நாம் நமது வேலைத் தலங்களில் விளங்கலாம்.

(*''கடவுள் உங்களை அங்கு வைத்திருப்பதேன்?''*
என்ற தலைப்பில் ஆசிரியர் கொடுத்த 2-மணி நேரச் செய்தியடங்கிய
ஒளித்தட்டுகளைப் பாருங்கள்.
ஆங்கிலம்-தெலுங்கு, ஆங்கிலம்-மலையாளம்)



# 8

# சாட்சி பகர்வதில் பரிசுத்தம்

## Holiness in Witnessing

தேவனது வார்த்தைகளைத் தியானிக்கும்போது பரிசுத்த பிதாவின் கரம் நம்மீது அமர்ந்திருக்கிறது. திருமறையின் பக்கங்களில் காண்கிறபடி பரிசுத்த குமாரன் நமக்குப் பூரண முன்மாதிரியாய்த் திகழுகிறார். நமக்குள் தங்கியிருக்கும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நமது வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள நமக்கு உதவிசெய்கின்றது.

பரிசுத்தத்தை வெளிப்படுத்தவேண்டிய நான்காம் பகுதிக்குச் செல்கிறோம் — அதாவது 'சாட்சி பகர்வதில் பரிசுத்தம்.' இந்தக் கருத்தைக் குறித்துப் பேசும்போது, இரு ஓரங்களை நாம் கவனமாகத் தவிர்க்க வேண்டும். சிலர் எப்பொழுதும் திருப்பணியைக் குறித்தே பேசிக்கொண்டிருப்பர்; ஆனால் அவர்களது வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதில் அவர்கள் போதுமான அளவு கவனம் செலுத்துவதில்லை. அடுத்த ஓர மக்கள் எல்லா நேரமும் பரிபூரணத்துவம், பரிசுத்தமாக்கப்படுதல், புனிதம், நீதி, தூய்மை முதலியவற்றைப்பற்றியே பேசிக்கொண் டிருந்து ஊழியத்தை விட்டுவிடுவர். ஒரு கூட்ட மக்கள் எல்லா நேரத் தையும் ஊழியத்தில் செலவழித்துவிட்டு, தங்களது சொந்தத் திராட்சைத் தோட்டத்தைக் கவனியாமல் புறக்கணிப்பவர்கள்; அடுத்த கூட்ட மக்கள்

எந்நேரமும் அவர்களது சொந்தத் திராட்சைத் தோட்டத்தையே கவனித்துக்கொண்டு, சுவருக்கு வெளியேயிருக்கும் மக்களைக் குறித்து அக்கறையற்றிருப்பவர்கள். இந்த இரு ஓரங்களையும் நாம் தவிர்க்க வேண்டும்; ஏனெனில் சத்தியமானது இவையிரண்டுக்கும் இடையில் உள்ளது.

பரிசுத்தமாகுதலும் பணியாற்றுதலும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்லவேண்டுமென்று நான் நம்புகிறேன். எடுத்துக்காட்டாக 2 தீமோத்தேயு 2:20,21இல் வாலிபனாகிய தீமோத்தேயுவுக்குப் பவுலடியார் எழுதினதை எடுத்துக்கொள்வோம்: ‘‘ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்கள் தவிர்த்து, மரமும் மண்ணுமான பாத்திரங்களும் உண்டு; அவைகளில் சில மதிப்புள்ளவையும் சில மதிப்பற்றவையுமானவை. ஆகையால் ஒருவன் இவைகளை விட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால் அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், தலைவனுக்குப் பயனுள்ளதும், எந்த நற்செயலுக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான மதிப்பிற்குரிய பாத்திரமாயிருப்பான்.’’

தேவனுடைய சபை என்பது ஒரு பெரிய வீடு. ஒவ்வொரு விசுவாசியும் ஒரு பாத்திரம். அவைகளில் சில பாத்திரங்கள் பொன்னினால் செய்யப்பட்டவை; சில பாத்திரங்கள் வெள்ளியினாலும், சில பாத்திரங்கள் மரத்தினாலும் மற்றும் வேறு சில பாத்திரங்கள் களிமண்ணினாலும் செய்யப்பட்டவை. மண்பாத்திரமாக ஒருவர் இருப்பது பாவமல்ல; மரப்பாத்திரமாக இருப்பதால் தரத்தில் குறைந்தது அல்ல; மற்றும் ஒரு பொற்பாத்திரமாக இருப்பதால் அது தரத்தில் உயர்வானதும் அல்ல. ஒவ்வொரு பாத்திரத்திற்கும் அதற்குரிய தனிப்பட்ட பயன்பாடு உண்டு. மரப்பாத்திரம் அல்லது ஒரு களிமண் பாத்திரம் பயன்படுத்தப்படும் வேலைக்கு ஒரு பொன் அல்லது வெள்ளிப் பாத்திரத்தைப் பயன்படுத்த முடியாது. ஒவ்வொன்றுக்கும் அதனதனுக்குரிய குறிப்பிட்ட மற்றும் வெவ்வேறு வேலைகளுண்டு. நாம் மண்பாத்திரமா பொற்பாத்திரமா, வெள்ளிப் பாத்திரமா மரப்பாத்திரமா என்பது நமக்குத் தெரியாது; நாம் அதை அறியவேண்டிய அவசியமுமில்லை. நாம் எதனால் செய்யப்பட்டிருந்தாலும் நாம் அந்தப் பெரிய வீட்டில் இருக்கிறோம் என்பதே நமக்கிருக்கும் அரும்பெரும் சிலாக்கியம்.



எனவே நமது பொறுப்பு என்ன? நீங்கள் பொன், வெள்ளி, மரம் அல்லது மண் பாத்திரம் ஆகிய எவ்வகைப் பாத்திரமாக இருந்தாலும் ‘‘சுத்தமான’’ பாத்திரமாக இருக்கவேண்டும். நீங்கள் சுத்தமான பாத்திரமாக இருந்தால், தலைவனுக்கு எந்த நற்செயலையும் செய்ய ஆயத்தமுள்ளவர்களாயிருப்பீர்கள். எவ்வித ஊழியத்திற்கு நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். சிலர் எல்லோரும் பார்க்கக்கூடிய பகட்டான ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்; மற்றும் சிலர் மிக எளிமையான செயல்களைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் ஆலயத்தில் பிரசங்கம்பண்ணும் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்; மற்றும் சிலர் ஆலயத்தைப் பெருக்கவும் கழிவறையைத் துப்புரவு செய்யவும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். அழைப்புகளிலுள்ள வேறுபாடு ஒரு பொருட்டல்ல. திருச்சபையில் எந்தவோர் அங்கத்தினரும் பிற அங்கத்தினரைவிடத் தரத்தில் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ கிடையாது. தேவன் தமது அனந்த ஞானம், சித்தம் மற்றும் நோக்கத்தின்படி ஒவ்வொரு நபரையும் அவரவருக்குரிய இடத்தில் வைத்திருக்கிறார்.

உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் முக்கியமானது. சில உறுப்புகள் வெளியே தெரியும். எனது கரங்கள், கண்கள், உதடுகள், மூக்கு மற்றும் எனது உருவத்தை நீங்கள் பார்க்கமுடியும். அவை அதனதன் வேலையைச் சரிவரச் செய்கின்றன. எனது இருதயம், கல்லீரல், நுரையீரல்கள், இரைப்பை, மூளை, குடல்கள் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவற்றையோ நீங்கள் பார்க்கமுடியாது. அவை கண்களுக்குப் புலப்படாத உறுப்புக்கள்; ஆனால் மிக முக்கியமான உறுப்புக்கள். எனவே மறைவான ஊழியங்களைவிட வெளிப்படையாகத் தெரியும் ஊழியங்களே மிகவும் முக்கியமானவை என்று நீங்கள் நினைக்கக்கூடாது. பல நேரங்களில் மறைந்திருக்கும் உறுப்புகளே கண்களுக்குப் புலனாகும் உறுப்புகளைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. எனவே தேவனுடைய சபையில் நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு பணியாளர். நீங்கள் கர்த்தருக்குச் சாட்சியாக இருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். ஒவ்வொருவருக்கும் அருளப்பட்டிருக்கிற கிருபை மற்றும் வரங்களின் அளவு வேறுபட்டிருக்கலாம். எனவே உங்களது பணியின் வகை ஒரு காரியமல்ல; நீங்கள் செய்ய வேண்டிய வேலையின் அளவு முக்கியமானதல்ல; ஆனால் நீங்கள் ஒரு தூய்மையான பாத்திரமா என்பதே முக்கியம்.

இந்நாட்களில் பரிசுத்தமாகுதலைவிடப் பணிசெய்தலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்பது வருந்தத்தக்கது. ஆவியின் கனிகளைக் குறித்த செய்திகளடங்கியவற்றைவிட ஆவியின் வரங்களைக் குறித்த செய்திகளடங்கிய புத்தகங்களும், ஒலி மற்றும் ஒளித்தட்டுகளும் வெளியாகிக்கொண்டேயிருக்கின்றன. நடத்தையைப் பற்றிய காரியங்களைவிட ஊழியத்தைக் குறித்தவை மேலும் மேலும் எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றன. எப்படி இருக்கவேண்டும் என்பதைவிட எப்படி இயங்கவேண்டும் என்ற செய்திகளே பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. பரிசுத்தத்தைவிட வல்லமையைக் கருத்தரங்குகள் வலியுறுத்துகின்றன. உலகின் பல்வேறு இடங்களிலிருந்து வெளியிடப்படும் கிறிஸ்தவப் பத்திரிகைகளை நான் வாசிக்கிறேன். எல்லா இடங்களிலும் ஆவியின் வரங்களைப் பற்றிய கருத்தரங்குகள், தீர்க்கதரிசனக் கருத்தரங்குகள், வல்லமை கருத்தரங்குகள் மற்றும் விசுவாசக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. ஆனால் சமீபத்தில் சில பத்தாண்டுகளில் ஆவியின் கனியைக் குறித்த கருத்தரங்கு நடைபெற்றதாக நான் கேள்விப்படவில்லை. நம்மையறியாமலேயே தரம், நற்பண்பு, நன்னடத்தை மற்றும் சாட்சியாயிருத்தல் ஆகியவை பின்னால் தள்ளப்பட்டுள்ளன. மக்களுக்கு ஏற்கனவே போதுமான அளவு ஆவியின் கனி இருப்பதாகவும், அவர்களுக்குத் தேவையானதெல்லாம் வரம் மட்டுமே என்றும் கருதப்படுகின்றது. இது சற்றும் உண்மையல்ல. ஆவியின் கனி என்ற புத்தகத்தின் முதற்பக்கங்களைக் கூட நாம் இன்னும் திருப்பவில்லை.

நமது இருதயத்தின் நிலைதான் இறைப்பணியின் எல்லாக் காரியங்களையும் நிர்ணயிக்கிறது, ஏனெனில் இருதயத்திலிருந்துதான் வாழ்க்கையின் நன்மையானவை அல்லது தீமையானவை புறப்பட்டு வருகின்றன. உங்கள் இருதயம் சரியாயிருந்தால் நீங்கள் செய்வதெல்லாம் சரியாயிருக்கும். நான் சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன். 2 நாளாகமம் 12:14இல் வருந்தத்தக்க எடுத்துக்காட்டாக ரெகொபெயாம் ராஜாவைக் காண்கிறோம்: ''அவன் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் **இருதயத்தை** நேராக்காமல் பொல்லாப்பானதைச் செய்தான்.'' ரெகொபெயாம் ராஜாவின் தோல்விக்கு முழுக் காரணமும் அவனது இருதயத்தில் இருந்தது. 17ஆம் அத்தியாயம் 6ஆம் வசனத்தில் ஒரு சாதகமான எடுத்துக்காட்டாக யோசபாத் ராஜாவைப் பார்க்கிறோம்: ''கர்த்தருடைய வழிகளில் அவன் **இருதயம்** உற்சாகம் கொண்டது; அவன் மேடைகளையும் விக்கிரகத் தோப்புகளையும் யூதாவை விட்டகற்றினான்.'' யோசபாத் சில நல்ல காரியங்களைச் செய்ததின் இரகசியம் என்ன? அவனுடைய இருதயம் தேவனோடே செம்மையானதாக இருந்தது. லூக்கா 6:45இல் இயேசு சொல்வது: ''நல்ல மனிதன் தன் **இருதயமாகிய** நல்ல கருவூலத்திலிருந்து நல்லதை எடுத்துக்காட்டுகிறான்.'' இந்த வசனத்தில் 'நல்ல' என்ற வார்த்தை மூன்று முறை வருகின்றது — நல்ல மனிதன், நல்ல கருவூலம், நல்லதை எடுத்துக்காட்டுகிறான். மாறாக, ''பொல்லாத மனிதன் தன் இருதயமாகிய பொல்லாத கருவூலத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்.'' பொல்லாத, பொல்லாத, பொல்லாத ...!

திருப்பணியைத் தொடங்குமுன் பரிசுத்தமாக்கப்படும் அனுபவத்தைப் பெற்ற பலரைத் திருமறையில் காண்கிறோம் —

### 1. மோசே

யாத்திராகமம் 3:4,5, ''அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர்: இங்கே அருகில் வராதே; உன் கால்களில் இருக்கிற காலணியைக் கழற்றிப்போடு; நீ நிற்கும் இடம் **பரிசுத்த** நிலம் என்றார்.''

### 2. யோசுவா

கர்த்தர் அதே காரியத்தை யோசுவாவுக்கும் செய்தார். இதை நாம் யோசுவா 5:13-15இல் வாசிக்கிறோம்: ''பின்னும் யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார்; உருவின பட்டயம் அவர் கையில் இருந்தது; யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். அதற்கு அவர்: அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது

வந்தேன் என்றார்; அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு, அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்னவென்று கேட்டான். அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற காலணிகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் **பரிசுத்தமானது** என்றார்; யோசுவா அப்படியே செய்தான்.''

## 3. பேதுரு

யோவான் 13:3-8இல் இதைப்போன்றதொரு அனுபவம் அப்போஸ்தலன் பேதுருவுக்கும் ஏற்பட்டது: ''தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து, உணவருந்துவதை விட்டெழுந்து, ஆடைகளைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, சீடருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். இயேசு அவனுக்கு மறுமொழியாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருபோதும் என் கால்களைக் கழுவக்கூடாது என்றான். இயேசு அவனுக்குப் மறுமொழியாக நான் உன்னைக் **கழுவாவிட்டால்** என்னிடம் உனக்குப் பங்கில்லை என்றார்.''

## 4. ஏசாயா

ஏசாயாவின் அனுபவம் நாம் நன்கறிந்த ஓர் எடுத்துக்காட்டு. தேவன் தமது மக்களுக்குத் தமது திருப்பணி செய்ய ஏசாயாவை அனுப்புமுன் அவனைச் சுத்திகரிக்கிறார். ஏசாயா 6:5-9 வாசியுங்கள் —

''அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனிதன், அசுத்த உதடுகளுள்ள மக்களின் நடுவில் குடியிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே



என்றேன். அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து, அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் **அக்கிரமம்** நீங்கி, உன் **பாவம்** நிவிர்த்தியானது என்றான். பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். அப்பொழுது அவர்: நீ போய், இந்த மக்களை நோக்கி ... என்று சொல் ... என்றார்.''

## 5. இயேசு கிறிஸ்து

பணிக்கான பரிசுத்தம் குறித்து நமது ஆண்டவரும் சாட்சி பகர்கிறார். அவர் சொன்னது: ''அவர்களும் ... பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே **பரிசுத்தமாக்குகிறேன்**'' (யோ 17:18,19).

மோசே, உன் காலணிகளைக் கழற்றிப்போடு! யோசுவா, உன் காலணிகளைக் கழற்றிப்போடு! பேதுருவே, உன் கால்களைக் கழுவவிடு! ஏன்? அழகிய பாதங்களை உடையவர்களாய் நற்செய்தியைச் சுமந்து செல்லும் சாட்சிகளாக நான் உங்களை அனுப்புகிறேன். ''நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கும் சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன'' (ஏசா 52:7). அவர் கட்டளையிட்டப் பணிக்கு அவர்கள் செல்வதற்கு முன்பாக தேவன் அவர்களது பாதங்களை அழகுபடுத்த விரும்பினார். சமாதானத்தின் சுவிசேஷத்தைச் சுமந்துசெல்லுகிற பாதங்களைச் சத்தியமும் நீதியும் அழகுபடுத்தும். ''**சத்தியம்** என்னும் வாரை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், **நீதி** என்னும் மார்புக் கவசத்தை அணிந்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் காலணியைக் கால்களிலே போட்டுக்கொண்டவர்களாயும் ... நில்லுங்கள்'' (எபே 6:14,15). முதலாவது சத்தியம் என்னும் வாரை அரையிலே கட்டுங்கள்; பின்னர் **நீதி** என்னும் மார்புக்கவசத்தை அணிந்துகொள்ளுங்கள். சத்தியம் மற்றும் **நீதி** என்னும் வாழ்வுக்குள் வந்த பிறகு, சமாதானத்தின்

சுவிசேஷத்திற்குரிய காலணியை அணிந்துகொள்ளுங்கள். நீங்கள் எஜமானது வேலைக்குத் தகுதியான, பரிசுத்தமான, மதிப்பிற்குரிய பாத்திரமாக இருங்கள்.

நாம் எந்த அளவு பரிசுத்தத்தை நேசிக்கிறோமோ, அந்த அளவுக்குத் தான் நாம் பரிசுத்தத்தைப் பறைசாற்ற முடியும். நாம் எந்த அளவு நமது வாழ்வில் பரிசுத்தமாக வாழ்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் நாம் பரிசுத்தத்தை வலியுறுத்திப் பிரசங்கிக்க முடியும். இந்த உலகம் பொல் லாங்கு நிறைந்தது; அசுத்தமானது; தெய்வீகத்தன்மையற்றது. 'கர்த்த ருக்குப் பரிசுத்தமான' ஒரு கூட்டம் மக்களை ஆயத்தப்படுத்த தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

நாம் கர்த்தருக்குப் பரிசுத்தமான ஒரு கூட்ட மக்களை ஆயத்தப்படுத்த வேண்டுமானால், நம்மைக் கர்த்தருக்குப் பரிசுத்தமாக ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். ''பரிசுத்தமான அருட்பணியாளன் தேவனது கரத் தில் கூர்மையான ஆயுதமாயிருப்பான்.'' என்பது ராபர்ட் முர்ரே மச்செ யின் என்பவரது கூற்று. உங்களது பரிசுத்தத்தின் அளவிற்கு மேலான பரிசுத்தமுள்ளவராக இன்னொரு நபரை நீங்கள் உருவாக்க முடியாது. நமது சீடர் நமது பரிசுத்தத்தின் அளவுவரைதான் வந்தெட்ட முடியும். ஏனெனில் இயேசு சொன்னார், ''சீடன் தன் குருவுக்கு மேற்பட்ட வனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்'' (லூக் 6:40). எனவே பரிசுத்தமாய் வாழும் ஊழியர் மட்டுமே தூய்மையான மக்களை உருவாக்குவர். இந்தச் சத்தியத்தை வலியுறுத்தும் புதிய ஏற்பாட்டு வசனப் பகுதிகள் சிலவற்றை நாம் ஆராய்வோம் —

### ■ ரோமர் 2:17-24

''நீ யூதனென்று பெயர்பெற்று, நியாயப்பிரமாணத்தின்மேல் பற்று தலாயிருந்து, தேவனைக்குறித்து மேன்மை பாராட்டி, நியாயப்பிர மாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை அறிந்து, நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறாயே, நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும், இருளிலுள்ளவர்களுக்கு வெளிச்ச மாகவும், பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு ஆசிரிய



னாகவும், நியாயப்பிரமாணத்தின் அறிவையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே'' (வச 17-20).

ஆத்தும ஆதாயகன் யார் என்பதை எவரேனும் வரையறுக்க விரும்பி னால், இதுவே மிகச்சிறந்த வசனப்பகுதி! தேவ வசனத்தைச் சார்ந் திருந்து, கர்த்தரைக் குறித்துப் பெருமிதம்கொள்ளும் கிறிஸ்தவனே ஆத்தும ஆதாயகன். அவன் கர்த்தருடைய சித்தத்தை அறிந்திருக்கி றான்; தலைசிறந்தவற்றைப் பாராட்டுகிறான். தேவனால் அங்கீகரிக்கப் படத்தக்கதாக தன்னைத்தானே ஆராய்ந்து அறிந்திருக்கிறான். பார்வை யில்லாத பிற மக்களுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களைத் தன்னால் வழிநடத்தமுடியும் என்ற நம்பிக்கை உடையவன். இருளில் இருப்பவர் களுக்கு அவன் ஒரு கலங்கரை விளக்கம் என்பதைத் தெரிந்திருக்கிறான். அறிவிலிகளுக்கும் அவன் அறிவை உணர்த்துகிறவனாக இருக்கிறான். ஒன்றுமறியா மக்களுக்கு அவன் ஓர் ஆசிரியனாக இருக்கிறான். மக்க ளுக்குக் கற்றுக்கொடுக்கும் அளவுக்கு அறிவையும் சத்தியத்தையும் உடையவனாயிருக்கிறான். ஓர் ஆத்தும ஆதாயகன் அல்லது கர்த்த ருக்குச் சாட்சியாயிருப்பவன் எப்படியிருக்கிறான் என்பதை இந்தக் கருத் துக்கள் அழகாகவும் தெளிவாகவும் வரையறுக்கின்றன.

அடுத்து வரும் வசனங்களுக்குச் செல்வோம்: ''இப்படியிருக்க, மற்ற வனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விப சாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிற நீ நியாயப் பிரமாணத்தை மீறி நடந்து, தேவனைக் கனவீனம் பண்ணலாமா? எழுதியிருக்கிறபடி, தேவனுடைய பெயர் புறவினத்தாருக்குள்ளே உங் கள் மூலம் தூற்றப்படுகிறதே'' (வச 21-24).

இக்கேள்விப்பட்டியலின் உள்ளடக்கம் என்ன? ''நீ பிரசங்கிப்பவற்றை உனது நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்கின்றாயா?'' என்று ஆண்டவர் ஆத்தும ஆதாயகனைப் பார்த்துக் கேட்கிறார். இதை உங்கள் மனதில்

நிரந்தரமாக வைத்திருக்கவேண்டும். ''திருவசனத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளைப் பிரசங்கியுங்கள்; பிரசங்கிப்பவற்றை உங்கள் வாழ்வில் அப்பியாசியுங்கள்.'' இந்த இரட்டை வாக்கியம் நாம் அனைவரும் எப்போதும் நினைவில்கொள்ளும்படியாக இணைக்கப்பட்ட மிக அர்த்தமுள்ள ஒரு வாக்கியமாகும். ஏனெனில் நாம் மக்களுடன் பகிர்ந்துகொள்ளும் சத்தியங்கள் அனைத்தும் முதலாவதாக நமது சொந்த வாழ்வில் செயலாற்றப்பட்டிருக்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின கடிதத்தில் மேற்கண்ட கருத்தை இடையில் குறிப்பிடுகின்றார்: ''உழைத்துப் பயிரிடுகிறவன் விளைச்சலில் முதலாவது பங்கடையவேண்டும்'' (2 தீமோ 2:6). ஒரு விவசாயி அவனது வயலில் கடினமாக உழைத்து நல்ல விளைச்சல் கிடைக்கும்போது, அதன் பலனை மற்றவர்களுக்குக் கொடுக்குமுன் அவன் முதலில் சாப்பிடவேண்டுமாம். இதில் நமக்குரிய பொருள் என்ன? உங்களது வேத ஆராய்ச்சியின் விளைவை மற்றவர்களுக்குக் கொடுக்குமுன், நீங்கள் அந்தப் பலனில் முதலாவது பங்கடைய வேண்டும். ''வைத்தியனே, முதலாவது உன்னையே குணமாக்கிக்கொள்'' என்ற யூதப் பழமொழி இதே கருத்தைத் தருகிறது. கூந்தல் தைலம் விற்க வழுக்கைத் தலையனா?

நமது சொந்த வாழ்வில் நாம் செயல்படுத்தமுடியாத சத்தியங்களுக்குப் பிறர் கீழ்ப்படியவேண்டுமென்று நாம் எதிர்பார்த்தால், நாம் நம்மையும் நமது பிரசங்கத்தைக் கேட்போரையும் கேலிக்கூத்தாக்குகிறோம். உண்மையில் அது பலன் தராத முயற்சியாகும். நீங்கள் ஏதோ சில கருத்துக்களைப் பிரசங்கிக்கலாம். ஆனால் உண்மையாக மக்கள் பக்திவிருத்தியடையமாட்டார்கள். இன்றைக்கு ஆவிக்குரிய வட்டாரங்களில் ஏராளமான கோட்பாடுகள் உள்ளன. இந்தத் தத்துவங்கள் உண்மையில் நமக்கு உதவுவதுமில்லை; நம்மைத் திருப்தியாக்குவதுமில்லை. ஆனால் அந்த வசனங்களை நமது சொந்த வாழ்க்கையில் அப்பியாசித்துவிட்டுப், பின்னர் பிறருக்கு அறிவிப்போமானால், நமது வாயின் வார்த்தைகளின்படி தேவன் செய்கிறார். அதுவே அப்போஸ்தலனாகிய பவுலின் சாட்சியாகும். அவர் சொன்னது, ''கர்த்தர் எனக்குத் துணைநின்று எனது பிரசங்கத்தை உறுதிப்படுத்தினார்'' (2 தீமோ 4:17). ஒவ்வொரு முறை நாம் பிரசங்கிக்க எழுந்து நிற்கும்போதும் அல்லது ஒருவரைச் சந்தித்துச் சாட்சிசொல்லப் போகும்போதும், அதைத்தான் நாம் அனுபவிக்கவும் எதிர்பார்க்கவும் வேண்டும். முதல் தலைமுறைச் சீடர்களைக் குறித்து, அவர்கள் சுற்றித்திரிந்து பிரசங்கம் செய்த இடங்களிலெல்லாம் கர்த்தர் அவர்களுடனேகூட இருந்து செயல்பட்டு அவர்களது செய்தியை உறுதிப்படுத்தினார் என்று சொல்லப்பட்டுள்ளது (மாற் 16:20). எனவே கேட்பவர்களுக்குச் செய்தியைத் தேவன் உறுதிப்படுத்தவேண்டுமானால் முதலாவது அவர் நம்மில் செயல்படவேண்டும்.



தேவனுடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள பட்டயம். அது சபையோரிடம் சென்று அவர்களை ஊடுருவிப் பிளப்பதற்கு முன்பாக, முதலில் பிரசங்கிப்பவருக்கு நேராகச் சென்று அவரை ஊடுருவிப் பிளக்கவேண்டும். ஒவ்வொரு முறை நீங்கள் பிறரிடம் உங்களது ஆள்காட்டி விரலை நீட்டும்போதும், மூன்று விரல்கள் உங்களுக்கு நேராக நீட்டப்பட்டுள்ளன என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

## ■ ரோமர் 15:5-9; பிலிப்பியர் 2:14-16

''நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படி, பொறுமையையும் ஆறுதலையும் தரும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஒரே சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அருள் செய்வாராக. ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். மேலும், பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குகளை உறுதியாக்கும்படி, தேவனுடைய சத்தியத்தின்படி இயேசு கிறிஸ்து விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு ஊழியக்காரரானாரென்றும், புறவினத்தாரும் இரக்கம் பெற்றதினால் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி: இதனால் நான் புறவினத்தாருக்குள் உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய பெயரைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது'' (ரோ 15:5-9).

பிற இனத்தவருக்கு நற்செய்தியைப் பிரசங்கிப்பவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவைக் கொண்டு வருகிறார். இங்கே அவர் வலியுறுத்திக்கூறும் சத்தியம் என்னவெனில், தேவனுக்கு மகிமையுண்டாகும்படி அவரது நற்செய்தியை அறிவிப்பதற்குக் கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நாமும் ஒரே மனதும், ஒரே குரலும் உடையவர்களாய் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டில் தனித்தே ஊழியம் என்பதற்கு இடமேயில்லையென்று நம்புகிறேன். பேதுருவின் ஊழியம் அல்லது யோவானின் ஊழியம் அல்லது பவுலின் ஊழியம் என்று அழைக்கப்பட்ட எதுவும் இல்லை. எப்போதுமே பேதுருவும் யோவானும், பவுலும் பர்னபாவும், பவுலும் சீலாவும் அல்லது பர்னபாவும் மாற்குவும் இணைந்த ஊழியம்தான். பழைய ஏற்பாட்டில் ஓர் எலியா அல்லது ஓர் ஏசாயா அல்லது ஓர் எரேமியா தனித்து நிற்பவராக இருப்பார். ஆனால் நாம் புதிய ஏற்பாட்டுக்குள் வரும்போது அது முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம்தான் புதிய ஏற்பாட்டு நற்செய்திப்பணியின் மாதிரியை நமக்கு விளக்கும் பாடநூல். இதில் எப்பொழுதுமே ஒரு ''குழு'' ஊழியமாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள் ஒரு நாடு, ஒரு சேனை என்றெல்லாம் பல காரியங்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர்; ஆனால் ஒருபோதும் உடலுக்கு ஒப்பிடப்படவில்லை. ஒரு கூட்ட மக்களை ஓர் உடலுக்கு ஒப்பிடுதல் என்பது புதிய ஏற்பாட்டுக்கே உரித்தான கருத்து. இந்தக் குறிப்பிட்ட கருத்தோவியம் புதிய ஏற்பாட்டுச் சபைக்காகவே வைக்கப்பட்டிருந்தது. புதிய ஏற்பாட்டுச் சபை என்பது ஒரு வீடு, ஒரு சேனை, ஒரு குழு, ஓர் ஐக்கியம் அல்லது பரிசுத்தவான்களின் கூட்டுறவு மட்டுமல்ல, பல உறுப்புகள் இசைவாக ஒன்றிணைக்கப்பட்டுள்ள ஓர் உடல். ஒரு கட்டிடத்திலிருந்து ஒரு சாளரத்தையோ, சில செங்கற்களையோ அல்லது ஒரு உத்திரத்தையோ நீக்க இயலும். வேறு எந்த எடுத்துக்காட்டிலும், அங்காங்கே சில பாகங்களை நீக்க முடியும். ஆனால் ஓர் 'உடலைக்' குறித்துச் சிந்திக்கும்போது, உறுப்புகளுக்கிடையே எதிர்ப்புகளோ, பிரிவினைகளோ கற்பனை செய்ய இயலாதவை. எனவேதான் பவுல் ''... ஒரே வாயினால் ... ஒரே மனதுடையவர்களாய்'' என்று சொல்கிறார். சகோதரரே, சகோதரிகளே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளாகிய நீங்கள், தூய்மையைக் காத்துக்கொள்ளும்படியாக எல்லாவிதத் தர்க்கங்களையும், கசப்புணர்வையும் தவிர்த்துவிடுங்கள். எந்தக் கிரயம் செலுத்தியாவது அன்பையும் ஐக்கியத்தையும் காத்துக்கொள்ளுங்கள். ஐக்கியத்தைக் காத்துக்கொள்வதற்காக எவ்வளவு விலை கொடுத்தாலும் தகும்.



''நான் வீணாக ஓடினதும் வீணாக முயன்றதுமில்லை எனும் மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படி, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்'' (பிலி 2:14-16).

இருள் சூழ்ந்த இவ்வுலகமே நமது பணிக்களம்; ஆத்தும ஆதாயகராகிய நாம் ஒளி வீசும் சுடர்கள்; நமது கைகளிலுள்ள ஜீவ வசனம் நமது ஆயுதம். நாம் மாசற்றவர்களும், குற்றமற்றவர்களுமாயிருந்தால் இந்த உலகத்தைக் கவர்ந்திழுக்கவும், ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவும் முடியும். அதாவது நாம் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யவேண்டும். பிளவுபட்ட சபையின் சாட்சி வலிமையற்றதாக இருக்கும். பிளவுபடுதலும், பிரிவினையும் இறையரசிற்கு எத்தகையத் தீங்கை விளைவிக்கக்கூடும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஓர் ஐக்கியம் பிளவுபடும்போது ஏற்படும் வேதனையைவிடத் தேவனது இருதயத்துக்கு அதிக வேதனை தருவது வேறெதுவுமில்லை. அதைப்போலவே ஒரு தலைவருக்கு அவரது ஊழியத்தில் பிளவு ஏற்படும்போது, அது அவருக்கு இருதய வலியாக மட்டுமல்ல, இருதயத் தாக்குதலாகவே மாறிவிடும். சகோதர சகோதரிகளே, சபை மக்களிடையே பிரிவினை என்பதை ஒருபோதும் சிந்திக்கவேண்டாம். நீங்கள் பிரிந்துபோவதற்கு ஏதுவாக நூறு காரணங்கள் இருக்கலாம்; நீங்கள் பிரிந்துபோகக்கூடாது என்பதற்கு ஆதாரமாக நான் ஆயிரம் காரணங்களைக் காட்ட முடியும். தாக்குதல் திட்டங்களைப் பிசாசானவன் மிதமிஞ்சி வைத்திருக்கிறான். அவன் தந்திரமாகத் திட்டங்களைத் தீட்டுவதில் தலைசிறந்தவன். தேவ மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தத் திட்ட

மிடுவதில் அவனுக்கு நிகராக வேறொருவரும் இல்லை; ஏனெனில் தேவ மக்களின் செயல்பாடுகளை அவன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறான். முதல் மனிதன் தனது முதல் பாவத்தைச் செய்யுமுன்பே சாத்தான் பரலோகத்தில் இருந்தான். அவன் தனது தாக்குதல் திட்டங்களையும் செயல்முறைகளையும் மாற்றிக்கொண்டேயிருக்கிறான். இந்தத் தலைமுறையில் அவன் தற்போது பயன்படுத்தி வரும் அதிவல்லமையான ஆயுதங்களில் ஒன்று குழுக்களிலும் சபைகளிலும் மேலும் மேலும் பிரிவினைகளையும், பிளவுகளையும் உண்டுபண்ணுதல் ஆகும். ஏனெனில் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கும் ஒரு வீடு அல்லது ஒரு நகர் அல்லது ஓர் அரசு நிலை நிற்காது என்பது அவனுக்குத் தெரியும் (மத் 12:25). சாத்தான் தனக்கு விரோதமாகத் தானே பிரிந்து செயல்படவில்லை என்பதை இயேசு குறிப்பாய் இங்கு உணர்த்துகிறார் (வச 26). ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; துண்டுபட்டால் இல்லை வாழ்வு'' என்பதை மறந்துபோக வேண்டாம்.

இறுதி நாளில் லூசிபரின் அதி மோசமான சதித்திட்டங்களையெல்லாம் நிர்மூலமாக்கி, இயேசு கிறிஸ்துவின் சபை மகா பெரிய சேனையாய் ஒருங்கிணைந்து எழும்பி நிற்கும் என்பதை நான் விசுவாசிக்கிறேன். தேவனுடைய அந்தச் சித்தத்தை நமது தலைமுறையில் நாம் நிறைவேற்றவேண்டாமா? ஒவ்வொரு தலைமுறையிலுமுள்ள கிறிஸ்தவர்கள் அந்தந்தத் தலைமுறையிலுள்ள கிறிஸ்தவரல்லாதோருக்குப் பொறுப்பாளிகள் அல்லவா? எனவே கர்த்தர் என்னை இணைத்திருக்கும் ஐக்கியத்தில், சபையில், குழுவில், கூட்டத்தில் ஒருமைப்பாட்டினைக் காத்துக்கொள்ள என்னால் இயன்றதெல்லாவற்றையும் நான் கட்டாயமாகச் செய்யவேண்டும். வெளிப்படையான ஓர் இரகசியத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த உலகில் குறைவற்ற தலைவன், முழுமையான நற்செய்திப்பணி அல்லது பரிபூரணத் திருச்சபை என்று சொல்லக்கூடிய ஒன்றும் இல்லை. ஒரு குரங்கைப்போல மரம் விட்டு மரம் தாவி நேரத்தை வீணாக்கவேண்டாம். நீங்கள் இருக்கிற இடத்தில் நிலைத்திருங்கள்; தேவன் உங்களிடம் செய்யச் சொல்வதைச் செய்யுங்கள்; உங்களது உடன் சகோதர சகோதரிகளிடம் அன்பு பாராட்டுங்கள்; உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; ஆவிக்குரிய



தலைவர்களுக்கு அடங்கியிருங்கள். உலர்ந்த எலும்புகள் தேவனுடைய ஆவியைப் பெற்றதும் ஒரு மகா பெரிய சேனையாக எழும்பி நின்றது (எசேக் 37:10). அதைப்போல அந்தகார சக்திகள் அனைத்துக்கும் எதிராக ஒன்றுசேர்ந்து எழுந்து நில்லுங்கள். உங்களது கூடுகையிலுள்ள மற்றொரு சகோதரன் அல்லது மற்றொரு சகோதரி உங்கள் விரோதி அல்ல. நமக்கு ஒரே ஒரு பகைவன்தான் உண்டு; அவன்தான் சாத்தான். அவன் ஆண்டாண்டாய்த் திருச்சித்தத்திற்கு மாறாக மக்களது வாழ்வை இருளிலும் பயத்திலும் சிறைப்பிடித்து வைத்திருக்கிறான். வேதம் சொல்லுவது, ''நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்'' (கலா 5:15). இன்றைக்குப் புறவினத்தவர் நடுவில் தேவ மகிமையும் தேவ வல்லமையும் வெளிப்படவேண்டிய அளவு வெளிப்படவில்லை; ஏனெனில் பிளவுபட்ட சபையின் செயல்பாடுகளைத் தேவன் முத்திரையிட்டு அங்கீகரிக்க விரும்பவில்லை.

கொரிந்து சபைக்கு அப்போஸ்தலன் பவுல் பரிசுத்த ஆவியின் வரங்களைக் குறித்து எழுதினார். ஆனால் அன்பில்லாமல் வரங்களின் வெளிப்பாடுகள் பயனற்றவை என்பதை வலியுறுத்துகின்றார். ''நான் மனிதர் பேசும் மொழிகளையும் தூதர் மொழிகளையும் பேசினாலும், அன்பு எனக்கில்லையேல், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பெயர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் உடலைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பயன் ஒன்றுமில்லை'' (1 கொரி 13:1-3).

1 கொரிந்தியர் 12,13 மற்றும் 14ஆம் அத்தியாயங்களில் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் குறித்து நமக்கு விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. ''வேற்றுமையில் ஒற்றுமை'' (Unity in diversity) என்பதை நமக்குக் கற்பிப்பதே இவ்வத்தியாயங்களின் நோக்கம். எடுத்துக்காட்டாக 12ஆம் அத்தியாயத்தை எடுத்துக்கொள்வோம் —

‘‘வரங்களில் வேறுபாடுகள் உண்டு, ஆவியானவர் ஒருவரே’’ (வச 4). ‘‘ஊழியங்களிலேயும் வேறுபாடுகள் உண்டு, கர்த்தர் ஒருவரே’’ (வச 5). ‘‘செயல்பாடுகளிலேயும் வேறுபாடுகள் உண்டு, ... தேவன் ஒருவரே’’ (வச 6). ‘‘எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு **அந்த ஆவியினாலேயே** அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்குப் **அந்த ஆவியினாலேயே** விசுவாசமும், வேறொருவனுக்கு **அந்த ஆவியினாலேயே** குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் **அந்த ஒரே ஆவியானவர்** நடப்பிக்கிறார்’’ (வச 8-11).

12,13ஆம் வசனங்களுக்கு வரும்போது, ‘ஒரே உடலைக்’ குறித்து வாசிக்கிறோம். ‘‘எப்படியெனில், உடல் ஒன்று, அதற்கு உறுப்புகள் அநேகம்; **ஒரே உடலின்** அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், **உடல் ஒன்றாகவேயிருக்கிறது;** அந்தப்படியே கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் எல்லாரும் **ஒரே ஆவியினாலே ஒரே உடலுக்குள்ளாக** ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லோரும் **ஒரே ஆவிக்குள்ளாகவே** தாகந்தீர்க்கப்பட்டோம்’’ 25ஆம் வசனத்தில் ‘‘அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கவேண்டும்’’ என்று எழுதப்பட்டுள்ளது. கொரிந்து சபை தூய ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற சபையாகும். வேதத்தில் பட்டியலிடப்பட்டுள்ள எல்லா வரங்களையும், இன்னும் பட்டியலிடப்படாத வரங்களையும்கூட, கொரிந்து சபை பெற்றிருந்தது (1 கொரி 1:7). ஆனால் சபைக்குள்ளே குழப்பங்களும் ஒழுங்கின்மையும் நிறைந்திருந்தன. எனவேதான் பவுல், **ஒரே ஆவியானவர்தான்** வெவ்வேறு அங்கத்தினர்கள் மூலமாக வெவ்வேறு முறைகளில் செயலாற்றுகிறார் என்பதையும், அதனால் அவர்கள் கட்டாயமாக ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ளவேண்டும் என்பதையும் அவர் களுக்குப் புரியவைக்கவேண்டியிருந்தது.

அப்போஸ்தலர் நடபடிகள் 3ஆம் அத்தியாயத்தின் முதல் வசனம் எனக்கு மிகவும் விருப்பமானது: ‘‘ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி



நேரத்திலே **பேதுருவும் யோவானும்** தேவாலயத்துக்குப் போனார்கள்.’’ இயேசு உலகத்தில் வாழ்ந்த நாட்களில்கூட பேதுருவையும் யோவானையும் சேர்த்து வைப்பது கடினமான வேலையாயிருந்தது. அவர்கள் இருவரும் போட்டியாளர் போலிருந்தனர். ஆண்டவர் தமக்கு மிக நெருக்கமான குழுவில் அவர்கள் இருவரையும் வைத்திருந்தார். இயல்பான பண்பின்படி அவர்கள் இருவரும் மிகவும் வேறுபட்டவர்கள். யோவான் இடிமுழக்கத்தின் மகன்; பேதுரு தூக்கத்தின் மகன். எவ்விடத்திலும், எவ்வளவு நேரமும் பேதுருவால் தூங்க முடியும். அவர் எப்பொழுதுமே தனது மனதை இலகுவாக வைத்திருப்பார். தோட்டத்தில் அவரால் தூங்க முடியும், சிறைச்சாலையில் அவரால் தூங்க முடியும். ஒரு தேவ தூதன் அவரை எழுப்பினார். அவர் எழுந்து நின்று தூங்கிக்கொண்டேயிருந்தார். அவரது லுங்கியைச் சரியாக அணிந்துகொள்ளும்படியாகத் தூதன் சொல்லவேண்டியிருந்தது. தேவ தூதன் அவரை வெளியே அழைத்துச்சென்றார். தூங்கிக்கொண்டே நடந்துசென்றார். அதற்குத்தான் தூக்க நடை என்று பெயர்! அவர்கள் இருவரும் வெளிக்கதவுக்கருகில் வந்துசேரும்வரை அவர் அரைகுறை நினைவில்தான் இருந்தார். தேவ தூதன் அவரை விட்டுப் போன பிறகுதான், திடீரென்று விழித்துக்கொண்டவராய் அது கனவு அல்ல என்பதை உணர்ந்தார். இவ்விதம் வேறுபாடுகள் நிறைந்த பேதுருவையும் யோவானையும் தேவன் ஒன்றாக இணைத்தார். பெந்தெகொஸ்தே அக்கினி அவ்விருவரையும் உருக்கி இணைத்துவிட்டது; ஏனெனில் பேதுருவுக்கு யோவான் தேவைப்பட்டார், யோவானுக்குப் பேதுரு தேவைப்பட்டார். இயேசு அவர்களை அழைத்தபோது பேதுரு மீன் பிடித்துக்கொண்டிருந்தார்; யோவான் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தார். அதே காரியம் அவர்களது ஊழியப் பாதையில் பிரதிபலித்தது. பேதுரு வலையை வீசினார், மூவாயிரம் மக்கள் பிடிக்கப்பட்டனர்; சபை பின் மாற்றம் அடைந்தபோது, வலையில் கிழிசல்கள் உண்டாயின. அதைப் பழுதுபார்க்க வெளிப்படுத்தல் புத்தகத்தில் யோவான் வருகிறார். வேறுபட்ட குணநலன்கள், வேறுபட்ட ஊழியம், வித்தியாசமான உறுதிப்பாடுகள், வித்தியாசமான அழைப்பு மற்றும் எல்லாவற்றிலும் வேறுபட்டிருக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் போட்டி போடுவதையல்ல, ஒருவர் தேவையை அடுத்தவர் நிறைவாக்குவதையே தேவன் விரும்புகிறார்.

■ **2 கொரிந்தியர் 5:9-11**

''நாம் உடலில் குடியிருந்தாலும் குடியிராவிட்டாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். ஏனென்றால், உடலில் அவனவன் செய்த நல்லது அல்லது தீயதிற்கு ஏற்ற பலனை அடையும்படி, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும். ஆகையால், கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து, மனிதருக்குப் புத்தி சொல்லுகிறோம்; தேவனுக்கு முன்பாக வெளிப்படையாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளிப்படையாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்.''

நியாயாசனத்தைக் குறித்த உணர்வுதான் நாம் தூய்மையாக வாழவும், பிறர்க்குப் புத்தி சொல்லவும் நம்மை ஊக்குவிக்கிறது (வச 9,11). கிறிஸ்துவின் நியாயாசனம் (Judgment Seat of Christ) என்பது நமக்குப் பரலோகமா நரகமா என்பதைத் தீர்மானிக்க அல்ல; அது தேவனுடைய மக்களுக்கு அவர்களது செயல்களுக்குத் தகுந்த பலாபலன் வழங்குவதற்காக இருக்கிறது, எனவே நாம் ஆத்தும ஆதாயம் செய்யவும், சாட்சி சொல்லவும் எடுக்கும் எல்லா முயற்சிகளின்போது, அவை ஒருநாள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் தராசில் நிறுக்கப்படும் என்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டும். நற்செய்திப்பணியை எப்படிச் செய்தோம், நற்செய்திப்பணியில் என்னென்ன செய்தோம் மற்றும் நற்செய்திப்பணியில் செய்திருக்கக்கூடாத எவற்றையெல்லாம் செய்தோம் ஆகியவற்றைக் குறித்து அந்நாளிலே நாம் கணக்கு கொடுக்கவேண்டும். எனவேதான் நமது பணியில் என்ன செய்கிறோம் என்பதைவிட அந்தப் பணியை எப்படிச் செய்கிறோம் என்பதில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். செய்த ''அளவு'' முக்கியமானதல்ல, ஆனால் செய்யப்பட்ட ''விதமே'' முக்கியம்; எண்ணிக்கையல்ல, தரமே முக்கியம். வருந்தத்தக்கவிதமாக இந்நாட்களில் எண்ணிக்கைக்காகவே எலிப்பந்தயம் நடக்கிறது — எங்கள் சபைக்கு இத்தனை பேர் வருகின்றனர், உங்கள் சபைக்கு எத்தனை பேர் வருகின்றனர்? எங்களது கூட்டத்துக்கு இவ்வளவு பேர் வருகின்றனர், உங்களது கூட்டத்துக்கு எவ்வளவு பேர் வருகின்றனர்? இந்த அளவுகோலின்படி நாம் கணிப்போமானால், இயேசு கிறிஸ்துவின் ஊழியம் வெற்றியா? ஏனெனில்



''எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்களே'' (மாற் 14:50). பவுலும் தோல்வியடைந்தவராவார்; ஏனெனில் ''ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும் ... என்னை விட்டு விலகினார்கள்'' என்று அவரே சொல்லியிருக்கிறாரே (2 தீமோ 1:15). சகோதர சகோதரிகளே, இவ்வித எலிப்பந்தயத்திற்கு முற்றிலும் செத்துவிடவேண்டும். உங்களது நற்செய்திப்பணியின் ஆரம்ப நிலையில் இப்பொழுதே நீங்கள் அதற்குச் சாகாவிடில், ஊழியம் வளர்ந்த நிலையில் நீங்கள் அதற்குச் சாவது கடினம்.

''போடப்பட்டிருக்கிற அடித்தளத்தின்மேல் அவனவன் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கட்டும்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாகக் கூறியுள்ளார் (1 கொரி 3:10). நீங்கள் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள், மரம் அல்லது வெறும் வைக்கோல் இவற்றில் எவற்றைக்கொண்டு கட்டுகிறீர்கள்? மரம் அல்லது வைக்கோலைக்கொண்டு அதிவிரைவாகவும், மிகப் பெரிதாகவும் எதையும் கட்டமுடியும். அது வேகமாக எழும்பிவிடும்; ஆனால் நியாயத்தீர்ப்பு நாளில் அது எரிந்து சாம்பலாகும். அந்நாளிலே அநேகர் கர்த்தர் இயேசுவைப் பார்த்து, ''கர்த்தாவே! கர்த்தாவே! உமது பெயரால் தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது பெயரால் பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது பெயரால் அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?'' என்பார்கள். அப்பொழுது இயேசு, ''நான் ஒருபோதும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள்'' என்று அவர்களுக்குச் சொல்லுவார் (மத் 7:22,23). தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே விண்ணுலகில் நுழைவான் (வச 21). உங்களுக்கு எப்பொழுதாவது வீடியோ நிகழ்ச்சியைப் பார்க்கத் தருணம் கிடைத்தால், லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) அவர்களின் *''கிறிஸ்துவின் நியாயாசனம்''* என்ற வீடியோ செய்தியைப் பார்க்கும்படி உங்களுக்கு ஆலோசனை தருகிறேன். முதிர்ந்த அனுபவமுள்ள தேவனுடைய தீர்க்கதரிசியொருவர் வழங்கிய அக்கினிச் செய்தி அது. அந்தச் செய்தியை நான் கேட்ட பிறகு, எனது பல கருத்துக்கள் மாற்றப்பட்டுவிட்டன. நாம் கர்த்தருடைய பயங்கரமான அந்நாளை அறிந்தவர்களாய்த்தான் தேவனோடு ஒப்புரவாகும்படி மனிதரை அறிவுறுத்துகிறோம் (2 கொரி 5:10,11).

தேவனுடைய கிருபை மற்றும் மன்னிக்கும் அன்பின் செய்தியை அறிந்த நாம் இச்செய்தியை இவ்வுலகில் தவறாகப் பயன்படுத்தா திருப்பதில் கவனமாயிருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டிலிருந்து ஓர் எடுத்துக்காட்டைக் காண்போம். ஒரு வல்லமையான தீர்க்கதரிசி இருந்தார். அவரது பெயர் யோனா. அவர் தேவனைப்பற்றி என்ன அறிந்திருந்தார்? ''நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனம் வருந்துகிறவருமான தேவன் என்று அறிவேன்'' (யோனா 4:2). எனவேதான் அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருந்தாரோ? சகோதர சகோதரிகளே, தேவனுடைய மன்னிக்கும் அன்பின் செய்தியை உங்களுக்கெனத் தவறாகப் பயன்படுத்தவேண்டாம்.

### ■ 2 கொரிந்தியர் 6:3; 7:2

''இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்'' (6:3). ''எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயம் செய்யவில்லை, ஒருவனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும் ஏமாற்றவில்லை'' (7:2).

அல்லேலூயா! தேவனுடைய ஊழியர் ஒவ்வொருவரும் இத்தகைய சாட்சியைப் பெற்றிருக்கவேண்டும். ஊழியம் குற்றஞ்சாட்டப்படாதபடி யாதொன்றிலும் எவ்விதக் குற்றமுமில்லாத வாழ்க்கை அது. உங்களது ஊழியத்தின் எல்லாப் பகுதிகளிலும் சுத்த மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளுங்கள் (அப் 24:16). கேள்விக்கு இடமான காரியங்கள் எதுவும் உங்கள் வாழ்வில் இருக்கவேண்டாம். தேவனுடைய இராஜ்யத்திற்காகச் செய்யும் எதிலும் பிராதுக்கு இடங்கொடாமல் வாழுங்கள். ''இந்தக் காரியத்தை எல்லாரும்தான் செய்கிறார்கள்'' என்று உங்களுக்குச் சாக்குப்போக்கு சொல்லிக்கொள்ளவேண்டாம். சில ஆண்டுகளுக்குமுன் நான் தென்னிந்தியாவிலுள்ள இளம் ஊழியர்களில் ஒருவருக்கு, ஊழியத்தில் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்யவும், சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்யாதிருக்கவும் அறிவுறுத்திக் கடிதம் ஒன்று எழுதினேன். அந்தக் கடிதம் கிடைத்ததும் அவர் செய்தது என்னவென்று தெரியுமா? அவர் அந்தக் கடிதத்தைக் கிழித்துக் குப்பைக்கூடையில் வீசியெறிந்தார்.



''எல்லாரும் அதைச் செய்கிறார்கள், பிரபலமான பிரசங்கிகள்கூட அதைச் செய்கிறார்கள்; நான் ஏன் அதைச் செய்யக்கூடாது?'' என்று கேட்டார். 'எல்லாரும் அதைச் செய்கிறார்கள்; நான் ஏன் அதைச் செய்யக் கூடாது?' என்பது இறுதியில் உங்களைக் குழியில் தள்ளி அமிழ்த்தி விடும்.

ஓர் உயர்ந்த மலையின் மேல் ஐயாயிரம் பன்றிகள் மேய்ந்துகொண்டிருந்தன. திடீரென அவையனைத்தும் பள்ளத்தாக்கை நோக்கி விரைந்து ஓட ஆரம்பித்தன. அதில் ஒரு குட்டிப்பன்றி இருந்தது. அது தாய்ப் பன்றியிடம் ''நாம் எங்கே போகிறோம்?'' என்று கேட்டது. அதற்கு அந்தப் பெரிய பன்றி, ''வாயை மூடு, எல்லாரும் போய்க்கொண்டிருக்கிறார்கள், ஆகையால் நாமும் போகிறோம்'' என்றது. அங்கே மற்றொரு இளம் பன்றி இருந்தது. அது இன்னொரு வயதான பன்றியிடம், ''நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?'' என்று கேட்டது. அந்த வயதான பன்றி, ''வாயை மூடு, எல்லாரும் போகிறார்கள், நாமும் போகிறோம்'' என்றது. அவைகளெல்லாம் கடலினுள் மூழ்கி மாண்டன. ஐயாயிரம் என்பது குறைந்த எண்ணிக்கை! அதைவிடக் கூடுதல் எண்ணிக்கையாகவும் இருந்திருக்கலாம். அடுத்த முறை ''எல்லாரும் இதைச் செய்கிறார்கள்'' என்ற தொனியைக் கேட்க நேர்ந்தால், லேகியோனிடமிருந்து இயேசு பிசாசுகளைத் துரத்தியபோது பன்றிகளுக்கிடையே நடந்த உரையாடல் தான் இது என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்!

உலகத்தினின்று வேறுபட்டு வாழத் துணிவுடன் இருங்கள். *"Dare to be a Daniel, Dare to stand alone"* என்ற ஓர் ஆங்கில ஞானப்பாடல் உண்டு. துணிச்சலுடன் எதிர் நீச்சல் போடுவதில் ஒரு தானியேலாக, ஒரு யோசேப்பாக, ஒரு பவுலாக இருங்கள். பவுல் வாழ்ந்த காலத்தில் அது மிகக் கடினமாகத்தான் இருந்தது. ஆனால் பவுல் சொல்வது: ''சகோதரரே, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளென்று உங்களுக்குப் பலமுறை சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடு சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு

அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய பெருமை அவர்களுடைய மானக்கேடே. அவர்கள் மண்ணுலகைச் சார்ந்தவற்றையே எண்ணுகிறார்கள்'' (பிலி 3:17-19). பவுல் இதனை வெற்றித்தொனியுடன் அல்ல, கண்ணீருடன் சொன்னார். பவுலைப்போல வேறுபட்ட ஒரு நபராக வாழத் துணிச்சலுடனிருங்கள்; தீமோத்தேயுவைப்போல வித்தியாசமான ஒரு நபராக வாழத் தைரியமாயிருங்கள். தீமோத்தேயுவைக் குறித்துப் பவுல் என்ன குறிப்பிடுகிறார்? ''உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை'' (2:20). ஏன்? ''மற்றவர்களெல்லாரும் ... தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்'' (வச 21). பிரசங்கிகளைக் குறித்து இப்படிச் சொல்கிறார்; நற்செய்திப்பணியாளர்களைக் குறித்துப் பவுல் இதைச் சொல்கிறார். ''இந்த இடத்திலுள்ள எல்லா ஊழியர்களிலும், தியாகத்துடன் தன்னலமின்றி உங்களது சுக செய்திகளை விசாரிப்பதற்கு ஒரே ஒரு நபர்தான் இருக்கிறார்'' என்று அவர் சொல்லுகிறார். ஒவ்வொரு தலைமுறையிலும் இதுவே பெரிய போராட்டமாக இருக்கிறது.

உலக மக்கள் தொகையில் பெரும்பான்மையினரும் உள்ளனர்; சிறுபான்மையினரும் உள்ளனர். பாவிகள் பெரும்பான்மையினர்; பரிசுத்தவான்கள் சிறுபான்மையினர். தேவனுடைய சபையிலும் பெரும்பான்மையினர் உள்ளனர்; சிறுபான்மையினரும் உள்ளனர். ''நாங்கள் திருமுழுக்கு பெற்று, பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பது போதுமானது. இதே வேகத்தில் நாங்கள் மெதுவாகச் சென்றால், எப்படியாவது போய்க் கரை சேர்ந்துவிடுவோம்'' என்று பெரும்பான்மையினர் சொல்வார்கள். ஆனால் சிறுபான்மையினரோ, ''இது போதாது, நான் இன்னும் உன்னத அனுபவங்களைப் பெற விரும்புகிறேன்; நான் இன்னும் ஆழமாய்ப் போக விரும்புகிறேன்; நான் எனது கர்த்தரைத் தரிசிக்க விரும்புகிறேன்; நான் அவரது அருகில் மென்மேலும் நெருங்கிச் செல்ல விரும்புகிறேன்'' என்று சொல்வார்கள். நாம் இப்பொழுது மூன்றாவது குழுவாகிய நற்செய்திப்பணியாளர்களிடம் வருவோம். அவர்களில் தங்களது பெயர்ப் புகழுக்காக, சுயநலத்திற்காக, சுயமகிமைக்காக மற்றும் தங்களது சொந்த சாம்ராஜ்யத்தைப் பரப்புவதற்காகப் பணியாற்றும் பெரும்பான்மையினர்



உண்டு; அவர்களில் தன்னலத்திற்குச் செத்து, தங்களைத் தாங்களே மறைத்து, தரமான பணியைச் செய்ய நாடும் சிறுபான்மையினரும் உண்டு. எனவே இந்த உலகில், சபையில், நற்செய்திப்பணியில் ஒரு கூட்டம் பெரும்பான்மையினரும், ஒரு கூட்டம் சிறுபான்மையினரும் இருக்கிறார்கள். பன்னிரண்டு பேர் போவார்கள். பத்து பேர் பெரும்பான்மையினர்; காலேப் மற்றும் யோசுவா என்ற இருவர் மட்டும் சிறுபான்மையினராக இருப்பர். எனது வேதம் சொல்வது: ''காலேப் வேறே ஆவியை உடையவனாயிருந்தான்'' (எண் 14:24).

உங்களைப் பெரும்பான்மையினரைப் பின்பற்றுகிறவர்களாக அல்ல, சிறுபான்மையினருடன் கூட்டுறவு கொள்ளும் ஒரு வேறுபட்ட நபராக மாற்றும்படி தேவன் விரும்புகிறார். பெரும்பான்மையினர் தெரிந்துகொள்ளும் வாசல் அகலமானது, வழி விசாலமானது. அது எளிதானது, பெயர்பெற்றது, ஆனால் அது அழிவுக்கு நேராய் வழிநடத்தும். சிறுபான்மையினர் தெரிந்தெடுக்கும் வாசல் இடுக்கமானது, வழி மிக நெருக்கமானது, கடினமானது, ஆனால் அது நித்திய வாழ்வுக்கு நேராக வழி நடத்தும். வெகு சிலரே அதைக் கண்டுபிடிப்பர். அந்தச் சிலரில் ஒருவராக உங்களை வைக்க தேவன் விரும்புகிறார்.

## ■ 1 தீமோத்தேயு 2:8

''ஆண்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் **பரிசுத்தமான** கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.''

சபை மக்கள் ஒன்றுசேர்ந்து ஆராதிக்கும்போது அவர்கள் தங்களது கரங்களை உயர்த்தி ஆராதிப்பதை உற்சாகப்படுத்தும்படி இந்த வசனம் பொதுவாக மேற்கோள் காட்டப்படுகிறது. அதில் தவறேதும் இல்லை. ஆனால் சுவிசேஷம் அறிவித்தல் மற்றும் மிஷனரிப்பணி ஆகிய சூழ்நிலையில்தான் பவுல் ஆண்களை எல்லா இடங்களிலும் கைகளை உயர்த்தவேண்டும் என்று கூறுகின்றார். 1 முதல் 7 வரையுள்ள வசனங்களை வாசித்தால் அந்த வசனப்பகுதி முழுவதுமே நற்செய்திப் பணிக்கடுத்தது என்பதை அறிந்துகொள்வீர்கள். எடுத்துக்காட்டாக,

முதல் வசனம் ''நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்'' என்று துவங்குகிறது. தேவனுடைய ஆசீர்வாதமும் தேவனுடைய சமா தானமும் சமுதாயத்தை நிரப்புவதற்காகவே பொது இடங்களில் நின்று ஜெபம்பண்ணவேண்டுமென்று நான் விளங்கிக்கொண்டிருக்கிறேன். குறிப்பாக, நாம் திறந்தவெளி ஊழியம் (open-air preaching) செய்யும் போது, அந்த இடத்தில் நடமாடிக்கொண்டிருக்கும் சமுதாயத்துக்காக மற்றும் மக்களுக்காகக் கைகளை உயர்த்தி ஜெபிக்கவேண்டும் என்ப தையே இந்த 8ஆம் வசனம் குறிப்பிடுகிறது என்று நம்புகிறேன். ஜார்ஜ் விட்ஃபீல்ட் (1714-1770) என்பவர் ஒரு வல்லமையான திறந்தவெளிப் பிரசங்கியார். 'திறந்தவெளிப் பிரசங்கிகளின் வேந்தன்' என்று அவர் அழைக்கப்பட்டார். அவர் பிரசங்கிக்க ஆரம்பிக்கும் முன்பும், பிரசங் கித்து முடித்த பின்பும், நற்செய்தியைக் கேட்ட மக்களுக்காக, அவர் தமது கரங்களை உயர்த்தி வல்லமையான மன்றாட்டு ஜெபம் ஏறெடுப்பாராம். தங்களது சார்பாக தேவனுக்குமுன் அவர் கெஞ்சி மன்றாடுவதைக் கேட் கும்போது, திரளான பாவிகள் அசைக்கப்படுவார்களாம்.

சகோதர சகோதரிகளே, இவ்வுலகத்தை ஆசீர்வதிக்கும்படி நீட்டப் பட்ட இயேசுவின் கரங்களின் தொடர்ச்சியே நமது கரங்கள். ஒரு வகை யில் நாமனைவரும் தேவனுடைய தீர்க்கதரிசிகள்; நாமெல்லாரும் தேவனுடைய ஆச்சாரியர்களாக இருக்கிறோம். நாம் ஏற்கனவே கற்றபடி, நாம் தேவனுடைய ஆச்சாரியர்களாக, மக்களின் பிரதிநிதிகளாக, தேவ னுக்குமுன் நிற்கிறோம்; மற்றும் தீர்க்கதரிசிகளாக நாம் தேவனுடைய பிரதிநிதிகளாக மனிதருக்குமுன் நிற்கிறோம். எனவே மக்களுக்குச் சுவி சேஷத்தை அறிவிக்கும் நற்செய்திப்பணியில் நாம் ஒரே நேரத்தில் ஆச்சாரியர்களாகவும் தீர்க்கதரிசிகளாகவும் செயல்படுகிறோம். தமது கோபத்தினால் தேவன் நாட்டை அழிக்காதபடித் திறப்பிலே நிற்கிற மனிதர் நாம்; தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அக்கினியைத் தடுப்ப தற்காக அல்லது தாமதப்படுத்துவதற்காகத் திறப்பிலே நிற்பவர்களாய் நாம் இருக்கிறோம். அதற்காகத்தான் நாம் நமது பரிசுத்த கரங்களை உயர்த்தவேண்டும் என்று அப்போஸ்தலன் அழகாகச் சொல்கிறார்.



நமது கரங்கள் பரிசுத்தமாக இருக்கின்றன என்று நாம் எப்போது சொல்ல முடியும்? பவுல் அதற்குரிய பதிலை அந்த வசனத்திலேயே தருகிறார். ''கோபமும் தர்க்கமுமில்லாத'' கரங்களே பரிசுத்த கரங்கள். இது நமது சகவுறவுகளைக் குறித்தும், தேவ மக்களின் சமுதாயத்தில் நாம் எப்படி நடக்கிறோம் என்பதைக் குறித்தும் மீண்டும் கூறுகிறது. அவைகள் பரிசுத்தமாயிருந்தால்தான் நாம் மக்களுக்காக ஏறெடுக்கும் இரகசிய அல்லது பொது ஜெபங்கள் ஏற்கப்பட்டுப் பதில் கிடைக்கும். எனவே அடுத்த முறை நீங்கள் ஒரு கிறிஸ்தவரல்லாத நபருக்கு ஒரு கைப்பிரதியைக் கொடுக்க முற்படும்போது, உங்களது கை பரிசுத்த மாயிருக்கிறதா என்று நிச்சயித்துக்கொள்ளுங்கள்; உங்களது கரம் இரத் தத்தினால் கறைபட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள் ளுங்கள். ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது: ''நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந் திருக்கின்றன'' (ஏசா 1:15-17). ஒரு கொலையாளியின் கரங்கள்தான் இரத்தத்தால் நிறைந்திருக்கும். அப்போஸ்தலனாகிய யோவானுடைய கருத்தின்படிக் கொலையாளி யார்? ''தன் சகோதரனைப் பகைக்கிற எவ னும் கொலையாளியாயிருக்கிறான்'' (1 யோ 3:15). எனவே திருச்சபை யில் நாம் ஒருவருக்கொருவர் சமாதானமுள்ளவர்களாய் வாழவில்லை யென்றால் நாம் பரிசுத்த கரங்களுடன் சமாதானத்தின் செய்தியை அறிவிக்கவோ அல்லது மக்களுக்காக ஜெபிக்கவோ முடியாது.

பவுல் தொடர்ந்து (1 தீமோ 2) 9ஆம் வசனத்தில், ''பெண்களும் மயி ரைப் பின்னுதலினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற ஆடைகளினாலாவது தங்களை அலங்கரியாமல்'' என்று சொல்கிறார். ஒருவேளை இந்தக் குறிப்பிட்ட வசனம்தான் வேறு எந்தப் புதிய ஏற் பாட்டுப் பகுதியையும்விட அதிகமாக விவாதிக்கப்படுகிறது. இந்த வசனத்தின் விளக்கங்கள் காரணமாக பல ஐக்கியங்களும் சபைகளும் பிளவுபட்டுள்ளன அல்லது பிரிந்திருக்கின்றன. எந்தச் சூழ்நிலையில் இது எழுதப்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியம். எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவேண்டுமென்று தேவன் விரும்பு கிறார்; எல்லா மனிதருக்காகவும் ஜெபம்பண்ணும்படி பவுல் சொல் கிறார். அதன் பின்னர், ''அன்றியும், ஆண்கள் கோபமும் தர்க்கமுமில் லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி'' என்று சொல்கிறார். அதைத்

தொடர்ந்து அவர், ''பெண்களும் ...'' என்று கூறுகின்றார். சுவிசேஷப் பணி அல்லது மிஷனரிப்பணி அல்லது சாட்சியாயிருத்தல் ஆகிய வற்றில் உற்சாகமாயிருத்தல் வெளி உலகத்துக்கு ஆசீர்வாதமாக இருப்ப தற்காகவே என்பதைத்தான் அப்போஸ்தலன் இதிலும் குறிப்பிடுகிறார் என்றே நான் விளங்கிக்கொள்கிறேன். நாகரிகம் என்ற பெயரில் இன்றைய நவீன உலகு கண்ணியமற்ற ஆடைகளைப் பெரும்பாலும் பெண்க ளுக்குத் தயாரிக்கின்றது. எப்படியோ பெண்களுக்குப் புதுப்புது ஆடை களும் அலங்காரங்களும் நிர்வாணத்தை நோக்கிப் போகின்றன. தேவன் மனிதரை உடுத்துவிக்க முயற்சிக்கிறார்; சாத்தானோ மனிதரை உரிந்து விட முயற்சிக்கிறான். நாகரீகமாக இருங்கள். ஆனால் அதே நேரத்தில் கண்ணியமாகவும் இருங்கள். எளிமையான வாழ்க்கைப் பாணி மிஷ னரிப்பணிக்கும் நற்செய்திப்பணிக்கும் இன்னும் கூடுதல் பணம் கொடுக்க வழிவகுக்கிறது.

ஆண்களும் பெண்களும் நற்செய்திப்பணியில் ஈடுபடுகிறார்கள் என்றும் இவ்வசனப்பகுதிலிருந்து விளங்கிக்கொள்கிறோம். ஆண்கள் முன்னணிக்குச் செல்வார்கள்; பெண்களும் அவர்களைத் தொடர்ந்து சென்று பின்னணியிலிருந்து அவர்களைத் தாங்குவார்கள். இந்தப் பகுதி யில், ஒரு குழு அல்லது ஒரு சிறிய சபையின் ஆண்களும் பெண்களும் வீதிகளில் சென்று ''யாருக்கு ஞானம் தேவை? யாருக்கு விவேகம் தேவை? யாருக்கு அறிவு தேவை? அவர்கள் வந்து ஜீவத் தண்ணீரை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று மக்களிடம் கூப்பிட்டுச் சொல்வதை என் மனத்திரையில் காண்கிறேன். ஒரு தெருவின் மூலை யில் அல்லது ஒரு சந்தைவெளியில் ஒரு குழு நின்றுகொண்டிருப்பதாக நாம் கற்பனை செய்வோம். அதைத்தான் சாலொமோன் ராஜா சொன்னார். ஞானமானது வீதிகளிலும் நாற்சந்திகளிலும் நின்று கதறுகிறது. அத னிடம் வந்து அறிவையும், ஞானத்தையும் பெற்றுச்செல்லும்படி எளிய மக்களை அழைக்கிறது. அது சிவப்பு விளக்குப் பகுதிக்கு நேராக ஓடிக்கொண்டிருக்கும் இளைஞர்களைத் தடுத்து நிறுத்துகிறது. அது தெருவைக் கடந்து செல்லும் வாலிபரைப் பார்த்து விபசாரியிடம் செல் லாதே என்கிறது. ஒரு சபையிலுள்ள ஆண்களும் பெண்களும் ஒரு தெருச்சந்தியில் நின்று திறந்தவெளி ஊழியம் செய்வதை என்னால் இங்கு கற்பனை செய்ய முடிகிறது. ஆண்கள் பிரசங்கம் செய்கிறார்கள்,



பின்னர் அவர்களது கரங்களை உயர்த்தி மக்களுக்காக ஜெபிக்கிறார்கள். அந்த வழியாகக் கடந்துசெல்கிறவர்கள் அங்கே என்ன நடக்கிறது என் பதைக் கவனிக்கிறார்கள். அவர்கள் ஆண்களின் இரு பக்கங்களிலும் அல்லது பின்னால் நின்றுகொண்டிருக்கும் பெண்களைக் கவனிக் கிறார்கள். அவர்கள் அந்தப் பெண்கள் எவ்வாறு அவர்களது முடியைப் பின்னியிருக்கிறார்கள், எவ்வகையான ஆடையை அணிந்திருக்கிறார்கள் மற்றும் எது அவர்களது அலங்காரமும் அழகுமாயிருக்கிறது என்பவற் றைக் கூர்ந்து கவனிக்கின்றனர். அனைத்தும் வெளியலங்காரம்தானா அல்லது ஏதேனும் உள்ளலங்காரம் இருக்கின்றதா? மக்கள் அவற்றை யெல்லாம் கணக்கெடுக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் முன்னணியில் நிற்கும் ஆண்களின் ஜெபங்களையும், செய்திகளையும் கவனிக்கிறார்கள்; சுற்றிலும் நிற்கும் பெண்களின் நடை, உடை, பாவ னையையும் கவனிக்கிறார்கள். என்னுடைய இந்த வசன விளக்கம் ஒரு வேளை நூற்றுக்கு நூறு சரியானதாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால் இந்த வசனப் பகுதி ஏற்படுத்தும் பிரதான தாக்கம் இதுவே.

## ■ 1 பேதுரு 2:9-16

''நீங்களோ, உங்களை இருளிலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடம் வரவழைத்தவருடைய மேன்மைகளை அறிவிக்கும்படித் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆச்சாரியக் கூட்ட மாயும், **பரிசுத்த** இனமாகவும், அவருக்குச் சொந்தமான மக்களாகவும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய மக்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய மக்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்ற வர்களாயிருக்கிறீர்கள்'' (வச 9,10). 5ஆம் வசனம் சொல்லுவது: ''உயி ருள்ள கற்களைப்போல ஆன்மீக மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆன்மீகப் பலிகளைச் செலுத்தும் படிப் பரிசுத்த ஆச்சாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.''

பேதுரு 5ஆம் வசனத்தில் ''பரிசுத்த'' ஆச்சாரியக்கூட்டம் என்று குறிப்பிடுகின்றார்; 9ஆம் வசனத்தில் ''ராஜரீக'' ஆச்சாரியக்கூட்டம் என்று கூறுகின்றார். பரிசுத்த ஆச்சாரியர்களாக நீங்கள் தேவனுக்குப் பலிகளை, அதாவது துதிகளையும் ஆராதனையையும், ஏறெடுக்கிறீர்கள்.

ராஜரீகமான ஆச்சாரியர்களாக நீங்கள் தேவனுடைய இரக்கங்களை மக்களுக்கு அறிவிக்கிறீர்கள். 5ஆம் வசனத்தில் துதிகள் தேவனுக்கு நேராக எழும்புகின்றன; 9ஆம் வசனத்தில் தேவனுடைய தூதுகள் மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. பரிசுத்த மக்களினமாக நீங்கள் ஏன் அவருடைய புண்ணியங்களை அறிவிக்கவேண்டும்? முன்னே நீங்கள் இருளில் இருந்தீர்கள்; ஆனால் இப்பொழுதோ தேவன் உங்களைத் தம் முடைய ஆச்சரியமான ஒளியினிடம் வரவழைத்திருக்கிறார்; முன்னே நீங்கள் இரக்கம் பெற்றிருக்கவில்லை, ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர் களாயிருந்தீர்கள், ஆனால் இப்பொழுதோ நீங்கள் இரக்கம் பெற்றிருக் கிறீர்கள். தேவனுடைய இரக்கங்களையும் மேன்மைகளையும் அறிவிக் கிறவர்கள் இரு பகுதிகளில் கவனமாக இருக்கவேண்டும் —

### அ) பாலியல் பரிசுத்தம்

''பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போராடுகிற ஊனியல்பின் இச்சைகளை விட்டு விலகி, புறவினத்தார் உங்களை அக்கிரமக்காரர் என்று விரோத மாய்ப் பேசும் காரியத்தில், அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு அவற்றை முன்னிட்டுச் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத் தும்படி நீங்கள் அவர்களுக்குள் நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்'' (வச 11,12).

ஒரு பரிசுத்த இனம் என்பது பாலியல் வாழ்வில் தூய்மையுள்ள கூட்டமாக அறியப்படவேண்டும்; ஏனெனில் உலகில் அதிகக் கவர்ச்சி யானதும், விருப்பமானதுமான பாவம் பாலியலுக்கடுத்த பாவமேயாகும். எல்லா இடங்களிலும் பாலியல் பாவத்தைத் தூண்டும் சூழ்நிலைகளே யுள்ளன. இசை, வரைபடங்கள், ஓவியங்கள் அல்லது வண்ணச் சித்திரங் கள் என எதையெடுத்தாலும் முறைகேடான பாலியல் உறவுக்கு நேராக வழிநடத்துகின்றன. நாம் இளைஞராயிருந்தபோது எதிர்கொண்ட சோத னைகளைவிட நமது பிள்ளைகளுக்கு ஏற்படும் சோதனைகள் மிகக் கடுமையானவை. நீங்களும் நானும் நமது 20ஆம் வயதில் அறிந்த வற்றை அல்லது கற்றவற்றை நமது பிள்ளைகள் பத்து அல்லது பதி னொரு வயதாயிருக்கும்போதே தெரிந்துவிடுகிறார்கள். எனவே நாம்



நமது பிள்ளைகளுக்காகப் பரிதாபப்படவேண்டும். அவர்களது எதிர் காலம் இருண்டதாகவும் பாதுகாப்பற்றதுமாக இருக்கிறது. பிள்ளைகள் தங்களைத் தற்காத்துக்கொள்ள நமக்கிருக்கும் ஆன்மீக வாழ்க்கையின் தரம் போதுமானதாக இல்லை. நாம் பெற்றிருக்கும் ஆன்மீக வல்லமை கூட அவர்களுக்குப் போதுமானது அல்ல. எனவே நமது பிள்ளைகள் இந்நாளின் தீங்குகளை மேற்கொள்ள அவர்கள் நமது பரிசுத்தத் தைப்போல் இருமடங்கும், நமது ஆன்மீக வல்லமையைப்போல் இரு மடங்கும் பெற்றுக்கொள்ளும்படி எலிசாவைப்போல நாம் ஜெபிக்க வேண்டும்; ஏனெனில் பாவக் காரியங்கள் மோசமான நிலைமையி லிருந்து அதிமோசமான நிலைமைக்குப் போய்க்கொண்டிருப்பதால் பாவச் சோதனைகளை எதிர்த்து நிற்பதும் மென்மேலும் கடினமாகிக் கொண்டேபோகிறது.

இவ்வுலகில் கற்பின்மை என்பது மிகச்சாதாரணமாகிவிட்டது. பாலியல் பாவத்துக்கு விலகியோடும் ஒரு மக்கள் சமுதாயம் இருந்தால், அந்தக் குழுவினரே புறவினத்தவரைக் கவரக்கூடியவராயிருப்பர். அந்தக் கூட்டத்தினரைப் பார்த்துக் கர்த்தரது சந்திப்பின் நாளிலே புறவினத்தவர் தேவனை மகிமைப்படுத்துவர். நீங்கள் ஒரு பரிசுத்த ஆச்சாரியக் கூட் டம்; எனவே உங்கள் உறுப்புகளில் ஏற்படும் பாலியல் போராட்டத் துக்கும், உங்களைச் சுற்றியிருக்கும் பாவ சக்திகளுக்கும் எச்சரிக்கை யாயிருங்கள்.

### ஆ) அரசு அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிதல்

''நீங்கள் மனிதருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தருக்காய்க் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலும் சரி, தீமை செய்கிறவர்களுக்குத் தண்டனையும் நல்லது செய்கிறவர்களுக்குப் பாராட்டும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக் கானாலும் சரி, கீழ்ப்படியுங்கள். நீங்கள் நல்லது செய்கிறதினாலே மதியற்ற மனிதரின் அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்த மாயிருக்கிறது. சுதந்திரமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுதந்திரத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமை களாயிருங்கள்'' (வச 13-16).

நாம் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழவேண்டிய இரண்டாம் பகுதி அரசு அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிதல் ஆகும். இப்பொழுது ஒரு வினாடி என்னோடுகூட சிந்திப்பீர்களானால், பாலியல் பாவங்களுக்கு அடுத்த தாக இவ்வுலகம் சட்ட விரோதமான செயல்களாகிய கொலை செய்தல், திருடுதல், அதிகாரங்களை அவமதித்தல், சட்டதிட்டங்களை மீறுதல் போன்ற பாவங்களால் நிறைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வீர்கள். உலகமெங்கிலும் சட்டதிட்ட அமைப்புகள் முற்றிலும் நாசமடைந்த நிலையில் உள்ளன. ஆனால் நாம் 'தேவனுக்கு அடிமைகள்' (வச 16). நாம் அதிவுன்னத அதிகாரத்தின்கீழ் இருக்கிறோம். சீசர் நமது ஆண்டவன் அல்ல; இயேசுவே நமது ஆண்டவர்! நாம் தேவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், தேவனால் ஏற்படுத்தப்பட்ட எல்லா அதிகாரங்களுக்கும் கட்டாயமாக நாம் கீழ்ப்படியவேண்டும். உலகத்திலுள்ள எல்லா அதிகாரங்களும் தேவனால் நியமிக்கப்பட்டவை என்பதை நாம் நம்பவேண்டும் (ரோ 13:1). இரகசியமாகக்கூட நாம் அதிகாரங்களைத் தவிர்க்கவோ, அதைவிட்டுத் தப்பிச்செல்லவோ கூடாது. அது தேவனை மகிழ்விக்காது. அத்தகைய செயல் தேவனுடைய பெயருக்கு அவமதிப்பைத்தான் கொண்டுவரும்.

முதன்முறையாக என் மனைவியும் நானும் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டபோது நடந்த நிகழ்ச்சியை நான் நினைவுகூருகிறேன். 1979ஆம் ஆண்டு வளைகுடா நாடுகளுக்குச் சென்றதுதான் எங்களது முதல் அயல்நாட்டு ஊழியப் பயணம். அங்கு நாங்கள் பார்த்த எல்லாவற்றையும் வாங்கினோம். ஒரு Canon காமிரா, ஒரு பெரிய உருபெருக்கு ஆடி, அதற்குத் தேவையான உருமாற்றுக் கருவி, மிக நேர்த்தியான 8 மி.மீ. காமிரா, அதிக சக்திவாய்ந்த இரட்டைத் தொலைநோக்கு ஆடிகள் இரண்டு, ஒரு two-in-one, ... என எனது பொருட்களின் நீண்ட பட்டியலைக் கேட்டு முடிக்க உங்களுக்கே பொறுமையிருக்காது. இந்த எல்லாப் பொருட்களாலும் எங்களது பயணப்பெட்டிகளை நிரப்பினோம். பம்பாய் சுங்கவரி அதிகாரிகள் எங்கள் உடைமைகளைப் பரிசோதிக்க வேண்டிய குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் எங்களுக்காக ஜெபிக்கும்படி தமிழகத்திலுள்ள பிரசங்கியார்களாகிய எங்களது நண்பர்களுடன் வளைகுடா நாட்டிலிருந்து தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு பேசினோம். துபாய், அபுதாபி, பஹரின் ஆகிய இடங்களில்



இந்தப் பொருட்களையெல்லாம் எங்களுக்கு அன்பளித்த சபை மக்கள் அனைவரும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் எங்களுக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுப்பதாக வாக்களித்திருந்தனர்.

பயணத்தின் முதல் பகுதியில் நான் மிகவும் களிப்பாக இருந்தேன்; இரண்டாம் பகுதியில் எனது வயிறு கலங்க ஆரம்பித்தது. நாங்கள் பம்பாய் விமான நிலையத்தில் இறங்கினோம். நாங்கள் கொண்டுவந்த ஏராளமான பொருட்களைக் காட்டவேண்டியிருந்ததால் நாங்கள் சிவப்பு வரிசையில் நடக்கவேண்டியிருந்தது. இதைப் போன்று பத்து வழிகள் இருந்தன; அவை அனைத்துமே நெருக்கமாக இருந்தன. எனக்கு ஒவ்வொரு சுங்கவரி அதிகாரியும் ஒரு காவல் துறை அலுவலரைப்போல் காணப்பட்டார்; நான் ஒரு திருடனைப்போல் காணப்பட்டேன். அந்தப் பத்து அதிகாரிகளில் ஒருவர் பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்தவர். சீக்கியராகிய அவர் ஒரு கிறிஸ்தவனிடம் கூடுதல் இரக்கம் காண்பிப்பார் என்றெண்ணி நான் அவரிடம் சென்றேன். நான் என்னென்ன பொருட்களை வைத்திருக்கிறேன் என்று அந்த அதிகாரி என்னிடம் கேட்டார். நான் ஒன்று, இரண்டு, மூன்று ... என்று வரிசையாகச் சொல்ல ஆரம்பித்தேன். ''உங்கள் பெட்டிகளைத் திறந்து காட்டினால் நன்றாயிருக்கும்'' என்று அவர் சொன்னார். எனது பொருட்களெல்லாம் மேசைமேல் வைக்கப்பட்டன. அவ்வளவுதான், நான் மாட்டிக்கொண்டேன் என்று நினைத்தேன். நான் அவரிடம், ''ஐயா, நான் ஒரு பிரசங்கியார். இவையனைத்தும் எனக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டவை. தயவு செய்து என்னிடம் இரக்கமாயிருங்கள்'' என்று சொன்னேன். அவர் அளித்த மறுமொழி என்னவென்று தெரியுமா? ''நீங்கள் ஒரு பிரசங்கியாராக இருந்தால் இன்னும் கூடுதல் கவனத்துடன் இருந்திருக்க வேண்டும். மற்றவர்கள் இதைச் செய்யலாம்; ஆனால் நீங்கள் இதைச் செய்யக்கூடாது.'' பின்னர் நான் சுங்க வரியாக எவ்வளவு தொகை செலுத்தவேண்டுமென்பதை அறிவித்தார். இறுதியாக அவர், ''நீங்கள் மிக அதிகமான பொருட்களைக் கொண்டு வந்திருப்பதால் அரசுக்கு அபராதமும் செலுத்தவேண்டும்'' என்றார். நான் அவரிடம், ''ஐயா, தயவு செய்து எனக்கு அபராதம் விதிக்க வேண்டாம்'' என்று கேட்டேன். அப்பொழுது அவர் அபராதத்திற்கு விலக்கு அளிக்கும் மேலதிகாரியிடம் போகும்படி என்னிடம் கூறினார். எல்லாப் பயணிகளும் போய்விட்டனர்; நானும் என் மனைவியும் —

பிரசங்கிகள் — மூன்று மணி நேரமாக அங்கே நின்றுகொண்டிருந்தோம். இறுதியில் அந்த மேலதிகாரி, ''இந்தப் பயணி அவர் ஒரு தன்னார்வப் பணியாளர் என்று சொல்வதால், அபராதம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது'' என்று எழுதினார். பின்னர் அந்த சீக்கிய அதிகாரி, ''இவ்விதத் தவற்றை இனிச் செய்யாதீர்கள்'' என்றார். ''ஐயா, இந்தத் தவற்றை நான் இனி ஒருபோதும் செய்யவேமாட்டேன்'' என்றேன். அதுதான் எங்களது முதற்பயணம், அதிலேயே நாங்கள் எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொண்டோம்!

சகோதர சகோதரிகளே, கிறிஸ்தவர்களிடமிருந்து இந்த உலகம் மிகப் பெரிய தரத்தை எதிர்பார்க்கிறது. நீ ஒரு கிறிஸ்தவனானால் உலகத்தார் ஓர் உயர்ந்த தரத்தை எதிர்பார்க்கின்றனர்; நீ விறுவிறுப்பான கிறிஸ்தவனானால் அவர்கள் இன்னும் கூடுதல் உயர்ந்த தரத்தை எதிர்பார்க்கின்றனர்; நீ ஒரு நற்செய்திப்பணியாளனானால் உலகம் அதைவிட இன்னும் அதிகம் உயர்ந்த உச்ச அளவு தரத்தை எதிர்பார்க்கின்றது. ஏனெனில் நீங்கள் ஒரு பரிசுத்த இனம்; ராஜரீக ஆச்சாரியக் கூட்டம்.

### ■ வெளிப்படுத்துதல் 22:17

''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரட்டும்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளட்டும்.''

இந்த வசனம் பரிசுத்த வேதாகமத்தின் கடைசிப் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்த ஆவியைக் குறித்த இறுதி வசனக்குறிப்பு இது; அதுவும் நற்செய்திப்பணி மற்றும் மிஷனரிப்பணி எனும் சூழ்நிலையில் இது தரப்பட்டுள்ளது. இங்கே பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாகிய தேவனுடைய மக்களுடன் இணைந்து செயல்பட வருகிறார். இங்கு அது சபை என்று அழைக்கப்படவில்லை, ஆனால் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறது. மணவாட்டி என்றால் யார்? 19ஆம் அத்தியாயம் 7 மற்றும் 8ஆம் வசனங்களைப் பாருங்கள்: ''நாம் மகிழ்ந்து களிகூர்ந்து தேவனுக்குத் துதி செலுத்துவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது,



அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய ஆடை அணியும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய ஆடை பரிசுத்தவான்களுடைய நீதிகளே.''

அந்த மணவாட்டி யார்? மொத்தமாக எல்லாப் பரிசுத்தவான்களும் சேர்ந்த கூட்டம்தான் அவள். மணவாட்டி அணியும் ஆடை எது? பரிசுத்தவான்களின் நீதிகள். நாம் எப்பொழுதுமே வெண்மை நிறத்தைப் பரிசுத்த ஆவியானவருடன் இணைத்துப் பேசுவது வழக்கம்; இவ்வசனத்தில் மணவாட்டியும் பிரகாசமான மெல்லிய வெண்மை நிற ஆடைகளை அணிந்திருப்பதைக் காண்கிறோம். இது இறுதி நாட்களின் நற்செய்திப் பணிக்கான கருத்தோவியம் என்று நான் கருதுகிறேன். பரிசுத்த புறாவும் பரிசுத்த மணவாட்டியும் உடன் பணியாளராய் ஒருங்கிணைந்து பாவிகளைப் பார்த்து, ''வாருங்கள், வந்து பருகுங்கள்!'' என்று அழைக்கிறார்கள். எத்தனைப் பெரிய சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம்! தேவன் தாமே நம்முடன் இருக்கிறார், அவர் நம்முடன் பணியில் இணைந்து வருகிறார். பரிசுத்த ஆவியானவரும் பரிசுத்த சபையும் ஒன்றாக இணைந்து பாவிகளைச் சிலுவையினிடம் வரும்படியாக அழைப்பு விடுக்கின்றனர். நாம் எல்லாவிதப் பாவ அசுத்தங்களையும் விட்டு விலகி ஓடி, பரிசுத்த பாத்திரமாகக் கர்த்தருக்கென்று சேவை செய்யும்படிக் கர்த்தர்தாமே நமக்கு உதவி, நம்மைத் தகுதிப்படுத்துவாராக!

### மூன்று பொதுவான கண்ணிகள்

நமது சாட்சியிலும், பணியிலும் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டோம். இயேசு கிறிஸ்துவுக்காய்ச் சாட்சிபகர்வோரையும், தேவ ஊழியக்காரரையும் பாவக்குழியில் விழத் தள்ளும் மூன்று கண்ணிகள்: பாலியல் (Sex), பணம் (Money) மற்றும் அதிகாரம் (Power) ஆகும். யாரோ ஒருவர் இதை வேறுவிதமாக girls, gold, glory என்று கூறுகின்றார். அப்போஸ்தலன் பவுலின் வாழ்க்கை வரலாற்றை வாசித்தால், பவுல் மேற்கண்ட மூன்று பகுதிகளிலும் தூய்மையின் உயர்தரத்தைக் காத்துக்கொண்டார் என்பதை நீங்கள் காணலாம் —

□ எடுத்துக்காட்டாக, ''**பாலியல்**'' என்ற பகுதியை எடுத்துக்கொள் வோம். அவர் என்ன சொன்னார்? ''மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணு கிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடி, என் உடலை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' (1 கொரி 9:27). மேலும் அவர், ''... இளம் பெண் களை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்தி சொல்லு'' (1 தீமோ 5:2) என்றும், ''பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு ...'' (2 தீமோ 2:22) என்றும் இளைஞனாகிய தீமோத் தேயுவுக்குக் கற்றுக்கொடுக்கிறார்.

□ ''**பணம்**'' என்ற இரண்டாவது பகுதியிலும் அவர் உண்மையைக் கடைப்பிடித்தார். எபேசு சபை மூப்பர்களுடன் அவர் பேசியபோது, ''ஒருவனுடைய வெள்ளியையோ பொன்னையோ ஆடையையோ நான் விரும்பவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடன் இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தன'' என்று சொன்னார் (அப் 20:33,34). கொரிந்தியருக்கு அவர் எழுதினபோது, அவர்களிடமிருந்து பொருளாதார நன்மைகளைப் பெற அவருக்கு அவர்கள்மேல் நியாயமான உரிமையிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடி அவைகளைப் புறம்பே தள்ளிவிட்டதாகச் சொல்கிறார் (1 கொரி 9:11,12).

□ ''**அதிகாரம்**'' என்ற விவகாரத்திலும் பவுல் மிகவும் தாழ்மையாக இருந்தார். 'அதிகாரம் கறைப்படுத்துகிறது' என்றும் 'முழு அதிகாரம் முழுமையாகக் கறைப்படுத்துகிறது' என்றும் மதச்சார்பற்ற உலகில் வழக்கமாகச் சொல்லப்படுகிறது (Power corrupts; absolute power corrupts absolutely.) இந்நாட்களில் கிறிஸ்தவ ஊழியங்களிலும் அது மிகமிக உண்மையாக இருக்கிறது. இந்தக் காரணத்திற்காகத்தான் எந்தக் கிறிஸ்தவ அருட்பணியிலும் எல்லா அதிகாரங்களும் ஒரு தனி மனித னிடம் கையளிக்கப்படக்கூடாது. அது எப்பொழுதுமே பன்மைத் தலை மைத்துவத்தினால் அல்லது பல தலைவர்கள் கொண்ட ஒரு குழுவி னால் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் அவரது உடன் ஊழியத்தலைவர்கள் எல்லாருக்கும் மேலான தலைவரா கவும் அவர்களைத் தாங்குகிறவராகவும் இருந்தார் என்பது உண்மைதான். ஆனால் தேவன் அவரை மக்களின் விசுவாசத்திற்கு அதிகாரியாக இருப்பதற்கு அல்ல, அவர்களது மகிழ்ச்சிக்கு உதவியாளராக இருப்பதற்



காகவே கிருபை கொடுத்திருக்கிறார் என்று பவுல் கொரிந்து சபை மக்களிடம் சொன்னார் (2 கொரி 10:8; 13:10).

சகோதர சகோதரிகளே, நீங்கள் எந்த நிலையில் அருட்பணியாளராக அழைக்கப்பட்டிருந்தாலும், பாலுறவு, பணம் மற்றும் பதவி ஆகிய மூன்று பகுதிகளைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். நூற்றுக்கணக் கான வல்லமையான ஊழியர் ஏற்கனவே வீழ்ந்திருக்கிறார்கள். நாம் விழுந்துவிடாதபடிக்கு தேவன் நமக்குக் கிருபை அருளுவாராக. மேற் கண்ட ஏதேனும் ஒரு பாவத்தில் நீங்கள் வீழ்ந்திருந்தால், அதை தேவ னிடம் அறிக்கையிட்டு, அதன் பிடியிலிருந்து வெளியே வாருங்கள்; தாவீதைப்போல தேவனை நோக்கி, ''தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே படைத்தருளும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்'' என்று ஜெபியுங்கள் (சங் 51:10). தாவீது அவரது பாவத்தை மூடி மறைத்து வைத்திருந்தவரை அவர் கோடைகால வறட்சிபோல காய்ந்துபோயிருந்தார் என அறிக்கையிட்டார் (சங் 32:3,4). அவரது இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்துவிட்டார்; ஆனால் அவர் தனது பாவத்தைத் தேவனிடம் அறிக்கையிட்டபோதோ, கர்த்தர் அவரது வாயிலே திரும்பவும் புதுப்பாட்டுகளைத் தந்தார். உங்கள் இருதயத்தை அவருக்கு முன்பாகத் திறந்தால், அதே அனுபவத்தைக் கர்த்தர் இன் றைக்கு உங்களுக்கும் தர வல்லவர். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட முடியாத பாவம் எதுவுமில்லை; இம்மானுவேலின் இரத்தத் தால் கழுவி நீக்கப்பட முடியாத பாவக்கறை எதுவுமில்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உங்களது அனைத்துப் பாவத்தினின்றும் உங்களைச் சுத்தம்பண்ணும்; அவர் உங்களை ஒரு விடுதலையின் ஆவி யினால் ஆசீர்வதிப்பார். அப்பொழுது நீங்கள் மீண்டும் உங்கள் வாயைத் திறந்து துதியின் பலிகளைத் தேவனுக்குச் செலுத்துவீர்கள்; வழிவிலகி யோருக்குத் தேவனுடைய நீதியின் வழிகளைப் போதிப்பீர்கள். உங்களது அருட்பணியின் மூலம் தேவன் மக்களைத் தொடர்ந்து ஆசீர்வதிப்பார் (சங் 51:15).

# 9

# போராட்டங்களில் பரிசுத்தம்

## Holiness in Warfare

பழைய ஏற்பாட்டில் அடிக்கடி தேவனைக் குறிப்பிடும் பெயர்களில் ஒன்று ''சேனைகளின் கர்த்தர்'' என்பதாகும். ''சேனைகளின் கர்த்தர்'' என்ற பெயர் அடிக்கடி ''பரிசுத்தம்'' எனும் குணாதிசயத்துடன் தொடர்பு படுத்திச் சொல்லப்படுவது நமது ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது. மாதிரி வசனங்கள் சிலவற்றை உங்களுக்குத் தர விரும்புகின்றேன் —

- ☐ ஏசாயா 5:16, **''சேனைகளின் கர்த்தர்** நியாயத்தீர்ப்பினால் உயர்ந்து, **பரிசுத்தமுள்ள** தேவன் நீதியினால் **பரிசுத்தராய்** விளங்குவார்.''
- ☐ ஏசாயா 6:3, ''சேராபீன்கள் ஒருவரையொருவர் நோக்கி: **சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,** பூவுலகு முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.''
- ☐ ஏசாயா 8:13, **''சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள்;** அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக.''
- ☐ எரேமியா 11:20, **''சேனைகளின் கர்த்தாவே,** உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற **நீதியுள்ள** நியாயாதிபதியே, நீர் அவர்களுக்கு **நீதியைச்** சரிக்கட்டுகிறதை நான் பார்க்கட்டும்; என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன்.''
- ☐ சகரியா 14:21, ''அப்பொழுது எருசலேமிலும் யூதாவிலுமுள்ள எல்லாப் பானைகளும் **சேனைகளின் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்.''**



நாம் 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்பதைக் கற்றுக்கொண்டுவருகிறோம். இப்போது அது 'சேனைகளின் கர்த்தர்' என்ற சொற்றொடருடன் தொடர்புள்ளதாயிருக்கிறதைக் காண்கிறோம். எனவே 'சேனைகளின் கர்த்தருக்குப் பரிசுத்தம்!' என்று சொல்லுவோம். வேறொரு விதமாகச் சொன்னால், நாம் ஈடுபட்டிருக்கும் ஆன்மீக யுத்தத்தில் அல்லது போராட்டத்தில், பரிசுத்தம் இல்லையெனில் நாம் தோல்வியடைந்து விடுவோம். யுத்தம் கர்த்தருடையது; ஆனாலும் நம்மைத் தவிர்த்து விட்டுக் கர்த்தர் யுத்தத்தில் போராடமாட்டார். சேனைகளின் கர்த்தர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, சேனைகளின் கர்த்தரது போர் வீரராகிய நாமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நமக்குப் பொதுவாக ஏற்படக்கூடிய போராட்டங்களைக் கவனிப்போம் —

### 1. நமது ஊனியல்பிற்கு எதிரான போராட்டம்

இது சில நேரங்களில் பழைய மனிதனுக்கு எதிரான போராட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. நாம் இதை ஆவிக்கும் மாம்சத்துக்கும் இடையே ஏற்படும் போராட்டம் என்று சொல்கிறோம். கலாத்தியர் 5:17 இல் ''ஆவிக்கு விரோதமாக மாம்சமும், மாம்சத்துக்கு விரோதமாக ஆவியும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடி, இவை ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன'' என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தனது சொந்த மாம்சத்துக்கு எதிரான யுத்தத்தை இப்படிச் சொல்கிறார்: ''ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது'' (ரோ 7:23).

## 2. மனதில் ஏற்படும் போராட்டம்

பல தடவை நாம் மனச்சோர்பின் வழியே செல்லுகிறோம். நம்மை யறியாமலேயே ஏராளமான சந்தேகங்களும் கேள்விகளும் நமது மனதில் எழும்புகின்றன. நமது எதிராளியானவன் தேவ மக்களின் மனங்களில் சந்தேகங்கள் என்கிற தனது அம்புகளை அடிக்கடி மிகத் தந்திரமாக எய்துவிடுகிறான்; ஏனெனில் நமது விசுவாசத்தை எப்படியாவது அசைத்துவிடவேண்டும் என்றே அவன் விரும்புகிறான். இயேசு இப் பூவுலகில் வாழ்ந்தபோது ஒரு கேள்வி கேட்டார்: ''மனுமகன் வரும்போது மண்ணுலகில் விசுவாசத்தைக் காண்பாரோ?'' (லூக் 18:8). ஏனெனில் இந்நாட்களில் அநேகருடைய விசுவாசம் ஆடிக்கொண்டிருக்கிறது. ஆகையால்தான் ஆன்மீகத்துக்கடுத்த அனைத்துப் படைக்கலன்களில் விசுவாசம் என்னும் கேடகத்தை ''எல்லாவற்றிற்கும் மேலாக'' உயர்த்திப் பிடிக்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார். விசுவாசத்தின் மூலமாகத் தான் பொல்லாங்கன் எய்யும் சந்தேகங்கள் போன்ற அக்கினியம்பு களையெல்லாம் நாம் அணைத்துச் செயலற்றதாக்க முடியும். மனச் சோர்பின் நேரங்கள் மற்றும் சந்தேகங்களின் காலம் ஆகியவற்றினூடே கடந்துசெல்கையில், அது உங்களுக்கு மட்டுமே நிகழும் புதுமை என்று எண்ணவேண்டாம். பரிசுத்தவான்கள் எல்லோருமே ஏதோவொரு காலக் கட்டத்தில் இத்தகைய கடினமான சூழ்நிலைகளினூடே கடந்து செல் கின்றனர். புதிய ஏற்பாட்டில் பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட் டுள்ள முதன்மையான பெயர் 'விசுவாசிகள்' என்பதேயாகும். நாம் நமது நம்பிக்கை அல்லது விசுவாசத்தாலேயே அறியப்பட்டிருக்கிறோம். பிசாசு எப்போதுமே அந்த அடித்தளத்தை அசைப்பதில் அல்லது அழிப்ப தில்தான் ஆர்வம் காட்டுவான்.

## 3. ஜெபத்தில் போராட்டம்

ஜெபம் செய்வது எளிதான செயல் என எவரேனும் நினைத்தால், அந்த நபர் இதுவரை ஜெபிக்கவேண்டியபடி ஜெபித்ததில்லை என்று அறிந்துகொள்ளலாம். திருப்பணிக்கடுத்த செயல்பாடுகளில் ஜெபம் தான் மற்றெல்லாவற்றையும்விடக் கடினமானது. இயேசு தலைசிறந்த ஜெப வீரராகவும், ஜெபத்தைக் குறித்த மிகச் சிறந்த போதகராகவும்



இருந்தார். அவர் உன்னதமானதொரு ஜெபத்தைத் தமது சீடருக்குக் கற்றுக்கொடுத்தார். ஜெபத்தைக் குறித்து மூன்றரை ஆண்டுகள் அவர் போதித்த பின்னரும், அவர் கெத்செமனே தோட்டத்தில் அவரது சீடரை ஜெபிக்கச் சொன்னபோது, அவர்கள் உறங்கியது மட்டுமல்ல, குறட் டையும் விட்டனர். ஏன்? நீங்கள் ஜெபிக்க நினைக்கும் கணத்திலேயே எதிராளியானவன் எல்லாவித அக்கினிக்கணைகளையும் உங்கள்மீது எறிந்து போர் தொடுக்கிறான்; ஏனெனில் மிகப் பலங்குன்றிய தேவ மனிதனும் ஜெபிக்க முழங்காற்படியிடும்போது, எதிரியின் சேனை கலங்கித் தடுமாறுகிறது. முழங்காற்படியிட்டு ஜெபிப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய சாத்தான் உங்களை அனுமதிக்கிறான். அது வெளியேயிருந்து ஜெபத்திற்கு எதிராய்ச் செயல்படும் எதிரியாகும். எல்லா நேரமும் நம்முடன் வாழ்ந்து நமக்கு உள்ளேயிருந்து போராடும் ஓர் எதிரியும் உண்டு. அதுதான் நமது பலம் குன்றிய உடல். மெலிந் திருந்தாலும் பருமனாயிருந்தாலும் ஒவ்வொரு தேவ மனிதனுக்கும் பலம் குன்றிய மாம்சம் உண்டு. அதைத்தான் இயேசு சொன்னார்: ''ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது'' (மத் 26:41ஆ). இவ்வாறு ஜெபத்திற்கு எதிராக வெளியேயிருந்து நம்மைத் தாக்கும் நித்திய எதிரியாகிய சாத்தானும், உள்ளேயிருந்து போராடும் எதிரியாகிய நமது பலவீன மாம்சமும் நமக்கு உண்டு. எனவே ஜெபத்தில் தீவிரமாய் ஈடுபடுதல் என்பது உண்மையிலேயே ஒரு போராட்டமே.

## 4. சாத்தானின் தீயசக்திகளுக்கெதிரான போராட்டம்

சாத்தானுக்கு எதிரான போராட்டம் என்பது மக்களை அவனது ஆதிக் கத்திலிருந்து விடுவிப்பதற்காகவே. அந்தகார சக்திகள் மற்றும் இவ் வுலகின் தீய சக்திகளின் பிடியில் சிக்கித் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களை நாம் சிறைப்படுத்திக் கிறிஸ்துவின் அடிமைகளாக மாற்றப் போராடவேண்டும்.

## 5. பாவத்திற்கெதிரான போராட்டம்

பாவத்துக்கு விரோதமான போராட்டமே எல்லாப் போராட்டங்களி லும் பயங்கரமான போராட்டம். பாவத்திற்கெதிரான போராட்டத்தில் இரத்தம் சிந்த நேரிடும். எபிரெயர் புத்தகம் ஒரு பொது நிருபமாக அதின்

ஆக்கியோனால் எழுதப்பட்டுள்ளது. எபிரெயர் 12:4இல் ''பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தம் சிந்துமளவு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே'' என்று எழுதுகிறார். ஆன்மீகப் போராட்டங்களில் வெற்றி பெறுவதற்குச் சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்க வேண்டும்; அவருக்குப் பிரியமானவைகளையே செய்து நாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். பாவத்துக்கெதிரான போராட்டத்தில் இரத்தம் சிந்த நேரிட்ட நபர்களில் சிலரை நாம் எடுத்துக்காட்டுகளாய்க் காண்போம் —

- ☐ **யோசேப்பு:** அவன் விபசாரம் செய்ய மறுத்தான். அவனுக்குக் கிடைத்த பலன்? **சிறை!**

- ☐ **அனனியா, அசரியா, மீசாவேல்:** அவர்கள் சிலை வணக்கம் செய்ய மறுத்தனர். அவர்களுக்குக் கிடைத்த பரிசு? **எரிகிற அக்கினிச் சூளை!**

- ☐ **தானியேல்:** அவன் ஜெபிப்பதை நிறுத்த மறுத்தான்; அவன் ஜெபமின்மையைப் பாவமாகக் கருதினான். அவனுக்குக் கிடைத்த தண்டனை? **சிங்கக்கெபி!**

- ☐ **யோவான் ஸ்நானகன்:** அவன் விபசாரத்தை அங்கீகரிக்க மறுத்தான். அதன் விளைவு? **தலைவாங்கப்பட்டான்!** அவன் தேவனிடமிருந்து வந்தவன்; தேவனைக் குறித்துப் பிரசங்கித்தவன்; தேவனிடம் தலையில்லாது திரும்பிச் சென்றான்.

இவர்களெல்லாரும் எபிரெயர் 11:35இல் நாம் சந்திக்கும் வீரர் ஆவர். ''... வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படி, விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்.'' அவர்கள் பாவம் செய்யச் சம்மதித்திருந்தார்களானால், விடுவிக்கப்பட்டிருப்பார்கள்; அவர்கள் சரணடைந்திருந்தால் அல்லது சமரசம்பண்ணியிருந்தால் விடுதலை பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்களோ மறுப்பு தெரிவித்தனர். அவர்கள் தற்காலிக விடுதலையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் சித்திரவதைபண்ணப்படவும், கொல்லப்படவும்



ஆயத்தமாயிருந்தனர். ஏனெனில் அவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலை எதிர்பார்த்தனர். சகோதர சகோதரிகளே, நாம் அனைவரும் நமது வாழ்வில் ஏதோவொரு காலக்கட்டத்தில் இத்தகைய சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். அவ்வினாடியில் பாவத்துக்குச் சம்மதம் தெரிவிப்பது சூழ்நிலையை உங்களுக்கு எளிதாக்கலாம். ஆனால் நீங்கள் சம்மதிக்காவிட்டால், யோசேப்பைப்போல அச்சூழ்நிலையினின்று விலகி ஓடினால், தானியேலைப்போல மறுப்பு தெரிவித்தால், நீங்கள் இரத்தம் சிந்த நேரிடலாம். நீங்கள் அந்த அளவுக்குச் செல்லவேண்டும், ஏனெனில் அது ஒரு யுத்தம்.

பைபிளில் ஆரம்பம் முதல் முடிவு வரை 'போராட்டங்களில் பரிசுத்தம்' என்ற கருத்தை வலியுறுத்தும் சில வசனப்பகுதிகளுக்கு உங்களை அழைத்துச்செல்ல விரும்புகிறேன். உங்கள் இருதயத்தைத் திறந்து வைத்துக்கொள்ளுங்கள்; கர்த்தர் உங்களுடன் தனிப்பட்ட முறையில் பேச அனுமதியுங்கள்.

## 'போராட்டங்களில் பரிசுத்தம்' என்ற கருத்தை வலியுறுத்தும் வசனப் பகுதிகள் —

■ **உபாகமம் 23:14**

''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் எதிரிகளை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளையத்துக்குள்ளே உலாவிக் கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுத்தமான காரியத்தைக் கண்டு, உன்னை விட்டுப் போகாதபடிக்கு, உன் பாளயம் **சுத்தமாயிருக்கட்டும்**.''

தேவன் நமது சத்துருக்களைக் கீழ்ப்படுத்துவதிலும், நமக்கு மென்மேலும் வெற்றியளிப்பதிலும் ஆர்வமுள்ளவராயிருக்கிறார். நமது நடுவில் அவர் உலாவிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவரது கட்டளை என்னவென்றால் பாளயம் முழுவதிலும் அசுத்தமான எதுவும் காணப்படக்கூடாது. அதாவது நம்மைச் சார்ந்த அனைத்தும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். கணவன்-மனைவி உறவு பரிசுத்தமாயிருக்கவேண்டும்;

பெற்றோர்-பிள்ளைகள் உறவு தூய்மையாயிருக்கவேண்டும்; கொடுத்தல்-வாங்கல் காரியங்கள், ஊழிய ஈடுபாடுகள், அயலகத்தாருடன் தொடர்பு, நட்பு மற்றும் சமுதாயப் பொறுப்புகள் ஆகியவற்றில் பரிசுத்தம் காணப்படவேண்டும். நமது சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்கள் யாவும் தூய்மையாயிருத்தல் அவசியம். நமது பாளயத்திலுள்ள அனைத்துமே பரிசுத்தமாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் பரிசுத்தமாயிருந்துவிட்டு, வேறு சில பகுதிகளைக் குறித்துக் கவலையீனமாக இருந்தால் அது போதுமானது அல்ல. சாலொமோன் ஞானி இந்நிலையைப் பின்வருமாறு எச்சரிக்கிறார்: ''செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்'' (பிர 10:1). பரிமள தைலம் விலையேறப்பெற்றது. அதில் ஒரு செத்த ஈயும் விழுந்து அதை நாற்றமெடுக்கச்செய்ய அனுமதிக்கவேண்டாம். நீளவாக்கிலும், அகலவாக்கிலும் நமது பாளயத்தின் எல்லா இடங்களும் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

## ■ யோசுவா 3:5

''யோசுவா மக்களிடம்: உங்களைப் **பரிசுத்தம்**பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்.''

யோர்தான் நதியைக் கடந்து எரிகோ நகரை மேற்கொள்வதற்காகவே இந்த ஆயத்தம். யோர்தானைக் கடப்பது எளிதல்ல, ஏனெனில் அதன் இருபுறமும் கரை புரண்டு வெள்ளம் ஓடியது; எரிகோவை வெற்றிகொள்வதும் சுலபமல்ல, ஏனெனில் எரிகோ என்பது சுற்றிலும் மிகப்பெரிய கோட்டைச் சுவர்களைக்கொண்ட மாபெரும் நகரம். எப்படி யோர்தானைக் கடந்து சென்று, எரிகோவை ஜெயிப்பது என்று மக்கள் திகைத்துக் கவலையுடன் நின்றனர். தேவ மனிதனாகிய யோசுவா தேவனுடைய சித்தத்தைச் சொல்கிறார். ''மிக எளிது, மிகச் சுலபம்! உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள், நாளைக்குக் கர்த்தர் உங்களுக்கு அற்புதங்களைச் செய்வார்.'' நம்மெல்லாருக்கும் நமது வாழ்வில் யோர்தான் மற்றும் எரிகோ போன்ற சோதனைகள் உண்டு. நாம்



கடக்க முடியாத பல இடையூறுகளையும், தடைகளையும் எதிர்கொள்கிறோம்; நாம் மேற்கொள்ள முடியாத பல தடங்கல்கள் நமக்கு உண்டு. இதை மேற்கொள்வது இயலாத காரியம் என்ற முடிவை எடுக்கும் நம்பிக்கையற்ற நிலைக்கு வந்துவிடுகிறோம். ஆனால் இந்நிலையில் தான் இரட்சிப்பின் அதிபதியானவர் கடவுளின் செய்தியுடன் வருகிறார். ''இன்றைக்கு உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்குத் தேவன் உங்களுக்கு அற்புதங்களைச் செய்வார்.''

தேவனது நாளைய அற்புதங்கள் நமது இன்றையப் பரிசுத்தமாகுதலைப் பொறுத்துள்ளன. ஏனெனில் சேனைகளின் கர்த்தருக்கு எந்த யுத்தமும் கடினமானது அல்ல; அவருக்கு முன்பாக உலர்ந்துபோகாத யோர்தான் எதுவுமில்லை; அவருக்கு முன்பாகத் தரைமட்டமாக்க முடியாத எரிகோ எதுவுமில்லை. அவர் கர்த்தாதி கர்த்தர்; அவர் சேனைகளின் கர்த்தரானவர். எல்லாச் சேனைகளும் அவரது ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றன. அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமேயில்லை. இப்பொழுது நீங்கள் கடந்துசென்றுகொண்டிருக்கும் பிரச்னை மலையைப்போல உங்களுக்குத் தோன்றினால், தேவன் உங்களது மிகப்பெரிய பிரச்னையைவிடப் பெரியவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் கட்டாயமாகச் செய்யவேண்டிய ஒரு காரியம் உண்டு. ஒரு போர் வீரனைப்போல தம்மை ஆயத்தப்படுத்தியிருக்கும் சேனைகளின் கர்த்தருடன் உங்களை வரிசைப்படுத்த நீங்கள் உங்களைப் பரிசுத்தமாக்குதல் அவசியம்.

## ■ யோசுவா 7:13,25,26

எரிகோவுடன் ஒப்பிடும்போது மிகச் சிறிய நகராகிய ஆயியில் நடந்த யுத்தத்தில் தேவ மக்கள் தோற்கடிக்கப்பட்டனர். அது தலைவனாகிய யோசுவாவுக்கு வெட்கத்தையும் அவமானத்தையும் உண்டாக்கிய அனுபவமாக இருந்தது. எனவே அவர் தேவனுக்குமுன் முகங்குப்புற விழுந்து, காலை முதல் மாலை வரை நெடுஞ்சாண்கிடையாகக் கிடந்தார். மூப்பர்கள் எல்லாரும் தங்கள் தலைகளில் புழுதியை வாரிப் போட்டுக்கொண்டு துக்கித்தனர். அவர்கள் தேவனிடம், ''கர்த்தாவே, உமது மக்களுக்கு ஏன் தோல்வியை அனுமதித்தீர்? உமது மக்களைக் குறித்துப்

புறவினத்தவர் என்ன நினைப்பார்கள்? தேவனே, உமது பெயருக்கு இந்தப் பழிப்பை ஏன் அனுமதித்தீர்?'' என்று கதறினர். 13ஆம் வசனத்தில் யோசுவாவிடம் கர்த்தர் சொன்னது: ''எழுந்திரு, நீ மக்களைப் **பரிசுத்தம்** பண்ணிச் சொல்லவேண்டியது என்னவென்றால்: நாளையத் தினத்துக் காய் உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; இஸ்ரவேலரே, சாபத்தீட்டானது உங்கள் நடுவே இருக்கிறது; நீங்கள் சாபத்தீட்டானதை உங்கள் நடுவிலிருந்து விலக்காதிருக்கும்வரை, நீங்கள் உங்கள் எதிரி களுக்கு முன்பாக நிற்கமுடியாது என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.'' உங்களது ஜெபத்தையும் உபவாசத்தையும் அதிகரிப்பது பிரச்னைக்குத் தீர்வு அல்ல. உங்களது ஆடைகளைக் கிழிப் பதும், உங்களது தலைகளில் புழுதியை வாரிப் போட்டுக்கொள்ளுவதும் பிரச்னைக்குத் தீர்வு தராது. சாபத்தீட்டானதை உங்கள் நடுவிலிருந்து விலக்குங்கள்.

முதலாவதாக, இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தரது சமூகத்தில் கொண்டுவரப்பட்டனர். எல்லாக் கோத்திரங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக வரப்பண்ணினபோது, ஒரு கோத்திரம் குறிக்கப்பட்டது. குறிக் கப்பட்ட அந்தக் கோத்திரத்தில் எல்லா வம்சங்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டுவரப்பட்டன. ஒரு வம்சம் குறிக்கப்பட்டது. அந்த வம்சத்திலுள்ள எல்லா வீட்டாரும் வரவழைக்கப்பட்டபோது, ஒரு வீட் டார் குறிக்கப்பட்டனர். அந்த வீட்டாரை ஒருவர்பின் ஒருவராக கர்த்தரது சமூகத்தில் வரப்பண்ணினபோது, இறுதியில் குற்றவாளி கண்டுபிடிக் கப்பட்டான். இது ஆர்வத்தைத் தூண்டும் ஒரு வரிசைக் கிரமம் ஆகும் — கோத்திரம், வம்சம், வீட்டார், தனி நபர் (வச 14). யார் அந்தக் குற்ற வாளி? ஆகான். அவன் கர்த்தரை ஆராதிக்கும் மற்றும் துதிக்கும் குழு வாகிய யூதா கோத்திரத்தைச் சார்ந்தவன்; மீட்பராகிய இயேசு பிற்காலத் தில் பிறக்கப்போகிற யூதா கோத்திரத்தில் பிறந்தவன். அந்தக் கோத்தி ரத்தில், அந்த வம்சத்தில், அந்த வீட்டாரில், அந்த மனிதன் ஆகான் இத்தகைய மீறுதலைச் செய்தான். திருச்சபையைக் குறித்த என்னே துல்லியமான காட்சி இது! நாம் கர்த்தரைத் துதிக்கும் மக்கள் கூட்டம். தேவன் நம்மை உண்மையுள்ள உக்கிராணக்காரர் என்று நம்பி அவரது சத்தியங்களை நம்மிடம் ஒப்படைத்துள்ளார். ஆனால் நம்மிடையே ஆகான்கள் இருப்பது வெட்கப்படத்தக்க காரியம். அவர்கள் ஆகானை



யும், அவனது குடும்பத்தையும் மற்றும் அவனது உடைமைகளையும் என்ன செய்தனர்? 25, 26ஆம் வசனங்களை வாசியுங்கள்: ''அங்கே யோசுவா: நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான்; அப்பொழுது இஸ்ரவேல ரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி, அவன்மேல் இன்றுவரை இருக்கும் பெரிய கற்குவியலைக் குவித்தார்கள். இப்படியே கர்த்தர் தமது கடுஞ் சினத்தை விட்டு மாறினார்; ஆகையால் அவ்விடம் இன்றுவரை ஆகோர் பள்ளத்தாக்கு என்னப்படும்.'' ஆகோர் என்றால் கலக்கம் என்று பொருள்.

இதிலிருந்து, தேவன் நமக்குத் தரவிரும்பும் படிப்பினை என்ன வென்றால், பரிசுத்தம் இல்லையேல் வெற்றி இல்லை என்பதே. உங் களது தனிப்பட்ட வாழ்வில், குடும்பத்தில், சமுதாயத்தில், வேலையில் மற்றும் திருப்பணியில் ஏற்படும் பிரச்னைகளில் அவர் உங்களுக்கு வெற்றியளிக்க விரும்புகின்றார். அவர் உங்களுக்கு முன்னர் செல் கின்றார். அவர் உங்களுக்குப் புதிய எல்லைகளைக் கொடுக்க விரும்பு கின்றார். ஆனால் தேவனுடைய திட்டத்தைப் பலனற்றதாக்கிவிடாதீர் கள். சபையில் நீங்கள் ஓர் ஆகானாக இருக்காதீர்கள். தனிப்பட்ட நபர்கள் தொடர்ந்து பாவத்தில் வாழுதல் முழுச்சபையாருக்கும் தோல்வியை உண்டாக்குகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் அவ்வளவு கண்டிப்புள்ளவராக இருந்திருப்பானால், புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது அவர் தமது தரத்தைச் சற்றேனும் குறைக்கமாட்டார். பழைய ஏற்பாட் டின் பாளயம் என்பது புதிய ஏற்பாட்டுச் சபைக்கு அடையாளமாக இருக் கிறது. சாபத்தீட்டானதைப் பாளயத்திலிருந்து விலக்கிய பின்புதான் தேவ மக்கள் வெற்றி பெற்றனர். உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு, தேவனுக்கு மகிமையைச் செலுத்துங்கள் (வச 19). ஆகானின் சடலத் தின் மேலிருக்கும் கற்குவியலானது சபையார் அனைவரும் நல்வாழ்வும் ஆசீர்வாதமும் பெற ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் வாழ்வில் பரிசுத் தத்தைக் கடைப்பிடிக்கவேண்டியதின் முக்கியத்துவத்தை நினைவு படுத்தட்டும்.

குழுவினர் அனைவரையும் ஒரு மனிதனின் பாவம் எப்படிப் பாதித் தது என்பதைப் பார்த்தோம். கொரிந்து சபையிலே இப்படிப்பட்டதொரு பிரச்னை இருந்தது. அங்கே ஒரு மனிதன் விபசாரப் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தான். அவனால் சபையார் அனைவரின் வாழ்விலும் துர்

நாற்றம் வீசியது. அந்நிலையைச் சீர்ப்படுத்துவதற்காகவே பவுலடியார் மூன்று அல்லது நான்கு அத்தியாயங்கள் எழுதவேண்டியதாயிற்று. அவர் கேட்கிறார்: ''கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப் பாக்கும் என்று அறியீர்களா?'' (1 கொரி 5:6ஆ). நீங்கள் தொடர்ந்து பாவத்தில் நிலைத்து நின்றால், நீங்கள் திருச்சபையின் தலைமைத்து வத்தின் நேரத்தையும் ஆற்றலையும் வீணாக்குவீர்கள். உங்களது மனந் திரும்புதலுக்குத் தூண்டியாக தேவனது நீடிய பொறுமையைப் புரிந்து கொள்ளுங்கள். தேவனது பொறுமையை ஒருபோதும் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். தேவனுடைய பொறுமை மனந்திரும்புதலுக்கென்று நம்மை உணர்த்துகின்றது, நம்மை ஊக்குவிக்கின்றது (ரோ 2:4).

## ■ நியாயாதிபதிகள் 16:19,20

''சிம்சோனைத் தெலிலாள் தன் மடியிலே தூங்கவைத்து, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்; அவன் பலம் அவனை விட்டு நீங்கிற்று. அப்பொழுது அவள்: சிம்சோனே, பெலிஸ்தர் உன் மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் தூக்கத்தைவிட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான்.''

இவ்வசனப்பகுதி பாவத்தோடு விளையாடிக்கொண்டிருக்கிற ஒரு தேவ மனிதனைக் குறித்த எழுத்தோவியம். அவனது வீழ்ச்சி படிப்படியாக ஏற்பட்டது. பின்மாற்றம் ஒருபோதும் திடீரென்று நிகழ்வதில்லை. பொது வாக அநேகருடைய வாழ்வில் பின்மாற்றம் படிப்படியாக ஏற்படுகின்றது. சிம்சோன் நெருப்புடன் கொஞ்சம் விளையாடத் தொடங்கினான்; இன் னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சமாக விளையாடுவதை அதிகரித்து, இறுதியில் நெருப்பை மடியிலேயே வைத்துக்கொண்டான். ஒருவன் எரியும் நெருப்புத்தழலை மடியில் வைத்திருந்தால் நெருப்பு அவனைச் சுடாமல் இருக்குமா, அல்லது நெருப்பு தன்னைச் சுடாது என்று அவன் எதிர்பார்க்க முடியுமா? (நீதி 6:26-28). இந்த மதியீன மனிதன் அப்படிச் செய்ய முயன்று படுதோல்வியடைந்தான். எதிரிகள் அவன்மீது பாய்ந் தனர். போர்தொடுக்க எக்காள அழைப்பு தொனிக்கப்பட்டபோது அவன்



என்ன சொன்னான்? ''நான் எப்பொழுதும் போலப் போவேன்'' என்றான். இதுதான் ஆபத்து. உங்களது கடந்தகால வெற்றிகளைச் சார்ந்திருப் பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நேற்றைய வெற்றி நாளைய வெற்றிக்கு உத்தரவாதம் அல்ல. அது உங்களை உற்சாகப்படுத்தலாம்; ஆனால் இன்றையச் சூழ்நிலையில் நீங்கள் ஒருபோதும் அதைச் சார்ந் திருக்க முடியாது. நாளைய வெற்றிக்கு இன்றையப் பரிசுத்தமாகுதல் மட்டுமே ஒரே உத்தரவாதம்.

பாவத்தோடு விளையாடாதீர்கள். ஒரு தவளையைப்பற்றி ஞாயிறு பள்ளியில் சொல்லப்படும் கதை ஒன்றுண்டு. கொதிநீர் நிறைந்த ஒரு பாத்திரம் இருப்பதாகக் கொள்வோம். நீங்கள் அதனுள் ஒரு தவளையை எறிந்தால், அது உடனே துள்ளிக்குதித்து வெளியே வந்துவிடும். ஆனால் அதே தவளையைக் குளிர்ந்த நீருள்ள ஒரு பாத்திரத்தில் போட்டு, அதைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சூடாக்கினால், அத்தவளை இன்னும் அதிக மதிகமாய்ச் சுகமாக இருப்பதாக உணர்ந்து, இறுதியில் இறந்துவிடும். அந்த மதியீனமான தவளையைப்போல இருக்கவேண்டாம். மடியில் நெருப்பை வைத்துக்கொண்டு சுடாமலிருக்க எதிர்பார்க்கவேண்டாம். உலகமும் அதன் துராசைகளும் உங்களைத் தூங்கவும் உறங்கவும் வைப் பதற்குத் தாலாட்டுப் பாட அனுமதிக்கவேண்டாம். ஆன்மீகப் போராட் டம் உங்களுக்கு எக்காளத்தொனி அழைப்பினைக் கொடுக்கிறது. எதிரி எப்போது வருவானென்று உங்களுக்குத் தெரியாது. விழித்திருங்கள், கவனமாயிருங்கள்!

## ■ சங்கீதம் 5:8; 27:11; 110:1-3

''கர்த்தாவே, என் சத்துருக்களை முன்னிட்டு என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் **செவ்வைப் படுத்தும்''** (சங் 5:8).

''கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிரிகளை முன்னிட்டுச் **செவ்வையான** பாதையில் என்னை நடத்தும்'' (27:11).

''கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய எதிரிகளை உமக்குப் பாதப்படியாக்கிப்போடும்வரை, நீர் என்னுடைய வலது பக்

கத்தில் உட்காரும் என்றார். கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் உம்முடைய எதிரிகளின் நடுவில் ஆளுகை செய்யும். உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய மக்கள் மனப்பூர்வமும் **பரிசுத்த** அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உமது இளம் வீரர் உமக்குப் பிறப்பர்'' (சங் 110:1-3). சங்கீதக்காரன் திருச்சபையும் கிறிஸ்துவும் ஜெயங்கொள்ளுவதைக் குறித்துப் பேசுகிறார். ''கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி'' — வேறுவிதமாகச் சொன்னால், பிதாவானவர் குமாரனை நோக்கி — ''நான் உம்முடைய எதிரிகளை உமக்குப் பாதப்படியாக்கிப்போடும்வரை நீர் என்னுடைய வலது பக்கத்தில் உட்காரும். நான் உமக்கு ஆளுகையின் செங்கோலைத் தரப்போகிறேன். நீர் உமது எதிரிகளை ஆளுகை செய்வீர்'' என்று சொன்னார். ஆண்டவர் தனித்து ஆளுகை செய்யமாட்டார்; நாமும் அவருடன் சேர்ந்து ஆளுகை செய்வோம். அவரது பராக்கிரமத்தின் நாளிலே அவரது மக்களாகிய நாம் தன்னார்வப் பணியாளர்களாயிருப்போம் என்று திருமறை சொல்கின்றது; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்கு ஒப்பான பரிசுத்த அலங்காரமுள்ளவர்களாய் — புத்தம் புதிதுபோல் பரிசுத்தமும் நீதியும் உள்ளவர்களாய் — இருப்போம். விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்கு ஒப்பான பரிசுத்த அலங்காரமே ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றியைப் பெற்றுத் தரும்.

இது தேவனுடைய பராக்கிரமத்தின் நாள். இது தேவனுடைய வெற்றியின் நாள். எல்லா இடங்களிலும் தேவன் தமது விரோதிகளைத் தமக்குக் கீழ்ப்படுத்தி வருகிறார். சத்துருவானவன் ஆண்டாண்டாய்த் தனது கட்டுப்பாட்டுக்குள் அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆத்துமாக்கள்மீது அவனுக்கு இருந்த பிடிப்பை இழந்துபோகும் நாட்கள் இவை. தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்துவிடம் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். மலைவாழ் மக்களினங்களும், கிராமங்களும் முழுவதுமாக உயிருள்ள கடவுளை ஆராதிக்க முன்வந்துள்ளன. ஆதிவாசிகளில் பெரும்பான்மையானோர் குருட்டு நம்பிக்கையின் அடிமைத்தனத்தினின்றும், மூடப்பழக்கம் என்ற இருளினின்றும் வெளியே வந்துகொண்டிருக்கின்றனர்.



தேவ சேனையில் நாமனைவரும் தன்னார்வப் பணியாளராயிருக்கிறோம். தேவன் தமது சேனையில் நம்மைப் பலவந்தமாய்ச் சேர்ப்பவரல்ல. நீங்கள் தன்னார்வத் தொண்டர்களாயிருப்பீர்களென்று சொல்லப்பட்டுள்ளது. தேவ மக்கள் தேவ சேனையில் சேர்ந்து, பிசாசின் ஆதிக்கத்தில் சிக்கியிருக்கும் மக்களை விடுவிப்பதற்காகப் போர் வீரர்களாகப் புறப்பட்டுச்சென்றுகொண்டிருக்கும் நாட்கள் இவை. ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவெனில், அவர்கள் ஒவ்வொருவரும் விடியற்காலக் கர்ப்பத்திலிருந்து பிறக்கும் வெண்பனியைப்போன்ற பரிசுத்த அலங்காரத்தைப் பிரதிபலிக்கிறவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் அனுதினமும் கடவுளிடம், ''கர்த்தாவே, என் எதிரிகளை முன்னிட்டு என்னை நீதியின் பாதையில் நடத்தும்'' என்று வேண்டுதல் செய்யவேண்டும். தாவீது அவரது வாழ்நாள் முழுவதும், அவரது ஆட்சிக்காலம் முழுவதும், ஏராளமான போர்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவர் எப்பொழுதுமே எதிரிகளால் சூழப்பட்டிருந்தார். தாவீது இடைவிடாமல் ஜெபித்தது: ''ஆ, கர்த்தாவே! என் எதிரிகள் என்னைச் சுற்றிலும் அநேகர் உள்ளனர். அவர்கள் எப்பொழுதும் ஒரு நாயை வேட்டையாடுவதுபோல என்னை வேட்டையாடுகிறார்கள். ஒரு கவுதாரியை வேட்டையாடுவதுபோல என்னை வேட்டையாடுகிறார்கள். கர்த்தாவே, நான் எப்பொழுதும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந்தப் போர்முனைகளைக் குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனால் என் சத்துருக்களை முன்னிட்டு என்னை நீதியின் பாதையில் நடத்தும்.''

தாவீது ஒரு முறை பாவத்தில் விழுந்தார். அவரிடம் ஒரு தீர்க்கன் அனுப்பப்பட்டார். எதிரியானவன் மகிழும்படியான ஒரு தருணத்தைக் கொடுத்துவிட்டாய் என்று அவர் தாவீதைக் கடிந்துகொண்டார். தாவீது மனம் வருந்தி தனது பாவத்தைத் தேவனுக்கு முன்பாக 51ஆம் சங்கீதம் மூலம் அறிக்கையிட்டார். அவர் பாவ அறிக்கை செய்தார்; வெற்றி பெற்றவராக வெளியே வந்தார்.

## ■ யோவான் 14:30

''இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை.''

கிறிஸ்து இயேசுவின் எவ்வளவு பெரிய சாட்சி இது! இதோ, இந்த உலகத்தின் அதிபதி இங்கே வருகிறான், ஆனால் அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை — என் வாழ்வில் நான் ஒருபோதும் அவனுக்கு இடங் கொடுத்தது இல்லை. சகோதர சகோதரிகளே, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பிசாசுக்கு இடமளித்தீர்களென்றால், நீங்கள் அவனோடு போராடி மேற்கொள்ள இயலாது. உங்களது வாழ்வில் பிசாசுக்கு இடமளித் துவிட்டு, வேறொருவர் வாழ்க்கையிலிருந்து பிசாசை வெளியேறச் சொல்லவும் உங்களால் முடியாது. பிரதான ஆசாரியன் ஸ்கேவாவின் ஏழு குமாரரும் செய்தது நினைவிருக்கிறதா? அவர்கள் பொல்லாத ஆவி பிடித்திருந்தவர்களைப் பார்த்து, ''பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பெயரால் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்'' என்று சொல்லி அசுத்த ஆவிகளை அவர்களினின்று துரத்திவிட முயன்றனர். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி; ''இயேசுவை அறிவேன், பவுலை யும் அறிவேன், நீங்கள் யார்?'' என்று சவால் விட்டது (அப் 19:13-15). பொல்லாத ஆவி சொன்னதின் பொருள் என்னவெனில், ''நான் உங்கள் வீட்டில் குடியிருப்பவன். நான் உங்களிடம் வசிப்பவன். எனவே நீங்கள் ஏன் என்னை வெளியே துரத்துகிறீர்கள்?'' என்பதாகும். ''இதோ, உலகத் தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை. நான் ஒருபோதும் அவனது ஆலோசனைகளுக்குச் சம்மதம் தெரிவித்த தில்லை. நான் ஒருபோதும் அவனுடன் நேரம் செலவழித்ததுமில்லை.'' இதுவே நமது சாட்சியாக இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் இந்த உலகத்தின் அதிபதியை மேற்கொள்ள இயலும்.

### ■ ரோமர் 6:12-14

''நீங்கள் உடலுக்கடுத்தப் பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக் கேதுவான உங்கள் உடலில் பாவம் ஆளாதிருப்பதாக'' (வச 12). ''நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டி ருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது'' (வச 14). ''உங்கள் உடலில் பாவம் ஆளாதிருப்பதாக'' என்று 12ஆம் வசனமும், ''பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது'' என்று 14ஆம் வசனமும் சொல்லுகின்றன. நீங்கள் எப்போது வெற்றிபெறுவீர்கள்? நீங்கள் எப்பொழுது பாவத்தின்மேல் ஜெயங்கொள்ளுவீர்கள்? உங்கள் வாழ்க்



கையில் பாவம் ஆளுகைசெய்ய நீங்கள் அனுமதிக்காமல் இருக்கும் போது, பாவம் உங்களை ஆளுகை செய்யாது. இது மிக முக்கியமான தொரு சத்தியம். நீங்கள் பாவத்துக்குச் சம்மதம் தெரிவித்தால், உங்கள் வாழ்வில் பாவம் ஆளுகை செய்ய அனுமதிக்கிறீர்கள். ஒவ்வொரு முறை நீங்கள் பாவத்துக்கு மறுப்பு தெரிவிக்கும்போதும் உங்களது ஆன்மீகத் தசைநார்கள் மேலும் மேலும் பலமடைந்து உறுதியாகின்றன. நீங்கள் மீண்டும் மீண்டும் பாவத்துக்கு உடன்பட்டால் நீங்கள் மென்மேலும் பலங்குன்றிக்கொண்டே போவீர்கள். பாலியலில் பரிசுத்தம் என்ற பகுதி வாலிப மக்களுக்கு ஏற்படும் பிரதான சோதனைகளில் ஒன்று. ஒருவரும் இந்தச் சோதனை வராமல் தப்பிச்செல்லவோ நழுவிச்செல்லவோ முடி யாது. அது உங்களுடன் இருக்கும். இந்தப் பகுதியில் நீங்கள் எப்படிப் பலமுள்ளவர்களாய் மாறுவது என்று வியக்கலாம். ஒரு முறை நீங்கள் மறுப்பு தெரிவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள், நீங்கள் பலமுள்ளவர்களாய் மாறுவீர்கள். இரு முறை மறுப்பு தெரிவியுங்கள், இன்னும் கொஞ்சம் பலமடைவீர்கள். மூன்று முறை நீங்கள் மறுப்பு தெரிவித்தால் மேலும் மேலும் பலமடைவீர்கள். இது எளிய சத்தியம்.

நான் தொடர்ந்து பாவத்தில் வாழ்ந்துகொண்டு தேவனுடைய நீதி என்னில் வெளிப்படும்படி நான் எதிர்பார்க்க முடியாது. இன்றைய உலகில் பரிசுத்தத்தைக் குறித்த வஞ்சிக்கும் போதனை ஒன்று நடமாடிக் கொண்டிருக்கிறது: ''நான் விரும்புகிறபடி வாழலாம்; நான் விரும்பு கிறதையெல்லாம் செய்யலாம்; ஆனால் நான் தேவ சமூகத்தில் வரும் போது கிறிஸ்துவின் நீதி என்னைச் சூழ்ந்துகொள்ளும்; ஆகையால் நான் ஒரு நீதிமான்.'' இந்த உபதேசம் சத்தியத்துக்குப் புறம்பானது. இது சத் தியம் போலத் தோற்றமளிக்கிறது; ஆனால் உண்மையில் இது சத்தியம் அல்லவே அல்ல. 1 யோவான் 3:7 இதனை விளக்குகின்றது: ''பிள்ளை களே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய் கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ள வனாயிருக்கிறான்.'' யோவான் இந்தப் பொய்யான உபதேசத்தைக் குறித்து நம்மை எச்சரிக்கிறார். நீதிக்கு இரு பக்கங்கள் உண்டு. ஒன்று நிலையின்படியான (standing) நீதி — நாம் கிறிஸ்துவுக்குள் யார் என் பதைக் குறிக்கும் (1 கொரி 1:30). அடுத்தப் பக்கம் நடைமுறை (state) நீதி — நாம் எப்படிக் கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்கிறோம் என்பதைக்

குறிக்கும் (1 யோ 3:7). ஒருவனும் உங்களை வஞ்சியாதிருக்கட்டும். பாவம் உங்களை ஆளுகை செய்ய அனுமதிக்காதீர்கள்; அப்பொழுது பாவம் உங்களை ஆளுகை செய்யாது.

## ■ 2 கொரிந்தியர் 6:7; 10:4-6

2 கொரிந்தியர் 6:7இல் தேவனுடைய போராயுதங்கள் எல்லாவற்றையும் சேர்த்து இவ்விதம் கொடுக்கப்பட்டுள்ளது: ''**நீதியாகிய** வலதிடதுபக்கத்து ஆயுதங்கள்.''

2 கொரிந்தியர் 10:4-6 தலைவர்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டுள்ளது; மற்றவர்களும் இதைப் பயனுள்ளதாகக் கண்டுகொள்வர், ஆனால் இது குறிப்பாகத் தலைவர்களுக்குரிய செய்தியாகும். ''எங்களுடைய போராயுதங்கள் உலகைச் சார்ந்தவையாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்கும் நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயிருக்கிறோம்.''

உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, மற்ற எல்லாக் கீழ்ப்படியாமையையும் நீங்கள் தண்டிக்கலாம் என்று 6ஆம் வசனம் சொல்லுகிறது. நீங்கள் சபையில் ஒரு மூப்பராக அல்லது ஒரு கண்காணிப்பாளராக அல்லது ஏதாவது ஒரு நிலையில் ஒரு தலைவராக இருக்கலாம். நீங்கள் கீழ்ப்படியாதவர்களைக் கண்டித்து ஒழுங்கைக் கடைப்பிடிக்கவும் நிலைநிறுத்தவும் விரும்பினால், முதலாவது உங்களது கீழ்ப்படிதல் நிசமானதாய் இருக்கவேண்டும். தேவனுக்கும் தெய்வீக அதிகாரத்துக்கும் கீழ்ப்படியாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் தலைவன் மற்ற மக்கள் மேல் இந்த அதிகாரத்தைச் செலுத்த முடியாது. எனவேதான் நூற்றுக்கு அதிபதி ஓர் அழகிய எடுத்துக்காட்டைச் சொன்னான்: ''நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவன். எனவே நான் பிறர்மேல் அதிகாரம் செலுத்துகிறேன். இயேசுவாகிய நீர் பிதாவாகிய தேவனின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவர். எனவே நீர் ஒரு வார்த்தையைக் கட்டளையாகச் சொன்னால் போதும், பிசாசு ஓடிப்போவான், எனது வேலைக்காரன் குணமாவான்.'' ஆன்மீகப் போராட்டத்தில் அதிகாரத்தைச் செயல்படுத்த, நாம் தேவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோமாவென்று நம்மைப் பரிசோதித்துக்கொள்ளவேண்டும்.



## ■ யாக்கோபு 4:7-10

''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் **பரிசுத்தமாக்குங்கள்**. நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறட்டும். கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.''

நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் பிசாசு உங்களுக்குக் கீழ்ப்படிந்து உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனுக்கு முன்பாகப் பயபக்தியுடனும் தாழ்மையுடனும் அமர்ந்து, ''கர்த்தாவே, நான் அதமானேன்'' என்று அறிக்கையிடுங்கள். அப்பொழுது பிசாசு உங்களை விட்டுப் பறந்தோடச்செய்யும் அதிகாரத்தை நீங்கள் செயல்படுத்துவதற்கு ஏதுவாகக் கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

## ■ வெளிப்படுத்துதல் 19:11,14

''பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவர் எனப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்'' (வச 11). ''பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் **சுத்தமுமான** மெல்லிய ஆடையணிந்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றனர்'' (வச 14).

இயேசு வெண்குதிரைமேல் ஏறியிருந்தார், எல்லாப் பரிசுத்தவான்களும் வெண்குதிரைகள்மேல் ஏறியிருந்தனர் — இதுவே கர்த்தருடைய சேனையாகும். இயேசு உண்மையும் சத்தியமும் உள்ளவர் என அழைக்கப்பட்டார். எல்லாப் பரிசுத்தவான்களும் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய ஆடைகளை அணிந்திருப்பார்கள். நாம் முடிவில் விண்ணகத்தில் மகிழ்வுடன் அனுபவிக்கப்போகிறவைகளை இம்மண்ணுலகிலேயே முன்ருசியாய் அனுபவிக்க முடியும். ஆன்மீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அருமையான தேவனது பரிசுத்தவான்களே, உங்களது இயேசு வெள்ளைக் குதிரையின்மேல் ஏறியிருக்கிறார். குதிரையின் மணிகளிலே *'கர்த்தருக்குப் பரிசுத்தம்'* என்று எழுதப்பட்டுள்ளது. தேவப் புனிதர்களாகிய நீங்களும் வெள்ளைக்குதிரைகள்மேல் ஏறி அமர்ந்திருக்கிறீர்கள். உங்களது குதிரைகளின் மணிகளிலும் *'கர்த்தருக்குப் பரிசுத்தம்'* என்று செதுக்கப்பட்டுள்ளது.

*சேனையதிபன் நம் கர்த்தருக்கே*
*செலுத்துவோம் கனமும் மகிமையுமே*
*அற்புதமே தம் அன்பெமக்கு — அதை*
*அறிந்தே அகமகிழ்வோம்*

*ஜெய கிறிஸ்து முன் செல்கிறார்*
*ஜெயமாக நடத்திடுவார்*
*ஜெயக் கீதங்கள் நாம் பாடியே*
*ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்*
*ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே*

*கறை திரை முற்றும் நீங்கிடவே*
*கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்*
*வருகையில் எம்மைச் சேர்க்கும் வரை*
*வழுவாமல் காத்துக் கொள்வார்*

*—சகோதரி சாராள் நவரோஜி,* 1938-2014



# 10

# பலவீனங்களில் பரிசுத்தம்

## Holiness in Weaknesses

### ''யேகோவா-மாக்கே'' ("Jehovah-Makkeh")

எசேக்கியேல்7:9இல் யேகோவா தேவனின் மிகக் கடுமையான ஒரு கூட்டுப் பெயரைக் காண்கிறோம்: ''என் கண் உன்னைத் தப்பவிடாது; நான் இரங்காமல் உன் வழிகளுக்கு ஏற்றதை உன்மேல் வரப்பண்ணுவேன்; உன் அருவருப்புகளுக்கு ஏற்றது உன் நடுவில் வந்திருக்கும்; அப்பொழுது அடிக்கிறவராகிய நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.'' யேகோவா-யீரே, யேகோவா-ரஃப்பா, யேகோவா-நிசி, யேகோவா-ஷாலோம், யேகோவா-ரா, யேகோவா-சிட்கெனு மற்றும் யேகோவா-ஷம்மா ஆகிய யேகோவாவின் ஏழு கூட்டுப் பெயர்களும் கிறிஸ்தவர்கள் நன்கு அறிந்துள்ளவை. ஆனால் கிறிஸ்தவ வட்டாரங்களிலே இந்தக் குறிப்பிட்ட பெயர் விடப்பட்டுள்ளது. ''நான் அடிக்கிறவராகிய கர்த்தர்'' என்று அவர் சொல்லுகிறார். அதன் எபிரெய பதம் ''யேகோவா-மாக்கே'' என்பதாகும்.

தேவன் நம்மை அடிப்பதின் பிரதான நோக்கம் நம்மை அவரது பரிசுத்தத்தில் பங்குள்ளவர்களாய் மாற்றுவதேயாகும். எபிரெயர் 12:9-11 வாசியுங்கள்: ''இவ்வுலகத் தந்தையர் நம்மைத் தண்டிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கும்படி ஆவிகளின்

பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி சிறிது காலம் கண்டித்தார்கள்; இவரோ தம்முடைய **பரிசுத்தத்துக்கு** நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்முடைய பயனுக்காகவே நம்மைத் தண்டிக்கிறார். எந்தத் தண்டனையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது **நீதியாகிய** சமாதான பலனைத் தரும்.'' 10ஆம் வசனத்தில் ''பரிசுத்தத்தைக்'' குறித்தும் 11ஆம் வசனத்தில் ''நீதியைக்'' குறித்தும் வாசிக்கிறோம். எனவே தேவன் நமது வாழ்வில் அனுமதிக்கும் எல்லாத் துன்பங்களுக்கான முழு நோக்கத்தையும், சாராம்சத்தையும் இவ்வசனங்களில் காண்கிறோம். தொடர்ந்து நாம் வாசிக்கும்போது 14ஆம் வசனத்தில், ''யாவரோடும் சமாதானமாயிருக்கவும், **பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும்** நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' என்று எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எனவே கடுமையான தண்டனைகளின்போது பரிசுத்தத்தை நாடுங்கள்; பாடுகளை அனுபவிக்கும்போது பரிசுத்தத்தை நாடுங்கள் — அதுவே பலவீனத்தில் பரிசுத்தம் ஆகும்.

## தண்டனை ஏன்?

எந்தக் காலக்கட்டத்திலும் பிரச்னை ஒன்றுமில்லாத கிறிஸ்தவன் ஒருவனும் இருந்ததில்லை. ''வீட்டுக்கு வீடு வாசற்படி!'' ஒவ்வொரு தனி நபருக்கும் அவனுக்குரிய சொந்தப் பிரச்னைகள் உண்டு; ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதற்குரிய சொந்தப் பிரச்னைகள் உண்டு. நமது எல்லாப் பாவங்களினின்றும் நம்மை இரட்சித்த தேவன், நமது எல்லா நோய்களையும் நீக்கி நம்மைக் குணமாக்குவதாகவும் நமது எல்லா உபத்திரவங்களினின்றும் நம்மை விடுவிப்பதாகவும் வாக்குகளைக் கொடுத்த தேவன், நம்மை ஏதோவொரு நெருக்கடியில் தொடர்ந்து வைத்திருப்பது ஏன்? நாம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற பின்னரும், நாம் திருமுழுக்கும் ஆவியின் அபிஷேகமும் பெற்ற பின்னரும், நாம் நம்மை முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்த பின்னரும், நமது வாழ்வில் நாம் பல தியாகங்களைச் செய்து அவருக்காகப்



பணி செய்த பின்னரும் கர்த்தர் பல உபத்திரவங்களை நம்மோடு தங்கியிருக்கும்படி விட்டு வைத்திருப்பது ஏன்? அவர் ஏன் அப்படிச் செய்கிறார்? இதற்குரிய தெளிவான, நேரடியான பதிலை நியாயாதிபதிகள் 2:23-3:4இல் காணலாம் —

''அதற்காகக் கர்த்தர் அந்த மக்களினங்களை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும், அவைகளைச் சீக்கிரமாய்த் துரத்திவிடாமலும் விட்டுவைத்தார்'' (நியா 2:23). ''இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்குமுன் யுத்தம் செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படி பழக்குவிப்பதற்காகவும் கர்த்தர் அந்த மக்களினங்களை விட்டுவைத்தார்'' (3:2). ''கர்த்தர் மோசேயைக்கொண்டு தங்கள் பிதாக்களுக்கு விதித்த கட்டளைகளுக்கு இஸ்ரவேலர் கீழ்ப்படிவார்களோ என்று அறியும்படி, இஸ்ரவேலரை அவர்களாலே சோதிப்பதற்காக அவர்கள் விடப்பட்டிருந்தார்கள்'' (3:4). இஸ்ரவேலரை யுத்தம் செய்யப் பழக்குவிக்க வேண்டும் என்ற பிரதான நோக்கத்துடன் கர்த்தர் அவர்களது தலைவனாகிய யோசுவாவின் கரத்தில் சில எதிரிகளை ஒப்புக்கொடாமல் விட்டுவைத்தார். இரண்டாவதாக, இஸ்ரவேலர் கர்த்தரது கட்டளைகளுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிவார்களோ என்று சோதித்தறியும்படி அப்படிச் செய்தார். இஸ்ரவேலரின் பிரச்னைகளை அவர்களைவிட்டு நீக்காமல் தேவன் விட்டுவைத்ததற்கான இரு காரணங்கள் இவைதான்!

நாம் பிரச்னைகளினின்று விடுதலை பெற ஜெபிக்கக்கூடாது என்பது அதன் பொருளாகுமா? இல்லை, ''ஆபத்து நாளில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்'' என்கிறார் ஆண்டவர் (சங் 50:15). ''நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலுமிருந்து அவனை விடுவிப்பார்'' என்றும் வேதம் சொல்லுகிறது (சங் 34:19). எனவே நமது பிரச்னைகளினின்று நம்மை விடுவிக்கும்படி நாம் கர்த்தரை நோக்கிக் கதறவேண்டும். தேவன் நம்மை விடுவிப்பார் என்ற வாக்கு நமக்கு உண்டு. ஆனால் ஒரு பிரச்னைக்குத் தீர்வு கிடைத்த பிறகு, இன்னொரு பிரச்னை தோன்றும். அது கடல் அலைகளைப் போன்றது. ஒரு மிக உயர்ந்த அலை வரும்போது நாம் என்ன செய்யவேண்டும்? அப்படியே அலைக்குள் மூழ்கிக் கொள்ளவேண்டும். பின்னர் அந்த அலை போய்விடும். நாம் எப்

பொழுதும் அப்படியே நின்றுகொண்டிருக்க முடியாது. முன்னால் வந்த அலையைவிடப் பெரிதும் உயரமுமான இன்னொரு அலை உங்களை நோக்கி வரக்கூடும். அவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக அலைகளை தேவன் ஏன் அனுப்புகிறார்? வெள்ளம் வரும்போது அதற்குள் நாம் எப்படி பாதுகாப்பாயிருக்கவேண்டும் என்று கற்பிப்பதற்காக; நமது கரங்களை யுத்தம் செய்யப் படிப்பிக்கிறதற்காக. ''என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலை யாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' என்றார் தாவீது (சங் 144:1). கரங்கள் என்ற பதம் பொதுவான வேலையைக் குறிக்கும்; விரல்கள் என்ற பதம் நுணுக்கமான வேலையை நுண்திறனுடன் செய்வதைக் குறிக்கும். இவை எல்லாவற்றையும் தேவன் நமக்குக் கற்பித்துக்கொண்டேயிருக் கிறார். நாம் பாடுகளினூடே செல்லவில்லையென்றால், நாம் சோதிக் கப்பட முடியாது; நாம் சோதிக்கப்படவில்லையென்றால், நாம் நம்பத் தகுந்தவர்களாய் மாற இயலாது.

### பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம்

தூய்மையற்ற மக்களைத் தூய்மையானவராக மாற்றுவதற்காக அல்ல, தூய்மையான மக்களை மேலும் தூய்மையானவர்களாக மாற்று வதற்காகவே பாடுகள் அனுமதிக்கப்படுகின்றன. யோபு அவனது தலை முறையிலே நீதிமானாயிருந்தவர். சாத்தானிடம் தேவன், ''என் தாச னாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க் கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூவுலகில் ஒருவனும் இல்லை'' என்று சொன்னார் (யோபு 1:8). தேவனே ஒரு மனிதனைக் குறித்து சாட்சி சொல்லுகிறார் எனில் நிச்சயமாக அது உண்மைதானே? முதல் அத்தியாயத்திலேயே யோபு ஒரு நீதிமான் என்று தேவன் சொல்லுகிறார். அப்படியானால் அவர் ஏன் அத்தனை வேதனைகளையும் அவரது வாழ்வில் அனுமதித்தார்? முதல் அத்தியாயத்தில் நீதிமானாயிருந்த யோபுவை 42ஆம் அத்தி யாயத்தில் இன்னும் கூடுதல் நீதிமானாக மாற்றுவதற்காகத்தான். ஏனெனில் பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாகவேண்டும், நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யவேண்டும் என்பது தேவனுடைய சித்தம் (வெளி 22:11).



எடுத்துக்காட்டாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எடுத்துக் கொள்வோம். எபிரெயர் 5:8,9 வசனங்களில் அவரைப்பற்றி சொல்லப் பட்ட கூற்றுகளை நான் என் வாயினால் சொல்ல அஞ்சுகிறேன்: ''அவர் குமாரனாயிருந்தும் அனுபவித்த பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்.'' கர்த்தருக்குத் துதி செலுத்துவோம். இது ஆவியானவரின் அகத்தூண்டுதலின்படி எழுதப் பட்ட வேத வாக்கியம். எனவே நாம் அதை ஏற்றுக்கொள்ளுகிறோம்; கவனமாகக் கையாளுகிறோம். இயேசு அவரது தாயின் கர்ப்பத்தில் உற் பத்தியானது முதல் அவர் பூவுலகில் வாழ்ந்த நாட்கள் முழுவதும் தேவ னுடைய பரிசுத்தராகவே இருந்தார். கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள் ளும்படி அவர் எப்பொழுதுதான் கீழ்ப்படியாதவராயிருந்தார்? அவர் எப்பொழுதும் கீழ்ப்படிதல் உள்ளவராகவேயிருந்தார். அவர் தமது ஊழியத்தைத் துவக்குமுன்னரே அவரது பிதாவிடமிருந்து, ''நீர் என் னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்'' என்று நற் சாட்சி பெற்றிருந்தார் (லூக் 3:22). இயேசு எப்போது பூரணமற்றவராக இருந்தார்? வேதாகமத்தைப் பக்கம் பக்கமாகப் புரட்டிப்பார்த்து ஏதேனும் ஓரிடத்திலாவது இயேசு பூரணமற்றவராக அல்லது குறைவுள்ளவராக இருந்தார் என்று எவரேனும் சுட்டிக்காட்ட முடியுமா? பூரணமற்ற ஒரு மனிதர் பூரணராக மாறினார் அல்லது கீழ்ப்படியாத ஒரு மனிதர் கீழ்ப் படிகிறவராக மாறினார் என்பது இங்கு பொருள் அல்ல. இங்கே, கீழ்ப் படிதலும் பூரணத்துவமும் நிறைந்த தேவ குமாரன் நமக்கு ஒரு மாதிரியை வைத்துப்போகும்படி பாடுகளினூடே கடந்து சென்று, கீழ்ப்படிதலுக்கும் பூரணத்திற்கும் நிரூபணமானார்.

''இயேசு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு பூரணரான பின்பு ...'' — வேதத்தில் கூறப்பட்டுள்ள இக்கூற்று தவறானதல்ல. ஏனெனில் இயேசுவே இப்படிப்பட்டதொரு கூற்றினைச் சொல்லியுள்ளார். ''... நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்'' (யோ 17:19). இயேசு எப் பொழுதாவது பரிசுத்தமற்றவராக இருந்தாரா? அவர் எப்பொழுதாவது கறையுள்ளவராகவோ அசுத்தமானவராகவோ இருந்தாரா? அவர் எப் பொழுதும் பூரணராகவே இருந்தார். அன்பான சகோதர சகோதரிகளே, அடுத்தமுறை பாடுகள் உங்களது கதவைத் தட்டும்போது, திகைக்க

வேண்டாம். தேவன் உங்களை இன்னும் கூடுதல் பரிசுத்தராக மாற்ற விரும்புகிறார்; தேவன் உங்களை இன்னும் நீதியுள்ளவராக மாற்ற விரும்புகிறார். நமது பார்வைக்குச் சரியாகத் தோன்றும் சில காரியங்கள் தேவனது பார்வையில் அவர் எதிர்பார்ப்பதைவிடக் குறைவுள்ளதாகக் காணப்படும். நாம் மென்மேலும் பிரகாசமான விளக்கொளியில் வரும்போதுதான் தூசிகளும், மாசுக்களும் வெளிப்படையாக நமது கண்களுக்குப் புலப்படும்.

யோபுவின் புத்தகம் 36ஆம் அத்தியாயம் 7-11 வசனப்பகுதியை வாசியுங்கள். ''அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல், அவர்களை ராஜாக்களோடேகூட சிங்காசனத்தில் ஏறவும், உயர்ந்த இடத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார். அவர்கள் விலங்குகள் போடப்பட்டு, உபத்திரவத்தின் கயிறுகளால் கட்டப்பட்டிருந்தாலும், அவர்களது செயல்களையும் மிஞ்சிப்போன அவர்களது மீறுதல்களையும் அவர் அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அக்கிரமத்தை விட்டுத் திரும்பும்படி அவர்கள் செவியைத் திறந்து கடிந்துகொள்ளுகிறார். அவர்கள் அடங்கி அவரைச் சேவித்தால், தங்கள் நாட்களை நன்மையாகவும், தங்கள் ஆண்டுகளைச் செல்வ வாழ்வாகவும் போக்குவார்கள்.'' ஏழாம் வசனம் விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவரையும் குறித்துப் பேசுகிறது. அவரது கண்களை விசுவாசிகள்மேல் பதித்திருக்கிறார்; உன்னதங்களில் சிங்காசனங்கள்மேல் அவர்களை உட்காரச் செய்கிறார். பின்னர் அவர் விலங்குகளையும், உபத்திரவங்களையும் அனுமதிக்கிறார். அவர்களது செயல்களையும் மீறுதல்களையும் தெரிவிக்கிறார்; அறிவுரைகளைக் கேட்கும்படி அவர்களது செவிகளைத் திறக்கவும் செய்கிறார்; மற்றும் அவர்கள் தங்களது அக்கிரமங்களை விட்டுத் திரும்பும்படி கட்டளையிடுகிறார். 7ஆம் வசனம் அவர்களை நீதிமான்கள் என்று சொல்லுகிறது. 10ஆம் வசனத்தில் அவர் 'அக்கிரமம்' என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார். ''நமக்குப் பாவம் இல்லையென்போமானால், நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது'' (1 யோ 1:8). இங்கு ''நமக்கு'' என்ற பதம் முதிர்ந்த புனிதராகிய யோவானையும் உள்ளடக்குகிறது. பின்மாற்றம் அடைந்த பரிசுத்தவான்களுடன் தேவன் எவ்வாறு இடைபடுகிறார் என்பதை யோபுவிலுள்ள இந்த வசனப்பகுதி விளக்குகிறது.



## பாடுகளின்போது செய்யக்கூடாதவை:

நாம் பாடுகளின் வழியாகக் கடந்து செல்லும்போது நாம் செய்யக்கூடாதவை குறைந்தது ஐந்து காரியங்கள் உண்டு —

### 1. தேவனைத் தூஷிக்கக்கூடாது.

நீங்கள் பாடுகளினூடே கடந்து செல்கையில் தேவனைத் தூஷிக்க வேண்டாம், அவரைத் துதியுங்கள். அவரது உத்தம பக்தனுக்கு தேவனைத் தூஷிக்கும்படி அவனது மனைவி கொடுத்த மதியீனமான ஆலோசனையை யோபுவின் புத்தகத்திலே வாசிக்கிறோம். யோபு 2:9,10, ''அவன் மனைவி அவனிடம்: நீர் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூற்றி உயிரை விடும் என்றாள்'' யோபுவின் மனைவியின் பெயர் வேதாகமத்தில் கொடுக்கப்படாததற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவள் அறிவு கெட்டவள். அவளது புனிதமான கணவனிடம் தேவனைத் தூற்றி உயிரை விடும்படி அவள் சொல்கிறாள். ஆனால் அவன் அவளிடம் பதிலாக, ''நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ?'' என்று சொன்னான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவம் செய்யவில்லை (வச 10). முதலாம் அத்தியாயம் 20 முதல் 22 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள்: ''அப்பொழுது யோபு எழுந்திருந்து, தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்தான்'' (வச 20). அது உண்மையிலேயே மிக அற்புதமான செயல் — ஒரு மனிதன் துன்பத்தின் வழியே செல்லும்போது தேவனை ஆராதித்தல்! தொடர்ந்து அவன் சொல்கிறான், ''நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்'' (வச 21). சில நவீனப் பிரசங்கிகள் யோபு சொன்னது தவறு, தேவன் ஒருபோதும் எடுக்கிறவரல்ல என்று சொல்கின்றனர். ஆனால் யோபு சொன்னது சரியானது. ஏன் தெரியுமா? அடுத்த வசனமே சொல்லுவது: ''இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை'' (வச 22). அவன் தேவ

னைத் தூஷிக்கவில்லை, ஆனால் அவன் தேவனுக்குத் துதி செலுத்தினான். பாடுகளை அனுபவிக்கும்போது, நாம் முறுமுறுக்கவும் ‘‘ஏன்? ஏன்? ஏன்?’’ (Why? Why? Why?) என்று கேள்வி கேட்கவும் ஆரம்பிப்பது இயல்பு. அதற்குத் தேவன், ‘‘ஏன் கூடாது? ஏன் கூடாது? ஏன் கூடாது?’’ (Why not? Why not? Why not?) என்று பதில் கொடுத்துக்கொண்டேயிருப்பார். நாம் கேள்வி கேட்பதற்குப் பதிலாகத் துதி செலுத்தத் தொடங்கினால் அதுவே உன்னதமானது.

ஒரு மனிதன் இருந்தார்; அவரது மாம்சத்தில் ஒரு முள் இருந்தது. ‘மாம்சத்தில் ஒரு முள்’ என்பதன் பொருள் உடலில் ஏதோவொரு பிரச்னை என்று நாம் கருதலாம். அவ்வளவுதான். ஆழமான உட்கருத்து உண்டோ என்று ஆராயாமல் அதை இருக்கிறபடி அப்படியே எடுத்துக் கொள்வோம். அந்த முள்ளை எடுத்துவிடும்படி கர்த்தரிடம் வேண்டினார். ஒரு முறை — பதில் இல்லை; இரண்டாம் முறை — பதில் இல்லை; மூன்றாம் முறை — பதில் வந்தது, ஆனால் அவர் எதிர்பார்த்த பதில் இல்லை — ‘‘என் கிருபை உனக்குப் போதும்.’’ அவர் என்ன சொன்னார்? ‘‘என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.’’ மூன்று முறை அவரது பிரச்னை நீங்கும்படி ஜெபிக்கச் சென்றார். ஆனால் இப்பொழுது நான்காம் முறை பிரச்னைக்காக தேவனைத் துதிக்கச் சென்றார். ‘‘அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்.’’ எப்படி? கிறிஸ்துவின் வல்லமையினால் (2 கொரி 12:7-10).

உங்கள் உடலிலும் முட்கள் இருக்கலாம். உங்களால் இயன்ற அனைத்துக் காரியங்களையும் நீங்கள் முயற்சி செய்தும், அந்த முள் உங்களைவிட்டு நீங்காமல் இருக்கலாம். தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருங்கள். அந்த முள் கொடுக்கப்பட்ட காரணத்தைத் தேவன் வெளிப்படுத்தச் சித்தங்கொள்ளாவிடில், ‘‘என் கிருபை உனக்குப் போதும்’’ என்ற அவரது பதிலை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பலக்குறைவுகளைக் குறித்து கர்த்தருக்குள் மேன்மை பாராட்டுங்கள். தேவனைத் தூஷிக்க வேண்டாம்.



## 2. பிறரைக் குற்றஞ்சாட்டக்கூடாது.

நமது பிரச்னைகளுக்காக மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுவது வழக்கமானது. ‘‘நான் இந்தச் சூழ்நிலையில் சிக்கியிருப்பதற்குக் காரணம் இவன்தான், இவள்தான்’’ என்று நாம் சொல்வதுண்டு. பிறரைக் குற்றஞ் சாட்டவேண்டாம்.

நாம் பிரச்னைகளினூடே கடந்து செல்கையில் மற்றவர்களைக் கசந்துகொள்வது இயல்பானதே. ஒரு மனிதன் ஒரு கார் (car) வைத்திருந்தான். அந்தக் காரின் பெயர் கோல்ட் (Colt). அவன் தேவ சித்தத்திற்கு விரோதமாகப் போய்க்கொண்டிருந்தான். சாலையில் அவனது கார் நேராகச் செல்லவில்லை. அது பாதையின் இரு பக்கங்களிலும் இருந்த சுவர்களில் உரசிக்கொண்டு செல்ல ஆரம்பித்தது. அப்பொழுது அம் மனிதன் அந்தக் காரை அடிக்கத் தொடங்கினான். அந்த வாகனம் அவனுடன் பேச ஆரம்பித்தது. அந்தக் கதை நீங்கள் அறிந்ததே. கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமுக்கு முன்பாகத் தோன்றி அவனிடம், ‘‘நீ உன் கழுதையை (Colt) இதுவரை மும்முறை அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டுவந்தேன். கழுதை என்னைக் கண்டு இந்த மூன்று தடவை எனக்கு விலகிற்று; எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுது நான் உன்னைக் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன்’’ என்றார் (எண் 22:32,33). கழுதையை அடிக்கவேண்டாம். உங்களது பாவங்களுக்காகப் பிறரைக் குற்றஞ்சாட்டவேண்டாம். உங்களது வழிகளையே ஆராய்ந்துபாருங்கள்.

## 3. சாத்தானை நம்பக்கூடாது.

நமது வாழ்வின் இருளான நேரங்களில் சாத்தான் நம்மிடம் வந்து அவனது ஆலோசனைகளைக் காதில் ஊதுவான்: ‘‘ஓர் அன்பான தேவனாயிருந்தால் அவர் உனக்கு இப்படிச் செய்வாரா?’’ தேவனது நற்பண்புகள்மேல் அவநம்பிக்கை உண்டாகும்படி அவன் பல எண்ணங்களைக் கொடுப்பான். அந்த நேரத்தில் உங்களது பதில் எதுவாக இருக்கும்? அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்ற மிகச் சிறப்பான ஒரு பதிலைத் தீர்க்கன் மீகா வைத்திருக்கிறார்: ‘‘என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்

தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்; அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்கும்வரை அவருடைய கோபத்தைச் சுமப்பேன்; அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்'' (மீகா 7:8,9). வசனங்கள் 18 மற்றும் 19ஐயும் பார்ப்போம்: ''தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வைக்க மாட்டார். அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை நீக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.''

எனவே சகோதரரே, சகோதரிகளே, தேவனுடைய நற்பண்பினைக் குறித்துப் பிசாசு உங்கள் காதுகளில் பொய்களைச் சொல்லும்போது அவனை நம்பவேண்டாம். உங்களுக்காகப் பரிந்து மன்றாடும் உங்கள் வழக்கறிஞராம் கிறிஸ்துவைக் குறித்து உங்கள் எதிராளிக்கு நினைவுபடுத்துங்கள். ''ஓ சத்துருவே, நான் விழும்போது மகிழாதே; கர்த்தாதி கர்த்தருக்கு முன்பாக எனது காரியத்திற்காகப் பரிந்து மன்றாடுகிற ஒருவர் உண்டு. அவர் எனது நியாயத்தை விளங்கப்பண்ணுவார்; அவர் எனது நீதியைச் சமர்ப்பிப்பார். அந்த நேரம் வரும்வரை நான் கர்த்தரது கோபத்தைச் சுமப்பேன். ஆனால் அவர் என் நீதியை விளங்கப்பண்ணும்போது நான் மகிழ்ந்து ஆனந்திப்பேன்; ஏனெனில் அவர் என் பாவங்களையெல்லாம் கடலின் ஆழங்களில் போட்டுவிட்டார்.'' ''ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்'' (1 யோ 2:1ஆ).

## 4. உங்களை நீங்களே குறைவாக மதிப்பிடக்கூடாது.

நீங்கள் கர்த்தருடைய கரங்களிலுள்ள விலையேறப்பெற்ற முத்து. கர்த்தர் உங்களைக் கண்டுபிடித்தார்; அவர் உங்களைத் தமது கரங்களில் எடுத்தார்; அவர் இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் திருப்பித் திருப்பிப் பார்க்கிறார். அது ஒரு விலையேறப்பெற்ற முத்து. அந்த முத்தின் விலை



என்னவென்று கடைக்காரரிடம் கேட்கிறார். மிக மிக அதிகமான விலை! அவர் என்ன செய்தார்? அவருக்கு இருந்த எல்லாவற்றையும் விற்று, கிடைத்த தொகையைக் கொண்டு வந்து, அந்த முத்தை விலை கொடுத்து வாங்கினார் (மத் 13:45,46). இதுதான் உங்களையும் என்னையும் குறிப்பிடுகிறது. நாம் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள். அவர் நம்மைத் தமது உள்ளங்கையில் வைத்திருக்கிறார். நமது ஜீவன் உன்னதங்களில் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. ஒரு வைரக்கல் சிற்பியைப்போல, தேவன் வைரத்தைச் செதுக்கிப் பட்டை தீட்டி மேலும் பிரகாசமாக அது மிளிரும்படி வடிவமைக்கிறார். எவ்வளவு அதிகமாகச் செதுக்கப்பட்டுப் பட்டை தீட்டப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக வைரக்கல் ஒளிவீசும். செதுக்கப்படுதல் வேதனை மிகுந்ததுதான்; கிளை நறுக்குதல் வலி நிறைந்ததுதான்; மெருகேற்றுதல் நெருக்கம் நிறைந்ததுதான். ஏற்கனவே விலையுயர்ந்தது. பரலோகப் பிதாவின் கரங்களில் இன்னும் விலையுயர்ந்ததாகும்.

எனவே நீங்கள் பாடுகளினூடே செல்லும்போது, ''நான் ஒரு பயனற்ற நபர். நான் இந்த உலகத்தில் ஏன் பிறந்தேன்? எனது குடும்பத்திற்கு, எனது சமுதாயத்திற்கு என்னால் என்ன லாபம்? என்னால் நன்மை பெற்றவர் எவரேனும் உண்டோ? நான் மற்றவர்களுக்கு ஒரு பாரமாகத் தானேயிருக்கிறேன்? நான் முற்றிலும் பயனற்றவன்'' என்றெல்லாம் சொல்லக்கூடாது. துன்ப வெள்ளத்தின் வழியே செல்லும்போது, பல தடவை நாம் அவ்வாறு உணருகிறோம். உங்களைக் குறைவாக மதிப்பிட வேண்டாம்.

மலைகளில் மேயும் பல்லாயிரக்கணக்கான ஆடுகளுக்குச் சொந்தக்காரரும், உலகிலுள்ள எல்லாப் பொன்னுக்கும், வெள்ளிக்கும் சொந்தக்காரரும், சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள், பால்வழி மண்டலம், அண்டசராசரங்களிலுமுள்ள கோளங்கள் அனைத்திற்கும் சொந்தக்காரருமான செல்வந்தரான தேவ குமாரன் உங்களை வாங்குவதற்காக, எல்லாவற்றையும், விலையேறப்பெற்ற அவரது இரத்தத்தையும், கொடுத்துவிட்டார். நண்பர்களே, நான் எள்ளளவும் மிகைப்படுத்திக் கூறவில்லை என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ஞாயிறு பள்ளியில் சிறு

பிள்ளைகளுக்குச் சொல்லப்படும் கதையை நான் சொல்லவில்லை. நீங்கள் விலையுயர்ந்தவர்கள். பாடுகளினூடே நீங்கள் செல்லும்போது உங்களை நீங்களே குறைத்து மதிப்பிட வேண்டாம். தேவன் இந்த முத்தை இந்த உலகத்தில் வைத்திருக்க விரும்புகிறார். எல்லாத் திசைகளிலும் தமது ஒளியைப் பிரதிபலிக்கும்படியாக, தேவன் இந்த வைரத்தை இப்பூவுலகில் வைத்திருக்க விரும்புகிறார்.

*விலையேறப் பெற்ற திருரத்தமே*
*அவர் விலாவினின்று பாயுதே*
*விலையேறப் பெற்றோனாய் உன்னை*
*மாற்ற விலையாக ஈந்தனரே!*

## 5. பொறுமையை இழந்துவிடக்கூடாது.

கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்பொழுதும் நாம் விரும்பும் காரியங்கள் உடனுக்குடன் நடந்துவிடுவதில்லை. ஆன்மீக வாழ்வின் ஆரம்ப ஆண்டுகளில் காரியங்கள் நொடிப்பொழுதிலும் உடனடியாகவும் நிகழலாம். குழந்தையானது புத்திரப்பருவத்துக்கு வளர்ந்து வருவதுபோல, ஆன்மீக வாழ்வின் முதிர்ச்சிக்குள் நீங்கள் வளர்ந்துவரும்போது, கர்த்தர் தமது செயல்களைச் சிலகாலம் நடைமுறைப்படுத்தாமல் இருப்பதை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் வியாதியுற்று மரித்துக்கொண்டிருந்தாலும் அவர் நான்கு நாட்கள் தாமதிப்பார். ''வாரும், ஆண்டவரே, நாம் போவோம்'' என்று சீடர் சொல்லுவார்கள். அவரோ மறுமொழியாக, ''உங்கள் வேளை எப்போதும் வந்திருக்கிறது; ஆனால் எனது வேளையோ இன்னும் வரவில்லை'' என்பார். அவரது தாயாரே அவரிடம் சென்று, ''மகனே, திராட்சரசம் தீர்ந்துவிட்டது'' என்று சொன்னாலும் அவர் ''என் வேளை இன்னும் வரவில்லை'' என்று சொல்லிவிடுவார். என்ன செய்ய வேண்டும், எப்பொழுது செய்யவேண்டும் என்பதெல்லாம் தேவனுக்குத் தெரியும். காரியங்கள் உடனுக்குடன் நிகழாவிடில் பதறக்கூடாது.

புலம்பல் 3:26-33ஐப் பாருங்கள்: ''கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது. தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனிதனுக்கு நல்லது. அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து அமைதியாயிருக்கக்கடவன். நம்பிக்கைக்கு இடமுண்டோ என்று தன் வாயினால் புழுதியைக் கவ்வட்டும். தன்னை அடிக்கிறவனுக்குத் தன் கன்னத்தைக் காட்டி, நிந்தையால் நிறைந்திருக்கட்டும். ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார். அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை.'' இதிலிருந்து நாம் எவற்றையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அவற்றையெல்லாம் நாம் முதல்முறை வாசிக்கும்போதே தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடிய அழகிய வேத வசனப்பகுதி இது. புதிய ஏற்பாட்டில் யோபுவின் பொறுமையை நினைத்துக்கொள்ளும்படி நாம் அப்போஸ்தலரால் ஆலோசனை பெற்றிருக்கிறோம் (யாக் 5:11). தேவ சித்தத்தைச் செய்தபின் பொறுமையோடு காத்திருங்கள் (எபி 10:36).

உங்களில் நல்ல வேலையைத் தொடங்கின ஆண்டவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் வரை முடிய நடத்திவருவார் (பிலி 1:5). அவர் நம்மைச் சுத்திகரிப்பவர். அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியின் அருகில் அமர்ந்திருக்கிறார். நம்மில் *'கர்த்தருக்குப் பரிசுத்தம்'* உண்டாகும்படி அவர் சுத்திகரித்துக்கொண்டிருக்கிறார் (மல் 3:3).

*How not to Sorrow (எப்படித் துக்கிக்கக்கூடாது?),*
*How not to Suffer (எப்படிப் பாடனுபவிக்கக்கூடாது?)*
*எனும் ஆசிரியரது ஆரோக்கிய உபதேச ஒலி-ஒளித்தட்டுகளைக் கேளுங்கள், பாருங்கள்.*

# 11

# பரிசுத்தமும் இவ்வுலகமும்

## Holiness and the World

திருமறையில் 'உலகம்' என்று சொல்லப்படும் வார்த்தையின் பொருள் என்ன? நமது விசுவாசத்தை அழித்து, நம்பிக்கையைச் சிதறடித்து, அன்பைக் கறைப்படுத்தக்கூடிய நமது சுற்றுச்சூழல்தான் வேதப் புத்தகத்தில் 'உலகம்' என்ற பதத்தின் பொருள் என்று யூஜீன் பீட்டர்சன் (Eugene Peterson) என்ற வேதாகம மொழிபெயர்ப்பாளர் வரையறுக்கிறார். கிறிஸ்தவ வாழ்வின் மிக முக்கிய மூன்று நற்பண்புகளாகிய விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றை நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்த 'உலகம்' எதிர்க்கிறது. 'உலகம்' என்பது தேவனுடைய முதன்மைத் திட்டம் மற்றும் நோக்கத்தினின்று வழிவிலகிச் சென்றுவிட்ட ஓர் அமைப்பு; அது பொல்லாங்கனுடைய சிறைப்பிடிப்பில் வந்துவிட்ட ஓர் அமைப்பு; அது தெய்வீகத்தன்மையுடைய யாவற்றையும், நன்மையான அனைத்தையும், மகிமையான எல்லாவற்றையும் எதிர்த்துச் செயலாற்றும் ஓர் அமைப்பு. 'உலகம்' என்று திருமறை பேசும்போதெல்லாம் இந்த அடிப்படை வரையறையை நீங்கள் மனதில் இருத்திக் கொள்ளவேண்டியது அவசியம்.

இக்கருத்தினை விளக்க மூன்று அப்போஸ்தலர் எழுதிய நிருபங்கள் ஒவ்வொன்றிலிருந்து ஒரு வசனமாக மூன்று வசனங்களைப் பார்ப்போம் —



☐ 1 **யோவான்** 5:19

''நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், **உலகம்** முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.''

☐ **யாக்கோபு** 4:4

''விபசாரரே, விபசாரிகளே, **உலக** சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் **உலகத்துக்குச்** சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைவனாகிறான்.''

நீங்கள் ஒரே நேரத்தில் உலகத்துக்கு நண்பனாகவும், தேவனுக்கு நண்பனாகவும் இருக்க முடியாது என்பதை இது குறிப்பிடுகின்றது. அவை ஒன்றுக்கொன்று எதிரிடையானவை; ஒன்று மற்றதைப் பகைக்கும்.

☐ 2 **பேதுரு** 3:10-12

''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போகும், மண்ணுலகும் அதின் செயல்களும் எரிந்து அழிந்துபோகும். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படி மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போகும்.''

இப்பொழுது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இவ்வுலகத்தில் நமது குடியிருப்பு தற்காலிகமானது என்று பேதுரு அப்போஸ்தலன் இங்கு கூறுகின்றார். இவ்வுலகத்திற்கு ஏதோ சிறப்பானவை நிகழப்போகின்றன; இப்போது இருப்பதைவிட இன்னும் அதிமேலானவைகளாகக் காரியங்கள் மாறப்போகின்றன என்று சில உலகத் தலைவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். அதிலும் பெரிய பொய் எதுவுமில்லை. இப்பூவுலகு — முன்னேற்றமடைந்த மற்றும் பின்தங்கிய நாடுகள், வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடையாத மற்றும் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும் நாடுகள் — எதற்காக வைக்கப்பட்டுள்ளது? அது அக்கினிக்கும் கந்தகத்துக்கும் இரையாக வைக்கப்பட்டுள்ளது; முழுவதும் அழிக்கப்படவே

வைக்கப்பட்டுள்ளது. இந்த வசனப்பகுதியில் பேதுரு அப்போஸ்தலன் சொல்வது: நாம் காண்கிற யாவும் ஒரு நாள் நித்திய அக்கினியால் எரிக் கப்படப்போகிறபடியால் நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையை நமது வாழ்வில் வெளிப்படுத்தவேண்டும்!

தூய்மையற்ற இவ்வுலக அமைப்பில் நீங்கள் தூய்மையில் நிலைத் திருப்பதற்கு ஏதுவாகத் திருமறையில் காணப்படும் சில எச்சரிப்புகளி னூடே உங்களை அழைத்துச்செல்ல விரும்புகிறேன். வேதப் புத்தகம் ஆசீர்வாதங்களாலும், வாக்குகளாலும் நிறைந்திருக்கிறது. அதே நேரத் தில் வேதப் புத்தகம் எச்சரிப்புகளாலும் நிறைந்திருக்கிறது. ஒவ்வொரு முறை வேதம் ஒரு தெளிவான எச்சரிப்பை அடையாளங்காட்டும்போதும், நாம் அக்கூற்றை மதித்து, அந்த எச்சரிப்புக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படிய எவற்றையெல்லாம் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் கவனத் துடன் செய்யவேண்டும். 'எச்சரிக்கையாயிரு' என்று வேதம் குறிப்பிட்ட எல்லாவற்றையும் ஒரு நாள் பட்டியலிட்டேன். உண்மையாகவே அது என்னிருதயத்தில் செயலாற்றி நான் எப்பொழுதும் விழிப்புடனிருக்க வழிவகுத்தது. பரிசுத்தமற்ற இவ்வுலகில் பரிசுத்தமாக வாழும்படிக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல எச்சரிப்புகளில் ஐந்தி னைக் குறித்து நாம் ஆராய்வோம் —

### 1. பொருளாசை குறித்து எச்சரிக்கை!

பணத்தின்மேல் ஆசை மற்றும் பொருட்கள் மேல் ஆசை ஆகிய வற்றைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ''பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான செல்வம் இருந்தாலும் அது அவனுக்கு வாழ்வு அல்ல'' (லூக் 12:15). நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சொன்ன வார்த்தைகள் இவை.

யோபு 31:24-28ஐ வாசித்தால் பொருளாசையைத் தேவன் எவ்வளவு தீமையானதாக நோக்குகிறார் என்பதைப் புரிந்துகொள்ளுவீர்கள்: ''நான் பொன்னின்மேல் என் நம்பிக்கையை வைத்து, தங்கத்தைப் பார்த்து: நீ என் ஆதரவு என்று நான் சொன்னதும், என் செல்வம் பெரியதென்றும், என் கைக்கு மிகுதியும் கிடைத்ததென்றும் நான் மகிழ்ந்ததும், சூரியன்



பிரகாசிக்கும்போதும், அல்லது சந்திரன் மகிமையாய்ச் செல்லும்போதும், நான் அதை நோக்கி: என் மனம் இரகசியமாய் மயக்கப்பட்டு, என் வாய் என் கையை முத்தம் செய்ததுண்டானால், இதுவும் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும்; அதினால் உன்னதத்தி லிருக்கிற தேவனை மறுதலிப்பேனே.''

பழம் பக்தனாகிய யோபுவின் நடைமுறை நீதியைக் குறித்த நடை முறைச் சாட்சி இது! அவருக்கிருந்த திரளான சொக்கத் தங்கத்தின் மேல் அவர் நம்பிக்கை வைக்கவில்லை; அவருக்கிருந்த ஏராளமான சொத்துக்களைக் குறித்து அவர் மகிழ்ந்து ஆனந்திக்கவில்லை; அவரது கரங்களும், அவரது கடின உழைப்பும்தான் அத்தனை மிகுதியான செல் வத்தை அவருக்குக் கொண்டுவந்தன என்று அவர் நம்பவில்லை. ''இது வும் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும்'' என்று சொல்கிறார். 'இதுவும்' என்று அவர் சொல்லக் காரணம் என்ன வெனில், இதற்கு முன்னர் அவர் வேறொரு பாவத்தைக் குறித்துப் பேசியிருக்கிறார். 9-11 வசனங்களில் அவர் விபசாரத்தைக் குறித்துப் பேசுகிறார். ''என் மனம் யாதொரு பெண்ணின்மேல் மயங்கி, அயலா னுடைய வாசலை நான் எட்டிப் பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைக்கட்டும்; வேற்று மனிதர் அவள் மேல் சாயட்டும். அது தோஷம், அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப் படும் அக்கிரமமாமே.'' இப்படிச் சொல்லிவிட்டு உடனே அவர் பொருளா சைக்கு நேராகக் கடந்துசெல்கிறார்; அதுவும் நியாயாதிபதிகளால் விசா ரிக்கப்படும் அக்கிரமம் என்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண் டுமானால், விபசாரத்தையும், விக்கிரகாராதனையின் ஒரு வடிவமான பொருளாசையையும் நீதிமானாகிய பழம் பக்தன் யோபு ஒரே அளவு கோலில் வைக்கிறார்.

நீங்கள் வேதாகமத்தை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் முடிய கவனமாக வாசிக்கும்போது, தேவன் ஒரு சிறு கூட்டத்தின்மேல் அல்லது ஒரு பெரிய நாட்டின்மேல் நியாயத்தீர்ப்பு கொண்டுவந்தால், அது எப்பொழுதுமே பிரதானமாக இரண்டு காரணங்களுக்காகத்தானிருந்தது என்பதைக் கண்டுகொள்ளுவீர்கள். ஒன்று விக்கிரகாராதனை; அடுத்தது

விபசாரம் (idolatry & adultery). பல நாடுகளின் வீழ்ச்சிக்கு இந்த இரு பாவங்கள்தான் பிரதானமான காரணம்.

கர்த்தருடைய பார்வையில் உலகப்பொருட்கள்மீது நாட்டம் அல்லது பொருளாசை என்பது விக்கிரகாராதனை ஆகும்; பண ஆசை விக்கிர காராதனை ஆகும். எடுத்துக்காட்டாக, எபேசியருக்கு எழுதின நிருபத் திலிருந்து ஒன்றும் கொலோசெயருக்கு எழுதின நிருபத்திலிருந்து இன் னொன்றுமாக இரு வசனங்களைக் கவனமாக வாசிப்போம். இவையி ரண்டும் இணையான நிருபங்கள். எபேசியருக்கு எழுதின நிருபத்தில் வலியுறுத்தப்பட்டவை அனைத்தும் கொலோசெயருக்கு எழுதின நிரு பத்தில் மீண்டும் எழுதப்பட்டுள்ளன. ''விபசாரக்காரனாவது, அசுத்தனா வது, **விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது** தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவ தில்லையென்று அறிந்திருக்கிறீர்களே'' (எபே 5:5). ''ஆகையால் விப சாரம், அசுத்தம், மோகம், துராசை, **விக்கிரகாராதனையான பொரு ளாசை** ஆகிய இவைகளை மண்ணுலகில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்'' (கொலோ 3:5).

பணக்கார வாலிபன் ஒருவன் இயேசுவிடம் வந்தான். அவர் அந்த இளைஞனுடன் உரையாட ஆரம்பித்தார். இறுதியில் இயேசு அவனது பிரச்னையைத் தொட்டார். அவனது பண ஆசையைக் குறித்துப் பேசி னார். அவன் அமைதியாக அவரை விட்டு விலகிப் போனான். உடனே இயேசு தமது சீடரைப் பார்த்து, ''**செல்வந்தன்** இறையரசில் நுழைவதை விட ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்'' என்றார். பேதுரு அதிர்ச்சியடைந்தார்; மத்தேயு திடுக்கிட்டார்; எல்லோ ருமே குழப்பமடைந்தனர். எனவே அவர்கள், ''அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும்?'' என்ற கேள்வியைக் கேட்டனர். அப்பொழுது இயேசு அவர்களைப் பார்த்து, ''மனிதரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்'' என்றார் (மாற் 10: 23-27). இயேசு இந்த வசனத்தைப் பொருளாசையைக் குறித்துச் சொன்னார்; ஆனால் பிரசங்கிகள் பொருளாசையைத் தவிர மற்ற எல்லாக் காரியங்களுக்கும் இதை எடுத்தாளுகின்றனர். அவர்கள் நோயிலிருந்து



குணமாக, பிரச்னைகளுக்குத் தீர்வுகாண, இரண்டு அல்லது மூன்று மகிழுந்துகள் கிடைக்க மற்றும் எல்லாக் காரியங்களுக்கும் இந்த வச னத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்த நாட்களில் பைபிள் அதன் எதிர்ப்பாளரின் கரங்களைவிட அதை வியாக்கியானிக்க எடுப்பவரின் கரங்களில்தான் அதிகம் பாடுபடுகிறது. எனவேதான் நான் பிரசங்கிக்கும் போதும், போதிக்கும்போதும், வேதப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வச னத்தையும் அதன் சூழமைவின் அடிப்படையிலேயே விளங்கிக்கொள் ளவேண்டும் என்று மக்களுக்குத் திரும்பத்திரும்பச் சொல்கிறேன்.

எனவே தேவனுடைய அற்புத வல்லமை இடைபடவில்லையென் றால், இயேசுவைப் பொறுத்தவரை, ஒரு பணக்காரன் இரட்சிக்கப் படுவதும் இறையரசில் நுழைவதும் ஏறக்குறைய முடியாத காரியம். இதனால்தான் காவலிலிருந்த யோவான் அவரது சீடரில் இருவரை இயேசுவிடம் அனுப்பி, வருகிற மேசியா அவர்தானா அல்லது வேறொ ருவர் வர அவர் காத்திருக்கவேண்டுமா என்று வினவியபோது இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, ''நீங்கள் இங்கு காண்கிறதை யோவா னிடம் போய்ச் சொல்லுங்கள் ... **தரித்திரருக்குச்** சுவிசேஷம் பிரசங் கிக்கப்படுகிறது'' என்றார். அடிப்படைத் தன்மையிலேயே நீதிக்கு எதி ராக நிதி இருப்பதால், செல்வத்தை நாடவேண்டாம், அதற்கு ஆசைப் படவேண்டாம்.

தாழ்மையான மக்களுடன், எளிமையான மனிதர்களுடன், ஏழை களான மாந்தருடன் உங்களை ஒன்றிணைத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்வது இந்த உலகத்தால் கறைபடாதபடி உங்களைக் காத்துக்கொள் ளும். யாக்கோபு1:27இல் வாசிப்பது: ''திக்கற்ற பிள்ளைகளும் விதவை களும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத் தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதா வாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக் கிறது.'' நீங்கள் பணக்காரரையே தேடிச் செல்கிறவர்களாயிருந்தால், நீங்கள் உலகத்தால் உங்களைக் கறைப்படுத்திக்கொள்ளுகிறீர்கள். அப்போஸ்தலன் யாக்கோபு 2ஆம் அத்தியாயத்தில் தொடர்ந்து சொல் வது: ''என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பாரபட்சத்தோடு பற்றிக்கொள்ளாதேயுங்கள். ஏனெனில் பொன் மோதிரமும் மினுக்குள்ள ஆடையும் அணிந்துள்ள ஒரு மனிதனும், கந்தையான உடை அணிந்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, உயர்ந்த ஆடை உடுத்தியிருப்பவனைப் பார்த்து: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில், அல்லது இங்கே என் பாதத்தினருகே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே வேறுபாடு காட்டி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?'' (வச 1-4).

திருமறையில் ஒரு நிருபத்தை எழுதுபவர் திடீரென்று ''என் சகோதரரே'' அல்லது ''எனக்குப் பிரியமானவர்களே'' என்று அழைப்பாரானால், அவர் கூறவிருக்கும் சத்தியத்தை நாம் தழுவிக்கொள்ளும்படி நமக்கு மிக நெருக்கமாக அவர் வர விரும்புகிறார் என்று பொருள். முதல் வசனத்தில்தான் ''என் சகோதரரே'' என்று அழைத்தவர் ஐந்தாம் வசனத்தில் என்ன சொல்கிறார்? ''என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் செல்வந்தர்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு அவர் வாக்குபண்ணிய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?'' இந்தச் சத்தியத்தைப் பவுல் அப்போஸ்தலனும் அங்கீகரிக்கிறார். அவர் சொல்லுவது: ''சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; செல்வந்தர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை ... தேவன் இந்த உலகத்தில் ஏழைகளைச் செல்வந்தர்களாகும்படித் தெரிந்துகொண்டார்.''

நமது இருதயம் செல்வத்தையே நாடியிருந்தால் நாம் பணக்காரருக்கு நேராகக் கவர்ந்திழுக்கப்படுவோம். இப்பகுதியில் மிகவும் கண்டிப்பாக தேவன் என்னுடன் இடைபட்டார். வேலூரிலுள்ள எங்கள் தலைமையகத்துக்கு (BYM) ஊழிய ஆதரவாளர்கள் பலர் வருவதுண்டு. ஒவ்வொரு மாதமும் ரூ. 1000/- அல்லது ரூ. 5000/- கொடுக்கிற ஒருவர் வந்தால் நான் பரவசமடைந்து, அவரை நன்றாக உபசரிப்பேன். ஒரு நாள் நான் ஜெபித்துக்கொண்டிருந்தபோது கர்த்தர் என்னுடன் இடைபட்டார்:



''அந்த மனிதர் ஒவ்வொரு மாதமும் ரூ. 10,000/- வருமானம் பெறுவதால், உனக்கு ரூ. 1000/- கொடுத்தார். ஆனால் இந்தப் பெண்மணியின் மாதச்சம்பளம் ரூ. 100/- மட்டுமே; ஆகையால் அவள் ரூ. 10/- கொடுக்கிறாள். உனக்கு 10 ரூபாயைவிட 1000 ரூபாய் பெரிதாகத் தெரியலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை இருவருமே சம அளவான 10 சதவீதம்தான் கொடுத்திருக்கிறார்கள். உண்மையாகச் சொன்னால், 10,000 ரூபாய் மாத வருமானம் ஈட்டுபவர் இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கவேண்டும்.'' அந்த நாள் முதல் என்னால் முடிந்த அளவு பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ள முயற்சி செய்து வருகிறேன். நான் செய்தியளிக்கக் கூட்டங்களுக்குச் சென்ற நாட்களில், தனது மகிழுந்துவை மூன்று நாட்கள் நான் பயன்படுத்துவதற்குக் கொடுக்கும் பணக்காரரிடம் விபரமாய் நலம் விசாரிப்பேன். ஆனால் ரூ. 10/- கொடுப்பவரிடம் நான் அந்த அளவு விசாரிப்பதில்லை. யாக்கோபு நிருபத்தில் நாம் தியானித்த அதே வசனப் பகுதியின் மூலம் கர்த்தர் எனது தவற்றை உணர்த்தினார்.

தேவன் நம்மில் சிலருக்குச் செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். உங்களுக்குப் போதுமான அளவும் இன்னும் கொஞ்சம் மீதியுமிருந்தால் நீங்கள் ஒரு செல்வந்தர். ஏன்? இவ்வுலகில் ஒரு நாளில் ஒரு நேரம்கூட வயிறு நிரம்பத் திருப்திகரமான சாப்பாடு இல்லாத மக்கள் கோடிக் கணக்கில் உள்ளனர். இந்தியாவில் 25%க்கும் அதிகமான மக்கள் ஒரு நேர உணவுகூட இல்லாதிருக்கின்றனர். காலை எட்டு மணிக்கு ஒரு கைப்பிடியளவு உணவை உட்கொள்கின்றனர்; கடுமையான வெயிலில் எட்டு மணி நேரம் காளைகளைப்போல உழைக்கின்றனர்; இரவு சாப்பிடாமல் படுக்கைக்குச் செல்கின்றனர். ஒரு கைப்பிடியளவு உணவுக்காக அவர்கள் அடுத்த நாள் காலை வரை காத்திருக்கவேண்டியுள்ளது. நான் கேட்டவைகளிலிருந்தோ, வாசித்தவைகளிலிருந்தோ இதைச் சொல்லவில்லை; நான் பார்த்தவற்றிலிருந்தே இதைச் சொல்லுகிறேன். ஏழைகளுக்குள்ளும் பரம ஏழைகள் இருக்கும் சமுதாயத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே உங்களுக்குப் போதுமான அளவும் சற்று எஞ்சியும் இருக்குமானால், இன்றைய உலகின் அளவு கோலின்படி நீங்கள் ஒரு செல்வந்தரே!

நீங்கள் ஒரு செல்வந்தரானால் செய்யவேண்டியதென்ன? 1 தீமோத்தேயு 6:17-19 நடைமுறை ஆலோசனை தருகிறது: ''இவ்வுலகத்திலே செல்வந்தர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற செல்வத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் எல்லாவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்செயல்களில் செல்வந்தர்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய வாழ்வைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.'' நீங்கள் ஒரு செல்வந்தரானால் உங்கள் செல்வத்தின்மேல் அல்லது உங்கள் சேமிப்பின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டாம்; ஆனால் ஏழை மக்களுக்கு உங்களால் எவ்வளவு கொடுக்கமுடியுமோ அவ்வளவு கொடுங்கள். தேவையிலிருக்கும் மக்களுக்குத் தாராளமாக, உதாரத்துவமாக, அன்புடன் கொடுங்கள்; ஏனெனில் நீங்கள் கொடுக்கிறவையெல்லாம் உங்களது பரலோக வங்கிக்கணக்கில் உங்களுக்காகப் பதிவாகியிருக்கும். நீங்கள் செய்த உதவியினால் பரலோகத்திற்குச் சென்றிருக்கும் மக்களை நித்திய வாழ்வில் சந்திக்கும்போது நீங்கள் பரவசமடைவீர்கள். உங்களில் எத்தனை பேர் பரலோக வங்கியில் ஏராளமான செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் தேவனுக்குமுன் பதில் சொல்லவேண்டிய கேள்வி இது. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

## உ. தீய நட்பு குறித்து எச்சரிக்கை!

1 கொரிந்தியர் 15:32 வாசியுங்கள்: ''நான் எபேசுவிலே கொடிய மிருகங்களுடனே போராடினேனென்று மனிதர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதினாலே எனக்குப் பயன் என்ன?'' (வச 32). பவுலை எவரும் வனவிலங்குக் காட்சியகத்தினுள் தூக்கி எறியவில்லை. எபேசுவிலே அவர் நிசமான வன விலங்குகளுடன் போராடவில்லை. அவர்கள் ''புசிப்போம், குடிப்போம், மகிழ்ந்திருப்போம்; ஏனெனில் நாளைக்குச் சாவோம்'' என்ற தத்துவத்தை அவர்களது வாழ்க்கையில் கடைப்பிடித்த மிருகங்கள். எனவேதான் பவுல் சொல்கிறார், ''மோசம் போகாதிருங்கள்; ஆகாத உறவுகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்'' (வச 33).



தீய நட்பு உங்களது நல்லொழுக்கங்களையும், தூய்மையான மனதையும் கறைப்படுத்திவிடும். அதுதான் இஸ்ரவேல் மக்களுடைய வாழ்வில் நிகழ்ந்தது. தேவன் தம்மை ஆராதிப்பதற்காகத் தமது மக்களை எகிப்தைவிட்டுப் புறப்படும்படிக் கட்டளையிட்டார். தேவன் அவர்களுக்குப் பாலும் தேனும் ஓடுகிற நாட்டைச் சுதந்திரமாகத் தருவதாக வாக்களித்தார். மோசே மற்றும் ஆரோன் என்பவர்களின் அபிஷேகிக்கப்பட்ட தலைமைத்துவத்தின்கீழ் அவர்கள் திரள்கூட்டமாக வெளியேறினர். ஆனால் மற்ற நாடுகளைக் கண்டுகளிக்கவேண்டும்(?) என்ற ஆவலினால் சில எகிப்தியரும் அவர்களுடன் புறப்பட்டார்கள். அதனால் நடந்தது என்ன? எண்ணாகமம் 11:4-6 வாசியுங்கள்: ''பின்பு அவர்களுக்குள் இருந்த பல இனத்தவரான அந்நிய மக்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைச் சாப்பிடக் கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே விலையில்லாமல் சாப்பிட்ட மீன்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெங்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள்.'' என்னே உணவுப் பட்டியல்! இறைச்சி, மீன், வெங்காயம், வெள்ளைப்பூண்டு ... இவற்றைத் தொடர்ந்து உட்கொண்டால் நிச்சயமாக குடற்புண்தான் உண்டாகும். ஆனால் இஸ்ரவேலர் ஏன் அதை விரும்பினார்கள்? ஏனெனில் அவர்களுக்குள் இருந்த பல இனத்தவரான மக்களுக்கு அந்த ஆசை வந்தது.

வாலிபர், நங்கையருக்கு ஓர் ஆலோசனை கொடுக்க விரும்புகிறேன். நீங்கள் கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறிச்செல்லவேண்டுமானால், உங்களது நட்புறவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உங்களது ஆன்மீக வாழ்வு எத்தகையதாயிருக்கும் என்பதை உங்களது நண்பர்களின் கூட்டமே நிர்ணயிக்கும். நான் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இந்த ஆலோசனையைக் கொடுத்திருக்கிறேன். இந்த முக்கியமான ஆலோசனையை உதாசீனப்படுத்தின அனைவருமே தங்கள் ஆன்மீக வாழ்வில் பின்மாற்றம்தான் அடைந்திருக்கிறார்கள்.

பொதுவாக தீய நட்புறவு ஆபத்தான ஆரம்பங்களைக் கொண்டிருக்கும். சங்கீதம் 1:1, ''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவி களுடைய வழியில் நில்லாமலும், பரிகசிப்போர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் ...'' என்று சொல்லுகிறது. எனவே பின்மாற்றம் முதலில் ''நடப்பதில்'' ஆரம்பிக்கிறது, சற்று நேரம் ''நிற்பதில்'' வளருகிறது, இறுதியில் வசதியாக ''உட்காருவதில்'' நிறைவு பெறுகிறது. இதுதான் கதை. சங்கீதங்களின் புத்தகம் என்பது பாடல்கள் மற்றும் ஆராதனையின் புத்தகம் ஆகும். ஓர் ஆராதனைப் புத்தகத்திற்கு ஒருவரும் சங்கீதம்1:1ஐ முகவுரையாக வைக்கமாட்டார்கள்! ஆனால் சங்கீதக்காரன் அதைச் செய்தார். அது அவரது சொந்த அனுபவமாகும். வாலிப மக்களுக்குப் பிரச்னை எங்கே தொடங்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். மீண்டும் சங்கீதம் 26:4,5இல் அவர் சொல்வது: ''வீணரோடே நான் உட்கார வில்லை, வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை. பொல்லாதவர்களின் கூட்டத்தைப் பகைக்கிறேன்; துன்மார்க்கரோடே உட்காரமாட்டேன்.''

வாலிபர்களில் சிலர் ஒரு நவீன தத்துவத்தைக் கொண்டிருக் கிறார்கள் — ''அவர்களைத் திருச்சபைக்குள் கொண்டுவருவதற்காகவே நான் அங்கே போகிறேன்.'' பொதுவாக இது நடைபெறுவதில்லை. ஆரோக்கியம் பரவுவதில்லை; நோய்தான் பரவும். அப்படியானால் இயேசு ஏன் பாவிகளுடன் கலந்துறவாடினார்; அவர் ஏன் பாவிகளின் சிநேகிதர் எனப்பட்டார் என்று நீங்கள் கேட்கலாம். எபிரெயர் 7:26 சொல்லுகிறது: ''பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், **பாவிகளுக்கு விலகினவரும்**, வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்.'' இயேசு பாவிகளுடன் இருந்தார்; ஆனால் அவர் பாவம் செய்யவில்லை; அவர் உலகத்தோடி ருந்தார்; ஆனால் அவர் உலகத்தானல்ல. இதற்கு ஒரு தகுந்த எடுத்துக் காட்டைத் தானியேல் 2:43இல் காண்கிறோம்: ''நீர் இரும்பைக் களி மண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனிதரோடே சம்பந்தம் கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப் பார்கள்.'' அவர்கள் உலகத்தில் இருப்பார்கள்; ஆனால் உலகத்தோடு ஒட்டிக்கொள்ளமாட்டார்கள். நான் 15 வயதில் (1962) மனந்திரும்பிய



போது இதே பிரச்னை எனக்கும் இருந்தது. எனக்கு ஏராளம் நண்பர் இருந்தனர் — அவர்களில் சிலர் நல்லவர், சிலர் நல்லவரல்ல. எனவே எனது தீய நண்பர்களை விட்டு எப்படி விலகுவது என்பதே எனது மிகப் பெரிய பிரச்னையாயிருந்தது. அவர்களில் ஒருவரையும் மனவருத்தப் படுத்த நான் விரும்பவில்லை. ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சியடைந் திருந்தவர்களிடம் ஆலோசனை கேட்டேன். எனது நண்பர்கள் அரு வருப்பான முதல் நகைச்சுவையைச் சொல்ல ஆரம்பித்தவுடனேயே எனது முகப்பாவனையை மாற்றிக்கொள்ளும்படியாகவும், ஏதேனும் அசுத்தமான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தால் உடனே அந்த இடத்தை விட்டு வெளியேறும்படியாகவும் எனக்கு ஆலோசனை தந் தார்கள். நான் அப்படியே செய்தபோது, அவர்கள் என்னைக் கேலி செய் தனர்; ஆனால் நான் ஒரு புன்னகையுடன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விடுவேன். நாளடைவில் என்னை அவர்கள் மதித்தனர்; பலர் மாறினர்.

சமுதாயத்தில் ஒரு யோசேப்பாக இருங்கள்; ஒரு தானியேலாக இருங்கள்; ஒரு வித்தியாசமான நபராக இருங்கள். நண்பர்களைத் திருப் திப்படுத்த முயன்று, கர்த்தரைத் துக்கப்படுத்தாதிருங்கள். மனிதரை எல்லா நேரங்களிலும் பிரியப்படுத்துவது இயலாத காரியம்; ஆனால் தேவனைப் பிரியப்படுத்துவது சாத்தியம். ஆமென்! நான் இதை முழு நிச்சயமாக நம்புகிறேன். நாம் அவரைப் பிரியப்படுத்தமுடியும் என்பது மட்டுமல்ல; அவரும் பதிலாக, ''நான் உனது வாழ்க்கையில் மகிழ்ச்சி யாயிருக்கிறேன்'' என்று நம்மிடம் கூறுவார்.

### 3. பாலியல் பாவங்களுக்கு எச்சரிக்கை!

புதிய ஏற்பாட்டில் பரிசுத்தமாகுதலைப்பற்றிக் குறிப்பாகச் சொல்லப் படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தவறாமல் பாலியல் பரிசுத்தம் குறித்துக் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு வசனப்பகுதியை 1 தெசலோனிக் கேயர் 4:3-8இல் காண்கிறோம். வசனம் 3 சொல்லுவது: ''நீங்கள் **பரிசுத்தமுள்ளவர்களாக** வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமா யிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் **வேசி மார்க்கத்துக்கு** விலகியிருங் கள்.'' இதில் பரிசுத்தமாகுதல் என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட் டுள்ள முதல் குறிப்பு பாலியல் பாவங்களைக் குறித்ததே. அதையே

2 தீமோத்தேயு 2:21,22 வசனங்களிலும் வாசிக்கிறோம்: ''ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் **பரிசுத்தமாக்கப்பட்டதும்**, எஜமானுக்குப் பயனுள்ளதும், எந்த நற்செயலுக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான மதிப்புக்குரிய பாத்திரமா யிருப்பான். அன்றியும் **பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு** நீ விலகி யோடு.'' நமது உடலை மதிப்புக்குரிய பாத்திரமாகக் காத்துக்கொள்ளு தல் என்பதைக் குறித்துப் பேசும்போதும் சொல்லப்பட்டுள்ள முதல் குறிப்பு வாலிபத்துக்குரிய இச்சைகளைப் பற்றியே இருக்கிறது.

## பாலியல் சோதனைகளில் வெற்றி எங்ஙனம்?

### i) விலகியோடுங்கள்! (Flee!)

2 தீமோத்தேயு 2:22 — ''பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகி ஓடு'' என்பதுதான் பாலியல் பாவங்கள்மேல் வெற்றிபெறுவதற்கான இரகசியம். வேறு எந்தப் பாவத்தையும் நீங்கள் எதிர்த்துப் போராடலாம். ஆனால் பாலியல் பாவத்தை நீங்கள் எதிர்த்துப் போராடினால் தோல்வி யடைவீர்கள். அதற்கு விலகி ஓடுங்கள். (Not fight but flight!). யோசேப்பு என்ன செய்தான்? யோசேப்பைத் திருமதி போத்திபார் ஆசைகாட்டி இணங்கவைக்க முயன்றுகொண்டேயிருந்தாள்; ஆனால் அவன் அவளுடனிருக்கவே மறுத்துவிட்டான். ஒரு நாள் அவள் அவனை மிகவும் வற்புறுத்தியபோது, அவன் தனது மேற்சட்டையைக்கூட அவ ளது கரங்களில் விட்டுவிட்டு ஓடிப்போனான். ஏன்? அந்தப் பெண்ணின் கரங்கள் பட்டதால் அவனது மேற்சட்டை கறைப்பட்டுவிட்டது! நெருப் புத்தழலை மடியில் வைத்துக்கொண்டு வெந்துபோகாமலிருக்க எதிர் பார்க்கவேண்டாம். விலகியோடுங்கள். வேறு எந்தப் பாவமும் உடலுக்கு வெளியேயிருக்கும். இந்தப் பாவமோ உங்கள் உடலுக்கே விரோதமாய்ச் செய்யப்படுகிறது.

### ii) உட்கொள்ளுங்கள்! (Feed!)

தேவனுடைய வார்த்தைகளை உட்கொள்ளுங்கள். சங்கீதம் 119:9 இல் சங்கீதக்காரன் சொல்வது: ''வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிற



தினால்தானே.'' இங்கு ''வாலிபன்'' என்று சொல்லக் காரணம் என்ன வென்றால் வாலிபருக்கு வரும் சோதனைதான் கொடியது. எனக்கு 12 வயதாக இருந்தபோது நடந்த ஒரு சம்பவம் என் நினைவில் பசுமையாக உள்ளது. எனது தாயார் என்னையும், என்னைவிட இரண்டுவயது குறைந்த என் தம்பியையும் அழைத்துக்கொண்டு ஆலயத்துக்குப் புறப் பட்டார்கள். அம்மா ஒரு பெரிய வேதாகமத்தையும் ஒரு நோட்டுப் புத்த கத்தையும் அவர்களது கையில் எடுத்துக்கொண்டார்கள். பிறகு அம்மா எங்களது வேதாகமங்களை எடுத்துக்கொள்ள எங்களிடம் சொன்னார் கள். அந்நாட்களில் வேதாகமங்கள் மிகவும் பெரியவைகளாயிருக்கும். உடனே நான் அம்மாவிடம் வேதப் புத்தகம் மிகவும் கனமாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அம்மா சொன்ன பதில்: ''இன்றைக்கு நீ வேதத்தைச் சுமந்துசெல்; நாளைக்கு வேதம் உன்னைச் சுமந்து செல் லும்!'' இன்றைக்கு எனது தாயார் உயிருடன் இல்லை. உயிர்த்தெழுதல் நாளின் காலையிலே நான் அவர்களைக் காண்பேன். அந்த உண்மையை எனக்குக் கற்றுத் தந்ததற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லப் போகின்றேன். அந்த நாளில் நான் எனது வேதாகமத்தைக் கையிலெடுத் தேன். உண்மையாகவே எனது வேதாகமம் என்னைச் சுமந்துகொண்டு செல்கிறது. நான் தேவனுடைய வார்த்தையைக் கனப்படுத்துகிறேன்; தேவனுடைய வார்த்தை என்னைக் கனப்படுத்துகிறது. பின்வரும் ஓய்வுநாள் பள்ளிப் பாடலை மறந்துவிடாதீர்கள் —

| | |
|---|---|
| *வேதப் புத்தகம்,* | *The B-I-B-L-E,* |
| *எனக்கேற்ற புத்தகம்;* | *Yes, that's the Book for me;* |
| *நான் நிற்கும் தேவ வாக்குதானே,* | *I stand alone on the Word of God,* |
| *வேதப் புத்தகம்!* | *The B-I-B-L-E!* |

### iii) கூட்டுறவுகொள்ளுங்கள்! (Fellowship!)

தேவனுடைய பிள்ளைகளுடன் ஐக்கியங்கொள்ளுங்கள். வெற்றி வசனமாகிய 2 தீமோத்தேயு 2:22ஐ மீண்டும் ஒருமுறை பாருங்கள். ''அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதி யையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.'' விலகி ஓடுதலுக்குப் பின்னர் வருவது ஒட்டிக்கொள்ளுதல். சிலர்

முற்பகுதியைச் செய்துவிட்டு, இரண்டாம் பகுதியில் தோல்வியடைவர். தேவ மக்களுடன் ஐக்கியங்கொள்வதால் கிடைக்கும் வல்லமையையும் பலத்தையும் குறைவாக மதிப்பிட வேண்டாம். நீங்கள் தனித்திருக்கும் ஓர் ஆடாக இருந்தால், எளிதில் பிசாசின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிடுவீர்கள். ஆனால் நீங்கள் மந்தையுடன் சேர்ந்து இருக்கும்போது, சத்துருவின் எல்லாவிதத் தாக்குதல்களினின்றும் பாதுகாக்கப்படுவீர்கள். பாலியல் பகுதியில் பிரச்னைகள் இருப்பவர்கள், உங்களுடன் சேர்ந்து ஜெபிக்கக் கூடிய, உங்களுக்கு உதவி செய்யக்கூடிய, மற்றும் சோதனை நேரத்தில் உங்களுடன் உறுதுணையாக நிற்கக்கூடிய, ஓரிருவருடன் ஐக்கியங் கொள்ளுங்கள் என்று தாழ்மையுடன் கேட்கிறேன். நமதாண்டவர் ஒரு சோதனை நேரத்தின் வழியாகக் கடந்துசென்றார். அவர் அப்பொழுது சொன்னது என்ன? ''நான் சோதனையின் நேரத்தில் இருக்கின்றேன். நீங்கள் மூவரும் என்னுடன் சேர்ந்து ஜெபம்பண்ணவேண்டும், என்னுடன் விழித்திருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்'' என்றார்.

தேவ மக்களுடன் ஐக்கியங்கொள்வதை நீங்கள் புறக்கணித்தால், அவபக்தி மற்றும் பொல்லாங்கு ஆகியவை உங்கள் இருதயத்தில் வேர் பற்றி வளருவதைத் தடுக்கும் அனுதின துதி ஆராதனையைத் தவற விடுவீர்கள். அப்போது நீங்கள் மனப்பூர்வமாகப் பாவம் செய்யத் தொடங்குவீர்கள். சபை மக்களுடன் ஞாயிறன்று ஐக்கியங்கொள்ளுவதுடன், வீட்டு ஜெபக்குழுக்கள் அல்லது வேறு ஏதேனும் ஜெபக்குழுக்களுடனும் ஐக்கியங்கொள்ளுங்கள். ''ஒருவராயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நன்று; அவர்களுடைய முயற்சியினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒருவனாய்த் தனித்திருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே ... ஒருவனை எவனாவது மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது'' (பிர 4:9,10,12). சபை ஐக்கியத்தையோ, வீட்டு ஜெபக்குழுக்களையோ புறக்கணிக்கவேண்டாம். எப்பொழுதெல்லாம் அல்லது எங்கெல்லாம் தேவ மக்கள் 2 அல்லது 12 அல்லது 120 அல்லது 200 பேர் சேர்ந்து ஐக்கியங்கொள்ளத் தருணம் கிடைக்



கிறதோ அந்த இடத்துக்கு விரைந்து செல்லுங்கள். அது மட்டுமே நீங்கள் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்யாதபடிப் பாதுகாக்கும். யாரோ ஒருவர் பின் வருமாறு சொன்னார் —

பாவத்தில் தடுமாறி விழுகிறவன் ஒரு மனிதன்.
— அவனுக்காகப் பரிதாபப்படு!
தன் பாவங்களுக்காகத் துக்கப்படுகிறவன் ஒரு புனிதன்.
— அவனைப் பின்பற்று!
தன் பாவங்களைக் குறித்துப் பெருமையடிப்பவன் பிசாசு.
— அவனை விட்டுவிலகு!

இக்கூற்றிலிருந்து நீங்கள் யாருடன் ஐக்கியமாக இருக்கலாம் மற்றும் யாருடன் ஐக்கியங்கொள்ளக்கூடாது என்பதன் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ளலாம்.

## 4. மண்ணுலக ஆசிகள் குறித்து எச்சரிக்கை!

### (i) ஆசிகளை விக்கிரகமாக்கக்கூடாது.

ஆசீர்வாதங்கள் கர்த்தரிடமிருந்து வருகின்றன என்பது உண்மைதான்; ஆனால் ஆசீர்வாதங்களை விக்கிரகமாக மாற்றக்கூடாது. வேதாகமத்தில் இறுதியாக எழுதப்பட்ட புத்தகங்கள் யோவான் எழுதின நிருபங்கள் ஆகும். 1 யோவான் 5ஆம் அத்தியாயத்தின் இறுதி வசனத்தை வாசிப்போம்: ''பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்.'' இதனை வேதாகமத்தில் எழுதப்பட்ட இறுதி அதிகாரத்தின் இறுதி வசனம் என்றுகூடச் சொல்லலாம். யோவான் எழுதின இரண்டாம் மற்றும் மூன்றாம் நிருபங்கள் தனிப்பட்ட நபர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் மட்டுமேயாகும். ஆனால் முதலாம் நிருபம் ஒரு குழுவாகிய சபைக்கு எழுதப்பட்டது. எனவே, நாம் விக்கிரகங்களுக்கு விலகி நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும் என்பதே திருமறையிலுள்ள கடைசி எச்சரிக்கை.

### (ii) ஆசிகளில் அளவுக்குமீறி மூழ்கிவிடக்கூடாது.

ஆண்டவர் உங்களுக்கு ஆசீர்வாதங்களைத் தருகிறார்; ஆனால் எப்பொழுதும் ஆசீர்வாதங்களையே அணைத்துக்கொண்டிருப்பீர்களா

னால், அது ஆசீர்வதிப்பவரை நீங்கள் பார்க்கமுடியாதபடி உங்கள் கண்களை மறைத்துவிடும். ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் அவர்களது வயது முதிர்ந்த காலத்தில் ஈசாக்கு என்ற ஓர் அழகிய மகன் கிடைத்தான். 'ஈசாக்கு' என்ற பெயரின் பொருள் 'சிரிப்பு' என்பதாகும். பல்லாண்டுகளுக்குப்பின் சிறுவன் ஈசாக்கின் மூலமாக அக்குடும்பத்தினுள் சிரிப்பொலி கொண்டுவரப்பட்டது. ஆபிரகாமும் சாராளும் அவர்களது முதிர் வயதின் மகனைக் குறித்து மிகவும் பரவசமடைந்தனர். தேவன் ஆபிரகாமிடம் அவனது 'நகைப்பைப்' பலிபீடத்தில் வைக்கும்படிச் சொன்னார். ''ஆண்டவரே, நீர்தான் இந்த ஆசீர்வாதத்தைத் தந்தீர். இப்போது அதைத் திரும்பக் கேட்பது எப்படி?'' என்று ஆபிரகாம் ஒருபோதும் விவாதிக்கவில்லை. ஆனால் ஆபிரகாம் ''ஆகட்டும், ஆண்டவரே'' என்றுதான் பதிலளித்தார். சொல்லப்பட்டபடியே அவர் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் வைத்தார். உங்களுடைய 'ஈசாக்கு' எது? உங்களை முழுவதுமாக ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் ஆசீர்வாதம் எது? நீங்கள் மிதமிஞ்சி மூழ்கியிருக்கும் ஆசீர்வாதம் எது? அதனைப் பலிபீடத்துக்குக் கொண்டு வாருங்கள். இல்லையெனில், இந்தப் பொல்லாங்கான உலகில், உங்களது வாழ்வில் பரிசுத்தமாகுதலைக் குறித்த தேவனுடைய நோக்கத்தை நீங்கள் காணத் தவறிவிடுவீர்கள்.

''உன் தேவனாகிய கர்த்தர் உனக்கும் உன் வீட்டாருக்கும் அருளிய எல்லா நன்மைகளை முன்னிட்டுச் சந்தோஷப்படுங்கள்'' என்று உபாகமம் 26:11 சொல்லுகிறது. உலக ஆசீர்வாதங்களை நியாயமான அளவு அனுபவிப்பதைத் தேவன் அங்கீகரிக்கிறார்; ஆனால் அளவுக்குமீறி அதில் மூழ்கியிருப்பதைக் கண்டனம் செய்கிறார். நாம் நியாயமான முறையில் அனுபவிக்கக்கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்து 1 கொரி 7:29-31இல் பவுல் சொல்வதைப் பார்ப்போம்: ''சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்கவேண்டும்; இவ்வுலகத்தின் போக்கு மறைந்துபோகிறதே.'' இவ்வசனப் பகுதியில் ஐந்து காரியங்கள் பவுலால்



சொல்லப்பட்டுள்ளன: (அ) வாழ்க்கைத் துணை குறித்தவை, (ஆ) வாழ்க்கைப் பிரச்னைகள் குறித்தவை, (இ) வாழ்க்கையின் இன்பங்கள் குறித்தவை, (ஈ) வாழ்க்கையின் செல்வங்கள் குறித்தவை, (உ) வாழ்க்கையின் லாபங்கள் குறித்தவை. பவுலடியாரின் தத்துவம் என்ன? இனி வரும் காலம் குறுகியது; எனவே இப்பொழுதிருந்து கர்த்தர் நமக்கருளிய ஆசீர்வாதங்களை அனுபவிப்பதிலும் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

நாம் எவற்றுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்? மத்தேயு 6: 31-33 கூறுகிறது: ''ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் புறவினத்தார் நாடித் தேடுகிறார்கள்; இவையெல்லாம் உங்களுக்கு வேண்டியவை என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது இறையரசையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.'' கர்த்தருடைய ஜெபத்தை நீங்கள் கவனித்தால் அதிலுள்ள ஏழு வேண்டல்களில் ஒன்று மட்டுமே உடல் தேவைக்கடுத்தது என்பதை அறியலாம். அது நமது அன்றாடக உணவு. எனவே நீங்கள் இவ்வுலகுக்கடுத்த தேவைகளுக்காகப் பத்து நிமிடம் ஜெபித்தால், ஆன்மீகக் காரியங்களுக்காய் ஒரு மணி நேரம் ஜெபிக்கவேண்டும். ஆனால் நாம் தலைகீழாகச் செய்கிறோம். நாம் ஒரு மணி நேரம் உடலுக்கடுத்த தேவைகளைக் குறித்தே சிந்திக்கிறோம். ஆன்மீகக் காரியங்களைக் குறித்தோ பத்து நிமிடங்கள்கூடச் சிந்திப்பதில்லை. உங்கள் உடலுக்கடுத்த மற்றும் உலகுக்கடுத்த தேவைகளுக்காக 10 அல்லது 15 நிமிடங்கள் ஜெபியுங்கள். ஒரு மணி நேரம் ஜெபித்தால் மீதி வேளையில் இறையரசு விரிவடைய, இறைச்சித்தம் நிறைவேற்றப்பட, இறைப்புகழ் ஓங்க ஜெபியுங்கள் — அனைத்துமே தேவனை, அவருடைய நாமத்தை, அவரது ராஜ்யத்தை மற்றும் அவரது சித்தத்தைச் சம்பந்தப்பட்டதாக இருக்கட்டும்.

ஏதேனும் சில உலக ஆசீர்வாதங்களுக்காக நீங்கள் தேவனிடம் தொடர்ந்து தொந்தரவுபண்ணிக் கேட்டுக்கொண்டேயிருந்தால், ஒரு

வேளை நீங்கள் கேட்பவற்றை தேவன் கொடுத்துவிடுவார். ஆனால் சங்கீதம் 106:15 சொல்வதை நினைவுகூருங்கள்: ''அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆன்மாக்களிலோ இளைப்பை அனுப்பினார்.'' இது மிகவும் ஆபத்தானது. உங்களது உடலுக்கடுத்த தேவைகளுக்காக ஜெபிப்பதில் அதிக நேரத்தைச் செலவு பண்ணவேண்டாம். தேவன் ஒருவேளை நீங்கள் வேண்டுவதைக் கொடுத்துவிடுவார்; ஆனால் உங்கள் ஆன்மா இளைப்படைந்துவிடும். கவனம்!

## 5. துர்வுபதேசங்களுக்கு எச்சரிக்கை!

இன்றைய நாட்களில் கள்ள உபதேசங்களும், பொய்யான மார்க்கங்களும் உலகமெங்கிலும் மறுமலர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கின்றன. பிசாசானவன் தனக்குச் சிறிது காலம் மட்டுமே உண்டென்று அறிந்து, உலகத்தில் அவனது வஞ்சகக் கோட்பாடுகளைத் தீவிரமாய்ப் பரப்பிக் கொண்டிருக்கிறான். உலகத்தின் முடிவுக்கு அடையாளம் என்ன என்று சீடர்கள் இயேசுவிடம் கேட்டபோது இயேசு ஒரு வெளிப்படையான பதிலை மத்தேயு 24:4,5இல் கொடுத்தார்: ''ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை ஏமாற்றுவார்கள்.'' கடைசிக்காலத்துக்கு அடையாளமாக இயேசு சொன்ன முதலாவது காரியம், ''ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்'' என்பதே. அவர் அநேக அடையாளங்களைக் குறித்துச் சொல்லுகிறார்; ஆனால் இதுவே முதல் அடையாளம். ''அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்'' என்று 11ஆம் வசனத்தில் அவர் திரும்பச் சொல்லுகிறார். இந்தப் பகுதியில் 'அநேகர்' என்ற சொல் திரும்பத் திரும்ப வருகின்றது. 5ஆம் வசனம்: **''அநேகர்** வந்து, என் பெயரால் ... **அநேகரை** ஏமாற்றுவார்கள்.'' 11ஆம் வசனம்: **''அநேகம்** கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, **அநேகரை** வஞ்சிப்பார்கள்.'' இயேசு 'அநேகர்' என்ற பதத்தை இத்தனை முறை பயன்படுத்தும்போது, நாம் அதைக்குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.



கொடுக்கப்பட்ட உபதேசம் தேவனிடமிருந்து வந்ததா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள உங்களுக்குச் சில எளிய பரிசோதனைக் கேள்விகளைத் தருகிறேன் —

### அ) இவ்வுபதேசம் பின்வருபவற்றைக் கூட்டுகிறதா?

☐ தேவன்மீதுள்ள எனது அன்பை அதிகரிக்கச் செய்கிறதா?

ஏனெனில் இதுவே முதலாம் கற்பனை. அந்த உபதேசம் தேவன்மீது உங்கள் அன்பை அதிகரிக்குமானால், அந்த உபதேசத்தை நீங்கள் கேட்கலாம்.

☐ பிறர் மீதுள்ள — பரிசுத்தவான்கள் மற்றும் பாவிகள் மீதுள்ள — எனது அன்பை அதிகரிக்கின்றதா?

ஓர் உபதேசம் பரிசுத்தவான்களைப் பக்திவிருத்தியடையச் செய்யவும், பாவிகளுக்குச் சுவிசேஷம் அறிவிக்கவும் ஏதுவாக இருந்தால் அவ்வுபதேசத்தை ஏற்கலாம்.

☐ பரிசுத்தத்தின்மீதுள்ள எனது வாஞ்சையைப் பெருக்குகின்றதா?

ஏனெனில் அது தேவனுடைய திவ்விய சுபாவம். குறிப்பிட்ட செய்தியை அல்லது உபதேசத்தைக் கேட்ட பிறகு மென்மேலும் பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டால் நீங்கள் அதனைப் பின்பற்றலாம்.

☐ கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த எனது ஆவலை அதிகரிக்கின்றதா?

''கர்த்தர் அந்நாளிலே நீதியின் கிரீடத்தை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மட்டுமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்று பவுலடியார் சொன்னார் (2 தீமோ 4:8). இயேசுவின் இரண்டாம் வருகையை விரும்பும் அளவை அதிகரிக்கச் செய்யும் உபதேசத்துக்குச் செவிமடுக்கலாம்.

### ஆ) இவ்வுபதேசம் பின்வருபவற்றைக் குறைக்கிறதா?

☐ ஆடம்பரம் மற்றும் சொகுசுகள்மீதுள்ள எனது வாஞ்சையைக் குறைக்கின்றதா?

இயேசு எளிமையாக இருந்தார். அவரது எளிமையான வாழ்க்கைப் பாணியைக் கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டும்.

☐ தற்புகழ்மீது எனக்கிருக்கும் நாட்டத்தைக் குறைக்கிறதா?

ஒரு செய்தி அல்லது உபதேசம் யோவான் ஸ்நானனின் ஆவியினால் நம்மை நிரப்ப வேண்டும்; ''அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்!'' நான் கீழே தள்ளப்படலாம்; எனது பெயர் நீக்கப்படலாம். திருப்பெயரே நிலைத்திருக்கவேண்டும்; அவரது பெயரே மகிமைப்பட வேண்டும். அதுவே உண்மையாக வேதத்தைப் பின்பற்ற விரும்புகிறவரில் காணப்படும் குணநலன் ஆகும்.

☐ உலகப்பொருட்கள் மீது எனக்கிருக்கும் தீராத ஆசையைக் குறைக்கின்றதா?

இந்தியாவின் எல்லா ரயில் பெட்டிகளிலும் எழுதப்பட்டிருக்கும் கவர்ச்சி வாக்கியம் எதுவெனில், ''குறைந்த சாமான்; நிறைந்த வசதி; பயணத்தை இனிதாக்குக!'' (Less luggage; more comfort; make travel a pleasure!) என்பதாகும். அதுதான் ஒரு கிறிஸ்தவன் அறிந்திருக்க வேண்டியது. நான் மேல்சட்டைகளை அதிகமாக விரும்புகிறவன். ஓர் எளிய முறையை எனது மனைவி எனக்குக் கற்பித்தாள். ஒரு புதுச் சட்டை வாங்கினாலோ கிடைத்தாலோ கட்டாயமாக ஒரு பழைய சட்டையை யாரேனும் ஒருவருக்குக் கொடுத்துவிடவேண்டும். நான் பழையதையும் விரும்பினேன், புதியதற்கும் ஆசைப்பட்டேன்; எனவே அதைக் கடைப்பிடிப்பது கடினமாயிருந்தது. ஆனால் இப்போது நான் அதைப் பழக்கமாக்கி, பழையவைகளைக் கொடுத்துவிடுகிறேன். இதைப்போலவே மற்றப் பகுதிகளிலும் செய்ய முயன்று வருகின்றேன். இதுபோன்ற சில எளிய முறைகளை முயற்சித்துப் பாருங்கள்.



# 12

# முடிவுரை

கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மைப் பரிசுத்தராக்கிவிட்டார். தம்முடைய வார்த்தையினாலும், தம்முடைய ஆவியினாலும் அவர் நம்மைத் தொடர்ந்து பரிசுத்தமாக்கிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்து வெளிப்படும்போது நாம் அவரைப்போலவே இருப்போம். நம்மில் நற்செயலைத் தொடங்கின தேவன் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்வரை முடிய நடத்தி வருவார். பாவம் நிறைந்த உலகில், தூய்மையற்ற உலகில், பொல்லாங்கு நிறைந்த உலகில், நேர்மையற்ற உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நீதி மட்டுமே காணப்படும் ஒரு புதிய வானத்தையும் ஒரு புதிய பூமியையும் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்.

தேவனுடைய சமூகத்தில் எல்லாப் பயபக்தியுடனும் சொல்லுவோம்: ''சேனைகளின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! பூவுலகு முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது!''

# திருவசனம் நம்மைத் திருத்தட்டும்!

வேத வாக்கியங்களை நாம் வெறுமனே ஆராய்ந்து பார்த்துவிட்டு, வேத வாக்கியங்கள் நம்மை ஆராய்ந்து பார்க்க விடாவிட்டால் பெருமையும் வஞ்சகமும்தான் விளைவாகும். வேதத்தின் ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் ஒன்றென, இங்கே 66 தற்பரிசோதனைக் கேள்விகள் தொகுக்கப்பட்டுள்ளன. ''ஆம்'' என்ற பதில் பாவத்தைக் குறிக்கும். இப்பொழுதே இரத்தத்தாலும் ஆவியானவராலும் முற்றிலும் கழுவப்படுவோம்.

1. இச்சையான விருப்பங்களுக்கு இணங்கிவிடுகிறேனா? (ஆதி 6:3)
2. தேவன் திரும்பத் திரும்ப எச்சரித்தும் என் இருதயத்தைக் கடினப்படுத்துகிறேனா? (யாத் 10:3)
3. எனது தனி மற்றும் குடும்ப ஜெபப் பலிபீடத்தின் அக்கினி அவிந்துகொண்டிருக்கிறதா? (லேவி 6:12,13)
4. தேவ ஊழியரைப் புறங்கூறியிருக்கிறேனா? (எண் 12:1-9)
5. வேதத் தியானத்தில் ஒழுங்கீனமாயிருக்கிறேனா? (உபா 4:8; 30:11-16)
6. சபையிலோ ஐக்கியத்திலோ இடையூறு உண்டாக்கியிருக்கிறேனா? (யோசு 7:24,25)
7. பரிசுத்தமற்ற தொடர்புகளை அறுத்தெறியத் தயங்குகிறேனா? (நியா 16:4,19,20)
8. எனது உடன்படிக்கை அல்லது அர்ப்பணிப்பில் பின்திரும்பியிருக்கிறேனா? (ரூத் 1:14-17)
9. எனது பிள்ளைகளைக் கண்டிப்புடன் வளர்க்கத் தவறுகிறேனா? (1 சாமு 2:29; 3:13)
10. இன்னொருவரது வாழ்க்கைத் துணையை இச்சிக்கிறேனா? (2 சாமு 11:2-4, 27)
11. எனது மனைவி அல்லது கணவனைப் பிரியப்படுத்த ஏதாவதொன்றில் ஆண்டவரைத் துக்கப்படுத்துகிறேனா? (1 இரா 21:25)
12. அழியும் ஆத்துமாக்களுக்குப் பதிலாகப் பணத்திற்குப் பின்னால் அலைகிறேனா? (2 இரா 5:26)



13. தேவ வல்லமைக்குப் பதிலாக மனித பலத்தில் சார்ந்திருக்கிறேனா? (1 நாளா 21:1-8)
14. தேவனுக்காய் ஏதோவொன்றைச் சாதித்துவிட்டதால் பெருமையடித்துக்கொள்ளுகிறேனா? (2 நாளா 6:18)
15. எழுப்புதலுக்காய் ஜெபிக்கும்போது எனது சொந்த மனந்திரும்புதலைக் குறித்து அக்கறையற்றிருக்கிறேனா? (எஸ்றா 10:1)
16. பயமுறுத்தல்கள், எதிர்ப்புகளினால் சோர்ந்துபோகிறேனா? (நெகே 4:14; 6:9,11)
17. நாட்டிற்குச் சேவை செய்வதற்கு எனது சுயநலக் கண்ணோட்டம் தடையாயிருக்கிறதா? (எஸ்தர் 4:13-16)
18. எனது பாடுகளிலும் இழப்புகளிலும் தேவனைத் துதிக்கத் தவறுகிறேனா? (யோபு 1:20-22; 2:9,10)
19. ஆராதனையில் உற்சாகம் இழந்திருக்கிறேனா? (சங் 122:1)
20. இரகசியங்களை வெளிப்படுத்தி மக்களைப் பாழாக்குகிறேனா? (நீதி 11:13)
21. விசுவாசிகளின் ஐக்கியத்தை அலட்சியம்பண்ணுகிறேனா? (பிர 4:9-12)
22. எனது வாழ்க்கைத் துணையின் பாலுணர்வுத் தேவைகளைத் திருப்தி செய்யத் தவறுகிறேனா? (உன் 2:7; 3:5; 8:4)
23. துணிந்து பாவம் செய்து சிலுவையை அவமதிக்கிறேனா? (ஏசா 53:1,4,5)
24. தேவ வல்லமையை மட்டுப்படுத்துகிறேனா? (எரே 32:27)
25. மனந்திரும்புவதற்குப் பதிலாக, எனது பாவங்களுக்கான தண்டனையைக் குறித்து முறையிடுகிறேனா? (புல 3:39-41)
26. தாமதிக்கிறது என்பதால் இறைவாக்குகளைச் சந்தேகிக்கிறேனா? (எசேக் 12:21-25)
27. நான் வேலை செய்யுமிடத்தில் உண்மையும் நேர்மையுமின்றி இருக்கிறேனா? (தானி 6:3-5)
28. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை இல்லாதிருக்கிறேனா? (ஓசி 7:8,9)
29. உபவாச ஜெபத்தை அசட்டை செய்கிறேனா? (யோவேல் 1:12-16)
30. அவதிப்படும் சகோதர சகோதரிகளைக் குறித்துக் கவலையின்றிச் சுகபோகமாய் வாழ்கிறேனா? (ஆமோ 6:1,3-6)

31. என்னிடத்தில் பெருமையுண்டா? (ஒப 3:4)

32. தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறியதற்குச் சாக்குப் போக்குகள் சொல்லுகிறேனா? (யோனா 1:1-3; 4:2)

33. தேவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் குடும்பத்திற்கோ நண்பர்களுக்கோ கொடுக்கிறேனா? (மீகா 7:5-7)

34. ஆத்துமாதாயத்திலும் நற்செய்திப்பணியிலும் ஏனோதானோ வென்று இருக்கிறேனா? (நாகூம் 1:15)

35. எனது வேலையையும் வியாபாரத்தையும்தான் கும்பிடுகிறேனா? (ஆப 1:15,16)

36. திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேனா? (செப் 3:1,2)

37. இறைப்பணியை நிறைவேற்றக் காலந்தாழ்த்துகிறேனா? (ஆகாய் 1:2-5)

38. எனது நண்பர்களைக் காட்டிக் கொடுத்திருக்கிறேனா? ஏமாற்றி யிருக்கிறேனா? (சக 13:6)

39. மீந்தவைகளைத்தான் கர்த்தருக்குக் கொடுக்கிறேனா? (மல் 1:7,8,12-14)

40. யாரோடாவது ஒப்புரவாக வேண்டியதைத் தள்ளிப்போடுகிறேனா? (மத் 5:23,24)

41. எனது பாவத்தைச் சுட்டிக்காட்டிய யார் மீதும் கோபமாயிருக் கிறேனா? (மாற் 6:17-19)

42. வேலையோ, ஊழியமோ அதிகமென்று ஜெபத்தைக் குறைத்திருக் கிறேனா? (லூக் 5:15,16)

43. பணக்காரியங்களில் உண்மையில்லாதிருக்கிறேனா? (யோ 12:6)

44. எனது பிரதான அழைப்பிலிருந்து விலகிப்போகிறேனா? (அப் 6:1-4)

45. அரசை ஏமாற்றி, அதற்குக் கீழ்ப்படியாமலிருக்கிறேனா? (ரோ 13:1-7)

46. எந்தப் பிரசங்கியாரையும் கதாநாயகனாக வணங்குகிறேனா? (1 கொரி 3:1-7)

47. எனது வரங்களையும், சாதனைகளையும் குறித்துப் பெருமை யடிக்கிறேனா? (2 கொரி 12:1,6,7)



48. விழுந்துபோனவர்களிடம் கடுமையாயிருக்கிறேனா? (கலா 6:1)

49. ஆபாசக் கேலிச் சிரிப்புகளில் ஈடுபடுகிறேனா? (எபே 5:4)

50. பிறரைவிட என்னைச் சிறந்தவனாய்க் கருதுகிறேனா? (பிலி 2:3)

51. எனது பெற்றோருக்குக் கீழ்ப்படியாதிருக்கிறேனா? (கொலோ 3:20)

52. ஆவியானவரின் வரங்களை அலட்சியம்பண்ணுகிறேனா? (1 தெச 5:19,20)

53. பிறர் காரியங்களில் தேவையின்றித் தலையிடுகிறேனா? (2 தெச 3:11)

54. வேலை, ஊழியம் என்று குடும்பத்தைப் போதுமான அளவு கவனிக்கத் தவறுகிறேனா? (1 தீமோ 3:4,5)

55. அரட்டையடிக்கிறேனா, கோள் சொல்லுகிறேனா? (2 தீமோ 3:3)

56. என்னிடம் பிரிவு மனப்பான்மை உண்டா? (தீத் 3:10,11)

57. பிறரைத் திரும்பக் கட்டியெழுப்புவதில் ஈடுபாடு கொள்ளத் தயங்கு கிறேனா? (பிலே 15-18)

58. விசுவாசத்தில் துணிந்து செயல்படத் தயங்குகிறேனா? (எபி 11:8)

59. எளியவரைவிடப் பணக்காரரை மதிக்கிறேனா? (யாக் 2:1-4)

60. எனது கணவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறேனா; எனது மனைவியை மதியாதிருக்கிறேனா? (1 பேது 3:5-7)

61. கிறிஸ்தவப் பண்புகளில் வளருவதைக் குறித்துக் கவலையீனமா யிருக்கிறேனா? (2 பேது 1:5-9)

62. எந்தச் சகோதரனையாவது, சகோதரியையாவது வெறுக்கிறேனா? (1 யோ 3:15)

63. துர்வுபதேசக்காரரைத் தாங்குகிறேனா? (2 யோ 10,11)

64. பிறரைத் தள்ளி முதன்மையை விரும்புகிறேனா? (3 யோ 9,10)

65. தலைவர்களுக்கு எதிராய்க் கலகம்பண்ணுகிறேனா? (யூதா 11)

66. நேரத்தை வீணடிக்கிறேனா? (வெளி 22:10,20)

# இறைப்புகழ்

சமாதானத்தின் தேவன் தாமே
உங்களை முழுவதும் பரிசுத்தமாக்குவாராக.
உங்கள் ஆவி, ஆன்மா, உடல் முழுவதும்,
நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது
குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.
உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்;
அவர் அப்படியே செய்வார்!

வழுவாதபடி உங்களைக் காக்கவும்,
தமது மகிமையுள்ள சந்நிதியில்
மிகுந்த மகிழ்ச்சியோடு
உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும்
வல்லமையுள்ளவரும்,
தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய
நமது இரட்சகரான தேவனுக்குக்
கனமும் மகத்துவமும் வல்லமையும்
எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

(1 தெச 5:23,24; யூதா 24,25)



## கேளுங்கள்! பாருங்கள்!

**Holiness to the Lord**
**கர்த்தருக்குப் பரிசுத்தம்**

இப்புத்தகத்திலுள்ள செய்திகள்
1993ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஆசிரியரால் ஆங்கிலத்தில்
கொடுக்கப்பட்டுத் தமிழாக்கம் செய்யப்பட்டவை.
இவை மொத்தம் 15 மணி நேரம் ஓடக்கூடிய
3 ஒலித்தட்டுகளில் (mp3) உண்டு.
விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 50/-

**How not to Sanctify**
**எப்படிப் பரிசுத்தமாகக்கூடாது?**

பரிசுத்தத்தைக் குறித்த தவறான கருத்துக்களைத்
திருத்துவதற்காய் ஆசிரியர் கொடுத்த
10 செய்திகள் 2011இல் ஒளிபரப்பாயின.
இவை ஆசிரியரால் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுத்
தமிழாக்கம் செய்யப்பட்டன.
மொத்தம் 5 மணி நேரம் ஓடக்கூடிய
2 ஒளித்தட்டுகள் (DVD) விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*

**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல் ...**



# நாளொரு மேனி

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும் ...***
***அனைத்து வயதினரும் ...***
***அனைத்துத் துறையினரும் ...***
***விரும்பி வாசிக்கும்***
***ஒரு புதிய படைப்பு!***

432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-
10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி

*ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,*
*மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.*

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*





# வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
**1970-1990**

***by R.** ஸ்டான்லி*

☐ *160 இதயம் பேசும் கடிதங்கள்* ☐
☐ *800 புகைப்படங்களும் வரைபடங்களும்* ☐
☐ *30 எழுப்புதல் அறிக்கைகள்* ☐
☐ *50 சவால் நிறை கட்டுரைகள்* ☐
☐ *33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள்* ☐
☐ *8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள்* ☐

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

# Bible Study Helps

- ***Bible Foundation***

  Brother Stanley's handwritten notes of 4 weeklong Study Programmes of 1977, 1978, 1979 & 1984, in 4 Volumes, totally 400 pages of A4 size paper, spiral bound, cased in a rexin pouch. Available in English only.

- ***Bible Answers***

  Frank Answers by R. Stanley to 100 Questions, frequently asked but rarely answered, under seven sections: Christian Life, Christian Doctrine, Holy Spirit & Gifts, Church, Christian Ministry, Sex & Marriage, Social Life. 240 Pages. Available in English and Tamil.

- ***Bible Treasures***

  200 Corrective Bible Lessons, by R. Stanley, from the beginning of Christian Life to the end of Physical Life. 832 pages, Jacketed Hardcover. Available in English, Hindi, Tamil and Telugu.

- ***Bible Pearls***

  200 Select Sermon Outlines from Brother Stanley's 50+ years of pulpit Ministry, 1963-2016, under 14 heads, from Repentance to the Return of Christ. 1200 pages, Jacketed Hardcover. Available in English and Tamil.

*Contact us for details.*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>* *<evangeline@stanleyonbible.com>*



## ஆசிரியரது பிற நூல்கள்

- ❒ *அறிவூட்டும் அகவுணர்வுகள்*
- ❒ *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?*
- ❒ *ஆனந்த அறுவடை*
- ❒ *இரட்சிக்கப்படுவது எப்படி?*
- ❒ *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*
- ❒ *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
- ❒ *ஊழியரும் மக்களும்*
- ❒ *எதிர்நீச்சல் வாலிபர்*
- ❒ *எழுப்புதல் வரும்போது ...*
- ❒ *ஐந்தப்பம் இருமீன்*
- ❒ *கண் திறக்கும் கட்டுரைகள்*
- ❒ *காட்டுத் தேன்*
- ❒ *கீழ்ப்படிதலே மேல்படி!*
- ❒ *சமநிலைக் கிறிஸ்தவன்*
- ❒ *சிறு நரிகள்*
- ❒ *திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)*
- ❒ *திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)*
- ❒ *நான் நிற்கும் கன்மலை*
- ❒ *நெஞ்சில் நெருப்பு*
- ❒ *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
- ❒ *பொற்பழங்கள்*
- ❒ *பைபிள் பதில்கள்*
- ❒ *மாணவ மணிகளுக்கு...*
- ❒ *வல்லமை தேவனுடையது!*
- ❒ *விசுவாச வாழ்வு*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

*A WEBSITE FOR BIBLE LOVERS*

## CONTENTS

- ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching
- ***Bible Studies***
  Studies on specific themes and select books of the Bible
- ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible
- ***Youth Matters***
  Practical Guidelines to Young Men and Young Women for Successful Living
- ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons on Christian Leadership
- ***Missionary Challenge***
  Calling Christians to obey the Great Commission of Christ
- ***My Answers***
  Answers to Questions frequently asked but rarely answered
- ***Quotable Quotes***
  Stanley's analytical Statements about Christian Life and Ministry
- ***Video Talks***
  Stanley's Bible Sermons in Video & Audio format, freely downloadable

Register your e-mail id in this website
to receive updates and daily devotions ----



■

இப்புத்தகத்தை இன்னொரு முறை வாசியுங்கள்.
ஒரே வாசிப்பில் எல்லாச் சத்தியங்களையும்
புரிந்துகொள்வது கடினம்.

■

பரிசுத்தத்தின் அதிமுக்கியத்துவத்தை அறியாதோர்,
பரிசுத்தமாய் வாழ முயன்றும் தோல்வியுற்றோர்
ஆகியோரால் கிறிஸ்தவம் நிறைந்துள்ளது.
இதில் இளவயதினர், நடுவயதினர் மற்றும் முதிர்வயதினரும்
உள்ளடங்குவர். பரிசுத்தத்திற்கான அழைப்பும், வழிமுறையும்,
ஊக்குவிப்பும் சமநிலையில் இடம்பெற்றுள்ள
இந்நூலின் பிரதிகளை வாங்கி உங்களுக்குத் தெரிந்த
கிறிஸ்தவ நண்பர்களுக்கெல்லாம் விநியோகியுங்கள்.
பரிசுத்த அலங்காரம் திருச்சபைக்குத் திரும்பிவரும்போது
சமுதாயம் ஆசீர்வதிக்கப்படும்.

■

இப்புத்தகத்தினால் நீங்கள் பெறும் ஆசீர்வாதத்திற்காய்
நன்றிக் காணிக்கை செலுத்த விரும்பினால்,
அதனைக் கூடுதல் பிரதிகள் வாங்கிப் பிறர்க்கு
அன்பளிக்கச் செலவழியுங்கள்.

■